உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

கடம்பவனபுராணம்.

தொண்டைமண்டலத்து

இலம்பூர்

வீமநாதபண்டிதர்

இயற்றியது.

இஃது

சிதம்பரம்

வாமதேவ

முருகபட்டாரகரால்

பலபிரதிரூபங்களைக்கொண்டு பரிசோதித்து,

சென்னபட்டணம்:

வித்தியாவர்த்தனீ அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

விக்கிரம ஹு ஆடி மீ

இதன் விலைரூபா - கவ.

உ

கணபதி துணை.

வீமநாதபண்டிதர்

சரித்திரச்சுருக்கம்.

தொண்டைமண்டலத்திலே, புழற்கோட்டத்திலே, இலம்பூரிலே * கங்காகுலத்திலே, தென்னவராயர் மரபிலே நெய்தனிலத்துப் பொருட்செல்வத்தோடு மிகுந்த கீர்த்தியைப் பெற்ற தம்முடைய தந்தை தாய் இருவர்களுஞ் செய்த அரிய தவத்தினாலே, வீமநாதபண்டிதர் என்பவர் அவதரித்து, உரிய பருவத்திலே, கல்வி கற்கப் புகுந்து, சின்னாளிலே வடமொழி தென்மொழி என்னும் இவ்விரண்டு பாஷையினு மிகுந்த வல்லவராய், சிவதீக்ஷைபெற்று, உபய பாஷாப் பிரணீதங்களாகிய பொதுநூல்களையும், சைவ சமய நூல்களையும் ஐயந் திரிபு அறக் கற்றுணர்ந்து, அவற்றின் மெய்ப்பொருளாவார் சிவபெருமானே என்று, தெள்ளிதிற் றுணிந்து கொண்டார்.

அவருக்குத் தம் மரபின் பெயராகிய தென்னவராயர் என்னுங் காரணத்திருப்பெயருக்குரிய மதுரைச் சொக்கநாத சுவாமியைத் தரிசிக்க வேண்டும் என்னும் பேரன்பு தலைப்பட்டது. படவே, மதுராபுரிக்குச் சென்று, பொற்றாமரை முதலிய தீர்த்தங்களிலே ஸ்நாநஞ் செய்து, சித்திவிநாயகரை வணங்கி, மீனாட்சியையும் சொக்கநாத சுவாமியையும் தரிசித்து, துதித்து, வணங்கிப் பேரானந்தப் பெருங்கடலிலே அமிழ்ந்தி நின்றார்.

அவருடைய ஸ்தோத்திர சடிலத்தையும், பத்தியையும், அத்தியந்த விநயத்தையும் அறிந்து ஆச்சரியமுற்ற அவ்வாலயத்து அர்ச்சகர்களும் அந்தத் தலவாசிகளும் அவரை நோக்கி 'நீர் இந்தத் தலபுராணமாகிய வடமொழிக் கடம்பவன மான்மியத்தைக் கேட்கும் உபய பாஷா சாஸ்திரப் பிரவர்த்தக வித்துவான்களின் செவிகட்கு அமிர்தமாக இருக்கும் வண்ணம் தமிழினாலே விளக்கமாகப் பாடிமுடியும்' என்று, ஆஞ்ஞாபித்தார்கள்.

வீமநாதபண்டிதர் அவ் வாஞ்ஞையைக் கைக்கொண்டு, அந்தத் தலத்திலேயே வசித்திருந்து, சொக்கநாத சுவாமியின் திருவாருளை முன்னிட்டு, அப் புராணந் தமிழினாற் பாடத் தொடங்கி, அப் புராணத்திற்குக் கடம்பவன புராணம் என்னும் வடமொழிப் பெயரையே பெயராகத் தந்து; அதனைப் பதினொரத்தியாயமாகப் பாகுபாடு செய்து, அவ் வத்தியாயங்களுள்ளே இலீலாசங்கிரகவத்தியாயத்தில் மதுரைத் தலவிசேடமும், புறத் தொட்டி னின்மாலிய தீர்த்தமகற்று நரகசேடானுபவ வியாதிகளும், சிவபெருமானுக்கு அற்புதமாகிய விபூதி உருத்திராக்கம பஞ்சாக்கரம் சிவநாமம் சிவவிரதம் சிவபுண்ணியம் சிவபுராணம் சிவத்துரோகம் சிவபூசை குருமகத்துவம் என்னும் இப்பத்தும், இவற்றுள் விபூதி உருத்திராக்கங்களில் விசேடவிதியும், சிவபூசையில் சிவலிங்கஇலககணம் பிரதோடம பிரதோடவிரதம் பிரதோடபூசாகாலநிர்ணயம் பிரதோடபூசை பிரதோடவிரதோத்தியாபனம் என்பனவும், குருமகத்துவத்தில் சீடரிலக்கணம் சிவனடியாரிலக்கணம் துறவியரிலக்கணம் மகேசுரவடிவம் என்பனவும், ஏனையத்தியாயங்களுள் இடையே இடையே விதிவிலக்குக்களும், அவற்றின் பலங்களுமாகிய இவைகளையமைத்து, நோக்குவார்க்கு நோக்கும் இடங்களிலெல்லாம் சொற்சுவை பொருட்சுவை முதலியன கிடந்து களிப்புச் செய்யும்வண்ணம் பாயிரத்தோடு விருத்தயாப்பினால் விளக்கமாகப் பாடி முடிவுசெய்தார்.

பின்பு அத்திருப்புராணத்தை ஓர் அர்ச்சகரைக்கொண்டு சொக்கநாத சுவாமியின் சந்நிதியிலுள்ள அறுகாற் பீடத்திலே எழுந்தருளப்பண்ணி, விதிப்படி அருச்சனை பண்ணுவித்து, திருமுன்னே விழுந்து நமஸ்கரித்து, துதித்து, இருந்துகொண்டு, அங்குவந்திருக்கும் உபய பாஷாப் புரோக்த சைவசித்தாந்த சாஸ்திரிகண் முதலாயினார் யாவருங் கேட்கும்படி தாமே வாசித்து, பொருள் சொல்லி அரங்கேற்றினார்.

சூசிபத்திரம்.

பக்கம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

கடம்பவனபுராணம்.

காப்பு.

நிலம்போற்று மகத்தியன்முன் னிகழ்த்தியவிக் கதைக்கியறேர்
நலம்போற்றுந் தமிழ்வாக்கு நமக்கருள்செய் திடத்தேவை
வலம்போற்றிப் பலங்கவருஞ் * சித்திவிநா யகனைமழைக்
குலம்போற்று மதிற்கூடற் கோமகவை வணங்குவாம்.

பாயிரம்.

கடம்பவனசுந்தரர்.

திருவோங்கு பேரொளியாய்ப் பராற்பரமாய்ச் சிவமாய்ச்சூக் கு
மமு மாகி, யருவோங்கு மனுபவநித் தியநிமல மானசதா சிவமு மாகி,
யுருவோங்கு தொழிற்படுமென் னுயிர்க்குயிரா மமுதலிங்க வுருவாந்
தொன்மை,மருவோங்கு மலர்க்கடம்ப வனத்தமர்சுந் தரன்றுணைத்
தாள் வழுத்தல் செய்வாம். (க)

கான்மா றியாடியவர்.

சிவமாகிச் சத்தியாய் நாதவிந்து வாய்ச்சதா சிவமு மாகி
நவமாரு மகேசனுருத் திரனெடுமா னான்முகன்மற் றியாவு மாகித்
தவமாரு மிரசிதசிற் சபையில்வலத் தாண்மாறித் தையல் காண
வுவமான மின்றிநிருத் தம்புரியும் பேரொளியை யுளத்தில் வைப்பாம்.

---

* "தேவை வலம் போற்றிப் பலங் கவரும்" என்றது—'ஞானஒளிவடிவினராகிய சிவபெருமானை (இடங் கொண்ட பூமியாக) வலம் வந்து கனியைக் கவர்ந்த' என்று பொருள் கொள்ளப்படும்; இப்பொருள் கோள் கல்லாடத்திலே விநாயகர் வணக்கத்திலே "கருமிடற்றுக் கடவுளைச் செங்கனி வேண்டி, யிடங்கொண் ஞாலத்து வலங்கொளும் பதத்த" என்னும் மூலத்தானும், 'சிவந்த கனியினை விரும்பிக் கரிய மிடற்றினையுடைய கடவுளை யிடங்கொண்ட பூமியாக வலங்கொள்ளும் பதத்தினையுடையாயென்க' என்னும் அதன் உரையானும் உணர்ந்து கொள்க.

அங்கயற்கண்ணம்மை.

நாதவிந்து வாயோக போகசத்தி யாகிக்கா ரணநான் காகி
யோதுசதுர் வியூகியாய்ப் பின்னமாய்ப் பரையாயுன் மனியு மாகி
யேதமறு வீரசத்தி யாய்ப்பலவாய் மேலாகு மெம்பி ராட்டி
யாதிமது ரேசர்பங்கி லங்கயற்க ணம்மைபத மகத்துள் வைப்பாம்.

விநாயகர்.

கதத்தானை நீண்டகுர கதத்தானை யிராவணனைக் கடிந்தோன் காணுப், பதத்தானை முதலினர்முற் பதத்தானை வெள்ளையிபப் பாக ன் போற்று,மிதத்தானைப் பொறியிலர்கட் கிதத்தானைக் கடம்பவனத் திருக்குந் தேவை,மதத்தானை முகனைவென்ற மதத்தானை முகத்தானை வணக்கஞ் செய்வாம். (ச)

சுப்பிரமணியர்.

மருளாரும் பவத்தொடரை மாற்றியதென் னன்மகளாய் மவுலி சூடிப், பொருளாரும் புவிவிசயஞ் செய்தரசு செலுத்தியமும் முலைப்பூந் தேனைத், தெருளாருந் தமிழ்மதுரை நாதன்மணஞ் செயவிதிநூ ற் சடங்கு செய்தே, யருளாருங் கடம்பவனத் துறைகுமர குருபர னை † யகத்துள் வைப்பாம். (ரு)

வைரவர்.

கருதரிய வளிதபர னெற்றியிற்றோன் றிச்சூல கபால மேந்தி, வருபிர்ளை யஞ்சுவற்றிப் பயிரவனு யண்டத்து வங்கண் மாற்றி, யரிசரும கஞ்சுகியாய் வேதவெகி னூர்ந்துமுன்போ லவையுண் டாக்கி, யிருமைபெறக் காத்திருளுங் கேத்திரபா லன்றிருத்தா ளேத்தல் செய்வாம். (சா)

திருநந்திதேவர்.

வரங்கருமா தவவடிவாஞ் சிலாதமுனி மகவாகி வளர்ந்தெட் டா ண்டிற், பரங்குறுமா தவம்புரிந்து பரனுருநித் தியத்துவமும் பண்பா

---

† குமரகுருபரன் மும்முலைப் பூந்தேனைத் தெருளாருந் தமிழ்மது ரை நாதன் மணஞ் செய விதிநூற் சடங்கு செய்தது வேப்பத்தூரார் திருவிளையாடற் புராணத்திலே, திருமணஞ்செய்ததிருவிளையாடலி லே "ஆதிநான் முகன்மா லேத்த வரம்பையர் வாழ்த்தெ டுப்பச்,சோ திசேர் கானம் பாடத் தும்புரு நார தாதி,தீதறு சடங்கு மைந்தன் செ லுத்தநன் முகூர்த்தத் தொப்ப, மேதகு மாதை வேத விதிப்படி மன்ற ல் செய்தான்." என்னும் இருபத்தாறுஞ் செய்யுளால் உணர்த்தப்ப ட்டது.

ற் பெற்றே, யேர்ங்கயில்வண் சுரிகைபிரம் புழைமழுநக் மீசனுவந் ததவச் செங்கை, தாங்கிநெடுந் தடங்கயிலே காத்தருணந் தீசர்பதந் தலேமேற் கொள்வாம். (௭)

சமயகுரவருண்மூவர்.

அடலமணைக் கழுவேற்றுந் திருஞான சம்பந்த ரடிகள் போற்றி, கடலிடைக்கற் றூண்மிதப்ப வோதுதமிழ்க் கடலினடிக் கமலம் போற்றி, மடலவிழ்பூங் குழற்பரவை வீரசலினம் மிறையிருதாள் வருந்த மீண்டுந், தொடர்வருந்தா தெனவிடுத்த சுந்தரன்பொற் றுமளையாந் துணைத்தாள் போற்றி. (௮)

திருவாதவூரடிகள்.

திருந்துகுருந் துறைகயிலேத் துலூதசாந் தேசனருட் டேச னன் பின், பெருந்துறைவா ரிதிபடிந்து ஞானநீர் முகந்தகம்பேர்த் திடித்து மின்னி, வருந்துமுல குயிர்ப்பயிர்கள் பவக்கோடை யால்வெதும்பி வாடா தோங்க, வருந்தமிழ்வா சகமழைபெய் தருள்வாத வூர்முகிலே யகத்துள் வைப்பாம். (௯)

சண்டேசுரநாயனர்; சங்கப்புலவர்; மூத்திநாயனர்முதலியோர்.

சைவசம யம்வளரத் தந்தைதா ளெறிந்தசண்ட சனருள் போற்றி, பைவளர்பாம் பணிபரனைப் பாடியசங் கப்புலவர் பாதம் போற்றி, மைவளர்கந் தரனணியுஞ் சந்தனமுட் டியதென்த்தன் வண்கை தேய்த்துத்,தெய்வமது ரைப்பதியாண் மூர்த்திமுத லனைவரையுந் தெரிசிப் போமே. (௧0)

சுந்தரசாமந்தன்.

தந்திரமார் படைகூட்டென் றரசுதரு பொருட்கிறைநீ மெய்க் காட் டென்று, வந்தரனு ரடியாரை யமுதுசெய்வித் தவர்புசித்த சேடம் வாங்கி, யிந்திரன்மா லயனிவர்க்குங் கிட்டாவிப் பிரசாத மெனத்தா னுண்டு, சுந்தரனுர் தாளடைந்த சுந்தரசா மந்தனடி தொழுது வாழ்வாம். (௧௧)

சிவபத்தர்.

கருவனந்த யோனிகளிற் புகுந்துழன்று பல்லுயிருங் கவலா வண்ண, மருவனந்தஞ் சூழ்கடம்ப வனத்திருந்து மற்றையமெய்த்தலங்க டோறு, முருவனந்த மெடுத்தகலே யொன்றுகித் தாணுகவுதவுஞ் சொக்கைத், திருவனந்தன் மூதற்காலங் களிற்பணியும் பத்தர்பதஞ் சிரமேற் கொள்வாம். (௧௨)

வாழ்த்து.

வேதமா முனிவர் வாழ்க விளங்குமா னினங்கள் வாழ்க
பூதிநா யகன்மெய் யன்பர் பொலிந்துசூழ் மதுரை வாழ்க
மாதமும் மாரி பெய்து மலிவளஞ் சுரப்பச் சொக்க
நாதனெனுங் கடவுட் டொன்னூ னலம்பெறப் பொலிக மாதோ. ()

முதனூல்வழி.

இறைவனந்திக் கருள்புரிய நந்திசனற் குமாரனுக்கங் கியம்பு வன்னே, னிறைதவத்து வியாதமுனிக் குரைக்கவவ னெடுந்தவத்துச் சூதற் கோத, மறைபுகலுஞ் சூதமுனி நைமிசா ரணியமுனி வரர்க்குக் கூறு, முறைதெரிந்து நிறைவுதரு நீபவன மான்மியம்யான் மொழிய லுற்றேன். (கச)

நூல்செய்யத்துணிதல்.

திருந்துபுகழ்ப் பரஞ்சோதி மாமுனிவன் சிவனருளாற் செப்புமெண்ணெண், பொருந்திவளர் திருவிளையா டற்புரா ணமுமிருக்கப் பின்னும் யானீர், தருந்தரணி புகழ்பதினே ரத்தியா யத்தொர்வகை சாற்றப் புக்கேன், மருந்தனையான் விளையாடற் கதையோதி யவையருளும் வழக்கான் மன்னே. (கரு)

நூல்செய்தற்குக்காரணமும், மொழிபெயர்த்தவிதமும்.

சீர்வளர்தண் கடம்பவன மான்மியமாம் வடநூலைத் தெருளு மன்பா, லேர்வளர்தென் மதுரையில்வா ழீசனைப்பூ சனைசெய்வோ ரியைந்த செல்வப், பார்வளர்ந்தோங் கியபுகழ்சேர் தலத்தோர்தென் மொழியாகப் பகரென் றோத, நீர்வளர்பைந் தொடைவிருத்த யாப்பதனு லவரருளா னிகழ்த்த லுற்றேன். (கசு)

அவையடக்கம்.

புதிய நன்மொழிக் கிள்ளையைப் பூவையைப் பயிற்றி
யதிச யம்பெறக் கேட்டக மகிழ்வரா தரிப்போர்
துதிசெ யுந்தமிழ்ச் சொக்கனுண் டருளிய தொடர்பின்
முதிய நாவலர் கொள்வரென் புன்சொலு முறையால். (கஎ)

சிறப்புப்பாயிரம்.

பொன்னலர்பூங் கடம்பவன புராணந் தொன்னூற் பொதியமுனி யகத்தியன்முன் புகன்ற வாறே, பன்னுபய கவிஞர்செவிக் கமுதமாகப் பரனருளின் செழுந்தமிழால் விளங்கச் செய்தான், றென்னவரா யன்புகழ்மாக் கண்ணனெய்தற் செல்வனுயர் தருமிலம்பூர் வீம நாத,

னன்னெறிதோ புராணமுழு துணர்ந்தோன் கங்கை நதிகுலவேள் பெருந்தொண்டை நாட்டி னூனே. (௧௮)

நூல்வரலாறு.

தெளிதரு தொன்னூ னெறியமு தொழுகு நாவின னுதற்றிரு நீற்ற, னொளிதரு மக்க வடம்புனை மெய்ய னுரகபூ ட்ணனைபெண் ணுளத்தன், றுளிதரு கண்ணீ ரானந்தப் பெருக்கின் றொன்மைமா தவனருட் டேய, னளிதரு குணத்துச் சூதமா முனிவ னயிமிசா ரணியத் தை யடைந்தான். (௨௰)

வந்தருளி சூத முனிவனை வழுத்தி மாதவ ராசனத் திருத்தித்
தந்துப சார வருக்கிய முதல் தண்ணளி மாதவ வெமக்கு
முந்திய காந்தத் தியம்பிய கடம்ப வனபுரா ணக்கதை முழுதும் [லும்.
புந்திகூர்ந் தியம்பென் றிரந்திட வியாதற் போற்றியம் முனிவரன்புக

பதிகம்.

ஆதிமா தவவசிட்டன் முதன்முனிவ ரகத்தியனை யடைந்த வாறு
நீதிமது மறையாக மங்களுயர் நீபவன மான வாறுங்
கோதிலா வம்மறையா கமங்களுக்கு விரும்பும்வரங்கொடுத்தவாறுங்
தீதுதீர் தருதீர்த்த மகிமையிவை யெனவிரித்துச் செப்பு மாறும். ()

கனகவிர சிதவிரத்ந சபைகளிற்கண் ணுதனிருத்தம் புரியு மாறு
மனகனுறை பெருங்கயிலை யான்றசிவ லோகவள முரைத்த வாறு
கனைகமழ்மென் மலர்க்கூந்த லம்பிகையெண் ணென்கறமும் வளர்த்த
வினைகளற நாரணன்மாதவம்புரிந்துமிக்குவரம்பெற்றவாறும்.[வாறும்

பொய்யுரைத்த நான்முகனார் பூசித்துப் பொய்த்தோடம் போக்கு மாறு, மெய்யிலகு முருவாகி யீசனெண் ணெண் விளையாட்ல் புரிந்த வாறுஞ்,சையகிரித் துன்மதவே டன்மதுரை யறியானத் தலத்தன் பர்க்குச், செய்துபகா ரங்கள்கிளை யோடுகதி யடைந்ததும்யான் செப்ப லுற்றேன். (௨௩)

தென்னவனாட் டினிலுயர்ந்த கதம்பவன மகிமையெவர் செப்பற் பாலா, ரன்னதங்சி றெடுத்துரைக்கி லாருரைப்பா ரால்வா யரனே வல்ல, னென்னினும்யா னறிந்தவா றவனருளா லியம்புகின்றே னினிது கேண்மின், றென்னெறிமா தவத்தீரென் றவர்கேட்பக் கதை விரித்துச் சொல்வான் சூதன். (௨௫)

பாயிரமுற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௨௫.

முதலாவது

வசிட்டாதியரகத்தியனையடைந்தவத்தியாயம்.

பொங்கியமா தவவசிட்டர் புலகர்புலத் தியர்கண்ணுவர் பொரு
டேர் கர்க்க, நங்கிராக் கபிலர்கவு தமர்கிருது பராசரரம் பரத்து வா
சர்,தங்கியசத் திபர்சுமந்துச் சயிமினிவர் வைசம்பா யனர்சு வாயுத்,து
ங்கரிபுச் சோமரிய வக்கிரிதர் ககோளர்சொல்லுங் கிர்த்த பாதர். (க)

சத்தியமா தவர்விசுவா மித்திரர்சுகர் பிருகுவற்சர் தனக்கொப்,
பங்கு, நித்தியமா மிருகண்டு மார்க்கண்ட ராய்க்கியவற் கியர்கன்
னையச், சித்திபெறு கலிகன்ம டநாசமுனி சிதேந்திரியர் வாமதேவர்,
பத்திபெறு சிவபாத விதயர்பதஞ் சலிமுனியம் புலிப்பொற் பாதர்.()

ஒருசடிலர் பிறங்குசிகா சடிலருய ரிரும்புவனத் துள்ளோர் போ
ற்றுங்,திரிசடிலர் சட்சடிலர் சதசடிலர் திகழ்சருவ சடிலர் செவ்வே,
வரிசடிலர் மிண்டியொளிர் முண்டிதரா யதிகளா வருமனேகர், வி
ரிசடிலத் ததிசிமுதன் முனிவரர்மா தவத்துயர்ந்த மேன்மை பூண்
டோர். (ந)

வேதாந்தஞ் சுருதிமிரு திகளுணர்ந்தோ திப்பொருளை விளங்
கத் தேர்ந்து, நாதாந்தத் திட்பொருளி னுட்பொருளா மாதிபரம்
பொருளை நாடிப், பூதாந்தங் கீழ்ப்படமேற் றுவாதசாந் தத்தினிலே
பொருந்தக் கண்டோர், காதாந்தத் தினுமழியா நீறணிந்து கண்டி
கைமா லிகையும் பூண்போர். (ச)

கறுத்திடுங்கா மங்கோத முலோபமோ கமதமாற் சரியங் காய்ந்
தே,வெறுத்திடுவோர் பொறையுடைமை மேற்கொள்வோர் விரும்பு
பெருந் தவத்தின் மிக்கோர், சொறுத்திடுவெம் பவமகலச் சிவபத்தி பூ
ண்டிதயத் துள்ளே நாளுங், குறித்துணர்ந்து சிவபூசை வேதாக
மத்தடைவே கூர்ந்து செய்வோர். (ரு)

புகழ்ந்திடுமோன் மார்த்தலிங்கஞ் சுயம்புமுத லாமிலிங்கம் பூசை
செய்வோர், திகழ்ந்திடுதம் மிதயத்தில் விசேடித்து மானதபூ சனை
சேர்ந் துள்ளோ, ரகந்தெளிந்து சிவனடியார் யாரேனுஞ் சிவமெனும்
பா வனையாக் கொள்வோர், மகந்தருமம் பிகையானை முகன்குகனிங்
கிவர்பூசை வரம்பிற் செய்வோர். (சா)

இருக்கோலிட் டேத்திடப் நந்திமுத னம்பர்கணத் தெவருஞ் சூ
ழ்ந்த, திருக்கோலக் கோயில்வலஞ் செய்திலிங்க தெரிசனமே நியம
மாகிக், கருக்கோல நீங்குசிவ தோத்திரங்கள் சிவநாமங் கருத்துட்

கொண்டே, பெருக்கோலிட் டெச்சரித்து நிலைபெறுமை திகழைசவம், பேணி வாழ்வோர். (எ)

பந்தமறு சிவஞான தீக்கையாஞ் சீடர்பல ரவர்க்குஞ் சீட ரந்தமிலா ரத்தகைய சீடரொடுந் திருக்கூட்ட மாகி யுள்ளோர், முந்துசதா சிவப்பொருளி னிலையுணர்ந்து சிவகதயை முழுதுந் தேக்குஞ், சிந்தையராய்ப் பரகதியீ தெனவிதிநூ றெளிந்துகுரு பூசைசெய்வோர்.

இத்தகைய முனிவரரொண் ணாயிரவ ருங்காசி யடைந்தே மீளா
முத்திதரு மகிலேசன் றன்வணங்கி முத்திமண்ட பத்தின் மேவு
முத்திமமா தவவடிவா மகத்தியனை யஞ்சலிசெய் துவந்து போற்ற
நித்தியமா மனைவரையுங் கைதொழுதாங் குடனிருத்தி நேயங்கூர்ந்தே

வேறு.

இங்குநீ ரெய்த யான்முன் னெத்தவஞ் செய்தே னென்று
னங்கவர் முனியை நோக்கி யியம்புவா ரருந்த வத்தோய்
கங்கைசூழ் காசி யீசன் கழல்பணிந் தேத்தும் பேறு
தங்கிய தெமக்கு நின்னாற் சாற்றுவ தினியொன் றுண்டால். (க0)

அருள்வடி வாகுஞ் சொக்க னாடிய வறுபா னான்கு
திருவிளை யாடல் கேட்கும் விருப்பினேந் தெரித்தி யென்னக்
குருபர னருளை வாழ்த்திக் கூறினன் முனிவர் கோமா
னிருண்மல மகற்றுங் காதை முழுதுங்கேட் டின்ப முற்றார். (கக)

பரவச மாகிச் சொக்கன் பதமலர் தியானித் தேத்தி
யரவஞ்சூழ் தலஞ்சே விக்க வாசைமிக் குற்று ருற்ற
கரவறு கருத்தை யோர்ந்த கடமுனி கதம்பக் கானில்
விரவுமன் புடையே னென்னோ டேகுதிர் விரைவி னென்னா. (கஉ)

எழுந்தனன் வசிட்டன் முன்னாந் தவரொடு மீசன் வேணி
வழிந்திழி கங்கை மூழ்கி வரன்முறை நீறு சாத்தி
மொழிந்திடு மக்க மாலை முழுதுமெய் பூண்டு வேதம்
பொழிந்தமும் மதமார் சித்திப் புழைக்கைமா முகனைப் போற்றி. ()

ஆரணம் போற்றும் வார ணாசிசூ ழகில நாதன்
பூரணன் றுணைத்தாள் வாழ்த்திப் புவிமுழு துலகுக் கெல்லாங்
காரணந் தானா யீன்றுங் கன்னியா யமலை யாகும்
வாரணி களபக் கொங்கை மனோன்மணி பதத்தை யேத்தி. (கச)

உளங்கெழு மன்பாற் காக்குங் கொற்றவை திருத்தா ளுன்னிக்
களங்கம தெழாது நீக்கும் வயிரவன் கமழ்பொற் கஞ்சத்

தளங்கெழு செய்ய பாதந் தலைக்கொடு வார்தற் சூழ
வளங்கெழு காசி யெல்லை வலங்கொடு வழிக்கொண் டானே. (கரு)

வேறு.

தென்றிசை நடந்து சில்பகல் கழியச் சென்றனர் சீவன்முத் தீச
ன், மன்றலங் கடம்ப வனமெதிர் தோன்றக் கண்டனன் மலையமா
முனிவ,னென்றிய வன்பிற் பணிந்தருட் சொக்க னுறைந்தருள் கொ
ளக்குநற் றலமீ,தென்றலுந் தவத்தோ ரிறைஞ்சிவீழ்ந் தெழுந்தா ரே
த்தினர் கூத்துமா டினரால். (கசு)

ஆடியா னந்தக் கடல்படி பவரோ டீரவஞ்சூ ழிரண்டியோ சனை
யா,நீடிய கதம்ப கானவெல் லையினை வலஞ்செய்தவ் வனத்தினு ணை
டுமா,றேடிய பரமா வமிர்தரூ பமதாய்த் திருந்துமைங் குரோசமு
ஞ் சூழ்போந், தேடவிழ் மலரிட் டேத்தியுள் புகுந்தே யிறைஞ்சின
ன் கோபுர வாயில். (கஎ)

ஆலயம் வலஞ்செய் தேத்தியுள் புகுந்தே யம்பொற்று மரைப்
புன லாடி, மாலயன் பரவு நீறணிந் தக்க மணிபுனைந் தஞ்செழுத்
தோதி, மூலமார் சித்தி விநாயகன் றுணைத்தாண் முளரிதன் சென்னி
யிற் சூடிப்,பாலினேர் மொழியங் கயற்கணு யகியைப் பணிந்துபோ
ற் றினன்முனித் தலைவன். (கஅ)

கிளைத்தெழுங் கருணை வெள்ளத்தின் மூழ்கிக் கிளர்தரு மகாதி
மூ லம்தாய்,முளைத்தெழு மமுத சுந்தர விலிங்க மூர்த்தியைக் கண்டு
ளங் களித்தான், றிளைத்தெழுங் கண்ணீ ரானந்தம் பெருகத் திருமுன்
னர் வீழ்ந்துதாழ்ந் தெழுந்தே, விளைத்தெழும் புளகந் தோன்றிடத்
தொழுதான் மேன்மையைப் பன்முறை துதித்து. (ககூ)

உண்மகிழ் சிறந்தா னருள்சிவ பத்தி சீவன்முத் தியுமுட னடைந்
தான்,கண்மய முதவுஞ் சிற்சபை மூன்றுங் கண்டிலற திருநடந் தொ
ழுதா, னெண்மலி யன்பின் வணங்கியே வலஞ்செய் தியன்முனி மு
னிவர ரோடும், வண்மைசேர் திருமுன் னுறுநாற் பீடத் தேறினன்
வரன்முறை யிருந்தான். (உ0)

வேறு.

இருந்திறை யஞ்செழுத் தியல்பி னோதிய
வருந்தவத் தவரொடு மன்பு தோன்றிடத்
திருந்துபஞ் சாக்கரஞ் செபித்துச் சென்மநோய்
மருந்தெனுங் கடம்பமா வனத்தை யேத்தினன். (உக)

அத்தக வுணர்ந்தவ ரங்கை கூப்பியே
முத்தமிழ் முனிவரன் முகத்தை நோக்குறு
மித்தைநீர் கதம்பகா னத்தின் மேன்மையாஞ்
சித்திர மாக்கதை கேட்குஞ் சிந்தையேம். (௨௨)

சுந்தர னுடன்முன் றெருத்துச் சொற்றனை
வந்திடு கடம்பமா வனத்தின் வைபவ
முந்துநீர்த் தந்தல மூர்த்தி மான்மியம்
புந்திகூரீந் தெமக்கினிப் புகலு வாயென்றார். (௨௩)

என்றவர் மீளவு மியம்பு வார்குணக்
குன்றமே கமலமின் குளிர்மு கத்தினி
னின்றும்வார் சிவகதை யமிழ்தை நெஞ்சுற
வொன்றிய செவிவழி யுண்டு தேக்கினேம். (௨௪)

தேக்கியு மெமக்கின்னுந் தெவிட்டிற் றில்லையான்
மீக்கொரு மாசைமேன் மேலு மென்றவர்
வாக்கினுன் மொழிவது கேட்டு வண்டமி
ழுக்கமா முனிவர னுவகை யெய்தியே. (௨௫)

வேறு.

சொக்கனரு ளாலிவைதொ குத்துரைசெய் வோமென்
றக்கணமு னித்தலைவ ருக்கருள்பு ரிந்தே
நக்கனையந் நாரியக லானைமுரு கோனைச்
சிக்கெனவி னைந்துறுதி யானமது செய்தான். (௨௬)

செய்தலுமு யர்ந்திடவெ முந்ததிரு வாக்குப்
பைதலொழி வார்கள்சிவ பத்தரனை வோரு
மெய்துமிவை கேட்கவுரி யார்நம்முரு கேச
னுய்திறமு னக்குமுன்னு ரைத்ததுனி யென்றே. (௨௭)

இன்னவுரை கொண்டனனம் மீசனுரை யென்று
மன்னுதமிழ் மாமுனிம கிழ்ந்துதுதி குய்யுந்
தன்னிகரின் மாதவிர்வி னாவினிர்த வத்தான்
முன்னியிவை கேண்மினென வேமொழிவ தானான். (௨௮)

வேறு.

முனிவிர்கா ளிக்கதை கேட்டு முற்றுற
வினைவரு மாசையுந் துரைத்தி ராதலாற்

பணவரு பர்க்கியத் தவரிற் பாக்கியம்
வினையறப் பெற்றனன் மேலுஞ் சத்தியம். (உ௯)

வே று.

நீவிர்சிவ தவம்புரிந்த காரணத்தா லாசையுற்றிந் நினைவு தோன்றிப்
பூவுலகிற் சிவலோக கடம்பவனக் கதைகேட்கும் புந்தி வைத்தீர்
தேவர்தொழு மதுரேச னருளுடனங் கயற்கண்ணருட் செல்வி யான
பிராவையுமை திருவருளு நுமக்கேயுண் டாகுமிது பகர்ந்தே முண்மை.

பவமகற்று மானிடமாப் பாரினில்வந் துதித்தார்க்கே பத்தி பூண்ட, சிவனருள்பெற் றுரியதவஞ் செய்துசிவ புண்ணியமுன் செய்து ளோர்க்கே,யவமகற்றுங் கடம்பவன மான்மியங்கேட் கப்பெரிது மாசை யுண்டாந்,தவமியற்றா மானிடருக் கொருக்காலுங் கேட்கமனஞ் சாரா தன்றே. (௩௧)

சித்திவிநா யகனையருட் டிருவால வாயானைத் திருமெய்ஞ் ஞானை, சத்தியையங் கயற்கணுமை நங்கையைநங் குருபரனுந் தார்வேற் சேயை,நித்தியமாய் விளங்குநந்தி தேவன்முதற் கணங்களைநன் னினைவிற் கொண்டே, பத்தியினுங் கவர்ப்பணிந்து கடம்பவன மான்மியத்தைப் பகர்வாங் கேண்மின். (௩௨)

என்றுவசிட் டாதியருக் ககத்தியனுத் தரம்புகன்றே யியம்புங் காதை, நன்றுபெரி தகமகிழ்ந்து படிப்போர்நன் குறக்கேட்போர் நனிகேட் பிப்போர், துன்றுபெரும் பவந்தொறுஞ்செய் தொலைவில்பெரும் பாவவினைத் தொடர்பு நீங்கி, யொன்றியபே ரின்பமுறு முத்தியடைந் திடுவரென வுரைத்தான் பின்னும். (௩௩)

முதலாவது வசிட்டாதியரகத்தியனையடைந்தவத்தியாயம்
முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம் - ௩௩.

இரண்டாவது,

வேதாகமங்கணீபவனமானவத்தியாயம்.

கேட்ட மாதவர் பின்னரும் விளம்புவார் கேடின்மா தவத்தோனே
கோட்ட மில்லதோர் கும்பசம் பவகுரு சேட்டனே தமிழ்க்கோவே
மூட்டு மாசையா லீசனைத் துதிக்குமுன் மூந்துதோத் திரஞ்செய்தாய்
நாட்டு நீபமா வனமெனுங் காரண முந்துற நவிலென்றார். (௧)

அந்த வாசகங் கேட்டலு மியம்பிய வருந்தவ ருளங்கூர, வந்த வா றெலாங் கேண்மினென் றகத்தியன் மகிழ்ந்துகந் தனைவாழ்த்தி, மூங் ணைதை வேதத்தின் வடிவதாய்ப் பிரணவ முதலதாய் முளைத்தோங்கு, மிந் த ராவணிச் சொக்கனைப் பின்னுநெஞ் சிருத்தின னிசைக்கின்றான்.( )

வேறு.

பூண்டு ருத்திர னடும்பெருங் கற்பத்திற் பதுமன்
கொண்டன் மேனியன் முதலிய விண்ணவர் குழாமு
மண்டு மண்டமு மொடுங்குகா லங்கள்வந் தடுக்கக்
கண்டு வேதமு மாகம புராணமுங் கலங்கி. (௩)

என்செய் கேமெனப் பயங்கொடு கயிலையி னேகி
மின்செய் நுண்ணிடை மெல்லியல் விமலைபங் கினனை
மன்செய் மாதவர் துதிசெயுங் கருணைவா ரிதியை
முன்செய் நல்வினை பயத்தலாற் கண்டுகை முகிழ்த்தே. (௪)

அகில முங்கடந் தீன்றளித் தனுக்கிர கிக்கு
மிகலி லீசனே யெங்கட்கு முதல்வனே யிறைவா
விகல மின்றிய வுலகமும் புரந்தருள் விமல
புகல ரும்பரப் பிரமமே போற்றியென் றெடுத்து. (௫)

விஞ்சு மித்துதி வேதவா கமங்கண்முன் விளம்பிச்
செஞ்ச வேதொழு தெழுதலுந் திருவருள் சுரந்தே
யுஞ்சு வாழுதிர் காக்குது நும்மையென் றுரையா
வஞ்ச லஞ்சலென் றலர்க்கர மமைத்தன னமலன். (௬)

அரந்தை தீர்தர வறத்துரு வாகும்வெள் ளேற்றைப்
புரந்து நாசமுற் றிடாதருள் புரிந்தன மதுபோ
லிரந்தி ரந்துநின் றேத்திய நும்மையு மெம்பா
னிரந்த ரந்தொழு திருந்திடப் பணித்திடா நிற்பேம். (௭)

ஒடுக்குங் கான்மற் றையோரெலா மொடுங்குவ ருண்மை
நடுக்கஞ் செய்துருத் திரனடும் பிரளய நலியா
திடுக்க ணின்றியோர் விதத்தினுற் பவித்திருந் திடச்செய்
தடுக்கு நுங்கட்கு லயமிலா தாக்குது மென்றான். (௮)

இன்ன வாறா ணியம்பவே தாகம மியம்புங்
கன்னி பாகனின் னருளினித் தியம்பெறக் கடவோ

முன்னி டத்துதித் துன்னேயே யுணர்ந்திடப் பெறலாற்
பின்ன ரெங்கட் கு நினக்குமோர் பேதமொன் றின்றால். (௯)

அருத்தி கூர்தர வம்பிகை யோடுநின் றுடு
நிருத்த மூர்த்தரி சித்துநின் னருள்பெற வேண்டுங்
கருத்த றிந்தடி யவர்க்கருள் காரணக் கருணை
பெருத்த நின்னிடம் பிரிவிலா துறையவும் வேண்டும். (௧௦)

அந்த நல்வரந் தருகென வேதவா கமங்கள்
சிந்தை செய்துரை செய்தன திருவுளத் தடைத்துப்
பந்த பாசநீத் தருடரும் பரமனவ் வரங்க
டந்த னம்முமக் கென்றனன் பின்னருஞ் சாற்றும். (௧௧)

வேறு.

கயிலேமா கயிலை யுயர்சிவ லோகங் கருதினம் முருவமூ விடத்தும், புயனிற வண்ண ணுன்முக னிமையோர் போற்றினர் மணிந்துநின் றேத்த, மயலறு நந்தி முதற்சிவ யோகர் வழுத்தினர் கண்டுகண்டிறைஞ்ச, வியலுமோவ் வொன் றிற் கியைந்தமும் மூன்று சபைவகுத் தேர்பெற நடிப்பேம். (௧௨)

பூவுல கினுநம் மன்பரா யுள்ளோர் பொலிவுடன் கண்டுகண் களிக்க, மேவர விளங்கு சபைபல வகுத்தே மெல்லிய லொடுநடம் புரிவோந், தாவரு மந்தத் தலங்களெண் ணிலவுஞ் சாற்றுவ தாரவை விரித்து, நாவினுற் சேடன் முதலியோ ராலு நவின்றள விடவெளி தன்றால். (௧௩)

மாநில வரைப்பின் விசேடமாந் தலங்கள் பலவுள வேனுமற் றவற்றுண், மேனிலம் பரவ நமக்குநூற் றெட்டுத் தலமிக மேம்படுமவற்றுட், பானில வெறிக்கும் வளைதவழ் பழனப் பதியுமொன் றிருபதாங் கதிகங், தூநலந் தருமத் தலங்களின் பெருமை தொகுத்திட வியாவர்க்கு மரிதால். (௧௪)

இப்படி புகழு மிருபத்தோர் தலத்துண் மேம்படு மொருதல மியம்பு, மெய்ப்படு சுயம்பா மிலிங்கங்கட் கெல்லாம் வேரதாயச் சமட்டிலிங் கமதா, யப்படை பிரளை யத்தினுங் கடையு காந்தத்து மழிவிலா திருக்குந், திப்பிய விலிங்கந் தன்னில்யாம் விளங்குஞ் சிவன்முத் திதல முளதால் (௧௫)

ஆங்கதிற் சகளீ கரித்துநா மனேக லீலைசெய் துறைகுவ மவணீ ர், பாங்கொடு கதம்பத் தருக்களா யெமக்குப் பன்னரு நீழல்செய் திருமி, ேனுங்குநும் பெயராற் கடம்பமா வனமென் றுறுபெயர் வி ளங்குமத் தலமுந், தேங்கமழ் மலராற் சொக்கலிங் கத்தைச் சிறப்பி னே டருச்சனை செயுமின். (கசு)

சுயம்புவாய் மற்றை யிலிங்கங்கட் கெல்லாஞ் சொல்லருஞ் ச மட்டியாய் முதலாய்ப், பயம்பெறு மமுதாய்க் குளிர்ந்ததாய் நிறைந்த பாவன மாமிலிங் கத்தி, னியம்பிய பரமா னந்தரூ பமதாய்ச் சிவானந் த ரூபமா மெம்மை, நயம்பெறு கயற்கண் மங்கையு நீரு நன்கருச் ச னைசெய விருப்பேம். (கஎ)

கணங்கள்சூழ் தருமா கயிலையி லிருப்ப தொருகலை கதம்பகா ன னத்தின்,மணங்கம ழமுத சுந்தர லிலிங்கத் தொன்றெழு யாயிர மரு வப், பணங்கிள ருலக முழுவது நன்மை பயப்புறப் பரவுமம் பிகை யா, மணங்கொடு மிடப வாகனத் தெதிர்சென் றன்பருக் கன்புசெய் திருத்தும். (கஅ)

இன்னுமொன் றிசைக்கெம் பெருங்கயி லையைப்போ லிரசித மிரத்தினங் கனக, மன்னிய சபைமூன் றுண்டதி லதிக வைபவத் துட னடம் புரிவோ,மன்னமுச் சபையி னிருத்தமுந் தெரிசித் தாங்கெமக் கணிநிழ லாகித், துன்னிய கடம்பும் வில்லமு மாகித் தொலைவிலா தி ருந்திடப் பெறுவீர். (ககூ)

ஆகம மலருங் கொடிகளு மாகி மிருதிக ளருசுக மாகிப்
பாகமா ரிதிகா சம்பல புராணம் பஞ்சவன் னக்கிளி யாகி
மோகமார் தருகா மாதிய நீத்து முதற்சிவ நாமமுச் சரித்தே
மாகமார் நுமது கொம்பினில் வதிந்து வனப்புற நீர்தழைந் திடுமின்()

காலகா லங்க டோறுநன் னியமஞ் செய்யுமின் யாவர்க்குங் கரு ணை, யேலவே புரிமி னன்னியீ சமய முற்றுளோ ரத்தலத் தெய்திற், சீலமார் சிவமெய்ஞ் ஞானங்க ளுணர்த்தித் தெளிசிவ சமயத்துட் சேர்மின், பாலலோ சனனு லயந்தினந் தொழுமி னின்னமும் பகரு துங் கேண்மின். (உக)

எச்சில்கான் றுமிழ்தன் *மலசலம் விடுத்த லின்மொழி மடந்தை யர்ப் புணர்த, லச்சமொன் றின்றி யன்னரை நினைத்தல் பாகிலை யரு

* எச்சில்கான்றுமிழ்தல் - எச்சிலுமிழ்தல், கான்றுமிழ்தல் எனப் பிரித்தெண்ணுக.

ந்தல்பொய் பகர்த, னச்சிடேயே துயிற றம்பல முமிழ்த லன்னியர் தார த்தை விரும்பல், வர்ச்சனஞ் செய்யு மகூசிபே றிழவு மனநினை யாத ன நினைத்தல். (உஉ)

கோமுகை சிவனின் மாலியங் கடத்தல் பலிபீடங் குறுக்கிடல் ப லிப்பற், றேமுற மிதித்த லேறெருடு தூபி துவசதண் டியற்பலி பீட, மாமைகே சிலிங்க மைந்தினின் சாயை மிதித்தனீ றணியாது வருந, ருமமார் விளக்குச் சாயைநல் லிலிங்கச் சாயையிற் றன்னிழ லிடுதல்.

பரிவுற திருவா ணத்தொடு புகல்பா தங்கழு வாதுபோந் திடுத, லொருவலம் வருதல் வலம்வரும் போதி லோடியே வலம்வர லிந்த, மருவரும் பெரிய குற்றமெண் ணன்குஞ் சார்ந்திடா வாறுகோ யினு ட்சென், றிருவருங் காணு நமையவண் சேவை செய்பவ ரெம்முல கிருப்பார். (உச)

ஆசனத் திருத்தன் மயிரது களைத லாசையுற் றிடலெண்ணெய் தேய்த்தல், வாசநெய் தேய்த்தல் கஞ்சுகந் தரித்த றலைபார்த்தல் மயிர் கோதி முடித்தல், போசனஞ் செய்த னறியநீர் பருகல் பொருந்துவா கனங்களிற் போத, லேச்று வட்டக் குடைநிழற் சேற லியாரையு மி கந்துதா டித்தல். (உரு)

வண்டுகில் போர்த்து வலம்புரிந் திடுதல் வணங்குதல் சேவைசெ ய் திடுதன், மிண்டுறு கோபங் கொண்டிடல் சிரசில் வேட்டிகட் டிக் கொடு தொழுதல், கொண்டொளி விளங்குந் தீவர்த்தி பிடித்துக் கொ ள்ளுத லகாலத்திற் குறுக, லெண்டகு சிவனை முன்னொடு பின்னு மி டப்புறத் தினிலுநின் றேத்தல். (உசா)

சிவதிர வியங்கள் கவர்தல்ஞ் தாடல் செய்திட லொருநமக்கார, நவையுறு கர்ப்பக் கிருகத்திற் செபங்க ளோமங்க ணமக்காரம் புரி த, லிவையெலா மன்றி யாலயக் குற்ற மின்னமு மனேகமுண் டியம்பி, லவையெலா நீக்கி விதிமுறை சேவை செய்பவர் நம்பத மடை வார். (உஎ)

அந்தியங் காப்புச்†செழுங்கம லையினு மத்தயா மஞ்சிதம் பரத் துஞ், செந்தமிழ் நெல்லைப் பதியினுஞ் சேவை செய்பவர்க் கருங்க தி கொடுப்போம், புந்தியாற் சீவன் முத்தமாந் தலத்திற் பொருந்து மெவ் வேளையிற் றொழினும், பந்தபா சங்க ணீக்கியக் கணத்திற் பரவுநந் திருவடி சேர்ப்பேம். (உஅ)

† அந்திக்காப்பு — சாயரக்ஷை. அந்தி-சாயம் காப்பு-ரக்ஷை.

காலையில் வணங்கிற் புவனிமா தான பலன்றருங் கதிருறை யுச்சி
வேலையிற் றொழிலோ ராயிரங் கபிலை தானநல் கியபலன் மேவு
மாலையிற் சேவை செய்திடிற் கோடி வழங்கிய கற்பக னடையும்
பாலுறு மன்பா லத்தயா மத்திற் பணிந்திடிற் பரிமேதப் பயனும். ()

பத்திசே ரத்த யாமத்தில் யாமே பல்லக்குச் சொக்கெனும் பெயராய்
நித்திய மருங் காசியே முதலா நிகழ்த்திய சிவதலந் தோறுஞ்
சத்தியோடினிதா யவணவண் வதிந்து தங்கிய கலையெலா மீண்டு
சித்திசேர் திருவ னந்தலி லொன்றாய்த் திகழ்தரு பூரண வடிவாய். ()

அருளுரு வாகி மனோரத முடைத்தா யனைவர்க்குந் திருத்திசெய் குவதாய், மருளற வந்து வணங்கினர்க் கெல்லா மனந்தெளி விப்ப தாய் நிறைந்து, தெருளுறு ஞான வானந்த மயத்திற் சேர்ப்பதாய்க் கருத்தறிந் துதவும், பொருளதாய்க் கருணை பொழியுமங் கயற்கட் பூவையோ டிருந்தருள் புரிதும். (௩௧)

ஆதலிற் றொழுங்கா லம்பல வவற்று ளதிபலன் றருந்திரு வனந் தன், மாதொறு நாளும் பரவுமெய் யடியார் வரும்வழி பார்த்தெதிர் நிற்பேம், பூதலத் துயர்ந்த செல்வமு மனையும் புகழுநன் கல்வியு மகவு ந், தீதகற் றிடுமெய்ஞ் ஞானமுந் தருவேஞ் சனனந்தீர் முத்தியிற் சேர்ப்பேம். (௩௨)

நினைத்தவா றருள்வோ மாலயன் மகவா னெடுந்திசைப் பாலர் விண் ணவர்களனைத்துமற் றுள்ளோ ரனந்தலிற் சேவை செய்துதம் மரசிய லடைந்தார், வினைத்திற னகற்று மம்பிகை கமலை மேதினி நாமகள் சசிமற், றினத்தவாந் தேவ கன்னியர் தெரிசித் தியைந்ததங் கணவரை யடைந்தார். (௩௩)

அதிதிவந் திறைஞ்சி விண்ணவர்ப் பயந்தா ளருந்தவர் தபோபல மடைந்தார், மதிகுலத் தரச ரனேகர்முன் றொழுது மாற்றலர்ச் செகுத்தல காண்டார், துதிசெயற் கரிய சுரர்குரு போற்றிச் சொற்கலை யுணர்குரு வானான், கதிதெரிந் திராமன் பணிந்திரா வணனைக் கடிந்தரும் பழிகழு வினனால். (௩௪)

இந்துவந் திறைஞ்சித் தக்கனால் வந்த விரும்பிணி களைந்தன னிறைஞ்சி, வந்துமார்க் கண்ட னித்தியம் பெற்றான் றொழுதருச் சுனன்வலி பெற்றான், முந்திய நாமே யறிகுவ மெவர்க்கு மொழிவரி த

ணந்தலத் தலத்திற், சிந்தனை செய்து பெற்றுளோ ரின்னு மனேகர்நீர் சேவைசெய் திருமின். (௩௫)

அன்றியு முமையாள் சோமவா ரத்தை யனுட்டித்து வேண்டிய தடைந்தா, ளென்றுமவ் வாரம் விசேடமாஞ் சோம சுந்தரன் றனையவ ண்டொழுமின், மூன்றிகழ் பிரதோ டத்திலவ் விலிங்க மூர்த்திசாந் நித்திய மதிகஞ், சென்றவண் பணிவோர்க் கிகபர முதவுந் தெரிசித்த ஞ் செழுத்தையுந் துதிமின். (௩௬)

சேர்ந்திடு மூலகீ ரேழுமெய் யாகச் செறிதர வுயர்விராட் புரு டற், கேய்ந்தவா தார மாறினிற் கமலை யியன்றநா வற்பதி யருணை, யார்ந்தவம் பலங்கா ளத்திநற் காசி யாறின்மேற் கயிலைமேற் றுவாத, சாந்தமேற் சிவன் முத்திமா நகர்வாழ் தற்பர னெவர்க்குமே லானே ன். (௩௭)

மண்புன லனல்கால் வான்கதிர் மதிசீ வன்வடி விலிங்கமவண் ம ன்னுந்,தண்பொலி கமலை நாவல்சீ ரருணை தடங்கொள்கா ளத்திதெ ன் றில்லை; விண்புகழ் திரிசி ராமலை சிவன் முத்தமாந் தலம்வியன் க ருஞ, ரெண்பெருந் தலமுன் னுகவொவ் வொன்றிற் கியைந்தநா லி ருதல மியம்பும். (௩௮)

இயம்புமத் தலமோ ரறுபத்து நான்கி னிலிங்கத்துட் சொக்கலி ங் கத்திற், சுயம்புவா யாவுந் தோன்றுமுன் ரேன்றி விராட்டுறு து வாதசாந் தமுமாய்,நயம்பெறு மதியா யமுதுயிர் வளர நல்கலாற் சோ மசுந் தரனய், வயங்கொள்சீ வனுக்குஞ் சீவனு யீசன் மன்னலா லதி கமா மதுரை. (௩௯)

கதித்தெழு முருத்தி ரன்னமும் பிரள யத்திலுங் கற்பமா தத்து ந், துதித்திடுங் கருணை சேர்பதி நமைப்போற் றென்மையா யழிவி லா திருக்கும்,பதித்துவ மாகு மெமக்குநீர் நிழலாப் பதியினுங் கேகுமி னென்று, விதித்தனன் வேதா கமங்களுக் கன்பின் விடைகொடுத் தரு ளினன் விமலன். (௪0)

நம்பெருங் கயிலை நாயகற் றொழுது நான்மறை யாகம புரா ண, மெம்பிரா னருளைப் பெற்றன மென்றே யெழுந்துள மகிழ்சசி கொண் டேகி, யும்பர்சூழ் சிவன் முத்தமாந் தலத்தி னுறுதபோ பல த்தின லடைந்தே, யம்பொனு லயஞ்சூழ்ந் தருடருஞ் சொக்கை ய முதலிங் கத்திற்கண் புறைஞ்சி. (௪௧)

தளிரொடு புதிய மணமலர் பொதுளிச் சாயையாங் கவட்டு போ
க்கித்,துளிர்தரு கதம்பத் தருக்களாய் மூலத்த சுந்தர லிங்கத்தைச் சூ
ழக், குளிர்நறு நிழல்செய் தமர்ந்துதம் மலராற் கோதையங் கயற்க
ணா யகியை, மிளிர்பெருங் கருணைச் சொக்கநா யகனைப் பூசித்து வி
ளங்கின தழைத்தே. (சஉ)

இன்னகா ரணத்தாற் கடம்பமா வனப்பே ரியைந்தது மதுரை
மா நகரம், பன்னுமிக் கதைகேட் பவர்படித் திடுவோர் பரவுவோ ர
றிந்துசெய் பவமுந், துன்னியே யறியா மற்செயும் பவமுந் ,தொலை
ந்துடன் சிவகண மாகி, மன்னுவார் கயிலை யென்றுமா தவர்க்குப்
புகன்றனன் மலயமா முனிவன். (சங)

இரண்டாவது வேதாகமங்கணீபவனமானவத்தியாயம்

முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கoக.

மூன்றாவது

வேதாகமங்களுக்குவரங்கொடுத்தவத்தியாயம்.

செப்பியபெ ருங்கதைசெ விப்புலனி றைத்தா
ரொப்பரிய மாதவமு னித்தவரு ரைப்பா
ரப்பணிச டைப்பரன னுக்கிரக முற்றாய்
முப்பொருளு நாடிமுரு கேசனருள் பெற்றாய். (க)

பந்தமறு ஞானசிவ பத்தியின்மு திர்ந்தாய்
விந்த[illegible]ா யந்தரபி லம்புகமி தித்தா
யந்தமுற யாவையுமு ணர்ந்தறிய வல்லா
யெந்தைதமிழ் மாதவனு மக்கருளு கிற்பாய். (உ)

வருத்திடுமு காந்தமும வாந்தரமு மன்று
ளுருத்திரன மெம்பிரனை யம்பெரிது மோங்கு
மருத்தியொட றிந்ததெல ளுகமபு ராணந்
திருத்தமுறு வேதமலை தென்மதுரை தன்னை. (ங)

வெற்பிருத டங்கயிலை வீறுசிவ லோகம்
பொற்புறுமிம் மூன்றுமழி யாதவைபு காநீ

ருற்பவமு றும்பல்லுல கியாவையுமொ டுங்குங்
கற்பமத னிற்பொருவில் கந்தனுல கந்தம். (௪)

ஆதலினு யர்ந்தெழுச லப்பிரளை யத்திற்
பூதலம றைந்திடுமெ திற்பொருவி ஞானங்
நீதறவி ருந்ததெவ னவ்வுழிதெ ரிந்தே
வேதமறு நீபவன மானதெவ ணோதி. (௫)

களங்கமற வந்திடுமக் காலவிருத் தாந்தம்
விளங்கவ்வை மீளவும்வி ரித்துரைசெய் கென்று
ருளங்கொளும கத்தியனு ரைக்குமவை யுன்னு
வளந்தறிவி னோக்கியவ ருக்கருள்செய் வரனால். (௬)

ஆதிகயி லைக்கிறைவே தாதிகளை நீவிர்
போதிரென வோதியவந் நாளவைபு குங்கான்
மீதெழுச லப்பிரளை யம்பரவி மேன்மேற்
கோதிலுல கங்களவை கொண்டனவ றிந்தே. (௭)

மாறுதலில் வெள்ளமும றைத்திடுத லாலே
யாறுதல மெய்படிய றிந்தடைவ தைய
வீறுதரு மப்பதியின் மேன்மையடை யாளங்
கூறுதியெ னத்தொழுது கூறவிறை கூறும். (௮)

வேறு.

உரைத்த வேதா கமமீரா முரைக்கே முயர்ந்த சீவன்முத்தி
புரத்திற் கிரண்டி யோசனைக்குப் புறஞ்சூழ்ந் தங்கிப் புரிசையதா
னிரக்குஞ் சலமத் தியிற்சோதி நிறைந்த தம்பம் போல்விளங்கும்
வரத்தி னுயர்ந்த தென்பரண்டி வளநா டுறையு மந்நகரம். (௯)

தேவர் பரவும் பரங்குன்றந் திருவே ரகந்திண் சோலைமலை
மேவி யுறைநம் பொன்னனையாண் மெய்ப்பூவணமிப் பதிநான்கு
நாவின் முனிவர் புகழ்தாநான் கெல்லை சூழ நனிவிளங்கும்
பூவி லுயர்ந்த சீவன்முத்தி புரமத் தலங்க ணடுவோங்கும். (௧௦)

போதி ரெனவே தாகமங்கள் புகன்ற வடையா ளத்தடைந்தே
சோதி மயமா மத்தலத்திற் சுயம்பா யெவர்க்கு முன்றோன்றி
யாதி கமடங் கடந்துவே ரப்பா லாகி யண்டாந்த
மீது வீர பதங்கடந்து துவாத சாந்த மீப்போகி. (௧௧)

நிறைய வெங்கும் வியாபகமாய் நீள்சன் மயச்சின் மயமாகி
யுறையு மமுத மயமாகி யுருவி யோங்கு மிலிங்கமிதென்
றிறைவ னமிழ்தா னனோந்திருக்குந் தலமைங்குரோசவெல்லையிதென்
றறவ னருளாற் கண்டதருட் புணையா லடாந் நீர்கடந்தே. (கஉ)

இதுவே சிவன் முத்திபுர மிதற்கு நிகரோர் தலமின்று
லதியா தகரைச் சிவமெனவேட் டுவன்கைப் புழுப்போ லாக்குமென
முதுநான் மறையு மாகமமு முன்னர்த் துதித்துத் தவோபலத்திப்
பதிநாம் வந்தே மெனநீபத் தருவா யிருந்து பரவியதால். (கங)

தருக்க ளெல்லாஞ் சிவாகமங்கள் சாற்று மிருதி சாத்திரங்க
ளுருக்கும் புராணம் புள்ளினங்க ளோங்கும் பதினெண் வித்தைகளு
மருக்கொண் டலரு மலர்மரங்க ளாகு மனிதர் சிவகணமா
மிருக்கு மொழிதென்மதுரைநகர்க்கிணையாமோமற் றொருதலமே. ()

வேறு.

சிலையுரு விலிங்க மரும்புனல் கங்கை செறிநரர் சுரரொலி வேத
மலர்தருத் தருவாத் தேனுநல் லின்ப மருந்துதல் வேள்விபூண் பூசை
நிலைதுயில் சமாதி செலல்வல முன்ன றியானநீள்சொற்செபம்வீழ்தல்
பலர்புகழ் வணக்க மாவது மதுரைப் பதிக்கலா லெந்நகர்க்குளதே. ()

நுண்ணுணர் வுதவுங் கயிலையி லுறையு நூற்றுமுப் பானறு கோடி, புண்ணிய தீர்த்த மூவற் றினை யுமையாள் பொற்புடன் கொணர்ந்துதா பிக்க, வண்ணமார் தருமப் பதியெலா நிறைந்து மருவிமூழ் கினர்க்கரு டூரலா, லெண்ணருஞ் சருவ தீர்த்தமா புரப்பே ரியைந்தது மதுரைமா நகரம். (கசு)

அளப்பருழ் வாவி குளங்கிணறோடை யனைத்துமத் தீர்த்தங்கண் மயமாம், கிளப்பருங் கலியின் மறைந்தவை யிருக்குங் கிரீசனு ரருளி னோர் கங்கை, யுளப்படுங் கிருது மாலிகை வேக வதியெனு நதியிலு ய்த் திடுவோம், வளப்படு முத்தி மூழ்கினர் பெறலான் மதுரைநன் முத்திமா நகரம். (கஎ)

வைகைமா நதியி னிறந்துளோ ரென்பு வளர்சிவ லிங்கமா மத னை, யையுறீர் நீருங் காண்டிர்நா முரைத்த தகுய்ய மியாவருங் காண்பார், பொய்யல வின்று நாளையுங் காணும் போதெலா மதிசயம் பூணும், வெய்யபா தகரே யாயினுஞ் சிவமா மேவலாற் சீவன்முத் தீசம். (கஅ)

காசியி லிறக்கத் தில்லையைக் காணக் கருதருங் கமலையிற் பிறக்க, நேசமா ரருணை சலத்தினை நினைக்க நிலைபெறு முத்தியிந் நான்கும், பேசுமித் தலத்தா மின்னுமோர் விசிட்டம் பேசுவாங் கேட்கவே முத்தி, வாசமா யினரா குவர்சிவ மீசன் வாசப்பேர் பெற்றதான் மதுரை. (௧௯)

சுந்தர விலிங்கச் சுற்றினு நீபத் தருக்களாந் தொன்மரங் களினு
மந்தரி கயற்க ணம்மையைச் சூழு மணிநிழல் வில்லுவத் தருவின்
கந்தரங் களினுந் தவழ்புயல் வானக் கற்பக மலர்நவ மணிகள் [னும்.
சிந்தின பொழிந்து சிவாக்கினை யதனாற் சேவைசெய் திருந்திடுமென்

வேறு.

காலினாற் சூழ்ந்த நீபங் கமழ்தரு, கண்ணீர் வாரப்
பாலினாற் கவடு தாழப் படிந்தெழுந் தசையுந் தோற்ற
மாலினை ரிடந்துங் காணு மதுரைநா யகன்பொற் றாளிற்
சாலினுண் மலர்க டூவித் தலையினால் வணங்கல் போலும். (௨௧)

மையுறு மலர்ப்பூங் கொம்பர் வந்துவந் தசையுந் தோற்றம்
பொய்யுறு கபடாற் போக்கிப் புனிதனைப் பிரவஞ் சத்தி
னெய்யுறு விளக்கின் விட்டில் போல்விழீர் நீங்கள் வம்மி
னையுறீ ரெனக்கை காட்டி யழைப்பன போன்று தோன்றும். (௨௨)

ஒள்ளிய நீப வேதா கமமுப நிடத மான
வெள்ளைகள் புராண நூல்சாத் திரங்களர் மிருதி யான
புள்ளின மிவைகள் சொக்க புராதன விலிங்கந் தன்னை
யெள்ளரு மலரிட் டன்பா லின்புறத் துதித்த தன்றே. (௨௩)

வேறு

உலகம னைத்தையு முருவிமு னைத்தெழு மொண்சோதி
நிலவுப ரப்பிர மப்பொரு ளாகிநி றைந்தோங்கி
மலர்தரு சுந்தர லிங்கம்வ னப்பொடு கண்டேமே
பிலமுறு நற்றரு மத்தினர் நாமே பெரியேமால். (௨௪)

ஆதியு மந்தமு மில்லதொ ரொப்பிட லரிதாகிப்
போதமு றுஞ்சிவ யோகர்தி யானப் பொருளாகி
மீதெழு சுந்தர லிங்கம்வி ருப்பொடு கண்டேமே
பேதமி னற்றரு மத்தினர் நாமே பெரியேமால். (௨௫)

வீசுறு சோதிச டத்துவ மாமெய்ப் பொருளாகி
மாசுறு பாவமொ ழித்தடி யார்க்கருள் வாழ்வாகித்

தேசுறு சுந்தர லிங்கமி வண்டெரி சித்தேமே
பேசுறு நற்றரு மத்தினர் நாமே பெரியேமால். (உசு)

அருமறை யின்பொரு ளாநா தமும்விந் துவுமாகி
யொருமைத ருங்கயி லைக்கிறை யாகியு மைப்போர்தங்
கருமலி னந்தெறு சுந்தர லிங்கங் கண்டேமே
பெருமைபெ றுந்தரு மத்தினர் நாமே பெரியேமால். (உஎ)

வாணிய யன்பொ றிமாலறி தற்கரி தாயன்றே
ரேணியல் பூசையு வந்தா சுதவிய விறையாகிக்
காணிய வின்புறு சுந்தர லிங்கங் கண்டேமே
பேணிய நற்றரு மத்தினர் நாமே பெரியேமால். (உஅ)

அறங்கெழு மம்பிகை பூசையு வந்தவ ளகமேவி
நிறங்கிளர் கற்பவ ரம்பினு மொருநித் தியமாகித்
திறங்கெழு சுந்தர லிங்கமி வண்டெரி சித்தேமே
பிறங்குபெ ருந்தரு மத்தினர் நாமே பெரியேமால். (உகூ)

உருத்திர னுக்குமு தற்கா ரணமா யொன்றாகித்
திருத்துது வாதச வந்தநி றைந்தெழு சுடராகிக்
கருத்தைய றிந்தருள் சுந்தர லிங்கங் கண்டேமே
பெருத்திடு நற்றரு மத்தினர் நாமே பெரியேமால். (கூ0)

என்றுது தித்தெமை யாளுதி காவா யிவணென்றே
நின்றுக ளித்தவை நின்சர ணேசர ணெனவோத
வொன்றுமி ருட்டெறு மாமதி கோடியு தித்தென்ன
மின்றிகழ் சுந்தர லிங்கத் துறைசிவன் வெளிவந்தான். (கூக)

வேறு.

நீரும் பிறையு மறுகு நிலவுஞ் சடையிற் றாழ
வாருங் கரத்தின் மழுமா னபய வரதந் திகழப்
பாரும் புகழ்பொற் பூணும் பணியா ரமுமே லொளிரக்
காருண் ணியமா முகமுங் கண்ணுங் கருணை பொழிய. (கூஉ)

கதிக்குந் திறல்சேர் சிவமா கணமெம் மருங்கு நெருங்க
விதிக்கு மயன்மான் முதலாம் விண்ணோர் சயவென் றேத்தத்
துதிக்குஞ் சீவன் முத்தித் தொன்மைப் பதிமெய் யன்பர்
பதிக்குஞ் சிவதோத் திரத்தாற் பணிந்து பரவிப் புகழ. (கூகூ)

துகிர்மால் வரையிற் படர்ந்து சூழும் பசும்பொற் கொடிபோல்
வகிர்மா மதிநேர் நுதன்மா துமையா ளொருபான் மருவ
வுகிர்மா வலியா ளரியா யுணரா விறற்சந் திரனை *
வகிர்மால் விடைமேற் றேன்ற வந்து காட்சி கொடுத்தான். (௩௪)

கண்கள் குளிரக் கண்டே தொழும்புள் வேதா கமத்தைப்
பண்கண் மிழற்றும் பெருமான் புரிவின் னருளா னோக்கி
விண்கள் பரவ நுமக்கு வேண்டும் வரங்கேண் மினென
வெண்கள் கடந்த பொருளே யெனப்போற் றிசெய்தங் கியம்பும்.( )

வேறு.

எம்பெயரான் முத்திநகர் கடம்பவன மெனுநாம மியைய வேண்டு, நம்பெருமான் முன்னருளிச் செய்ததுபோ லித்தலத்து நாங்கள் காண, வம்பைகயற் கண்ணியுடன் பெருங்கயிலா யச்சபையி லயன்மா லாதி, யும்பர்தொழப் புரிநடன மிங்குநடித் தருட்கருணை யுதவ வேண்டும். (௩௬)

எங்கணிழ லினினடிக்கு நின்னடங்கண் டேத்துபவர் யாவரேனுந், துங்கமுறு கயிலைநடந் தொழுதபய னடைந்துபவந் தொலைக்க வேண்டுந், தங்கியிவண் வசித்திடுவோர் தரிசிப்போர் பூசிப்போர் சாற்றக் கேட்போ, ரங்கவர்க ணின்னருளா லெல்லோரும் பரமுத்தி யடைதல் வேண்டும். (௩௭)

இவ்வரந்தர் தருளுகென வேதவா கமங்களெடுத் தியம்ப வோடும், வெவ்வரந்தின் றயில்படைக்குஞ் சூலிபுகல் வான்மெய்ம்மைத் தலம்வி சேடங், குவ்வரந்தான் பெறுதலினுங் கூறுமநா தியினிருமித் திடுத றன்று; லவ்வரந்தந் தனநுமக்கே நடனமுமப் படிகாண வளிப்பே மென்றே. (௩௮)

மாகயிலை நடம்புரியு மூர்த்தம்போ லித்தலத்தும் வசிப்பே நாமே, யேகமெனும் பரசிவமா மங்கயற்க ணிறைவிபரா சத்தி யாகு, மோகமற வெமைநருள் யாரேனுந் தரிசிக்கின் மொழியக் கேட்கிற், போகமொடு புகலரிய முத்தியுமுண் டாமின்னும் புகலக் கேண்மின். (௩௯)

சீவன்முத்தி புரமிதனு கிருமித்த சிற்சபைமுன் றவற்றைச் செப்பி, லோவறநா முறையிலிங்கத் தின்கிழக்கத் திசையினுக்குத் தரமீ சா

* சந்திரன் - இரணியன். சந்திரம் - இரணியம்.

ன,மேவுமவை பெயர்விளம்பி லிரசிதம்பொன் னிரத்தினமென் மூ
றையே மேவு, மேவமிலித் தலமதிக மெத்தலமு மித்தலத்துக் கிணை
யொவ் வாதால். (சo)

தூரத்தே கண்டசெபைத் தூபிதொழு தாற்பிறவித் தொடர்பு நீ
ங்கிக், கோரத்தே கோடிசென்மத் தாற்றுபவந் தொலைந்துகதி கூடு
மென்று, வீரத்தே மலர்க்கடம்ப வனத்தணுகிச் சிற்சபைகண் டிறை
ஞ்சி யதன்பின், வாரத்தே வெனத்துதிப்போர் பெறும்பேறிவ் வள
வையென வகுக்கற் பாற்றே. (சக)

மார்கழியா திரைசோம வாரமா தப்பிறப்புப் பிரதோ டங்க,
ளேர்கெழுநற் சித்திரா பூரணைவை காசிப்பூ ரணையெந் நாளு, நீர்
கெழுசித் திரைவிடுவைப் பசிவிடுவித் தினங்களினந் நிருத்தங் கண்டா
ற்,சீர்கெழுநங் கருணையினாற் போகமொடு முத்தியுமுண் டாகுந் தி
ண்ணம். (சஉ)

இங்குமக்கு மார்கழியா திரைநாளி னிலையந்திடமுத் தரப்பொன்
மன்றிற், றுங்கமுறுங் கயிலாய நடஞ்செய்வோ முனிவர்சுரர் துதி
சேர் யோக, ரங்கமலக் கண்ணன்மலர்க் கண்ணனரும் புலிமுனியா
டரவங் காணப், பொங்குமிர சிதசபையி லநாதிசதா சிவநிருத்தம் பு
ரிவோ மென்றும். (சங)

ஈசான திசையிலிரத் தினசபையி லங்கயற்கண் ணிறைவி கா
ணத், தேசாரு மானந்த சிங்கார நடம்புரிதல் செய்வோ நீங்கள், கூ
சாது காண்மினென வரங்கொடுத்துக் கூறுமிலிங் கத்தி னுஞன்,
காசாரும் பவமகற்றுஞ் சொக்கனருள் செய்ததுதங் கருத்தி னெ
ண்ணி. (சச)

கதம்பவன மாகியவே காகமங்க டிருநடஞ்சொல் லியகாட்
காண்பான், பதம்பரவி யிருந்தனநம் முருகனுரைப் படிபகர்ந்தேம்
பகருங் காதை, நிதம்பெறக்கேட் போர்படிப்போ ரொருநூறு செ
னனத்திற் செய்த பாவ, விதம்பலநோ யகன்றிடுவர் தீர்த்தமெலா
மூழ்குபயன் மேவு மன்றே. (சரு)

எத்தனையா கமங்களுள வித்தனையும் புரிந்தபய னெய்துங் கூட,
னித்தனரு ளாற்பரம முத்தியுமெய் துவருண்மை நிகழ்த்தி னேமெ
ன், றுத்தமமா தவர்கேட்ப வகத்தியனங் கியம்பினன்கே' க-

கூர்ந்து, புத்தமுதா மெனவிளங்குந் தீர்த்தமான் மியத்தையினிப் புக
ல்வா மென்றான் (சஅ)

மூன்றாவதுவேதாகமங்களுக்குவரங்கொடுத்தவத்தியாயம்
முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - கசஎ.

நான்காவது.

* தீர்த்தமகிமையுரைத்தவத்தியாயம்.

அருந்தவ ரியம்பக் கேட்ட வகத்தியன் சொல்வா னீதி
பொருந்துறு சிவன் முத்தி புரத்துறை தீர்த்தம் யாவுந்
திருந்துறப் புகல்வாங் கேட்போர் சிவகதி யடைவ ரென்று
மருந்தினு மினிய செவ்வேண் மலரடி தொழுது கூறும். (க)

முந்திய தீர்த்தம் பொற்று மரைத்தட முதன்மை யாக
வந்தவுற் பவமுந் தீர்த்த மகிமையுந் தொகுத்துச் சொல்வோம்
புந்தியீ ரினிது கேண்மின் பாதகம் போக்குஞ் சோம
சுந்தர னுக்கை யானீர்ச் செந்துக்க டோன்றாத் தீர்த்தம். (உ)

ஆதிகா லத்தின் வந்தே யுருத்திர னடுங்கற் பத்தின்
மீதெழுந் தோங்கி முந்நீர் வெள்ளமு மிருளு மூடிப்
பூதல முதலா யுள்ள வுலகெலாங் குலைந்து போங்கான்
மேதகு கங்கை யாதி நதிகடல் விண்மே கங்கள். (ங)

மற்றுள சிவத லங்க ளியாவுமூழ் மறைந்த தாங்கண்
கற்றைவார் சடையெம் மீசன் கவுரிக்குத் தனது லீலை
முற்றுறக் காட்டு வான்முன் சகளமாய் விடைமேற் றோன்றி
வெற்றிமான் மழுவோ டங்கையிர்வர தாப யங்கள். (ச)

விளங்கிட வயன்மால் விண்ணோர் மிக்கநந் தீசன் முன்னு
வளங்கெழு கணங்க ளோடும் வந்துநீர்ப் பிரளை யத்துட்
களங்கற மறைந்தி ருக்குங் காசிதென் னருணை யாரூர்
ஆலங்கலின் முதுகுன் றாதி பருப்பதந் தொழுங்கே தாரம். (ரு)

ஈங்கிவை முதலா மற்று மியம்பிய தலங்க ளெல்லாம்
பாங்கரம் பிகைக்குக் காட்டிப் பண்பினீற் றானுண் டாக்க
வோங்கிய சிவன் முத்தி புரத்தில்வந் துயர்ந்த வெள்ள
மாங்குறு வாறுஞ் சேதி யிலிங்கமு மடைவிற் காட்டி. (சா)

இச்சையா மிவ்வி லிங்கத் துறைகுவ மெந்த ஞான்று
முச்சகம் புகழு மிந்த மூலலிங் கத்தி னின்று
நிச்சய மாக லீலை செய்வது நினைந்தே மென்றே
மச்சமார் விழிக்கும் போற்று மான்முத லோர்க்குங் கூறி. (எ)

பின்னரும் புகல்வா னின்ற பிரமன்மான் முதலி யோரை
யுன்னரு மிலிங்கந் தன்னி லுமையையு மெமையும் பூசித்
தின்னருள் பெற்று நீவி ரேகுமின் கயிலை யாங்கு
மன்னுவங் கலையொன் றிங்கு வைகுவ மனந்த மாகி. (அ)

என்றிறை யிலிங்கத் தாங்கா விருங்கண நாதர் யாரு
நன்றறி யயன்மால் விண்ணோர் நாதனே யென்று போற்றித்
தொன்றுதோர் திலிங்கம் பூசை செயத்தொழப் பரிசித் தேத்த
மன்றவே நினைக்கப் போக முத்தியும் வழங்குந் திண்ணம். (கூ)

ஆதலாற் சொக்க லிங்கத் தருச்சிப்பா னுசை யுற்றேம்
போதுதோ றபிடே கங்கள் புரிவதற் கிவணோர் தீர்த்த
நாதநீ யளிக்க வேண்டு மென்றவர் நயந்து போற்ற
மாதொரு பாக னுங்கு வரங்கொடுத் தியற்றல் செய்வான். (கO)

ஆன்றதன் னிலிங்கத் தங்கி திசையிற்சென் றவனி விள்ள
வூன்றினன் சூலங் கீழ்போய்ப் பிரமாண்ட கடாகத் துற்றே
யேன்றுறப் பாய்ந்து தாக்கிற் றவனுதித் தெழுந்து பொங்கித்
தோன்றின பிரவா கம்போற் றெழுத்தரும் புனித தீர்த்தம். (கக)

அன்னது வரவு மெங்கோ னங்கணோர் வாவி யாக்கித்
தன்னுயர் முடியில் வேணி தரித்தமென் கங்கை நீரைத்
துன்னுமந் நீரில் விட்டுத் தொழுஞ்சிவ கணத்தை நோக்கி
முன்னுறக் காண்டி ரென்னக் காட்டினன் மொழிவ தானுன். (கஉ)

வேறு.

ஈது கேளுநா மாதியி னிருமித்த வியல்பா
லாதி தீர்த்தமாந் தீண்டிக்கி லரும்பவம் போக்குந்
தீது தீர்க்குமே வுலகினுட் டீர்த்தங்கட் கெல்லாஞ்
சோதி சேர்பர மாகையாற் சொலும்பர தீர்த்தம். (கங)

கையி னுற்றொடிற் றரும்பயன் கருதய மேதம்
வைய முய்யநாந் தருதலால் வளர்சிவ தீர்த்தஞ்
செய்ய ஞானத்தை நல்கலாற் றிகழ்ஞான தீர்த்தந்
துய்ய முத்திதந் தளித்தலாற் றொழுமுத்தி தீர்த்தம். (கச)

சறுவ தீர்த்தமு மொரெங்கலாற் சறுவதீர்த் தமுமா
மறுவில் சூலத்துண் டாகையால் வண்சூல தீர்த்தம்
பிறிவி லாவிதின் மூழ்கியே யிருடியர் பிதிர்க்க
ணிறுவு தேவரைத் தருப்பிக்கிற் பவமெலா நீங்கும். (௧௫)

பன்னு தீர்த்தத்தின் மூழ்கிநம் பரையையு நமையு
முன்னி யேபணிந் தெழுந்துரு நூற்றெட்டா யிரத்தெட்
டின்ன றீரவஞ் செழுத்தினை யியல்பினுச் சரித்தே
மன்னு தோத்திரம் பிதக்கணஞ் செயிற்பவ மாறும். (௧௬)

இயங்கு தீர்த்தநீ ரொருமுறை தெரிந்தெமை யாட்டில்
வயங்கு கங்கையா தியபுவி மருவுதீர்த் தத்தான்
முயங்க வாட்டிய பயனுறு நீவிரு மூழ்கி
யுயங்கு மன்பினி லாட்டியே யுரைத்தவா செயுமின். (௧௭)

எனவு ரைத்தனன் றானுமம் பிகையுட னிறங்கிப்
புனித தீர்த்தநீர் மூழ்கினன் போற்றிய கணங்க
ளனைவ ருக்குநன் கருளினனீவிரு மாடும்
வினைய கற்றுமீ தென்றிலிங் கத்தின்மே வினனால். (௧௮)

மீள வுஞ்சக ளீகரித் துமையுடன் விளங்கி
யாளு நாயகன் றீர்த்தவா விக்கரை யமர்ந்தெந்
நாளு நல்லருள் புரியுநற் கணத்தர்மான் முதலோர்
கான கந்தரற் பூசித்துக் கயிலையை யடைந்தார். (௧௯)

புவியின் மேம்படு தீர்த்தத்தி னுற்பவம் புகன்றேம்
விவித மாமதன் மகிமையைத் தொகுத்தெவர் விரிப்பார்
நவிலு மன்னது தரிசிக்கிற் பவமெலா நசிக்குங்
குவிலு றும்பல தீர்த்தமா டியபயன் கொடுக்கும். (௨0)

மூன்று நாளொரு நாளதின் மூழ்கிலெப் பவமுன்
னேன்றி டாதவை நீங்குமுன் னியம்பிய பயனுந்
தோன்றும் வில்லுவத் தடிமண்பூ சித்துளோந் தாடி
யூன்று மப்பயன் சோடச தானமு முண்மை. (௨௧)

பத்தி யின்றியே மூழ்கினுங் கனல்பரி சிக்கிற்
றொத்தி யேசுடு மாங்கது போற்பவந் தொலைக்கும்
புத்தி கூர்ந்துநற் சுவர்க்கமெய் துவர்நித்தம் புனறோய்ந்
தத்தி னுமுத்தி மந்திர நீதினி ததிகம். (௨௨)

உலகி லுள்ளதீர்த் தங்களி லுத்தமோத் தமமீ
திலக மூழ்கியே தேவதர்ப் பணமதி வியற்றி
லலகில் யாகநற் பயனருந் தவஞ்செபந் தானம்
பலக லைப்பயன் றரும்பொற்றா மரைத்தடப் பாங்கர். (உ௩)

செய்யி லொன்றொரு கோடியாம் பிறந்தநா ளினிற்சென்
றுய்யு மாறுமூழ் கிற்சென்மாந் திரப்பவ மொழியு
மையில் சித்திரை கார்த்திகை மாகநற் றிங்க
டுய்ய மூன்றினுந் தோய்ந்திடக் கிட்டுத லரிதால். (உ௪)

சொக்க னல்லரு ளாலதிற் கிட்டுமேற் சொன்ன
மிக்கு யர்ந்திடு நாளினு மிகுபலன் மூழ்கிற்
புக்கு நித்திய மூழ்கிய பலத்தினும் பொருந்துந்
தக்க பூரணை யமாவாசி சதமடங் கதிகம். (உ௫)

மன்னு வாவினிற் சேர்மாதப் பிறப்பிலா யிரம்வான்
றுன்னு சந்திர சூரிய கிரணமோ ரிலக்க
மன்ன நற்பய னுயர்விதி பாதத்தி லனந்த
மூன்னு சித்திரை யைப்பசி விடுவதோ ரயுதம். (உ௬)

அப்ப யன்னிரண் டயுதமா மயனமோ ரிரண்டின்
செப்புந் திங்கள்வா ரத்தமா வாசிநீர் திளைத்தே
யொப்ப ருஞ்செபந் தானங்கள் செய்யிலொன் றனந்தந்
தப்பி லாதுபோம் பிரமகத் தியுந்தட மூழ்கின். (உ௭)

தருப்ப ணம்பிதிர்க் கடன்செயிற் றுவறு பிதிர்க்கள்
பொருப்பு வில்லினு னுறைதரு கயிலையிற் புகுவா
ரருப்ப மென்றிதோ ரெள்ளினுக் காயிரம் வருடம்
விருப்ப நல்கிய சுவர்க்கலோ கத்தின்மே வுவரால். (உ௮)

எங்கு மற்றுள விலிங்கத்து மூர்த்திக ளெல்லாம்
பொங்கு தீர்த்தப்பொற் றாமரைக் கரையினிற் போந்து
தங்க டெய்வமென் னத்தரி சிப்பர்நா டொறுமே
லிங்க பூசனை செயிலெல்லா லிங்கத்து நிகழும். (உ௯)

நித்தி யந்தட நீர்படிந் திலிங்கபூ சனைநீள்
பத்தி யாற்செயிற் போகமு முத்தியும் பலிக்குஞ்
சத்தி யந்தவம் வேள்விநல் விரதமா தான
மொத்த நான்மறை கோடிமூழ் கினர்பய னுவ்வா. (௩0)

வேறு.

சௌனுந் தரத்தி லுயர்தானுஞ் செய்யுந் தருமந் தவநியம
மன்னு தரவாற் செயிற்கிடைக்கும் பொற்று மரைவா வியின் மூழ்கக்
கன்மார் தீர்த்தஞ் சிவரூப மாமா கத்திற் ப்ரயாகையினி
லினமா முற்றுந் தோய்ந்தபல னெய்து மிதிலோர் நாண்மூழ்கின். ()

பூந்தி மகிழ்ந்திப் புனலோராண் டாடிப் புராரி தனையுமையை
வந்தி யரும்வந் தனைசெய்து வணங்கின் மகப்பே றடைந்திடுவ்
ரிந்த வுலகிற் றீர்த்தமெல்லா மிதிற்கோ டியிலோர் கலையொவ்வா
பந்த பாவ வினையகலும் பார்க்கிற் றொடினற் பொருள்சேரும். (௩௨)

பானம் பண்ணி னினைத்தவெல்லாம் பண்பி னடைவர் காசியினில்
வானந் தருசக் கரதீர்த்த மாலோ னிருமித் திடவிளங்கு
ஞானந் தரும்பொற் றாமரைநீ ரவற்றின் மிகுநன் னலஞ்சிறக்குந்
தேனந் தியபூங் குழலுமைபாற் சிவனே நிருமித் திடுதலினால். (௩௩)

ஆதி தீர்த்தஞ் சிவதீர்த்த மருள்சேர் தருமக் கினிதீர்த்தஞ்
சோதி செறிதற் பரதீர்த்தஞ் சூல தீர்த்தஞ் சிவகங்கை
நீதி திகழ்பொற் றாமரைமா தீர்த்த நிறையெக் கியதீர்த்தம்
பேத மறுமெய்ஞ் ஞானமுத வுதகம் பரமீரம் பிரமமயம். (௩௪)

சருவ தீர்த்தஞ் சிவஞான தீர்த்தந் தரும தீர்த்தமெழில்
செறிநீர் முத்தி தீர்த்தந்தீர்த் தவுத்த மந்திரந் தாசிரயம்
பொறிசேர் பாவ நாசமியல் பொருந்துந் தேவ தீர்த்தநெறி
யுறுசீர்ச் சிவப்பி ரீதிகர மோங்கு புகழ்மங் களதீர்த்தம். (௩௫)

தொடருந் துரித நாசனமுன் றோன்று முரோக நாசனமே
லடரும் வினைதீர் கலியாணி தீர்த்த மெனும்பே ரநற்கிடையும்
படரும் புவியி னிந்நாமம் பகர்ந்தோர் நீரிற் படிந்திடினு
மிடர்தீர் பொற்று மரைத்தீர்த்த மூழ்கும் பேறெய் துவர்திண்ணம்.

பொற்று மரையின் வரலாறு புகன்றேந் தெரிந்து நுமக்கிங்கு
மற்று ருரைப்பா ரதன்பெருமை மாபா தகபஞ் சிற்கனலா
முற்று முலையா ளொருபாகன் றனே வல்லன் மொழிதருநூல்
கற்றோர் கேட்டார் படித்திடுவார் களிப்பார் முத்தி யெய்துவரால். ()

வேறு.

என்று கூறினன் முனிவரர் பின்னரு மிசைப்பார்
நன்று கேட்டக மகிழ்ந்தன மெனநனி போற்றிச்
சென்று மூழ்கினர் பவந்தொலைத் திடுஞ்சிவ தீர்த்தந்
தொன்று தீர்த்தம துவ்வெயென வகத்தியன் சொல்வான். (௩௭)

எந்த நாளுமிங் கதிசயங் காட்டுமித் தீர்த்தம்
பந்த நீங்குற மூழ்கினர் பேற்றையார் பகர்வார்
புந்தி யாலளந் தறியொணா விசேடத்திற் பொங்கு
மூந்த நீர்வினை யதுநன் றூலென மொழிவான். (௩௯)

நீப மாகிய வேதவா கமங்கணின் மலனை
மாப ரம்பரன் காட்சிதந் தருளுநாள் வணங்கித்
தாப மெம்மைதீர்ந் தியாங்கண்முன் றழைத்திட வருளின்
றீப மாகிய தீர்த்தமொன் றுதவுதி யெனலும். (௪௰)

கருணை நாயக னியம்புவான் வேதவா கமமே
பொருண யம்பெறு மதிகுய்யம் புகன்றிடக் கேண்மின்
னருண மார்தரு தீர்த்தமே நமதுருத் தையல்
வருண மார்தரு பீடநா மிலிங்கத்தின் வடிவம். (௪௧)

எம்மிற் றோன்றியே யொடுங்குவர் மாலய னிமையோர்
தம்மிற் றோன்றிடுஞ் சராசர மெவையுநந் தன்மை
நும்மிற் றோன்றிடக் காண்மினீர் நூல்வடி வன்றோ
கம்மிற் றோன்றிய வுலகர்க்குக் காணுத லரிதால். (௪௨)

இன்ன ணம்புகன் றிலிங்கத்தி னுற்பவ மாகி
யுன்ன ரும்மொரு குரோசதூ ரத்திற்குள் ளாகச்
சன்னி திக்கெதிர் தோன்றிடத் தன்கரு ணையினாற்
பன்ன ரும்புனற் றீர்த்தமுண் டாக்கினன் புகர்வான். (௪௩)

யாமி யற்றலா லிதுசிவ தீர்த்தமித் தீர்த்தஞ்
சேம மாருயிர்க் கெனப்படிந் திடிற்றுரி சிக்கிற்
பூமெனுந் தண்புனீ லுண்டிடிற் புரோக்கணம் புரியி
னும நோய்களு நீங்குமெய்ப் பாவமு நசிக்கும். (௪௪)

கங்கை யேமுதற் றீர்த்தங்கள் கருதிநம் விழியை
யங்கை யாற்புதைத் திட்டநா ளமலையங் குலியின்
றுங்க மாகவந் துதித்தலிற் புனிதமாந் தோன்று
மிங்கு நம்மிடத் துதித்தலா லவற்றினீ ததிகம். (௪௫)

இன்னு மொன்றியா மாடுகின் மாலிய தீர்த்தந்
தன்னின் மூழ்கினுண் ணிற்றொடிற் காணினுஞ் சரிக்கிற்
றன்னு பாதகந் தொலைத்துடன் றொல்கதி யளிக்கும்
பன்னு மீதன்றி மற்றொன்று பகருதுங் கேண்மின்

வேறு.

அருப்பூம் வெமையாட்டுங் கருப்பூர தீர்த்தமிதி லதிக நாமே, விருப்பூரக் கொண்டருளி வேண்டுவரன் வேண்டியதை மிகவு மீவோ, நெருப்பூர்பஞ் செனநித்த முழுந்தளவுண் பவர்பவங்க ணீறு முண்மை, கருப்பூர வாஞ்சையினாற் கருப்பூர சொக்கெனும்பேர் சூருதிக் கொண்டோம். (௫௭)

வேதநெடு மான்முனிவர் விண்ணவரே முதலினர்நாம் விரும்பி யாடுங், தாதுகமழ் கருப்பூரநின் மாலியதீர்த் தம்விரும்பித் தவத்தாற் கொள்வார், ரோதுவதென் வேள்விமுதற் புண்ணியமுன் செய்தவர்க் கே யுதவுந் தீர்த்தங், கேதமுறு பாதகர்க்கு நாமளித்தா லன்றியுண் ணக் கிட்டா தன்றே. (௫௮)

சிவதீர்த்த முதலாநின் மாலியதீர்த் தச்சலத்தாற் சிறப்புற் றோங்கி நவைதீர்த்து வளர்மினிதி லெழுகடலு நாமழைத்து வருவிப் பேம்பின் னவைதீர்த்தின் னருள்கொடுக்கு மெனவருளி யீசனிலிங் கத்தினூன் றவதீர்த்த நீர்நனைந்து கதம்பமுமம்வில் லழுமெங்குந் தழைத்ததன்றே.

இத்தீர்த்த மாதடத்தி லிறையருளா னெழுகடலு மியைந்த தெ ன்றூன், முத்தீர்க்கு மத்தடத்தின் மூழ்குணர்பே றளவையெம்மான் மொழிய லாமோ,வத்தீர்த்தந் தருப்பித்துப் பிதிர்க்கடன்க ளொன்று ற்றி லதிகங் கோடி, புத்தீர்க்கு நரகமுந்தும் பிதிர்க்களெல்லாஞ் சிவ லோகம் பொருந்தி வாழ்வார். (௬0)

உம்பர்புகழ் சிவதீர்த்த மகிமையிவை யுவந்துபடித் திடுவோர் கே ட்போர், வெம்பவமெல் லாந்தொலைத்துச் சிவலோகத் தெய்திவிம லன்போல் வாழ்வர், நம்பரனுங் குமரகுரு பரன்புகன்ற வாறுனக்கு நவின்றே மென்றே, கும்பமுனி மாதவத்து வசிட்டாதி முனிவரர்க் குக் கூறி னனல். (௬௧)

நான்காவது தீர்த்தமகிமையுரைத்த வத்தியாயம்

முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௧௧௮.

ஐந்தாவது

நடம்புரிந்தவத்தியாயம்.

வந்தனை செய்து கேட்ட முனிவரர் மலையக் கோவே
சிந்தனை செய்த வேதா கமந்தரி சிக்க நாத
னெந்தநா ணிருத்தஞ் செய்தா னவன்பிர மாணம் யாதிங்
கந்தநாட் கண்டோ ரியாவ ரவைதொகுத் துரைத்தி யென்றார். (௧)

நன்றுநீர் கேண்மி னென்று வகத்திய னவில்வான் ஞான
மொன்றியே வளரு நீப வுருவின்வே தாக மங்கண்
மன்றுளே நடிக்குஞ் சொக்கை யிரண்டற மனத்துள் வைத்தே
நின்றுமா தவங்க ளாற்றி யுறைந்தன நெடுங்கா லங்கள். (௨)

உறைந்திடுங் கான்முன் வந்த வுருத்திரப் பிரள யத்தான்
மறைந்திடு முலகத் தோடு வானுளோ ராயுமொ டுக்கி
நிறைந்திடு மீசன் றானே யொருவனாய் நின்றான் காலத்
திறந்தெரிந் தியாவு முன்போற் சிருட்டிசெய் திடுவா னெண்ணி. ()

தன்னிட மாக விச்சா சத்தியைத் தோற்று வித்து
மன்னுமச் சத்தி யான்முன் னொடுக்கிய வாறே நல்க
முன்னுற வருளிச் செய்தா னவளிட மாக முன்போற்
றொன்மைசே ரயன்மால் விண்ணோர் சனகாதி யோகர் தோன்றி. ()

மற்றுள பிறவுஞ் சங்க ளியாவுமவ் வுரம்பிற் றோன்றி
முற்றுறு முலக மியாவு முன்னையி னிருந்த திப்பாற்
கற்றையஞ் சடையான் வேதா கமங்களுக் கருளை நல்கச்
செற்றிடு மிலிங்க நின்றுந் தோன்றினான் விடைமேன் முன்போல்.

வெளிவரு சொக்கன் றன்னை வேதவா கமங்க ணோக்கித்
துளிவரு மன்பின் முன்போற் றோத்திரஞ் செய்து நிற்பக்
களிவரு மன்பர்க் கன்பன் கருணைசெய் தருளித் தூய
நளிவரு முளத்தீர் கேண்மி னல்குவம் வரங்க ளென்றான். (௬)

முன்புநீ யருளிச் செய்த மொழிப்படி யாங்கள் காணத்
தென்புலி விசேட மாகத் திருநடங் காட்ட வேண்டு
மன்பதை யுலகங் கண்டு வாழ்வுற வேண்டு மென்ன
வன்பினாற் றொழுது கேட்ப வவ்வர மளித்தே மையன். (எ)

கண்டுசே விக்க ஞானக் கண்கொடுத் தருளி மன்றிற்
பண்டைவே தாக மங்கண் முதலிய பரவிக் காண
வண்டருங் காரெ ணோத பொற்பத மதிர வீசித்
தண்டலி னிருத்தஞ் செய்யத் தரைநடு நடுங்கிற் றன்றே. (௮)

நானில நடுங்கக் கண்டு நந்திரு நடம்பொ ருதென்
றுனிலைந் தாடுஞ் சொக்கன் றிருவுளத் தடைத்த ழைத்து
வானிலம் போற்றுந் தூய மாபெருங் கயிலை தன்னைப்
பூநிலச் சிவன் முத்தி புரத்தினி லிருத்திப் பின்னர். (௯)

அக்கயி லையினெட் போது மான்றமுச் சபையி னம்பொ
னொக்கவின் றொளிருந் தூய வுத்தர மன்றந் தன்னிற்
செக்கர்மே னியவெம் மண்ணல் திருநடம் புரிந்தான் கண்டு
மிக்குயர் ஞானக் கண்ணூற் றுதித்தவே தாக மங்கள். (௧௦)

மூவரா லறிய வொண்ணாச் சிவலோகந் தனையு முன்னைப்
பாவறிந் துதவு வாணீ பவனமத் தியினை மைத்து
மேவரு நகர மாக்கி விரும்பினீர் காண்மி னென்ன
யாவருங் கண்டு போற்றி யரகர வெனச்சேவித்தார். (௧௧)

அவ்வுல கத்தின் மேவு மாதிநந் தியைவெள் ளேற்றைத்
தவ்வுரு துறைக ணங்க டன்னையுங் காட்டி யப்பா
னவ்விசேர் கரத்தி னுன்முன் னவின்றமார் கழிமா தத்திற்
செவ்வியா திரைநா * ளீசா னத்திரத் தினமன் றத்தில். (௧௨)

அங்கயற் கண்ணி யம்மெ னுசனத் திருந்து காணப்
பங்கய வலத்தாள் பண்பின் முயலகன் முதுகி லூன்றித்
துங்கநூ புரங்க ளார்ப்பத் துலங்கிடத் தாள்குஞ் சித்தே
செங்கைமான் மழுவோன் றூய சிங்கார நடனஞ் செய்தான். (௧௩)

அரியயன் முதலாம் விண்ணோ ரம்புலி பாம்பு மோனந்
தெரிதரு முனிவர் மற்றுஞ் செப்பிய வனேகர் காண
விரிசுட ரமுத லிங்க முன்னரின் வெள்ளி மன்றிற்
பரிவொடு பரமா னந்தப் பராபர நிருத்தஞ் செய்தான். (௧௪)

உற்றகா ரணத்தி னுற்பூ வுலகமா கயிலை யென்று
நற்றவர் புகழ்பூ லோக சிவலோக மென்று நாமம்
பெற்றது மதுரை யிந்தப் பெருங்கதை படிப்போர் கேட்போர்
கற்றுளோர் பவங்க ணீங்கிக் கதியடைந் திடுவர் திண்ணம். (௧௫)

---

* ஆதிரைநாளிலே, உஷக்காலத்திலே. உஷக்காலம் வடநூலிற் கூறப்பட்டது.

கிழத்திநீனே மென்னக் கேட்ட நெடுந்தவர் மலையக் கோவே
மகத்துவத் ததிக மிந்த மாபெருங் கயிலை யென்றாய்
தொகுத்தவக் கிரிவ ளங்க டொகைவகை விரிவா யாங்கள்
பகுத்துணர்ந் தறிய வேண்டும் விளங்கநீ பகர்தி யென்றார். (க௯)

ஐந்தாவது நடம்புரிந்தவத்தியாயம்

முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-உகச.

ஆறாவது

மகாகைலைமான்மியமுரைத்தவத்தியாயம்.

வினமிநை யென்னும் பன்னி வினவிடத் தரும சன்மா
முனமுறை செய்தான் றெய்வ முதுபெருங் கயிலை வண்மை
பனவரிற் றவத்தா னன்னேன் பகர்ந்தவா றுரைப்பேங் கேண்மி
னனகமா முனிவிர் காளென் றகத்திய னருளிச் செய்வான். (க)

சிவனையே பொருளாக் கொண்டு தெளிந்தபே ரறிவின் மிக்கா
ணவமுறு கற்பின் பன்னி வினமிநை நவில்வாண் ஞானத்
தவர்களிற் பெரியோய் மிக்குத் தனிப்பெருங் கயிலை யென்றே
யுவமையின் ஞான நூல்க ளுரைக்குமா துணர வேண்டும். (உ)

அவ்வரை யிருக்குந் தான மதன்கொடு முடியி லக்க
மெவ்வழி யுயர்ப கற்சி யுறைபவ ரியைபும் போகந்
தவ்வுருத்தவைவி ரித்துச் சாற்றுதி தமியேற் கென்னக்
கெளிவைதீர் தரும சன்மாக் கழறுவான் மனைவி கேட்ப. (௩)

சொற்றிடும் புவனந் தோறுந் தொடுகடற் பூவி னுள்ளு
மற்றுள தீவு தோறுங் கயிலைமால் வரைக ளுண்டு
கற்றைவார் சடையெம் மீசன் கருணைமா துமையா ளோடு
முற்றிடு மங்கங் கெல்லா முள்ளவா றின்னுங் கேணீ. (௪)

பிறங்குமவ் விடங்க டோறும் வைகுண்டம் பிரம லோகந்
திறங்கெழு கமலக் கண்ண னெண்கண்ண ரவற்றிற் சேர்வா
ரறங்கொள்பா லாழி நள்ளிற் சுவேததீ வதிக மாங்க
ணிறங்கெழு மாதி மாயோ னறிதுயில் கொள்வா னிங்கான். (௫)

பிரமலோ கங்க டன்னிற் பெரிதுசத் தியவு லோகம்
பரமனும் பிரமனுங்குப் பரிவின்வீற் றிருப்பான் றூய
வரமுறு கயிலா யங்க டன்னின்மா கயிலை மிக்குத்
திரமுறு மதில நாதி சிற்பர சதாசி வன்றான். (௬)

மூலமே முதலா தார மாறினு முக்கட் பெம்மான்
சாலவே யுறைந்தா னேனு மனுதத் தநிகந் தானு
மாலநேர் விழியாய் கேணீ யதுவென வினவி சேட
நூலறி வுடையோர் தாமு நுவல்வர்மா கயிலை யென்றே. (௭)

தேசுறு மொளியு டைத்தாய்ச் சிலையொடு மண்டா துக்கண்
மாசுறு வம்பொன் றங்கம் வளர்நவ மணிகள் வெள்ளி
பேசுறி னவையு மன்று பெரும்பரஞ் சோதி ரூப
மாசுறு நித்த மாகு மதன்றிறம் புகல்வா ரியாரோ. (௮)

அரும்பெருங் கயிலை யாகு மதிலடைந் திடுவோ ரொன்றுந்
திரும்பவும் வாரார் மூலச் சிவத்தொடுங் கலந்து வாழ்வர்
விரும்புமவ் விமலன் போலு மெய்க்கிரி வடிவம் வாசச்
சுரும்பிமிர் குழலாய் கேளின் றதன்பிர மாணஞ் சொல்வான். (௯)

வேறு.

பாங்குறுமிவ் வுலகிலுள்ள தீவுக் கெல்லாம் பகரினடு வாயிருக்கு ஞ் சம்புத் தீவ,மோங்ககற்சி யோசனையோ ரிலக்கஞ் சூழு மூவர்க்கட லு மவ்வளவை யவற்றைச் சூழ்ந்து, நீங்கரிய வாலந்தீ விரண்டி லக்க நிறைந்தகன்ன விரதவா ரிதியு மற்றே,யாங்கதற்கப் பாலாஞ்சன ம வித்தீ வந்தா னளவைநா லிலக்கமதுக் கடலு மஃதே. (௧0)

நிறைகுசைத்தீ வோசனையெட் டிலக்கஞ் சூழு நெய்க்கடலத் தொகையப்பாற் கிரவுஞ் சத்தீ,வுறைதருமோ சனைபதினா றிலக்க மப்பா லோங்குததிக் கடலுமுறைத் திடுவ ரவ்வெண், குறைவறுசா கத்தீவோ ரிரண்டு முப்பான் கூறுமோ சனையிலக்கம் பாலா ழிக்கு, மறைகுவரவ் வெண்ணேபுட் கரதீ வந்தா னறுபானு னிலக்கமவ் வெண் ணீரா ழிக்கும். (௧௧)

அந்நீரா ழியைக்சூழ்சக் கரவா ளக்குன் றாயிரமோ சனையகல மு ர்ப்பு மஃதே, தொன்னீர்மை தருமதன்மேன் முறையிற் சந்த்ர சூரி யர்கீட் டிசையினுதித் திடுவர் மேல்பா,னன்னீர்மை பெறச்சென்றத் தமன மாவர் நவின்றிடுமக் கிரிக்குளன்றி யப்பாற் செல்லார், பன்னீ ர்மை வரைக்காணப் படுங் காணப் படாதமையா லும்லோகா லோக மென்பார். (௧௨)

சேமிவான் கிரியப்பாற் புறப்பே ராழி திகழ்ந்ததைச்சூழ் பூமியு
ம்பொன் மயமதாகுஞ், சேமமுறு பாழிசெறி யிருவே மூடுஞ் செங்
கதிரோன் சசியிரவு பகலங் கில்லை, நாமமுறு பல்லுயிர்த்தோற் றமு
மங் கில்லை நவின் றிடிலங் கிலமேடு பள்ள மாகும், தாமநறுங் குழலா
யவ் விடத்தின் றன்மை சாற்றினே மற்றுமினிச் சாற்றக் கேணீ. ()

நாவலந்தீ வேமுதலா மிக்குன் றந்த நவில்கோடி யிரண்டிலக்க
மைம்பானு ன்கா, மேவமில்பே ராழிவரைக் கப்பா னூல்க ளியம்பி
யவண் டச்சுவர்மட் டளவை கூறின், மேவருநாற் பானேழு கோடி
மேலும் விளம்புவர்நாற் பானோடா றரையி லக்கந், தாவில்வரைக் க
ப்புறமிப் புறமு மேருச் சயிலநடு வந்தமைம்பான் கோடி தானும். ()

தகவுறுமிப் பூமிநடு மேரு வீரெண் டாழ்ந்தெண்பா னான்குச
கத் திரமே லோங்கிப், புகலருமுப் பானான்கா யிரம தாகப் புகன் றிடு
மோர் சனைபரந்தா யிரமென் றேந்து, திகரில்கொடு முடியிலங்கவில
ங்கு மந்த நெடுவரைக்குப் பூருவதிக் காதி யாக, விகலறுமிந் திரனகர
முதலா மற்று மியம்புதிசைப் பாலருநை பதியும் வைகும். (௧௫)

நவமுறுமா கயிலைவளஞ் சேட னானு நவிலவரி தநிகுய்ய நவிற்றி
ன் மாதே, யிவர்புகழ்சேர் குபேரனுறை திசைக்குக் கீழ்பா லீசான
ருறுதிசைக்கு மேல்பா லண்டச், சுவரினுக்குத் தென்பாலா ழிக்கு
ன் றிற்குத் தொகுத்தவடு பாற்பகுத்த பதின்முக் கோடி, நுவலள
வை யோசனைதூ ரத்திற் கப்பா னேன்மைபெற விருக்குமது நுவ
லுங் காலே. (௧௬)

தற்பரமாம் பெரியவட கயிலைச் சுற்றுந் தாவில்வண * பூமியத
ன் றன்மை கூறி, னுற்பனவங் கிலவளவை பத்துக் கோடி யோசனை
யோடிருபத்து மூன் றி லக்கம், பொற்புறகற் பகம்பாரி சாத மற்று
ம் பொன்மயமு நவமணியின் மயமு மாகி, விற்பொலியுந் தருக்கள்ப
ல வெங்கு மோங்கு ழிக்குநவ நதிமுதலா றநேக நண்ணும். (௧௭)

தாமரைவா விகள்குளிர்செங் கழுநீ ரோடை தண்குமுத மலர்
மடுக்க ளநேகம் வைகுங், காமரொளி விளங்கும்வரைச் சோதி யாலே
காந்திமொங் கிலத்திருள்பே ரொளியே தங்கும், பூமருமத் தருவன,
த்து ணடுவே யோங்கும் போற்றுபெருங் கயிலாயம் புனித மாகு,
மாமறைகாண் பரியசிவன் றனக்கெங் நாளு மருவிரண்டாங் திருமே
னி வடிவாய் நிற்கும். (௧௮)

* வணம் - வனம்.

நிலம்பெறுமப் பெருங்கயிலை யகற்சி கூறி னிகழ்த்துமொரு திசையொருபஞன் கோடி யாக, மலைவறநாற் றிசைச்சுற்று நாற்பான் கோடி வகுத்திடுமோ சனைகீழின் றாழ்வு கூறிற், பிலமுறுகி ழேழுலக முருவிக் கூர்மம் பிறங்குபதங் கீண்டுவே ரப்பாலோடு, மலைவறமே லுயரமண்ட முகடு தோயு மதுநாளம் போலேக மாகி யோங்கும். (௧௯)

மேருநிகர் தருவொவ்வொன் றத்தன் மைத்தாய் வெய்யகொடுலைக் கொடுமுடிக ளளவி லாத, சாருமிகு வளத்தொடுமி லங்கு மந்தத் தனிக்கயிலை சாற்றுகொடு முடிகட் கெல்லாஞ், சேருநடுக் கொடுமுடியிற் சிவலோ கந்தான் செப்புபதின் கோடியொரி லக்கத் தெண்பா, னூறுமா யிரமெனுமோ சனைய கற்சி யதன்மகிமை விரித்துனக்குப் புகல்வாங் கேணீ. (௨௰)

ஓரேழு திருமதில்சூழ்ந் திருக்கும் வாயி லுரைத்திடிலோங் கொருமதிற்கு நான்காந் துய்ய, பாரேழும் புகழ்தரவுன் னினர்க்கே நல்கும் பல்வளங்க ணெருங்கியதி சயமாய்த் தோன்றுங், காரேழுந் தவழெயில்சூழ்வு லோகங் களங்கமறு நவமணியால் விளங்கி யோங்கு, மீரேழு புவனமுமேத் தரிய சிந்தா மணிமயமே லாவரைக ளெங்கு மோங்கும். (௨௧)

மெத்துபுகழ் பெறுநாலு விதங்க ளாகி விளங்குதிரு வீதிகளு மனேகஞ் சாற்றுஞ், சித்தர்சாத் தியர்முதலாங் கணங்கள் பல்லோர் சிறப்புறவே யவ்விடத்திற் செறிந்து சூழ்வ, ரித்தனையுஞ் சூழ்தருமோர் முதன்மை யாக வியம்புமதி லுயர்ச்சியைக் கோடி வாயி, லத்திலுயரோசனையே ழிலக்க மாகு மவ்வாயி னின்குங்காப் பவரைக் கூறில்.

பரவுவிரா யககணங்கள் வணங்கிய யென்னப் பகர்தருகால் கைகளுடன் றடிகை யேந்தி,யுரவுசெறிந் திடுசொன்ன வாயில் காப்பருள்ளிரண்டாந் திருமதிலி னுயர்பு கூறில், விரவுமைம்பா னிலக்கம்யோ சனைநீள் வாயில் விளம்புமுயர் பாறிலக்கம் வாயி னின்கும், வாமுறக்காத் திடுவர்சிவ பத்த ரான வலிகெழுதிண் புயஞ்செறிமாகணங்கள் பல்லோர். (௨௩)

மூன்றாமுட் டிருமதிலி னுயர்பு கூற்றின் மொழிகுவாங் வரைக்கோடி வாயில் கூறி, லேன்றுதி னுயரமுமைந் திலக்க மன்னீ வெழில்வாயி னின்குங்காப் பவரியா ரென்னி, லூன்றுதி வேதாள கணங்க

ள் பல்லோ ரோங்குமடல் வச்சிராயு தங்கை யேந்தி,யான்றுதி காவல்
புரிந் திடுவ ரின்னு மவனுறைவர் சிலரவனைப் புகல்வாங் கேணீ. ()

சிவகதைகள் சிவாகமங்க ளன்பா னாளுந் தேர்ந்துணரும் பெரி
யோர்முக் கண்ண ராகித், தவறறுசித் தியத்துவம்பெற் றிருப்ப ருள்
ளிற் சார்ந்திடுநா லாமதிலி னுயரஞ் சொல்லி, னவையறுமைம் பா
னிலக்க முயர்பு வாயி னான்கிலக்கஞ் சங்கட்ட கணங்க ளங்கை, யுவ
ழமையில்வெங் குலிசியராய் வாயி னான்குங் காப்பர்சிவ சாரூப ருறை
வ ரங்ஙன். (௨௫)

ஐந்தாமுண் மதிலினுயர் புணர்ந்து கூறி லனைக்கோடி யோசனை
மூன் றிலக்கம் வாயின், மைந்தார்சுப் பிரமணிய கணங்க ளாறு வத
னங்கள் விளங்கிடவே லங்கை யேந்தி, முந்தார்வ முறவாயி னான்குங்
காப்பர் மொழிதருசா மீபபத மடைந்தோ ரொன்று, நந்தாவவ் வாவ
ரணத் துறைவர் வேண்டு நறியபதார்த் தத்துசித்தந் திருத்தி பெற்றே.

ஒப்பரிய தாய்ச்சுவர்க்க லோகத் திற்கங் குரித்தாம்வத் துக்களவ
னுடைத்தாய்ச் சொன்ன, வப்புவனத் தேவாண்டி லீரைஞ் ஞூறு
ண் டனுபவிக்குஞ் சுகமொருநாண் மத்தியா னத்தாஞ், செப்பரிய சி
வனருளா லவனுற் றோர்க்குத் தேடிக்கிட் டாதவத்து வெல்லாங் கி
ட்டு, மைப்புயன்மே னியன்விதியா லளக்க வொண்ணா வளத்தினிலி
ங் கறிந்ததுநாம் புகன்றே மாதே. (௨௭)

நவிற்றிடுமவ் வாவரணத் துள்ளி லாறு நன்மதிலி னுயர்புமனை
க் கோடி யாகும், பவித்திடும்யோ சனைவாயி லிரண்டி லக்கம் பகர்ந்
திடுவ ருன்னதமவ் வாயி னான்கின், புவித்தலமேழ் புகழ்கிழை வாயி
றன்னிற் புழைக்கைமத வேழமுக னுலக கற்சி, கவித்திடும்யோ சனை
யைம்பா னிலக்கஞ் சூழ்ந்து கனழ்பெறுமே ழாவரணத் துடனே
வைகும். (௨௮)

விக்கினே சுரகணங்க ளநேக ராதி வேழமுக னைத்துதிக்கும் ப
த்தர் பல்லோர், முக்கணுடைச் சோடசவைங் கரரின் றோர்கண்
மொழிதருமவ் விடத்திற்சூழ்ந் திருப்பர் நள்ளிற், றக்கநலந் தருமோ
ரா லயம்வி ளங்குஞ் சாற்றுறுமவ் வாலயத்தி னிடத்தைக் கூறின்,
மைக்குழலாய் நாற்றிசையு மிருபத் தொன்றாம் வகுத்திடும்யோ சனை
யிலக்கம் வகுப்பா மின்னும். (௨௯)

அத்தகைய சினகரத்து ளிருக்கு மோர்பா னைந்திலக்க மகன்றுசி
ன ரணியா லோங்கி, மெத்துமொளிர் மாணிக்க மயம தாகி மேன்

மைபெற வளரரியா சனத்தின் மீதே, யுத்தமமா கணபதியாங் கினி து மேவும் யோர்ர்சன காதியராங் குவந்து போற்றப், பத்தியொட க் கணபதிதன் னனுக்கை பெற்றுப் பத்தர்களவ் வாலயத்தி னுள்ளி ற் செல்வார். (௩௦)

மேற்றிசைவா யிலிற்சுப்பிர மணிய லோகம் விளம்பிலரைக் கோடியோ சனைவி சாலஞ், சாற்றிடுமே மூவரணத் துடனே வை குந் தங்குவர்சுப் பிரமணிய கணங்கள் பல்லோர், சேற்றமுறு குக சாரூ பத்தைப் பெற்றோ ரெண்ணிலர்சூழ்ந் திருப்பரதி னிருக்குங் கோயில், போற்றிடும்யோ சனைபதினெட் டிலக்க மாகப் புகன்றிடு வ ரகற்சியின்னும் புகல்வாங் கேணீ. (௩௧)

மணிகள் * பல சாமரங்கள் விளங்க ரத்ந மயமாகும் விமானமந் தப் புரத்துண் மன்னும், பணிகிளரவ் விமானமத்தி யின்மா ணிக்கப் பரியவயி ரேயத்து மயம தாகி, யிணையிலரி யாசனமைம் மூன்றி லக் க மியம்பியயோ சனையகன்றே யிருக்கு மாங்க, ணணிகிளர விருமரு ங்குந் தெய்வ யானை யகைங்குவள்ளி மேவவமர்ந் திருக்குங் கந்தன்.

முனைவடிவேன் முருகேசன் வடிவம் பெற்றோர் மூதுணர்யோ கியர்சனகா தியர்மற் றுள்ளோர், ரனைவரும்போற் றிப்பிரியா திறை ஞ்சி நிற்ப வருள்கொழிக்கு மவனருள்பெற் றனுக்கை பெற்றே, வி னைதவிர்மெய் யன்பினரா லயத்துட் செல்வார் விளம்பியதென் றி சைவாயின் மேன்மை கூறி, னினைவரிய தனிப்பொருளா மகோர மூர்த்தி நிலவுலக மகற்சியரைக் கோடி யாகும். (௩௩)

பன்னருமே மூவரணஞ் சூழ வைகும் பயங்கரமா மகோரக ணம் பலருஞ் சேர்வ,ரன்னதிலா லயத்திலரி யாச னத்தி லமர்ந்தருளு மாதியரா மகோர மூர்த்தி,யின்னருள்பெற் றாலயத்தி னுள்ளிற் செல் வா ரெம்பிரா னன்பர்வட வாயி றன்னிற், றன்னிகரி லாவாம தேவ லோகஞ் சாற்றுவர்யோ சனையகற்சி யிலக்க மைம்பான். (௩௪)

ஓரேழா வரணஞ்சூழ்ந் திருக்கு மாங்கே யுயர்வாம தேவகண மூவப்பின் வைகுங், காரேழுந் தவழ்மதில்சூழ் கோயி றன்னிற் கதி ர்விரிமா ணிக்கவரி யாச னத்துப்,பாரேழும் புகழாதி வாம தேவப் பர மனினி துறையுமவ னருக்கை பெற்றே, யீரேழு புவனமும்போற் றிடமெய் யன்ப ரிருமைதரு மாலயத்தி னுள்ளிற் செல்வார். (௩௫)

* மணிகள் - ஒலிக்குமணிகள்.

ஏத்திபவிவ் வாவரணத் துள்ளின் மேவு மேழாமா வரணமதி ஞ யரங் கூறிற், பூத்திடுமோ சனையைம்பா னிலக்கம் வாயில் பொருங் துமுயர் பிலக்கமதிற் பொருந்தி நானு,மாத்திகர்சூழ் தருபிரம தகனுஞ் செங்கை யடலயிற்கு லந்தாங்கி வாயி ஞன்குங், காத்தளிப்ப ரன்னா னுக் கையினு லன்பர் கருதரும்பே ராலயத்தி னுள்ளிற் செல்வார்.()

சொல்லியவே ழாவரணத் தகற்சி மூன்று தொகுகோடி யிலக் கத்தா யிரமெண் பானு, மெல்லொளிசே ராவரண முள்ளி லேந்துணே டிம்பிலவற் றகற்சியுமேழ் கோடி காண்க, மல்லல்செறி யைந்தினி ன்மூந் தியதாச் சொல்லு மதிலுயர்ச்சி யோசனையைம் பானி லக்கம், பல்லுலகந் தந்தபரா சத்தி லோகம் பகர்தருமவ் வாவரணந் தன்னின் மேவும். (௩எ)

அம்பையுமை சாமீப மடைந்து ளோர்க ளாங்குறைவ ரவ்வுலகி ன் றன்மை கூறி, லும்பர்தொழ விளங்குபஞ்சா வரணஞ் சூழு மொ வ்வொன்றி னுயரமும்யோ சனையைம் பானு, நம்பியவா வரணசத்தி யநேகர் சூழ நாப்பணுறைந் திடுவள்பரா சத்தி கோயி, லிம்பர்புகழ் த ருகோடி யுயர மாகுமியம்பியயோ சனையதின்சீ ரின்னுஞ் சொல்வாம்.

ஒளிருமிரத் தினவயிரே ரியமா ணிக்க முரைமாற்றி லாப்பசும் பொன் னிவற்றி னலே, தளவிசைசேர்த் தொன்றினுமொப் பிட வொண் ணுத தாவிலொளிக் கிங்கிணிக ளநேக நாற்றி, யளவில்விதா னங்கொடிதோ ரணமேற் கட்டி யணிகிளர்பூம் பந்தர்மற்று மலங்கா ரஞ்சேர், கிளருமிரத் திநதீபம் விளங்க வுங்குங் கேழ்கிவர வோங் குகர்ப்பக் கிருகந் தன்னில். (௩௯)

யோசனையைம் பானிலக்க மகல மாகி யொளிருமிரத் தின மயமா யிலங்குஞ் சிங்க,வாசனத்தி லினிதிருக்கு* மாதி சத்தி யன்னவ ளுன் னதநாற்பா னிலக்க மெனப் மாசின்மதி யநேகமவ னுதித்தா லென்ன வண்மைபெறு திருமேனி பிரகா சிப்பத், தேசுபெறு திருவ ழகி னதிக மாகிச் சிறப்புறுபல் லலங்காரத் துடனே கூடி. (௪0)

அராகமெனும் பாசங்கோ பாங்கு சத்தோ டபயவர தமுமிளிர்பே ரங்கை தாங்கி, விராகமுறு மெய்யன்பர்க் கருளுங் கண்க ணீண்டகன்று விரவுபெருங் கருணை நல்கப், பராகமுறு விம்பநறுங் கனியே யென்னப் பவளவள வாயதரி மழகு வாய்ப்ப, வராகனிடை கண்டு நிறை காலொனுத மாறிலாப் பொன்னேலை குழையின் மல்க.(௪௧)

* இனிதிருத்தல்-சுகாசனத்திருத்தல்.

திருவடியி னிரத்தினநூ புரமின் ஞர்ப்பச் செங்கழுநீர் சண்பகந்
தண் கருநீன் றொய்தன், மருவளர்மா லிகைமார்பி லங்கச் செம்பொ
ன் மாசிலுடை யுத்தரிகம் வனப்பு நல்க,வருள்வடிவா யினிதமருந் தே
வி தன்னை யாயிரங்கண் ணன்முதல்வின் ணவர்தாழ்ந் தேத்தப்,பரு
வமுகிற் குழல்விசயை சயைமுன் ஞன பாங்கியர்பூ சிப்பமகிழ்ந் துறை
வா ளென்றும். (௪௨)

சந்திரகலை போலொளிருந் தேவி தன்னைத் தனிப்பிரம ரந்திரத்
தா யிரம்பைந் தோட்டுக், கந்தமலி பதுமவா சனத்தி னுள்ளங் கரு
தியுறை யருள்வடிவந் தியானஞ் செய்யின், முந்துகவி வாணரென
வாக்குண் டாகு மொய்யொளிப்பொன் னிறமாக விதையத் தெண்
ணி,னந்தலில்வெம் பாவமெலாம் விட்டு நீங்கு நலிவுதரு சத்துருக்க
ளுச மாவார். (௪௩)

சத்துருவா லுளவுச்சா டனமுன் ஞகைச் சாற்றியவெண் கருமமும்
போய் நாச மாகுஞ், சித்திரரத் தினசிங்கா சனத்தின் மேவுந் தெள்ள
முத மயவடிவாந் தேவி தன்னைப்,பத்தியொடுந் தியானிக்கில் வாக்கின்
மேவும் பைங்கருப்பஞ் சாறமிர்தம் பசுந்தே னின்ன, வொத்திருக்
குங் கவிதைகங்கைப் பிரவா கம்போ லுதித்துலகெங் கும்பரவு முண்
மை மாதே. (௪௪)

கடைக்கண்ணரு ளாற்படைப்பன் கமலன் கண்ணன் காப்பனுல
கனைத்துமுருத் திரனந் தத்திற், றுடைப்பனிவள் பெருமையெவ ரு
ரைப்பார் மூன்று தொழிற்குமுதற் காரணிமா மாயா சத்தி,யுடைப்
பொருளீங் கிவளெனவோர் க்ஷணப்போ தேனு முள்ளத்திற் பாவனை
செய் திருக்கிற் றீமை, யிடைப்படியார் திரைக்கடல்சூ ழுலகுக் கெ
ல்லா மிவர்தாமே யதிபதியா யிருப்ப ரென்றும். (௪௫)

பெருங்கயிலை நடுவினிற்கற் பகநன் னீழற் பிறங்கிரத்ந சிங்கவா ச
னத்தின் மீதே,மருங்கின்மனோன் மனியான தேவி தன்னை மனத்தினி
ற்பா விப்பவர்புண் ணியசொ ரூபர், நெருங்கியசெல் வத்தினரு ம
வரே யிந்த நீணிலத்தி லிருந்திடுமவ் வளவு கால, மருங்கொடும்பா வ
மும்பயமு மிலையந் தத்தி னவள்பதத்தி லுறுவரிதற் கைய மின்றால்.()

பரசிவனோ ரிடப்பாக மேனி யாகிப் பரையாகி விளங்கியமுக் கண்
ணி தன்னை, விரசுறுமெய்த் திடபத்தர் விமல மாகு மிக்கபெருங் கயி
லையிற்சென் றடைவ ரங்க, ணரசிருக்குந் தேவியனுக் கையினைப்

பெற்றே யன்பினரவ் வாலயத்தி னுள்ளிற் செல்வார், பிரசமலர்க் குழலாயிங் கிவற்றி னுள்ளிற் பிறங்கிரண்டா மாவரணம் பேசக் கேணீ. (சஎ)

கோடியோ சனையகல மதனிற் பாதி கூறிடுவர் மதிலுயர்ச்சியெ திற்பீ டத்தி, ஞடியதொல் லறத்துருவா மிடப தேவர் நயந்திருப்ப ரவருயர்பைம் பானி லக்க, நீடியவா ளவையுமவ் வளவாம் பீச நீள மைம்பா னுயிரமோ சனைகோ சந்தான்,றேடியயோ சனையாமோ ரில க்கநீள்ஞ் செப்பிலொவ்வொன் றேரிலக்கங் கோட்டி னீளம்.(சஅ)

காலினீ ளமுமிருபா னைந்தி லக்கங் காதுமொவ்வொன் றேரி லக்கங் கழுத்துக் கூறி, னேலுமுயர் பைம்பானு யிரமா மூக்கு மியம் பிடுமத் தொகையகலங் கண்ணுஞ் சொல்லுஞ், சாலுறுபல் லொவ் வொன்றி னிடத்தைச் சாற்றிற் சகத்திரமைந் தாமிடப தேவர் மூச் சின், பாலுறுகாற் றிற்றனிமா மேரு வாதி பனிவரைகள் கடல்கண்டு நடுங்கு மன்றே. (சகூ)

வெள்ளிவரை யிஃதெனவே மேனி யெங்கும் வெண்மைநிறம் பொங்குமவ ருங்கா ரத்தாற், றள்ளரிய பிரளயகா லத்து வாயுச் சஞ் சலமுற் றுடுங்குமதி பெலமொப் பின்று, மெள்ளருந்தம் வேகத் தான் மனவே கத்தோ டியைவாயு வேகத்தைச் செயிப்பர் சேந்த, வள்ளிலோ நுதிமூக்கி னுதியிற் சேர்த்தி யசையிட்டாங் கிருப்பர்க ண மனேகர் சூழ. (ருo)

எழுதரிய நால்வேதம் பாதந் தூய விமற்றரும மேனிமுகம் பனை யே நாதம்,ப்முதகலு மிருசிருங்கம் விந்துக் கண்கள் பகர்குடிலை வள ர்கன்னம் பாவ மண்டங்,கெழுதருவா றிரோதையதா மிடப தேவை க் கிளர்தருநெஞ் சினிலுருவந் தியானித் தேத்தி, லொழிதரும்வெம் பஞ்சத்து ருகாச மாவ ருறுஞ்சகல சித்தியுஞ்சத் தியமீ துண்மை.()

பத்தர்களா மனைவருக்கு நன்மை செய்தே பாங்கிஞெடு மாங் குறையு மிடப தேவைப், புத்தியுற வீழ்ந்திறைஞ்சி யனுக்கை பெற் றுப் புகழ்ந்தன்ப ராலயத்தி னுள்ளிற் செல்வார், முத்தநகை விளமி னாகே ளிவற்றி னுள்ளின் மூன்றுமா வரணமும்யோ சனையோர் கோடி, யத்தினிடை மதிலினுயர் பிலக்க மைம்பா னதிலாதி சண் டேச ரமர்வ ரொன்றும். (ருஉ)

விளங்கியகே தனங்கள்கொடி யாடை முத்து மேற்கட்டி யிவற் றினலங் கரிக்கப் பட்டுத், துளங்கொளிய பூவளத்தா ணிறுவிச் செய்

ய தூயமா ணிக்கமதில் செய்து மிக்காய்க், களங்கமறு நாளுவத் துக்கு ளோங் கீதிரவி யொருகோடி யுதித்தா லென்ன, வளங்கெழு மா ளிகைகண்மணி மண்ட பங்கண் மன்னியுறை யிடங்கள்பல வின்னுஞ் சொல்வாம். (ருங)

சந்திரகாந் தங்கள்குளிர்ந் தமுது பில்கத் தளவிசைகள் செறித்து நவ மணித்தூ ணட்டி, விந்தைசேறி தருசுவரு மவற்றாற் செய்து மேன்மைபெறு மாணிக்கக் கொடுங்கை சேர்த்து, நந்தலிலா ளொளித மா மணியின் பாவை நாடகஞ்சேர். மண்டபங்க ணடுவ ணோங்கி, யந்தமுறு செம்மணிவே திகைய னேக மதிசயமா விளங்குமவ்வா வரணந் தன்னில். (ருச)

பரவுசிவ காரியங்கள் பரிக்குந் தூய பண்புடையா ரடைந்தவர் வெம் பவங்க ணீக்கி, வரமுதவும் பெருமையினர் கருணை யோங்கி வளராதி சண்டேச ராங்கு மேவித், திரமுறவே யிருப்பர்சிவ கணங்கள் பல்லோர் செறிவொழு கன்னியர்க டொக்கை சாத்த, னுரவுசெறி யட்டவயி ரவரனேக யோகர்சன காதியராங் குறுவ ரின்னும். (ருரு)

ஆரணர்நா ரணர்செறியிந் திரரனேக வாயிரகோ டியரளவிட் டறிய வொண்ணுக், காரணமா முனிவர்சிவன் கருணை நல்குங் காலம்பார்த் திமையாநாட் டத்தோ டங்ஙன், பூரணமாம் பரம்பொருளைத் தியானித் தேத்திப் பொங்குமல மகன்றிவோ ரிருப்பார் கொங்கை, வாரணிகே ளித்தனையா யிரங்கள் போன வருகற்பம் பிரளயமென் றறியா ரன்னோர். (ருசு)

சண்டேச ருலகறிடப் பெறுவோர் தாமே தருமத்தி னுயர்ந்தவர்மெய்த் தவத்தின் மிக்கோர்,வண்டேயு மிதழியந்தார் வேணி யுண்பு வழங்குதற்குப் பாத்திரமு மாவ ரா·வங்,கொண்டேயு மத்தேவைக் கும்பிட் டன்பர் கூறரிய வனுக்கைபெற்று லயத்துட் செல்வார், பண்டேயு மொழிமடவா யிவற்றி னுள்ளிற் பக்ராலா மாவரணம் பகரக் கேணீ. (ருஎ)

ட நந்தீச ருறைவர்சிவ கணங்கட் கெல்லா நாயகமா வக்கணங்கள் சூழ்ந்து போற்ற, வந்தீசன் றனக்கிரண்டா மீச னென்ன மழுவுழை பொன் மணிப்பிரம்பு சுரிகை தாங்கித், தந்தீச னுதவுபிறை வேணி யோங்கத் தந்திபுலி யுரியுடையுந் தரிக மாக, விந்தீசன் போன்றுபிர சன்ன மாகி யெழில்வதனந் தொழுபவர்க்குக் கருணை நல்க. (ருஅ)

கந்தரத்தில் விடமிலங்க வக்க மாலை கவின்பெறமுத் தாரவட மார்பின் மல்கச், சுந்தரநெற் றியிற்றிரிபுண் டரவெண் ணீறு துலங்கிடச்சா மளவல்லி யிடப்பான் மேவ, வந்தரத்தர் யோகர்நறு மலரிட் டேத்த வருமறையா கமந்துதிப்ப வலைகொண் டேதாஞ், சிந்துரத்தி னுரிபோர்த்த சிவனைச் சிந்தை செய்திருப்பர் நித்தியதத் துவம்பெற் றோங்கி. (௫௯)

அந்நுறையுஞ் சிவராச தானி தன்னி லாதிசிவ கணத்தோடு மிருப்ப ரந்த, வுரனுறுமா வரணவிரி யிருபத் தைம்பா னுரைத்திடும்யோசனையிலக்க மிலக்க மைம்பான், பரவுமுயர் பயன்மாலெல் லோருஞ் சொல்லும் பரனனுக்கை யின்றியப்பாற் செல்லக். கூடா, விரவுறு மெய் யன்பரத்தே வனுக்கை பெற்றே விமலனுறை யாலயத்தி னுள்ளிற் செல்வார். (௬௦)

மருமொய்த்த பூங்குழலா யிவற்றி னுள்ளின் மன்னுமைந்தா மாவரண மகலங் கூறி, லிருபத்தைந் திலக்கம்யோ சனையாந் துங்க மியம்புமறைக் கோடியுத னடையா ளத்தைச், சொருபத்தை யின்னபடித் தென்றுங் காணார் தூமறையா யிரமுகத்துச் சேடன் மாயோ, னிருமித்த சிவனுமையா ணந்தி தேவர் நிகழ்த்தியவிம் மூவருமே யறிவர் நீங்கார். (௬௧)

அம்மையுமை யொடுமீசன் விளையா டற்கே யாடிடமா வமைத்தசிவ ராச தானி, யும்பர்தொழு மதற்கிணையே றியம்ப வொண்ணு வுரைத்திடுமவ் வாவரணத் துள்ளி லந்த, நம்பனுறை தருமந்தப் புரமொன் றுண்டு நாற்கோடி யோசனையா மகலஞ் சூழ, வம்பவிழ்பூ நந்தனமா வனங்க ளோடை வாவிகிணை றமிர்தநதி யனேகம் வைகும்.

சிந்தித்த துதவுசிந்தா மணிமா ணிக்கத் திண்ணியமால் வரைகள் பல வவற்றின் மீதே, வந்தித்த பொன்மயமாந் தருக்கண் மல்கும் வகுத்திடிலொவ் வொன்றினுயர் பிலக்கஞ் சொல்லும், பந்தித்த யோசனையத் தருக்கள் பூவும் பலங்களுமைந் தளிர்களுமெந் நாளும் பல்கி, யந்தித்த பணைகவடு சாகை போக்கி யமைந்துதழைத் திடுமொருபா லனேகங் கோடி. (௬௨)

பதுமரா கத்தருவிந் திரநீ லப் பைந்தருப்பன் மணித்தரு வெவ் வேறு நாளு, விதமுறுமென் றுகிர்த்தளிர்மா ணிக்கப் பன்னம் விளங்குதரு மலரொருபாற் கனிக ளோர்பாற், புதுமைதருந் தருப்

பூவி னிதழின் பேதம் பொங்குநிறத் தருவிரதங் கனிகண் மல்கி, யா
திகாசந் தருந்திருவாங் கனேக கோடி யான்றமணி மண்டபங்க ணடு
வி ளேங்கும். (௬௪)

புகலுறுமத் தருவனத்து ணடுவிற் றூய பொன்மயமா கியநீபங்
கதலி புன்னை, மிகலுறுசண் பகமகிழ்மா தனைப லாசு மிக்கமா லிகுச
நறு நரந்தந் தால, மகலிடமெர் கும்புகழ்நன் ஞெளி கேர மாலரசு
பச்சிலைமல் லிகைநற் சந்தந், தொகலுறுநாண் மலர்ச்சிறுசண் புகம்
வா ளேங்கித் தூமலருங் கனிகளுமெந் நாளு நல்கும். (௬௫)

மற்றுமுள பல்வளங்க ளனேக மாங்கண் வைகியதி சயம்விளை
க்கு நாளு பேதத், துற்றிடுபுள் ளினமிருக மார்ப்பி னெங்கு முறும
வையி னவமணிப்புள் ளொளிரும் பொற்புண், முற்றியபன் னிறச்சி
றைப்புள் ளனேக மோர்பான் மொய்த்திடும்வால் செவிகளுமந் நிற
மே யாகத், துற்றமிரு கங்களுமந் நிறமே முற்றுந் தோய்ந்தமிரு க
ங்களுமாங் குறையு மோர்பால். (௬௬)

மாணிக்கக் களிற்றினங்கள் பிளிறு மோர்பான் மயில்குயில்
பொற் சாதகங்க ளொலிக்கு மோர்பால், வேணிக்கந் தரன்கயிலை ய
க்கி ரத்தில் விளங்கிடுமிவ் வளத்தொடுமவ் வனமற் றுங்கே, பூணிக்
கு மாசையின்மாப் பிடியைத் தந்தி பொருந்துதல்கண் டவ்விறைவ
னிறைவி யோடும், பாணிக்கு மவ்வுருவாய்க் கூடி வேழப் பனைக்கை
முக விநாயகனை நல்கி னனே. (௬௭)

கூறியநந் தனவனத்தின் பெருமை யாரே கூறுவரிம் மரக்கோ
ட்டி னுனிக்கொம் பிற்கே, மாறகலிந் திரனுடைநந் தனங்கு பேரன் ம
ருவுசயித் திரவனமு மொவ்வா தங்ஙன், வீறியவோ டைக்குயர்பா
லாழி யொவ்வா மேனிலமே டைக்கொவ்வா மேருத் தீவந், தேடியமி
ன் னேமற்றை வனத்திற் சியஞ் செப்புமிதிற் சிறுமுயற்குட் டிகளுக்
கொவ்வா. (௬௮)

ஈசனுக்கு நிகர்தேவுந் தொகுத்துச் சொன்ன விருங்கயிலைக் கி
ணைவரையு மிலையீ துண்மை, பேசுறுமவ் வனத்தினடு வயிர்த வோ
டை பிறங்குமவ்வோ டைக்கரையிற் பொன்னி னீபந், தேசுறுமாக்
கதலிவனர் நாவி கேரஞ் செழுங்கமுகு சூழ்தரவந் நடுவண் வைகும்,
வீசபெரும் பரஞ்சோதி வடிவ மாகி மிக்குயருஞ் சபைமூன்று விள
ம்புங் காலை. (௬௯)

ஞானவடி வாயிருக்குஞ் சபையைச் சூழ நலந்தருமே மூவா
ணம் வாயி னான்கு, மானமுறு சிவகணத்தார் வசிகர் கப்பர் மன்னி
யபூ ருவத்திரசி தசபை நீண்ட, பானல்விழி யாய்வடபா லம்பொன்
மன்றம் பரவுமிரத் தினசபையீ சானத் தாகும், தானமது மிளிர்கரு
டப் பச்சை யாதி தாவின்மணி யால்விளங்கிச் சோதி யாகி. (௭0)

முத்தியளித் திடுபரமா விசால மாகி முயங்குமிரத் தினசபை
யின் முதல்வி காணச், சித்திதரு சிங்கார நிருத்தஞ் செய்யுந் தெளி
வுடையோர் கண்டுதொழுஞ் செம்பொன் மன்றி, லத்தன்மகா சதா
சிவநன் னடனங் காட்டு மாதியிர சிதப்பொதுவி லதிர வீசி, நித்திய
மாஞ் சதாசிவநாட் டியத்தைக் கூட்டு நிகழ்சபையின் பெருமையெ
ம்மா னிகழ்த்த லாமே. (௭௧)

புதியநறு மலரின்மண மெங்கும் வீசப் பூமலர்த்தா தளைந்துகு
ளிர் வந்து வீசத், துதிசெயுமா மஞ்ஞைகுயில் செவியி னேற்பத் தும்
புருநா ரதர்வீணா கானம் பண்ணப், பதியெனுமா பரனடிக்குஞ் ச
பைகண் மூன்றும் பண்புறவே விளங்குமவ ணந்தி தேவ, ரதிகவிற
ற் சிவகணங்கள் சனகர் யோக ரரியயனிந் திரன்முதலோ ரருச்சித்
தேத்த. (௭௨)

நவ்விவிழி யாயுயர மிலக்க மைம்பா னவின்றிடும்யோ சனைபதி
னான் னிலக்க மாகிச், செவ்விபெறு திருமேனி யகன்று கோடி செங்
கதிர்ப்பே ரொளியம்பொன் விமான மீதி, லவ்வியந்தீர்த் துறையும
கா சதாசி வந்தா னாதிவெளி விளைந்தருளே பழுத்துத் தானே, யெவ்
வமின்மே லெவற்றிற்கு மேல தாகி யிருங்களியே விளைந்தெவர்க்குங்
காணொ ணாதாய். (௭௩)

அளிவிளையு மெய்யன்பர்க் கருளின் றாய வானந்த வொளிவிளங்
கு முகங்க ளையைந், தெளிதென்வெண் ணருஞ்சூல முதல தாங்கு மி
ணையிறிருக் கரங்களைம்பான் கண்கண் மூன்றுந், தெளிதரப்பெற் று
ளதுபிறை முடிக ளோங்கச் செம்மணிப்பூ ணணிந்திரவி கோடி
யென்ன, மிளிருநவ மணியரியா சனத்தின் மீது வேதனெடு மாலருச்
சித் திடவே மேவும். (௭௪)

தருமசரு மாவிவற்றைப் புகலக் கேட்குந் தையல்புகல் வாடவத்
தோ யயன்மால் யோக, ரருமறையா லளந்தறிதற் கரிதா யோங்கு
மாதிசபை யினிற்புரியு நிருத்தன் றன்னை, நிருமலையா மனவல்லி நீங்

கலாக நிகழ்த்துதிமற் றையர்தெரிசித் தவரின் ஞேரென், றொருமை
பெற நினவுற்ல்கேட் டீனரசெய் வாமென் றுனாசெய்வா னம்முனிவ
ன் மனைவி கேட்ப. (எரு)

மாசதா சிவநடன மம்மை காண மகிழ்விறெனும் புரிந்தருளி ய
நேகல் காலங், தேசதா மெனவுறைய மண்ணு லங்காட் செங்கண்மா
ன் முதலியர்கன் னடனங் காண்பா, ராசைதாம் பெரிதாகி யிந்நாள்
காறு மருந்தவஞ்செய் குனர்தெரிசித் திடுவிப் போமென், றூசை
தாழ் திருவுளத்தி னுன்ன வன்றே ருற்றனர்ஞா னக்கணவர்க் குதவி
னுனல். (எசு)

வேறு.

ஆங்கவர் காணப் புரிகிருத் தத்திற் கியைபவா ஞுசுர னகிலத்,
தோங்கிய வதரு வணமறை விதியா லொலிமிகுங் குடமுழா வதிர்ப்
பப், பாங்கொடு நெடுமான் மத்தள முழக்கப் பங்கயன் றாளமொத் தி
சைப்ப, வாங்கரும் பானு கம்பனு யிரஞ்செவ் வாயினூற் சங்கெடுத்
தொலிப்ப. (எஎ)

மூவிரு பாதன் சதசிர சேனன் மொழிதரு கணேசரிங் கிவர்க
டாவரு மொலிசேர் தமருகம் விதியின் சதியின்வா சிப்பவர்க் காக்கன்
மேவரும் பேரி வாத்தியங் கொட்ட வேணுகம் பணரிசை மிழற்ற
வேவரும் பரவு மங்கிலர் கும்போ தாரிருங் கொம்பெடுத் தூத.(எஅ)

நந்திமா தேவர் பொற்பிரம் பெடுத்து நாட்டியச் சபையினுர்ப்
படக்கிவந்திடு மிமையோர் குழுவினைத் தத்தம் வரிசையின் முறைமு
றை நிறுவி, யிந்துவே ணியனுர் திருமுன்ன ருலாவி யிருமருங் கினு
மெதிர் நடந்து, பந்தமாம் வினைதீர் சீர்த்தியை யெடுத்துப் பகர்தரு
ங் கட்டியம் படிக்க. (எகூ)

மற்றைய கணங்க ளிற்சிலர் வீணை வாசிப்ப வவர்களிற் சில
வர், துற்றிடு மற்றைத் தமருக முதல வாத்தியந் துழனியார்ப் பெடுப்
பக், கற்றையங் கூந்த லரம்பையர் கமலக் காலிற்கிங் கிணிசிலம் ப
ணிந்தே, யுற்றவே ழிசையின் கானவா ரமுத மொண்குழைச் செவி
யினின் வார்க்க. (அ0)

சாமரங் குடைபா வாடைநீள் விருது கொடிசில தையல ரெடு
ப்பத், தோமறு சந்தக் குழம்புகொண் டிமையோர் தொழச்சில தோ
கைய ரிறைப்பக், காமரு தூப தீபத்தட் டேந்திக் கன்னியர் சிலர்ப

னி மாற, மாமறை விதியான் மங்கலம் பாடிப் பலாண்மொ தரிற்சி
லர் கூற. (அ)

விசையையே செயையாம் பாங்கிய ரோடும் வேழமா முகன்குக
னென்னு, மிசைபெறு மைந்த ரிருவர்க ளோடு மெம்பெரு மாட்டி
யுண் மகிழ்ந்து, நகைதரு கயற்கட் பார்வையி னுறு நலந்தரு புன்ன
கை யாலும், திசையெலாம் பரவு திருநடம் விளங்கச் செய்துகெம் பீ
ரமே செலுத்த. (அஉ)

தெரிதரு பதினோ ருருத்திரர் மற்றுஞ் செப்பிய வுருத்திர கண
ங்க, ளரியயன் மகவான் முதற்றிசைப் பால ரவரவர் கணங்கள்விண்
ணோர்கள்,விரிதவ முனிவர் சித்தர்க ளியக்கர் விஞ்சையர் சாரண ருர
கர், பரிவினோ டிந்து சூரியர் வணங்கிப் பரமவா னந்தத்தின் மூழ்க.()

மற்றுள கிரக முடுக்களெண் வசுக்கண் மருத்துவ ரிராசிபுட் கலமா
நற்றுளி முகில்க ளேழிரு புவன நளிகட லேழுமா நதிகள் [வரைகண்
பொற்றுண ரோடை குளங்கிண றுவி புகலுமெண் கயங்கண்மால்
முற்றுறு மன்பா லானந்தத் தேனை முகந்துகண் வழியுளந் தேக்க. ()

ஐங்கரன் கணங்க ளறுமுகன் கணங்க ளாதிசண் டேசன்மா நந்தி
யெங்கணும் புகழ்துந் திலர்மகா வாகு வுற்பனர் கிரீசருன் மத்தர்
தங்கிய பிரேங்க ருற்சிலர் கணத்துட் சாற்றுகுண் டிகர்பணி கிரசு
துங்கவைங் கண்ண ரெழுகணர் பூத பசாசுவே தாளங்க ளொப்ப. ()

வேதநான் காறு சாத்திரம் வேத சிரசொடா கமங்களு லேழு,
கோதிலா வுபநி டதங்களோடத் திரஞ்சூத் திரம்வியாக் கியானுங்கண்
மிருதி, யாதியீ ரொன்பான் புராணகா வியம்ப்ர வந்தநா டகமலங்
கார, மீதெலாம் பரம வடிவெடுத் திறைஞ்சி யிறைநடந் தொழுது
வாழ்ந் தெடுப்ப. (அசு)

அத்திரி விண்டு புலத்தியர் புலக ரங்கிராக் கர்க்கர்பார்க் கவர்மா
நித்திய வற்சர் குற்சர்க ளவர்நன் னிலைபெறு மிருகண்டு விசுவா [ம
மித்திரர் சுகர்மார்க் கண்டர்மத் தியந்தர் வியாசர்மாத் தேந்திணி வா
ரித்தனை பிரம விருடியர் கணங்க ளிறைஞ்சினர் குணலையிட் டேத்த.

கண்ணுவர் சங்கர் தெக்கர்சம் வர்த்தர் காத்தியா யனர்தொழு
தேத்தப்,பண்ணிசை வீணை நாரதர் முதலாந் தேவமா விருடியர் பர
வத்,தண்ணளிச் சனகா தியசிவ யோகர் தனித்தனி கண்டுதோத் திர
ஞ்செய், துண்மகிழ் சிறந்து நடனவா னந்தத் தேன்முகந் துண்டுகே
ண் களிக்க. (அஅ)

பம்பிய வெத துந்துபி முழங்கவீ பங்கயன் செய்தொழின் மயல் வம்பிகைதானுந் தாளமொத் திசைத்தே யாகர நடேசவென் றே த்த, வும்பர்நா யகர்பொன் வேணியின் சோதி யோங்கிய திகந்தமும் விளங்கி, வம்பவிழ் குழலா யுலகவான் மாக்கள் வல்வினை மலவிரு ள கற்ற. (அகூ)

சிற்சபை தன்னிற் சுற்றியே நடிக்குந் திகம்பான் குஞ்சித பதத் திற், பொற்சிலம் போசை கேட்டுளோர் புளகம் பொலிசிவ போக த்தி லழுந்தச்,சற்சிதா னந்தத் தாண்டவ ரசத்தைத் தனிவிடை ஞான கேத் திரத்தான்,முற்செலு மன்பிற் பருகியுள் ளுருகி முடிவிலற் புதத் தொடு மிருப்ப. (கூ0)

இத்திரு நடன வானந்தத் தேனுண் டியாவருந் திருத்தியை யடை ந்தார், மொய்த்தெழு வான்பூ மழையம்பொன் மழைநன் முழுநவ ம ணிமழை பொழிந்த,வத்தனு னந்தத் தாண்டவ ராய னனைவர்க்கு ங் கருணைசெய் தருளி, நித்தமா முத்தி யளித்திட வன்னோர் நிறைபரஞ் சோதியுட் புகுவார். (கூக)

அனேகமால் பிரம ரனேகமிந் திரரு மனேகமாம் விண்ணவர் முனிவ,ரனேகமா யோகர்சித்தரு மனேக மற்றும்விண் ணவர்குழாம னேக, மனேகமெய் யன்ப ரனேகமா தவங்கள் செய்தலா லனேகநீத் தேக, மனேகனும் பொருளி னிரண்டற வொன்றி யநாதிசீர் யுச்சிய மடைந்தார். (கூஉ)

மானினேர் விழியாய் தொழுதவெல் லோரும் விழுத்தரு முத்தி யை யடைந்தார், மோனமா யிருந்து நீயுமந் நடன மூர்த்தியைத் தி யானஞ்செய் திடுவா, யீனமார் பவந்தீர் முத்தியெய் திடுவென் றியம் பயான் றியானிக்கும் பொருட்டான், ஞானமார் சபையி னடமூர் த் தத்தின் பிரமாண நவிலெனக் கென்றுள். (கூ௩)

என்றவள் கூறத் தருமசன் மாவங் கியம்புசா ளீதகி குய்யந், து ன்றுபூங் குழலாய் கற்பின்மேம் படுநீ வினையது சொல்லுதல் வழக்கா, லொன்றுமன் பினிற்கேண் மாசதா சிவந்தா னொப்பற நடித்திடு மம் பொன்,மன்றமாம் விமான மொன்றனைக் கோடி யோசனை யுயர்ந்த து மரபால். (கூச)

அகலமு முளைக்கு மத்தொகை வாயி லுயரமு மிலக்கமோ ரறு பான், புகலும்யோ சனையச் சபையினு ளிலங்கும் பொற்பொது மக

லமா றிலக்கம், விகலமொன் றின்றி யுயர்புமத் தொகையா மிரத்ந சிங் காசன மீதிற், சகளநிட் களமா சதாசிவ நடனம் புரிதருந் தைய ல்கணு டேவப்ப. (கரு)

செங்கதிர் கோடி யுதித்தென விளங்கித் திக்கண்ணார் காணுதற் கரிதாய்ப்,பங்கமின் ஞானக் கண்ணினர் காண்டற் கெளியவாந் தனி ப்பரஞ் சோதி, யெங்குமா நிறையு, நிட்களஞ் சகளீ கரித்துநாட் டியம்புரிந் திடுமாற், றுங்கமா நடேச னுயரமு மைம்பா னிலக்கம் யோ சனையெனச் சொல்வார். (கசு)

பாதமோ ரிரண்டு மிருபத்தைந் திலக்கம் யோசனை நீளங்காற் ப டங்க, ளோரதுமைந் திலக்க நீளமா மரையி னகலமு மத்தொகை யு ரைக்குஞ், சோதிசேர் திருமே னியின்வடி வகலந் தோன்றிடு மே ழிரண் டிலக்க,நீதிசேர் காள கந்தர மிலக்க மிரண்டதாம் யோசனை நீளம். (கஎ)

அருள்பொழி முகத்தி னீளமு மிலக்க மிரண்டியோ சனையணி மூக்கின், மருளறு முயர்பு மயுதமா மலர்க்கை நீளமு மிருபஃதி லக் கம், தெருளுற வுரைக்கின் விரல்களி னீள மிருபதி னயிரந் தெளியும், பொருளுடைப் புருரந் திருச்செவி திருக்கண் ணீளமும் புகலுமத் தொகையே. (கஅ)

இத்திற நடேசன் கேசாதி பாத பரியந்த மியல்பெற விளங்கு, முத்தம மூர்த்திக் கியைந்திட விமலே யுருவமும் பொலிதர விருக்கு, நி த்தமா மிடப தேவர்நந் தீசர் நிகழ்சிவ கணத்தவ ருருவு, மத்தக விள ங்கும் புந்தியா லளந்து காணுதி யறைகுவ மின்னும். (ககூ)

இசித சபையாம் விமானமு மைம்பா னிலக்கமோ சனையுயர் பகலம், பரவுறு மதிசெங் கதிரார் கோடி யுதித்தெனப் பல்லொளி பரப்புந்,திரமுற வுரைக்கு நிட்களந் தன்னை சகளமாய்த் திருக்கர மொ ருபான், வரமுறத் தோன்றத் திருநடம் புரியும் வனிதைநீ யதுமனக் கோடி. (௧00)

வான்கதிர் கோடி யுதித்தென வொளிரு மிரத்தின சபைமணி வி மானந்,தேன்கமழ் குழலா யகலமு முயர்புஞ் செப்புமவ் விலக்கமோ ரைம்பா, னன்குதிண் புயத்தோ டிரைத்தநிட் களமே சிங்கார நடஞ் செயு முருவா,யூன்கெழு பவந்தீர்த் தருளுமிப் பொருளைச் சபையொ டு முள்ளத்திற் கோடி. (௧0௧)

ஓங்குமப் பொருள்சேர் கொடுமுடி விரிவு மாவர ணங்களு முறைத்தேம், பாங்குறுஞ் சத்துக் கோடியர் மாட மாளிகை யவற்றைப்பண் புறச்சூழ், நீங்கரும் பரிதி காந்தமாம் பன்னோர் முடிமிசை யுருத்திர ரிருப்பர், தாங்குமத் தொகைய ரவற்றைச்சூழ் நூற்றெட் டணிமுடி சந்திர காந்தம். (௧௦௨)

அவற்றினைம் பத்தோர் சத்திகள் பொருணூ லுணர்பவ ரானுருப் பெற்றோர், கவற்சிதீர் நவசத் திகளினை யோர்கள் கருத்துறச் சதாசிவப் பொருளை, யுவப்பொடும் பரவி யுறைகுவ ருவற்றைச்சூழ் முடி யாயிரந் தோன்று, நிவப்பழ னிறந்தாண் டவஞ்சத்த கோடி மந்திர முருப்பெற்று நிலவும். (௧௦௩)

பகர்தரு மவற்றைச் சூழ்மோர் பதினா யிரத்தொரு முடியவை படிக, நிகரறு தந்தி முகன்குகன் சாத்த னிகழ்த்திய வினைசெயு மூவர், மகரவா ரிதிசூழ் புவிபுகழ் காளர் வயிரவ னந்திபிங் கிருடி, சிரநேர் கணங்க டிறற்சிவ குமாரர் தேனுமால் விடைபடைத் துர்க்கை. ()

சத்திக ளினையோர் தவமுயற் சியினு வினிதிருந் தப்பதஞ் சரிப்பார், மொய்த்திடு மவைசூழ்ந் தோன்றுபெற் றிடுமோ ரிலக்கமா முடிமணி மாபத்த, வைத்தமேற் றிசையில் வைகுவர் கோடி நாரணர் மலத்தினீங் கிடுவார், சித்தசுத் தியினுற் றனிமுத லான சிற்பர மறபொடும் வணங்கி. (௧௦௫)

வடதிசைச் சிகரத் தளவிலாப் பிரமர் வைகுவர் முத்தியை விரும்பி, யிடையுமிந் திரர்க ளனைகர்கீட் டிசையின் விமலனைத் தொழுதுட னமரவார், படர்தரு தென்பா னெடுமுடிச் சிகரத் துறைகுவர் பாங்கெழு கணங்க, ளிடரறு தவத்தோ ரளவிலர் கருணை யெம்பிரான் றன்பத மிறைஞ்சி. (௧௦௬)

பத்திலக் கத்தொன் றனைமருங் குடுத்துப் பைம்பொனின் விளம்புமச் சிகரம், புத்திகூர்ந் தாங்க ளுருத்திர கணங்கள் பூதசே னாதிபர் சித்தர், வித்தியா தரர்மா கருடர்கந் திருவர் மேவுவர் சூலமே முதலா, மெய்த்திடுங் கருவி சுரபிரான் மணிநீண் முழுநிதி மொய்ம்மலர்த் தருக்கள். (௧௦௭)

ஏலவார் குழனற் கணிகைய ரீட்ட மிறையுருத் தரித்தவ ணிருப்பார், சானுமித் தகைய கொடுமுடிக் கீழாய்த் தாவற நவிலனோங் கிருக்கும், பானுறழ் வெள்ளிக் கொடுமுடி யவற்றின் பகர்தொகை கோடி

யொ டொன்று, மேலுற வவற்றிற் சரிப்பன யாவும் விதம்பெற வர
ன்முறை விரிப்பரம். (௧௦௮)

பிரணவத் துருவாய் விளங்கும்வெண் ணிறத்திற் பிறங்கிரண்
டாயிரம் வேழ, முராணுறு வேதப் பரிகளூன் முகற்கு முழுதளந் தறி
ந்திட வொண்ணு, வரனொடு முறைவ தனேகமோர் தாள மூன்று
டைத் தூளின வான்ற, காணுறு பொற்றைத் தாள்பல வுடைய தரு
ளிருக் கணங்கணக் கிறந்த. (௧௦௯)

ஒருமுகத் தனவோ ரிருமுகத் தனமூன் றுடைமுகத் தனமுக மி
லாத, திருகுவெஞ் சீற்றக் கண்களுஞ் செறிந்த கைகளு மின்னண
ஞ் சிறந்த, மருவுவெண் பிறைபோ லெயிற்றன பிலம்போல் வாயி
ன செம்மயி ரினவாய்ப், பொருவருங் கணங்க ளளவில வின்னும் புக
லுவங் கணங்களின் பொலிவு. (௧௧௦)

மாணிடர் பறவை மதகரி முகத்த வரிப்புலி முகத்தவெவ் வழல்
வாய்க்,கானமர் நரிவெங் கரடிமா முகத்த கடியபல் விலங்குமா முக
த்த, வானபல் பூத மெண்ணில வமல னணையி னியங்கியாங் கமர்வ,
தூநிற விமானந் தேர்பல பொருந்துந் தொகுத்தல்விண் ணவர்க்கும
ற் றரிதால். (௧௧௧)

அப்பெருங் கயிலை மருங்குடுத் துயர்ந்த வணிகிளர் கற்பகப்
பொதும்பர், வைப்புறு மண்ட மாதியந் தமுஞ்சூழ் மருங்கும்வீ
சியபணைத் தருக்க, ளொப்பற விளங்கு மாங்கவண் புதுநீ ரோங்கிய
நவநதி நண்ணு, முப்பரம் பொருளின் முதலுரு வேண்டி முழுத்தவர்
தவம்புரிந் திருப்பார். (௧௧௨)

நீடுமித் தன்மை யாயமா கயிலை நெடுவரைக் கொடுமுடி யிலக்
கங், கோடியோர் பதினோ ரிலக்கத்தோர் பதினோ ராயிரத் தொருநூ
றுங் குணித்து, நாடிய விருபத் தைந்துமென் றுரைப்பர் நவிலுமிக்
கயிலையின் றூழ்வின், மாடுசூழ் தரும்பொன் னிலமதிற் கணத்தோ
டுருத்திர ராயிரர் வதிவார். (௧௧௩)

ஆங்கவ ருறையுந் தமனியத் தளத்தி னளவையோர் கோடியோ
சனையா,நீங்கரி தாமத் தமனியத் தளத்தை நிலைபெறச் சூழ்ந்துகொண்
டிருக்கும், பூங்கதி ரொளியாற் கதிரொளி யகற்றும் பொற்பொடு மி
னிதுற விளங்கித், தாங்கரும் வெள்ளி மதிலுடுத் திருக்குந் தமனிய வி
ஞ்சியொன் றுளதால். (௧௧௪)

துன்னிய கோடி ம்யோசனை யகன்று தொகுத்திடுங் கோடியிற் கோடி, மன்னியே யூடு போகிமேக் குயர்ந்து வளர்ந்தன வானுற வோங்கி, மின்னுகோபுரங்க ளெட்டுள வவற்றின் வாயிலின் மேவியே தாப்போ, ரின்னரென் றவரைப் புகலுதல் செய்வாங் கேட்டியென் றியம்புவான் முனிவன். (கக௫)

ஐங்கரன் றிகழ்பூ ருவதிசை வீர பத்திர னழற்றிசை தென்பாற், றுங்கமா நந்தி வயிரவன் றென்மேற் றுலங்கிய மூலமேற் றிசையிற், றங்குவேற் குமரன் வாயுவின் றிசையின் வயிரவி சாற்றிய வடக்கி, னுங்குமா காளர் சாத்தனீ சானத் துறைந்துதங் கணத்தொடும் புரப்பார். (கக௬)

இயம்பிய விவற்றுறை வளைந்துசூ ழரண மொன்றுள வினமணிக் குலங்கள், வயங்கொளி விளங்கி வானுற நிவந்த வன்மனத் தரக்கர்வல் லசுரர், முயங்கியே சேறற் கரியதாய்ப் பிரள யஞ்செலற் கருமுழுக் காவல், வியன்பெருங் கயிலை நிலையிது புகன்றேம் விமலனோ டிதுமனக் கோடி. (கக௭)

வளப்பெருங் கயிலை வண்மையு மூன்று மன்றமு நடேசன்மா வடிவும், மளப்பரி தெவர்க்கு மவனரு ளதனு லறிந்தவா றியம்பின நடேசன், இளப்பரும் பஞ்ச சத்திகட் கருளிச் சுவேச்சையா யுறுங்கிள ருருவி, னுளப்படு முரோம மொன்றிற்பல் கோடி யண்டங்க டோன்றியே யொடுங்கும். (கக௮)

மலரயன் றிருமா லிந்திரன் முதலாம் வானவ ரவனரு ளடைந்து, நிலைபெறுஞ் செல்வ மெய்தின ரவனை நிகழ்த்துமால் கண்மலர் சாத்திப், பலர்புகழ் சுதரி சனப்பெயர் படைத்த சக்கரம் பெற்றன னெவனு, லலைவறு மவனை யளந்தவன் வடிவம் வருணிப்ப தியாவர்க்கு முடியா. (கக௯)

ஊன்மதுப் புசித்த வேடன்பூ சித்தே யுயர்தரு முத்தியை யடைந்தா, னனவற் குதவு வானெவ னவனை யடைவிற்றன் சரிதையைக் கேட்போர், வானமும் பரவு சிவகதி யடைவார் வந்தருள் வானெவ னவனைப், பான்மைசே ரண்டப் புரவிரோ மனைப்பல் விதத்தினும் வருணித்து முடியா. (கஉ0)

இத்தக விளங்கு நடேசனைக் கயிலை யுச்சியி னிருப்பதாய் நினைப்போர், பத்தியா யீசன் நந்தி யிருந்து பரவுமிக் கதைபடித் திடுவோ

ர், வித்தகக் கதைகேட் பவர்பவ மகன்று விமலமா கயிலையை யடைந்து, நித்திய போகந் துய்த்திரண் டற்ற நேயமா முத்தியை யடைவார்.

என்றுமா தவத்துத் தருமசன் மாவங் கியம்பலும் வினமினை கேளா, நன்றுநன் றென்று கசிந்துள முருகித் தியானித்து நன்மையை யடைந்தான், வென்றிமா தவத்தி ரத்தக முனிவன் விளம்பிய வாறுமுக் குரைத்தேம், தொன்றுமா கயிலைச் சபையொரு மூன்றுஞ் சூக்கும மாக்கியே சொக்கன். (கஉஉ)

நடனவிக் கிரக மாகிய தனையு நவிலருஞ் சூக்கும மாக்கி, யடைவினப் பொதுவி னுவந்துதா பித்தே யமுதலிங் கத்தினி னுறைன், கடவுல கேத்து மதுரைபூ லோக சிவலோக மாகயி லாயந், திடமுற வுரைத்தேஞ் சத்திய மென்றே செப்பினன் மலையமா முனிவன். ()

ஆறுவது மகாகைலைமான்மியமுரைத்தவத்தியாயம்

முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௬௬௭.

ஏழாவது

தேவியறம்வளர்த்தவத்தியாயம்.

வினவு மாதவர் மீளவும் வினவுவார் மெய்த்தமிழ் முனித்தேவே
நனிவி ரும்புவே தாகம முதலிய விண்ணவர் நடங்காணப்
புனித சுந்தரன் புரிதிருத் தத்தைநீ புகலக்கேட் டௌம்வாழ்ந்தே
மினிய மாதவப் பயன்சிவ பத்தியு மெய்தினேங் கதிபெற்றேம். (க)

அன்ன தாயினு மின்னுமொன் றுரைக்குது மாலவாய்ப் பதிதன்னின்
முன்ன மம்பிகை யறம்வளர்த் தனளென மொழிந்தனை யதுகேட்டே
கன்னி பாகன்ற னருளினு லங்கயற் கண்ணிநா யகியங்காண்
மன்னு முப்பத்தி ரண்டறம் வளர்த்ததை வகுத்துரை விரித்தென்று[ங்

இந்த வாசகங் கேட்டலு மகத்திய னியம்புவான் முனிவீர்காள்
புந்தி கூர்தரக் கேளுமின் புகலுவாம் பூருவ கதைகேட்போர்
முந்தை வல்வினை நீங்கியே சிவகதி முற்றுவ ரிஃதுண்மை
சிந்தை செய்குதி றென்றவ ருளங்கொளத் தெருளுற வுரைசெய்...

வேறு.

ஆதி நாளினிற் சோமசூ ரியர்முதற் கடவுட்
சோதி தோற்றமெற் குரையெனச் சுந்தரி வினவ
நாத னங்கணிற் றோன்றியே நாள்வரி லொடுங்கும்
பாதி மாதுகே ளெனவிளை யாடலைப் பயில்வான். (௪)

வீர னாவிய கயிலையி லரனமர் துமையா
டேன லாவிய மலர்க்கையாற் றிருவிழி புதைத்தா
னான காலையி லிருட்பிழம் புருக்கியம் புவியு
மேனை யாவையும் பூசின வாமென விருண்ட. (௫)

நீல மாமலை போற்கறுத் தனநெடு வரைகண்
ஞால மேழ்புகழ் யமுனைபோற் கறுத்தன நதிகள்
சீல மாதவ முனிவர்மே தகுபுவித் தேவ
ரோலுந் தத்தமா தவமுநன் னியமமு மிழந்தார். (௬)

கண்பு தைத்தகை திறக்குமுன் கணமவர்க் குலகிற்
கெண்பு தைத்திடும் யுகங்களு மெண்ணில சென்ற
பண்பு றுத்திடு மன்னவ ணிலைமையைப் பாராத்
தெண்க டற்கடு மிடற்றினன் றிருவுளங் கறுத்தான். (௭)

கறுத்த கண்டனுட் கறுப்பினைக் கவுரிகண் டறிந்தாள்
சிறுத்த குற்றநீ பொறுத்தியான் செய்தது பிழையா
லுறுத்து மிப்பவந் தீர்வழி யுரையெனப் பணிந்தாண்
மறுத்த லாத்திலன் கருணைசெய் தருளியே வள்ளல். (௮)

எத்த லத்தினுந் தீர்வுறா திப்பவஞ் சிவன்
முத்தி மாநக ரடைந்துமுப் பானிரண் டறமும்
பத்தி கூர்ந்துநீ புரிந்தெமை வழிபடிற் பாறும்
புத்தி யீதென விடைகொடுத் தருளலும் பூவை. (௯)

என்ன மாதவஞ் செய்தன ளியற்றமிழ் மதுரை
தன்னி னல்லறம் வளர்ப்பதற் கெனமனந் தளிர்த்தா
ளன்ன செய்குவ லென்றரா னடியிணை யிறைஞ்சிப்
பொன்னின் மானமீப் பொலிந்தன ளத்தலம் புகுவாள். (௧௦)

வேறு.

விசையை யேசயை சண்டி மெல்லிய
லசைவின் மங்கல யருகு சூழ்வரத்
திசைவி ளங்குறு தீர்த்த தன்னிய
ரிசையுந் தேவமா முனிவ ரெய்தவே. (௧௧)

பணங்கொள் பூதலஞ் சிறப்பப் பல்சிவ
கணங்க டேவருந் துதிக வித்திடக்
குணங்கொ ளன்பர்சென் றெதிர்ந்து கும்பிட
மணங்கொ டென்றிசை வழிக்கொண் டேகினாள். (கஉ)

கங்கை சூழ்தரு காசி யெழுத
லங்கு முற்றுள தலங்க ளியாவையும்
மேங்கு மாசையாற் றொழுது பூம்பொழின்
மங்கு றேய்பருப் பதம்வ ணங்கினாள். (கங)

முத்தி நல்குபொன் முகலி சூழ்ந்தகா
ளத்தி யானதென் கயிலை யீசனைப்
பத்தி யாற்பணிந் தேத்திப் பாங்கர்சூழ்
மெய்த்த லங்களும் விரைந்து போற்றினாள். (கச)

கம்பை பாலிசூழ் காஞ்சி யானவே
கம்ப மேவுமே கம்பர் தாள்களை
யம்பை முன்புபோற் போற்றி யாங்கெழூஉ
வம்பெய் வேணியா ரருள்பெற் றேகுவாள். (கரு)

பொன்னி நாட்டுள தலங்கள் போற்றிச்சென்
றென்னை யாளுடை யிறைவி யாலவாய்
மன்னு மாசையால் வழிக்கொண் டேகியே
கன்னி நாட்டினிற் கடிது செல்கின்றாள். (கசா)

கதிர்த வழ்ந்தெழுங் கதம்ப கானத்தை
யெதிர்ப ணிந்துசென் றேத்தி யன்பினாள்
முதிர்த வந்தரு மூத்தி மாநகர்
மதுரை யெய்தினாள் மதுர வாய்மையாள். (கஎ)

வேறு.

பாலின் மென்மொழி விமானத்தின் றிழிந்துதன் பரிசனர் புடைசூழச்
சூல தீர்த்தப்பொற் றாமரை யொடுசிவ தீர்த்தமுந் துளைந்தாடி
மூல வஞ்செழுத் தோதிநீ றணிந்துதம் முதல்வனு றுறைகோயில்
காலி னல்வலஞ் செய்திலிங் கத்தினைக் கண்டுகண் களிகூர்ந்தாள். (க

துதித்த ருச்சனை செய்துதாழ்ந் தெழுந்துதம் பரிசனர் சூழ்ந்தேத்த,வுதித்தெ ழுந்துமெய் யன்பினு லனுக்கைபெற் றுவந்துதா னுறைகோயிற், கதித்தி றம்பெறு சந்நிதி யணுகியங் கயற்கணு யகிதன்னைப், பதித்த மெய்யன்பிற் பணிந்தனள் விசையையைப் பார்த்திது பகர்கின்றாள். (கக)

ஆதி மூலமாம் புரையிவள் கலையிலா யிரத்தினி லொருகூறு
சேரதி சேர்கயி லையிலிருந் தனனருட் சோதியு மிதபோது
நீதி மாதுநீ காணெனத் தர்ச்சனி சுட்டிநே ரிழைகாட்டக்
காத லான்மற்றைப் பாங்கியர்தாமுங்கண்டருச்சித்துக்களிகூர்ந்தார்

சோதி நாயகி மூவிரு சத்திக்கு மேலதாய்த் தொழினல்கு
மீாதி நாயகி பரம்பரை நாயகி யாலவாய்ப் பதிமேவு
நீதி நாயகி யங்கயற் கண்ணியா நிமலநா யகிமுன்ன
ரோது மாதவஞ் செய்தன னறஞ்செயற் கெனவிச யையைநோக்கி.()

உறையு மில்லிடம் பொருட்டுணை யுயர்மகப் பெறுமவர்க் குவந்
தீந, னிறைய வேபடிப் பவர்க்குரை நற்பொரு ணிகழ்த்துவிப் பவர்
க்காத்தல், குறைவ றுஞ்சிவ நேசர்வாழ் திருமடங் குலவுசத் திரமு
னனூ, லறையும் வேற்றறம் புறக்குதல் சிறையுண வனைவர்க்குந் தி
ன்பண்டம். (உஉ)

சமைய மாறுமே வரைந்திடா துதவுமூண் சாற்றிய பேரைய
மமைவு றுதிறு மிறுதிசே ருயிரினை மீட்டலா டியாக்காத்தல்
சுமையு றும்மலர்க் காக்குள நீர்ப்பந்தர் தூய்மணங் கமழெண்ணெய்
கமைத ரும்விலங் குணவநா தப்பிணங் கதிதெரிந் திடேற்றல். (உ௩)

மருத்து வச்செயல் கணிகையர் போகநன் மணங்கொளுந் தமதான
மருத்தி கூர்தர வானிலந் திருமுறை கண்டிகை யணிநீறு
திருத்து பூசனை வத்திர தானமே செப்பிய கடன்றீர்த்தல்
பொருத்த முற்றிடு குருவுப தேசமெண் ணுன்கையும் புரிகென்றான்.

அன்ன மேமுத லிடுதரு சட்டுவ மீந்தன ளதுவன்றி
மன்னு முத்தமத் தலைவன்முன் றருமிரு நாழிநென் மகிழ்ந்தீந்தாள்
பின்னு மற்றுளவறமெலாஞ்செய்கெனப்புகழ்ந்துபே ரருள்கூர்ந்தாள்
பன்ன ரும்புகழ் விசயையே முதலினர் பணித்தவா றவைசெய்வார்.()

அம்பி கைக்குமுன் னிருந்தறம் வளர்த்தரும் பவமொழித் தருள்பெற்
றான்,செம்பொன் மாமழை நவமணி மலர்மழை பொழிந்தன செறி
வானம், பம்பு துந்துபி வாத்திய முழக்கினர் சிவகணத் தவர்பல்லோர,
ரும்பர் வானமே முதலமு வுலகுமார்ப் பெழுந்தன வொன்றாகி.(உ௬)

வால கில்லியர் முதலிய விருடியர் மகிழ்ந்துபூ ரணகும்பஞ்
சால்பி னேந்தினர் வேதமந் திரங்களாற் றனித்தனி துதிசெய்தா
ரோல வார்குழ லம்மையைக் கண்டுகண் டிறைஞ்சினர் கரங்கூப்பி
ஞால முய்யவெண் ணுன்கறம் வளர்ப்பது காங்கள்செய் தவமென்றார்.

மற்று மாதவச் சுமந்துவே முதற்பதி னாயிர வரத்தோர்நுந்
தூற்றி யம்பிகை யுடன்வருங் கோதமன் முதலிய தூர்யோரா
யுற்றெ திர்ந்தழு வாயிர முனிவரு முவந்தள வளாய்ப்போற்றிக்
கற்றை யங்குழ லுமையைநல் லறம்புரி கவுரியைப் புகழ்கின்றார். ()

ஆடி னார்சில ரார்த்தெழுந் தார்சில ரருமறை யொடுகீதம்
பாடி னார்சிலர் பணிந்தெழுந் தார்சிலர் பங்கயப் பதஞ்சென்னி
சூடி னார்சில ரறங்களெண் ணான்கொடு மற்றுந்தோத் திரமாக்கித்
தேடி னார்பொருள் கண்டெனக் கண்டுகண் களித்தனர்துதிசெய்தார்.

இல்ல மேமுத லியம்புமெண் ணான்கற மியற்றுவித் தருள்வாளை
யொல்லையாகங்கள்சுருதிவேதியர்கள்செய்துவந்திடப்புரிவாளைத்,தொ
ல்லைநான்மறையாகமபுராணந்தோத்திரஞ்செய்வோர்ப்புரப்பாளை
முல்லை வாணகை யங்கயற் கண்ணுமை முதல்வியைத் தொழுவாமே.

ஞான ரூபியா யருட்பரை யாகியே ஞானசத் தியுமாகி
யேனை யிச்சுவ வடிவமா யவற்றினை யியல்புறப் புரந்தாளை
யான தொன்மையிற் சிருட்டிகா ரணமதா யந்தர்ப்பூ தமுமாகி
வான மேமுத லுலகங்காத் தருளுமை மாதினைத் தொழுவாமே. ()

பத்தி யாய்ப்பெருங் கருணையங் கடலுமாய்ப் பத்தியைத் தருவாளை
நித்தி யம்பெறு விச்சுவ முதல்வியாய் நிகழ்கயி லையின்வாழ்வாய்ச்
சுத்த மாயைமுன் னாமா யையைத்தரித் தவற்றினுட் டோயாளை
முத்தி மாநக ரிமையமீன் றளித்தருண் முதல்வியைத் தொழுவாமே.()

நிட்க ளத்தொடு சகளமா யடியவர் நினைந்தவா றருள்வாளைக்
கட்பு லப்படக் காணொணாப் பூரண கலையொடு நிறைவாளை
யுட்பு லப்படத் திரிவித கரணமொத் தருச்சிப்போ ருளத்தாளைத்
[illegible]டப மார்பிறை சூடிய வரனிடத் தையலைத் தொழுவாமே. (௫௫)

கந்த னுக்கொரு தந்தனுக் கருடருங் கருணைத்தா யானாளை
வந்த னைக்குவந் தற்முத னான்கையும் வழுத்தினர்க் கருள்வாளை
முந்து லோகவா தாரமா முதல்வியை முகுந்தனுக் கிளையாளைச்
சுந்த ரேசன்ற னிடத்திலங் கயற்கண்மின் றோகையைத்தொழுவாமே.

என்று தோத்திரஞ் செய்தலு மிறைவிகேட் டகமகிழ்ந் தனமின்னே
மன்ற நல்வரங் கேண்மின்க ளென்னவும் மாதவ ரிவைகேட்பார்
நன்றி கூர்தர யாங்களித் தலத்தினி னனிவசித் திடவேண்டுங்
கொன்றை வேணிய ரொடுநினை யனுதினங்கும்பிடும்பதம்வேண்டும்.

காசி மேருமா நந்தர மேமகூ டம்பெருங் கயிலாயம்
பேசு மத்தலங் களினுமிங் கதிகமாய்ப் பிஞ்ஞக னொடுமேவி
மாசி னல்வரங் கொடுக்கவும் வேண்டுமென் றியம்பமா துமைகேளா
வீசு தண்டமிழ் மதுரையத் தலங்களின் மேம்படு தலமென்றாள். (௫௬)

ஆல வாய்பெருங் கயிலையக் காசிசாஞ் சிக்குமுற் பதியாகு
ஞால மேழ்புகழ் சுந்தர னேகயி லாயன்விச் சுவநாதன்
பால லோசனத் தேசம்ப னங்கயற் கணிபணை விசாலாட்சி
கோல மேவுகா மாட்சியாஞ் சமட்டிவித் தியாநக ரிதுகூறில். (௫௭)

இத்த லத்தொடெம் பெருமையை யாமலா தெவர றிந்துரைசெய்வார்
புத்தி கூர்ந்துநீர் கேட்டநல் வீரமெலாந் தந்தனம் புகழ்ந்தன்னை
பத்தி கூர்தரு சைவருக் குரைமின்பா டண்டிகட் குரையாதீர்
முத்தி மாதவி ரென்றருள் செய்தனள் பின்னரு மொழிகின்றாள். (௫௮)

மூளு மாசையி னித்துதி கேட்பவர் படிப்பவர் முனிவீர்காள்
கேளு நன்குறத் துதிப்பவர் நம்முயர் கிளர்பதம் பெறுகென்றே
நாளும் போற்றிட வரமளித் தருளியங் நங்கையங் கயற்கண்ணு
ளா[illegible]யகி யுருவிலொன் றாயின ளின்னுநல் லறஞ்செய்வாள். ( )

மாத வத்தினொன் றகத்திய னுரைசெயக் கேட்டமா தவர்சொல்வார்
நீத வத்தினு லுயர்ந்தனை நின்னருள் பெறுதலால் வினைநீத்தேந்
தீத கற்றுமம் பிகையறம் புரிந்தது செப்பினை யெமக்கின்னும்
போத முற்றிய மாலருந் தவஞ்செய்து பெற்றமை புகலென்றார். ( )

ஏழாவது தேவியறம்வளர்த்தவத்தியாயம்

முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௫௭.

எட்டாவது

விட்டுணுவரம்பெற்றவத்தியாயம்.

பண்டொரு கற்பாந் தத்தி லொடுங்கிய முறையே பண்பார்
விண்டுவே முதலோர் தோன்ற வேதங்கள் சனகர் யோகர்
தண்டலி றவத்தோர் மிக்க பதஞ்சலி முனிதாழ்ந் தேத்த
வண்டர்நா யகனின் றாடு மானந்த நிருத்தந் தன்னில். (௧)

வாணனந் திரையைப்போல் விண்டு மத்தள முழக்கு கின்றான்
சேணுயர் காசி யெய்தித் தவஞ்செய்தா திக்கம்பெற் றோற்போற்
றுணுவார் துவாத சாந்தத் தலத்திலெத் தனைகா லங்கள்
பூணுமெய்த் தவத்தி னெந்தப் புனிதமா தவத்தைச் செய்தான். (௨)

சொக்கனம் முராரி முன்னந் தோன்றியெவ் வரங்க டந்தான்
மிக்கவச் சரிதை கேட்கும் விருப்பினேம் விரித்துச் சொல்கென்
றக்கண முனிவர் கூற வகமிக மகிழ்ந்து கேட்கும்
பக்குவர் நீவி ரென்று வகத்தியன் பகர்வ தானான். (௩)

சிவனடி யார்க டம்முட் சிறந்துளோன் றிருமால் செப்பு
மவனொடு சிவனும் பேத மின்றறி யலர்க்கண் சாத்தப்
பவந்தவிர்த் திடுதம் பாதம் பரித்தன னரையிற் பாங்கர்
நவமுறு நார சிங்கச் சருமத்தைத் தரித்தா னதன். (௪)

மார்பினி லாமை யோடு புனைந்தனன் மலர்ப்பூங் கையிற்
சீர்பெறு மவன்கங் காள மேந்தினன் றிறற்கு லத்திற்
சூர்பெறு முடல முற்றுந் தூக்கினன் றுணர்ப்பூங் கொன்றைத்
தார்முடி தனில்விண் டுக்க டலைமாலை யனந்தம் பூண்டான். (௫)

அன்றியு மிடப்பா கத்தி லவதரித் திடுத லானும்
வென்றிசேர் சத்தி தானே விண்டுவா யிருத்த லானு
மொன்றிய சத்தி யீச னிடத்திலெப் போதுண் டானுண்
மன்றவப் போது தானும் வந்துதித் திடுத லானும். (௬)

ஈசனு ரிச்சை தேவி யிசைந்தனு சரித்தாற் போலு
நேசமார் விண்டுத் தானு மனுசரித் திடுவ னீங்கா
வாசையாற் புருட ரூபஞ் சத்திரு பமுந்தா னவன்
ம[illegible]லவ் வீச னிச்சைச் சுந்தர மாக் வைகும். (௭)

என்கையாற் பேத மில்லை யியம்புமால் சிவனை நோக்கி
நன்குறப் பூசை யாற்றி நற்றவ நெடுநாட் செய்தான்
பொன்கமழ் மதுரை நண்ணும் புரிசடைப் புனிதன் காணா
மின்கம ழிடையா ளோடும் வெளியின்மால் விடைமேல் வந்தான். (௮)

மான்மழு வபயந் தூய வரதமு மலர்க்கை தோன்றக்
கூன்பிறை வேணி தோன்றக் கோதையு மொருபாற் றோன்ற
வான்மிசை வந்து தோன்று மழகிய சொக்கைக் கண்டான்
பான்மைமா தவனு மன்பிற் பன்முறை பணிந்து வீழ்ந்தான். (௯)

போற்றினான் பரவி நின்றான் புளகிதத் துடல்கம் பித்தா
னூற்றுறு கண்ணீர் வார வானந்த வெள்ளத் துற்றான்
சாற்றுவ தினியென் யான்செய் தவோபலங் கிடைத்த தென்றான்
மாற்றினும் பிறவி யென்றென் றாடினான் மகிழ்ச்சி கொண்டான். ()

அக்கணத் தமல னோக்கி யமுதவாக் கருளிச் செய்வான்
சக்கர பாணி நீயுந் தவத்தினா லிளைத்தாய் போனு
னுக்கிர மாகச் செய்யுந் தவங்கண்டுண் மகிழ்ச்சி யுற்றே
மிக்கமா வரங்க ளீவ மென்றலும் விண்டு சொல்வான். (கக)

உன்னையே காணப் பெற்ற பேற்றினு முறுபே றுண்டோ
வென்னையா ளுடையா யன்ன தாயினு மியம்பு கேன்யான்
முன்னநான் றேடிக் காணு முழுமல ரிணைப்பொற் றாளிற்
பன்னரு மன்பு பூணும் பத்தியெற் குதவ வேண்டும். (கஉ)

அரியுடன் பிறந்தா ளென்றே யமலைபேர் விளங்க வேண்டும்
பரிவினீ யவண்மேல் வைத்த பரிவென்மேல் வைக்க வேண்டும்
புரிமணத் துமையா ளுக்கு வரிசையான் புரிய வேண்டும்
பிரிவிலா நீயு நானும் பிரிவிலா திருத்தல் வேண்டும். (கங)

அமலமா மேனி தன்னிற் பாதியெற் களிக்க வேண்டும்
விமலநிற் றுதிப்போ ரென்னை விருப்பொடுந் துதிக்க வேண்டுங்
கமலமென் கண்ணாற் கண்டு கதம்பகா னத்தி ருந்தே
நிமலலிங் கமதா நின்னை நித்தியம் பணிய வேண்டும். (கச)

சுயம்புலிங் கங்க ளெங்குண் டெங்கெலாந் தொழுது சூழ்ந்து
வயம்பெற நின்னைப் போற்றித் தெரிசித்து வசிக்க வேண்டு
மியம்பிய பதிட்டை பூசை யெனக்குமுண் டாக வேண்டும்
பயம்படு நித்ய நைமித் தியமும்பா லிக்க வேண்டும். (கரு)

கிரீசநீ யுறையுங் கர்ப்பக் கிருகத்திற் சூழத் தென்பால்
வரிசையைங் கரத்தன் றக்க ணாமூர்த்தி வடபால் வேதன்
றுரிசறு துர்க்கை வைகித் தொழுவர்மேல் பாலின் வைகிப்
பரசிநின் னிருதாள் போற்றும் பதமெனக் குதவ வேண்டும். (கசு)

சிவலிங்க பூசை செய்வோர் சிறந்தநின் வாம பாகங்
கவலின்றி யென்னை யன்பாற் கருதியர்ச் சிக்க வேண்டு
நவலிங்கப் பதிட்டை செய்து நானருச் சித்த லிங்கந்
தவலின்றிச் சுயம்பு வேபோற் றழைக்கநீ யுறைதல் வேண்டும். (கஎ)

இவற்றினு மேல தான வரமெனக் கின்னு மொன்று
நவிற்றும்வா னனைப்போற் றூய நந்தியைப் போல யானும்
புவித்தலம் புகழ்நீ மன்றிற் புரிநட னத்துக் கேற்பப்
பவித்தமத் தளமு ழக்கி யெந்நாளும் பரவ வேண்டும். (கஅ)

எத்தனை பிழைசெய் தாலு மிதுபிழை யென்றெண் ணாதே
யத்தவென் மயக்க நீக்கி யாண்டருள் புரிய வேண்டு
முத்தனே யென்று விண்டு மொழியுமிவ் வரநல் கென்னப்
பத்தர்கள் பத்தன் றந்தோ மென்றனன் பகர்வ தானுன். (க௯)

மாகயி லாய மிந்த மதுரையம் மன்றிம் மன்ற
மேகமா விருந்து நாமே யியல்பெற நிருத்தஞ் செய்வோ
மோகநாட் டியத்திற் கேற்ப மத்தள முழக்கிக் கொண்டே
நாகமும் புலியும் போனீ நடனங்கண் டுறைதி யென்றும். (௨0)

இன்னுமொன் றிசைக்கே நாமே யெங்கணு நிருத்தஞ் செய்வோ
நின்றொரு கலையை மற்ற நிருத்தமா தலங்க டன்னிற்
பன்னரு முழவ மார்த்துப் பணிந்தவ ணிருப்ப தாக்கிப்
பொன்னொடு மிருந்து வாழ்தி பூரண கலையொ டிங்ஙன். (௨க)

நம்முரு விலிங்கத் திற்கு நிருதியி னயந்து நாமே
யிம்மையே தருவா * னென்றே யருச்சிக்கு மிறைக்கு மேல்பாற்
றம்மையே தமக்கு நல்குந் தலத்தினி லழகு வாய்ப்பச்
செம்மையோ டுறைதி கூட லழகனுந் திருப்பேர் பெற்றே. (௨௨)

என்றருள் புரிந்து சொக்க லிங்கத்தி னுறைந்தான் போற்றி
மன்றவவ் வரங்கள் பெற்றே வைகினன் கமலக் கண்ண
னென்றுமிக் கதைப டிப்போர் கேட்பவ ருயர்மா னத்திற்
சென்றுவான் கயிலை மேவிச் சாயுச்சிய மடைவர் திண்ணம். (௨௩)

ஈதுமால் சரிதை யென்றே யியம்பினன் மலயக் கோமான்
நீதுதீர் முனிவர் கேட்டுச் சிந்தையுண் மகிழ்ச்சி கொண்டா
ராதிமா தவனே கண்ணன் சரிதையை யறைந்தாய் கஞ்சப்
போதினன் சரிதை யிங்குப் புகலென்றார் பின்னுஞ் சொல்வார். (௨௪)

எட்டாவது விட்டுணுவரம்பெற்றவத்தியாயம்
முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம் - ௪0க.

* இம்மையே நன்மைதருவானென்பது இம்மையேதருவான் என, இடைக்குறைந்து நின்றது.

ஒன்பதாவது

பிரமன்பூசித்தவத்தியாயம்.

வாமபா கத்திலரி வலப்பாலில் விதியுதித்தார் மைந்த ரன்றே
காமனா கங்கருக்குங் கண்ணன்மணி வண்ணனுக்கே கருணை கூர்ந்து
தாமமா ருயர்பூசை கோயிலவர்க் குண்டாகத் தம்போ லாக்கிப்
பூமனார்க் கிப்புவியிற் பூசையுங்கோ யிலுமின்றிப் போகச்செய்தான்.

அக்கார ணத்தையெமக் கியம்புதியென் றருந்தவத்து முனிவர் கூற, முக்காலங் களுமுணரு மகத்தியன்கேட் டினைசெய்வான் முனிவர் கேண்மின், மிக்காமக் கதைபுகல்வேம் விமலனுமவ் வவர்செய்யும் வினைக்கீ டாகப், புக்காவிக் குள்ளிருந்து கன்மானு போகமெலாம் புசிப்பிப் பானால். (௨)

ஒருவரிடத் தேயன்பு மற்றொருவ ரிடத்திலையென் றுரைக்கவேண்டா
மிருவரிடத் தினுஞ்சமமா மீசனருள் வாரபக்க மில்லை யென்றும்
வருவதற்குக் காரணமே தென்பீரோ வுலகரடை வளர்க்கு மாற்று
லிருவருக்கும் பாவியமா மறத்தினமை விருப்புறுநல்லருளேசெய்யும்.

நான்முகன்பொய் யுரைத்தலினா னிலத்தி னிலையிழந்து நவையு முற்றான், மான்முகங்கண் டோருரைப்பர் பொய்யெனமா னுடர்சுரர்க்கின் வினைவு வாய்ப்பப், பான்முகங்கொண் டிருந்திடுதம் மதலையுந் தண்டித்திப் பரிசு செய்தா, னான்முகங்கண் டறிதிரென வவனுரைப்ப முனிவரரு ளுவல்வ தானார். (௪)

அத்திருநான் முகன்சொலும்பொய் யேதுரைத்தி யென்னவகத் தியனுஞ் சொல்வான், சத்தியமே பரமமாந்த ருமமென்று மசத்தியமே பாவ மென்றும், பத்திதரு சத்தியத்தோர் புண்ணியரா மசத்தியர்பா வியர்க ளென்று, நித்தியமா கியசிவன்கற் பனைசெய்தா னவ்விடம்பு நீக்கற் பாற்றே. (௫)

சத்தியமே பலவேள்வி தலந்தீர்த்தம் பரமசிவன் றங்குந் தானஞ்
சத்தியமே மேலான தவந்தருமஞ் சோடசமா தான மாகுஞ்
சத்தியமே சிவபூசை சரியைகிரி யாயோகந் தருமெய்ஞ் ஞானஞ்
சத்தியமே புகலுமிக பரத்தினுக்குக் காரணஞ்சத் தியமீ துண்மை. (௬)

பொய்யுரைப்போ ரெத்தவங்கள் புரியினுமத் தவோபலத்தைப் பொருந்த மாட்டார், பொய்யுரைப்போ ரெத்தருமஞ் செய்யினுமத்

தருமபயன் புசிக்க மாட்டார், பொய்யுரைப்போர்க் கண்டளவிற் சி வன்விலகி நெடுந்தூரம் போவன் வேதன், பொய்யுரைப்போர்க் குல கினிற்போ சனங்கிட்டா தெனும்பழஞ்சொற் புதுக்கி னானல். (௭)

ஆதிகா லத்தினிக ழுவன்சரிதை விரித்துரைக்கே மடைவிற் கே ண்மின், மாதுபா கனையிகந்தவ் வாரணனு நாரணனு மயங்கிக் கூ றுஞ், சோதிசேர் பரம்பொருளியா னியான்பெரியன் பெரியனென, விகலித் தொன்மை, நீதியாய்க் தளந்தறிந்து மறியார்போற் பொரு டேறு நினைவு தீர்ந்தார். (௮)

எம்மினுதித் தெமையிகழ்ந்தா யாவையுநல் குவம்பெரியே மெ ன்றான் மாயன், வெம்மையொடு நான்முகனு மவன்போலப் புகன்ற னன்பின் வெகுளி கூர்ந்து, நம்மினுமிக் கோரிலையென் றகந்தையி னால் வருங்குறியை நாடா ராகித், தம்மின்மிகு போர்புரிந்தா ரிரு வோரு நெடுங்காலந் தணவா ராகி. (௯)

தொந்தப்போர் புரிந்திடுங்கா லிருவோரும் பாசுபதந் தொட்டா ர் விட்டார், வந்தப்போ ரத்திரங்க ளொன்றொடொன்று தாக்கவழ ல் வானத் தோங்கி, யிந்தப்பூ வுலகுமுத லியம்பியசத் தியவுலக மீறு யெங்கு, முந்தப்போந் தெரித்திடுங்கான் மானிடர்விண் ணவரிவரு முறையிட் டாரால். (௧௦)

இறைவனது கண்டிரங்கி யாமுதவா திருக்கிலெலா மிறக்கு மெ ன்றே, நிறையுமழற் றம்பமென விலிங்கமதா யளப்பரிதாய் நீண்டு நின்று, னுறையுமழற் பாசுபத வத்திரங்க ளதிலொடுங்கிற் றும்ப ரு ய்ந்தார், மறையவனுந் திருமாலு மச்சுடர்கண் டார்மயங்கி மற்போர் விட்டார். (௧௧)

கட்புலனி லளக்கவொண்ணுச் சோதியைக்கண் டார்கண்டு கல முற்று, ருட்புலன்க ளொடுங்கியித னடிமுடிகாண் பவர்பெருமை க் குரிய ரென்றார்,விட்புலனிற் சென்றுமுடி யறிவனென விதிசபதம் வினம்பி னான்மால்; கொட்புலனி லடிகாண்ப னெனவரிய நெடுஞ்ச பதங் கூறி னானல். (௧௨)

யோசனைநீண் டகன்றுயர்ந்த வெகினவடி வாய்மலரோ னும்ப ரோங்கிப், பாசனையும் வகையறியா னாக்கணத்தா யிரங்காதம் ப றந்து போனான், மாசனையு மீலர்க்கண்ண னிரண்டியோ சனையுயர் ந்த வராக மாகித், தேசனையும் படிதுளைத்துக் கணத்தினுக்கா யிரங் காதந் துருவிச் சென்றான். (௧௩)

இம்முறையா லிருவருந்தே வாண்டினிலா யிரம்பறந்து மிடந்து ந் தேடித், தம்முருவந் தேய்வதன்றிச் சிவனுருவி னுதியந்தந் தாமோ காண்பார், ரம்மலரோ னிமன்சிறைகான் மூக்கலகோ டேட்டேறய்ந்தங் கறமூர்ச் சித்தரன், கம்முகங்கால் கோடேல முழுவதுந்தேய்ந் தறக் குறுகிக் கவன்றான் கண்ணன். (௧௪)

கவலுறுமான் மூர்ச்சைதெளிந் தறமெலிவான் கருதியுளத் தெண்ணி நோக்கி, யவலுறக்கூ டாபுவியின் மீதும்வரக் கூடாதென னறிவென் னுகும், தவலறுநான் பொருளென்றுஞ் சிவன்பொருளன் றென்றுமிந்தத் தவறுற் றேனியா, னுவலுறுமா றென்கெட்டே னினி துவருமோ விப்பாவ நுனிக்கற் பாற்றே. (௧௫)

எனமனத்தி னெண்ணியர னடியையித யத்திருத்தி யெந்தா யந் தோ, மனமயக்கா லிதுசெய்தேன் பொறுத்தியெனத் தியானித்தான் வருத்த நீங்கிக், கனமிகுத்த வதிபெலமுற் றனன்மீண்டும் பூவுலகிற் கடிதி னெய்தி, யனமயக்கிற் காணுதென் றறிந்தோனுஞ் சுடரிலிங் கத் தருகே வந்தான். (௧௬)

மோட்டுமா வரியுருவாய்த் தவறிழைத்தே னத்தவறு முழுது நீங் க, விட்டுமா தவப்பொருணீ யருளுகெனச் சோதியிலிங் கத்துட் டோன்றித், தோட்டுகாண் மலரிதழித் தொடையோனுந் தருப்பண த்துட் பொருள்போற் றன்னைக், காட்டினான் கண்டுபணிந் தெழுந் துநின்று துதிசெய்தான் கவலை தீர்ந்தான். (௧௭)

பயத்தானம் மால்பின்னு மறைந்துநின்றான் பங்கயத்தோன் றன் மை கூறி, லயர்த்தாவி தேய்ந்தொடுங்கி மூர்ச்சனையா லங்குமிங்கு மணுக மாட்டா, னுயத்தானும் வகையறியா னலம்வருங்கால் யோகி யரவ் விடத்தி னுற்றார்,வியர்த்தாவி வருந்துமவன் வரக்கண்டா ரொ ருமாற்றம் விளம்புகின்றான். (௧௮)

எங்கிருந்து வருகின்றீ ரெவ்விடத்திற் செல்குவிரென் றியம்ப வேழை,பங்கிருந்தின் னருள்கொழிக்கும் பரனருள்பெற் றியாம்போ ந்தே மென்றார் பார்ப்பா, னங்குமிங்கு மெத்தூர மெத்தனைநாட் சென்றதென்று னன்னோர் சொல்வார், கொங்கிருந்த மலர்ப்பிரம க ற்பமனந் தந்தொகுத்துக் கூடா தென்றார். (௧௯)

வாசமல ரோய்நீயிங் கெய்தியதென் னென்றார்நம் வாம பாகத், தீசன்முடி காண்பனென விண்டுவிறே டிகலியிவ ணுற்றே னென் று, னுசிவன்மா முடிநீயோ காண்பாய்பே ரகந்தையுற்று யறிவொன்

றில்லாய், சீசியிந்தப் புந்தியைவிட் டினித்திரும்பென் றவர்போனார் திகைத்து நின்றான். (௨௦)

பஞ்சமலத் தான்மயங்கப் பங்கயனு முடிதேடிப் பார்த்தே யில்லைக், கஞ்சமலர்க் கண்ணனடி காணாம னம்போலக் கவல்கின்றானோ, தஞ்சமுறக் கண்டனனோ சபதமென்னா மென்றுபரா தபிக்குங் காலை, வஞ்சமலர்க் கைதையொன்று வரக்கண்டான் கையேந்தி வாங்கிச் சொல்வான். (௨௧)

மணங்கமழ்கே தகையெவணைத் தனைகாலஞ் சென்றதிவண் வரநீ யென்ன, வணங்கொருபால் வீற்றிருக்குஞ் சிவன்முடிநின் றிழிந்துமிவ ணடைந்தேன் காலமிணங்கவுரைத் திடமுடியா தெண்ணிறந்த காலமென்ற தியம்ப வேத, னுணங்குமறி விழந்தனனக் கைதையைப்பார்த் தனன்பின்னு நுவல்வ தானான். (௨௨)

வேறு.

கைதையே யெனக்குப கார நீயொன்று
செய்தையே யுன்னையே துதித்தல் செய்வலென்
றெய்தவே யியம்பயா தியம்பென் றோதலு
நொய்தையே யதுவர நுனித்துக் கூறுவான். (௨௩)

படிமிசை விடுசுடர்ப் பரனை யெள்ளியே
யடிமுடி காண்பமென் றறுதி யிட்டனங்
கடிமல ரடியரி காணப் போயினான்
முடியிது காணயா னிங்கு முற்றினேன். (௨௪)

கண்டில னுனைக்கண்டு கவலை தீர்ந்தனன்
விண்டுமுன் னேயெனக் காக மெய்ம்மையே
யண்டர்நா யகன்றிரு முடிகண் டானய
கண்டெனப் பொய்ம்மையொன் றுரைக்க வேண்டுநீ. (௨௫)

மறுத்துரை யேலென வழங்கக் கேதகை
சிறுத்தவர் தொழிலிது செய்யொ ணாதென
வெறுத்தன கூறியும் வேதன் வாதையா
லுறுத்துபொய்ச் சான்றுரைக் குடம்பட் டுள்ளதால். (௨௬)

நின்னிக ரில்லென நிகழ்த்தி யேயது
தன்னையுங் கொடுவிதி யிழிந்து தாரணி
முன்னிய சுடரொளி யிலிங்க மூர்த்திமுன்
மன்னியே துதிசெயு மாலைக் கண்டனன். (௨௭)

காரணஞ் செய்திசொல லெனமுன் னாரணன்
காரணி பணடி கண்டி லேனியான்
பூரணி பன்முடி காணப் போகிய
வாரணி னின்செய லறைகென் றோதலும். (உஅ)

முடியது கண்டனன் முடியிற் சாத்திய
கடிமலர்க் கைதையீ தென்று காட்டினன்
படியிடந் தவனவன் பான்மை நோக்கியே
பிடிபடா தெவர்க்குநின் பேச்சுப் பொய்யென்றான். (உகூ)

யாதினாற் பொய்யென வியம்பு வாயலர்த்
தாதுசேர் கைதையே சான்றென் றானயன்
மாதவன் றானுமம் மலரைக் கேட்டலுந்
தீதிலா துள்ளதென் றியைந்து செப்பிற்றால். (௩0)

பொய்ம்மையே யிருவரும் புகன்ற வாய்மொழி
மெய்ம்மையன் றென்றறி மீண்டுங் கூறலு
மெம்மையோ விதுபுகன் றீதெ னென்றெதிர்
கொம்மென நான்முகன் கோபங் கொண்டனன். (௩க)

மருத்தயில் பாப்பணை மாயன் றன்னொடவ்
வுருத்திர னென்னிடத் துதித்து ளானெனக்
கருத்தினி லிகழ்ந்தன னைந்தை காட்டினான்
பொருத்துற வறிந்தவ னகந்தை போக்குவான். (௩உ)

சுடரொளி யிலிங்கத்தி னின்று தோன்றியே
யடல்விடைப் பாகனின் றடர்ந்து சொல்லுவான்
மடல்கெழு மலரினோய் மதித்தி டாதிவண்
டிடமொடு பொய்யுரை செப்பற் பாலையோ. (௩௩)

பொய்ம்மையுஞ் சூதுங்கட் கொலையும் புன்மையுஞ்
செம்மையில் குருநிந்தை தேவ நிந்தையும்
கைம்மிகு மகந்தையுங் களிப்புங் காமமு
மிம்மையு மறுமையுங் கெடுக்கு மெந்திரம். (௩ச)

கணத்தினி லனந்தநான் முகரைக் காட்டியக்
கணத்தினி லொடுக்குது நம்முட் காணவே
பணத்தினிற் றுயில்கொளும் பச்சை மாலொடு
மெணத்தகா நினையொரு பொருளென் றெண்ணலேம். (௩ரு)

ஆயினும் பொய்யுரை பகர்ந்திட் டாயதான்
மாயிரும் புவியினுன் றனக்கு வண்மைசேர்
கோயிலும் பூசையும் போக கோமுறை
சாயுக வெனக்கடுஞ் சாபஞ் சாற்றினான். (௩௬)

பயிரவன் வந்துபொய் பகரைந் தாந்தலை
செயிருறக் கிள்ளியக் கணத்திற் சென்றனன்
வயிரங்கொண் டொருதலை யிழந்த மான்மக
னுயிருற வொடுங்கியுண் ணடுங்கி யோய்ந்தனன். (௩௭)

தனியற மறந்துபொய்ச் சான்று கூறிய
பனிமலர்க் கைதையை நோக்கிப் பண்ணவ
னினிதென வணிகல மெமக்கு மாகலை
புனிதநீ யலையெனப் புகன்று நீக்கினான். (௩௮)

சிவனைநோந் தொன்மையுஞ் செப்பொ ணாதவ
னவன்செயும் வினையனு பவித்துத் தீர்வுறுந்
தவநெறி முனிவரர் கேண்மின் றூவறு
புவனமுண் டவனுறு பொய்சொல் லாமையால். (௩௯)

பூசையுங் கோயிலும் புராரி மேல்வைத்த
வாசையு முடையனு யவற்குச் சத்தியாய்
மாசறு சாத்தனை யீன்று மற்றுள
பேசருங் கடவுளர்க் கதிகம் பெற்றனன். (௪௦)

அகந்தையுற் றுளனவ னுயி னும்பல
ரிகந்திடும் பொய்யுரை யியம்பி டானென
நெகிழ்ந்திடு மயக்கத்தை நீக்கி நின்மலன்
முகந்துதன் கருணையே முற்று நல்கினான். (௪௧)

அரிசெய லீதந்த வயன்பின் செய்ததைத்
தெரிவுறக் கேளுமி னென்று செப்புவான்
புரிசடை யமலனை யிகந்து பொய்யுரை
துரிசறப் புகன்றனன் சொல்வ தேதென. (௪௨)

அன்றியும் பூசையு மால யங்களு
மின்றியே புவியினி லிகழ்ச்சி யுற்றுளேன்
கொன்றைவே ணியன்பொரு ளென்று கொண்டிலேன்
கன்றிய சிவத்துரோ கத்த னுயினேன். (௪௩)

இக்குறை தீர்ப்பதெம் மீச னேயலாற்
புக்கெவர் தீர்ப்பரென் றெண்ணிப் போதனு
மக்கணத் தறிவுவந் தடைவிற் போற்றியான்
புக்கன னபயநீ பொறுத்தி யென்பிழை. (சச)

மைந்தர்க ளொருகுறை செய்யின் மாற்றியே
தந்தையர் வெறுத்துடன் றயவுஞ்செய்குவ
ரெந்தைநீ யிரங்குகென் றீசன் றாண்மலர்
சிந்தைசெய் தருந்தவஞ் செய்கின் றனரோ. (சரு)

பருவமோ ராயிரப் பஃது பங்கயன்
பொருவரு மருந்தவம் புரியுங் காலையில்
வெருவலே யெனச்சிவன் வெளிகின் றோதுவான்
றெருமரு மிப்பவந் தீரு மாறுகேள். (சகூ)

எத்தவ மியற்றினுந் தீர்வு றாதிது
சத்திய மேனுநீ தனைய ஞதலாற்
புத்தியுட் கொள்ளுதி புகல்வன் சீவன்மா
முத்திசேர் னகரென மொழியு மோர்தலம். (சஎ)

புவிபுகழ் தருவிராட் புருடன் மேனியி
லவயவ மாமற்றைத் தலங்க ளாலவாய்
விவிதமாந் துவாதசாந் தந்தின் மேம்படுங்
கவலுறே லத்தலங் கதம்ப கானனம். (சஅ)

பூரண கலையொடும் புகறென் கூடலிற்
காரண காரியங் கடந்து வைகுதுந்
தாரணி புகழ்ந்ததத் தலத்தின் மேவியே
யாரண நீசிவ பூசை யாற்றுவாய். (சகூ)

ஆங்கணின் பவமொழிந் திடுமங் கேகெனத்
தேங்கம ழிதழியான் செப்பக் கேட்டலும்
பாங்கொடு மவன்பதம் பரவிப் பங்கயன்
வாங்கரும் பெரும்புகழ் மதுரை யெய்தினுன். (ருo)

வேகமா நதிசிவ தீர்த்த மிக்குயர்
மாகமார் தருபொற்ற மரையித் தீர்த்தத்தின்
மோகமார் வினைகெட மூழ்கிச் சொக்கென
மேகமா ரிலிங்கத்தை யிறைஞ்சி யேத்தினுன். (ருக)

அங்கயற் கண்ணுமை யம்மையை யன்பொடு
பங்கயக் கண்ணனும் பணிந்து போற்றியே
வெங்கொடும் பொய்புகல் வினைய கன்றிடத்
தங்குநா ளுண்டருந் தவம்பு ரிந்தனன். (௫௨)

வேறு.

பொற்புறு பெருங்கல் யாண புரத்தனாக் குரோச மேல்பா
லற்புதச் சொக்க லிங்கத் திற்கொரு வடபா லான்ற
சொற்றமி ழறியும் வேக வதிவட கரையிற் றோன்றுந்
தற்பர லிலிங்கந் தன்னிற் பூசித்தான் றன்பே ராக்கி. (௫௩)

மூந்திய சிவதீர்த் தத்தின் மூன்றுகா லமூழ்கி
விந்த * மா மலரோர் காலத் தரயிர மாக மேன்மை
தந்தமூ வாயி ரத்தாற் சாற்றுமவ் விலிங்கந் தன்னிற்
சிந்தித்துப் பூசை செய்தான் சிவசகத் திரநா மத்தால். (௫௪)

அஞ்செழுத் தயுத நாவி னடைவினுச் சரித்தா னித்தம்
விஞ்சுமிப் படியால் வேதா கமவிதி விதியர்ச் சித்தே
தஞ்சென விருந்தா னாளுண் டத்தல விசேடந் தன்னாற்
செஞ்சவே யிலிங்க நின்று சிவனவற் கருள்வா னெண்ணி. (௫௫)

தோன்றினன் சேவின் மீது தோன்றிடக் கண்ட வேத
னென்றவா தரவாற் கும்பிட் டிருகணீ ரருவி சோரத்
தான்றனி முடிக டாழச் சதமுறை வணக்கஞ் செய்தான்
வான்றுணை யெனக்கு நீயென் றன்பினால் வழுத்த லுற்றான். (௫௬)

வேறு.

தேவா திபர்தந் தேவே சரணஞ் சேகர தபுரா தனனே சரண
மூவா முதலே திருவாப் புடையாய் முதல்வா கருணா கரனே சரண
நாவா ரவழுத் தியபத் தர்கள்பா னலமிக் குதவுந் தலைவா சரணங்
காவா யெமைவந் தாள்வாய் சரணங் கமலே சசதா சிவனே சரணம்.

சத்தா நிரும லசுத்தா சரணந் தகுநான் மறையின் பொருளே சரணம்
வித்தா யொருமு தலானாய் சரணம் வியனா கும்வியா பகனே சரணங்
கொத்தார் புரமெ ரிசெய்தாய் சரணங்குழகாவன்னவினோதாசரணம்
பித்தா மலமொ ழியத்தா சரணம் பிரமே சசதா சிவனே சரணம். ()

* அரவிந்தம் என்பது விந்தமெனத், தலைக்குறைந்து நின்றது.

ஞானத் துருவே சரணஞ் சிவமெய்ஞ் ஞானந் தருவாய் சரணஞ்சரண
மோனத் தெளிவா யுயிருக் குயிராய் முழுதுந் தெரிவாய் சரணஞ் சா
கூனற் பிறையா யரவமணிந்தாய்குரவங்கமழ்குழல்பாகாசரண [ணம்
மீனத் துவசற் கருள்வாய் சரணம் வேதே சசதா சிவனே சரணம். ()

எந்தாய் தந்தையு மானாய் சரண மெத்தே வினையு மளித்தாய் சரண
மைந்தா ரிடபத் துவசா சரணர் வரநல் கிடுமுத் தமனே சரண
மூந்தா ருருவ மனந்தா சரண முறைசே ரும்விகா ரமிலாய் சரணஞ்
சிந்தா மணியே சரணங் கமலத் தேவே சசதா சிவனே சரணம். ()

நாதா வுலக வதீதா சரண நலமார் விழிக ளனேகா வுலகுக்
காதா ரமுநீ யானாய் நதிகட் கதிவே கவதிக் கரையாய் சரணந் [ம்
தாதார்மலர்கொடுனைப்பூசித்திடுதமியன்பிழைகள்பொறுப்பாய்சரண
பூதா திபகு ருநாதா சரணம் போதே சசதா சிவனே சரணம். (௬௧)

வேறு.

என்றுதுதித் தேகமலன் பின்னருநல் லருள்கொழிக்கு மிறைவ நின்னைத், தொன்றுதரு நான்மறைகண் டறியாதென் றுணரேனோ தொகுத்துக் காண்பேன், கன்றுவினை தீர்த்தெம்மைக் கைவிடே லெனத் தொழுது கழறி நின்றான், வென்றிமழ விடையானு மவன்முகம்பார்த் தருளியிவை விளம்பு வானால். (௬௨)

கமலநீ நங்கடம்ப வனத்திலருந் தவங்கருதிப் புரித லானு
நிமலமா விளங்குபுரா தனவிலிங்கம் பூசித்த நேர்மை யானு
மமலமாந் தோத்திரத்தி னானுமக மகிழ்ந்தனமிப் பதியி லான்ற
விமலைபோ டுறையிலிங்கம்பூசிப்போர்க்கெப்பவமும்வீடுந்திண்ணம்.

காசியினிற் சிவலிங்கம் பதிட்டைசெயும் பலத்தினுநங் கதம்ப கானத், தேசறவே பதிட்டைசெய்யி னூறுமடங் கதிகமென்று வி மையோர் போற்றுந், தேசுபெறு சிவதீர்த்த முப்போது மூழ்கி[illegible] சனைச்சே வித்தே; நேசமுறு புராதனலிங் கம்பூசிப் பவர்பயனை நிக ழ்த்தற் பாற்றோ. (௬௪)

வேகவதி மணன்மறையோ னனமாக்க லாலன்ன வினோத மொன்று
மாகமுறு பசுப்பூசித் தருள்பெறலால் வளர்திருவாப் புடையாரொன்று
நாகமருச் சித்தணியா விளங்கலா லரவமணி நம்ப ரொன்று
மாகமநூல் விதிநீயர்ச் சனைசெயலா லநிபிர மேச மொன்றும். (௬௫)

தழைத்திடுமெவ் விலிங்கத்தின் றிருநாமம் யுகநான்குந் தவமோர் கோடி, பிழைத்தபயன் றூரத்தே தெரிசித்தோர்க் கடையும்வினை யெ

எல்லா நீறுங் குழைத்திடுமெய் யன்பினரா யித்தலத்து வசித்துநித்தங் கும்பிட் டேத்திற், பிழைத்திடும்பொய்ப் பவமகன்று கதியுறுவர் கூற ம்புவின்முந் தியதாய்ப் பேசும். (சுசு)

நாரதமா முனிமுதலாந் தேவவிரு டியர்நலஞ்சேர் வசிட்டன் முன்னும், பேருறுமா தவத்தின்மிகு பிரமவிரு டியரிமையோர் பேணிப் போற்றுந், தாரகமா மவ்விலிங்கத் தனைகவதி சயந்தோன்றுந் தருவா சீசர், பூரணராந் திருஞான சம்பந்தர் சுந்தரர்போற்றுவர்நக் கீரன்.()

திருநாம முச்சரிக்கக் கிருதத்திற் றிரேதத்திற் றெரிசித் தேத்தக், கருநாமங் கெடத்துவாப ரையிற்பூசிக் கக்கலியு கத்திற் பூசித், தொருநாம முச்சரிக்கப் பவமகலுஞ் சொக்கலிங்க முதவும் பேறு, தருநா முண் மையைப்புகன்றே மிவ்விலிங்க நின்பெயராற் றழைக்க வென்றும். (சுஅ)

கேட்டிநீ வரங்களுனக் குதவுவமென் றரனருள்க் கேட்டு வேத, ஞட்டமூன் றுடையாய்நின் னிகழ்ந்தசிவத் துரோகத்தா னலியுந் தோடம், வாட்டமுறு பொய்யுரைத்த தோடமனை நீக்கியருள் வழங்கல் வேண்டும், வேட்டலகிற் றமியனுக்குப் பூசையுங்கோ யிலுமுன் போல் விளங்கல் வேண்டும். (சுகூ)

முத்தியே யுதவுறுநின் னிருத்தத்திற் கிணைந்திடயான் முறையிற் றுளமொத்தியே தொழவேண்டும் பிரமதா ளப்பெயர்பெற் றோங்க வேண்டு, மத்தனே யருளுகென வவ்வரந்தந் தேமெனப்பின் னமலன் கூறும், பத்தியே தருமிந்தப் பதியிலில்வந் தடையுமுனின் பவநீங் கிற்றால். (எ0)

ஆயினுமப் பவந்தீர்த்தே மருமறையோர்க் குதவுதனிற் கருளிச் செய்தே, மேயுறுநந் திருநடத்தின் றிருத்தாளப் பணியுமுனக் கீந்தே மிந்த, மாயிருஞா லம்புகழப் பிரமதா ளப்பெயரும் வழங்கி னேம்வண், சேயெமக்கு நீயுதவுற் சிருட்டியுமுன் போற்றழைக்கச் செய்தே மென்றே. (எக)

வரமுதவி நிமலனுமம் மூலலிங் கத்தானுன் மலரு ளோனுந், திரமுறவவ் விமலனடத் திற்கியைந் தாளமொத்தித் தெரிசித் தேத்தி ப், பரமுறுமற் றையதலத்துந் திருத்தாளப் பணிசெய்து பரவி வாழ்ந்தா, னுரமுறவிக் கதைபடிப்போ ருரைப்போர்கேட் போர்கயிலை யுற்று வாழ்வார். (எஉ)

விதிசரிக்க யிதுவென்ன மலையமுனி விளம்பினன் விளம்பக் கேளா, வதிசயமுற் றருந்தவத்தோர் மீளவுஞ்சொல் வார்மதுரை யால வாயிற், கதிதருமெம் பரனெண்ணெண் டிருவிளையா டற்கதைக ளா சியின்முன் சொன்னாய், துதிபரவு மித்தலத்துங் கேட்கவிரும் பினமின்னுஞ் சொல்வா யென்றார். (எ௩)

என்றுமுனி வரரியம்ப வகத்தியனங் குரைசெய்வா னினிது கேண்மி, னன்றிதரும் யுகமொன்றி லுனன்கு நானன்கா நான்கு கத்தும், வென்றிதர விளங்கியதிக் கதைமுழுதுஞ் சாரமா விளம்புகின்றேன், தொன்றுவினைப் பவமகற்றுங் கதியுதவு மெனத்தொகுத்துச் சொல்வ தானன். (எ௪)

ஒன்பதாவது பிரமன் பூசித்த வத்தியாயம்
முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம் - ௪எ௫.

பத்தாவது
இலீலாசங்கிரகவத்தியாயம்.

க-வது இந்திரன்பழிதீர்த்ததிருவிளையாடல்.

புரந்தரன்முன் விருத்திரா சுரனை வீட்டும் புன்பழிநாற் கூறுக்கி நீக்கி வந்தே, யரங்கைதவிர் திருத்தங்கண் டிரங்கத் தேவர் மனங் கவரு மடல்வேட்ட மென்னப் போந்து, வரந்தருநற் கதம்பவனத் தருளா லெய்தி வரதனைக்கண் டாவிப்பொற் கமலஞ் சூட்டித், திரன் றருசித் திரையில்விடாப் பழிநீங் கற்கெண் டிண்கயமா னஞ்சாத்திச் சிறப்பின் வாழ்ந்தான் *. (க)

௨ - வது வெள்ளையானைக்குச்சாபந்தீர்த்ததிருவிளையாடல்.

வாசவன்கூ றிடவயிரா பதநீ பக்கான் வந்தருளா லீசனைக்கண் டிறைஞ்சி வேந்தன், றேசுபெறு துருவாசன் கொடுத்த சேடந் திரு

* இச் செய்யுண் முதல் "பொற்புறுகண்ணுவன்,, என்னுஞ் செய்யுளிறுதியாகவுள்ள அறுபத்து நான்கு செய்யுள்களாற் றனித்தனி சங்கிரகமாகச் சொல்லப்படுகின்ற அறுபத்துநான்கு திருவிளையாடற் சரித்திரங்களும், அவற்றின் வைப்பு முறையும் வேப்பத்தூரார் திருவிளையாடற் புராணத்துச் சரித்திரங்களையும், அவற்றின் வைப்பு முறையையும் ஒத்திருக்கின்றன; ஆதலால் இச் சரித்திரங்களின் விரி அப்புராணத்தாற் செவ்விதிற் பெறப்படும்.

முடிசூ டாதிகழத் தென்னர் கோவாற், பேசருமா ருடிபிளக்க வெற்றுண் ணொன்றும் பெரிதுதுகைத் திடுமெனேவின் ணகன்று மதுண்ணிற், காசுறச்செல் கென்றுமுடன் சபிப்பப் போந்தே னெனக்கழறிக் கடுஞ்சாபந் தீர்ந்தே கிற்றால். (௨)

௩-வது மும்முலைத்தடாதகையம்மையவதரித்ததிருவிளையாடல்.

தென்னன்மலை யத்துவசன் காவின் மாதர்ச் சேர்ந்துநெடுங் காலங்கள் போக்கி வேந்த,ரின்னகைமா தினைமணந்து மகவி லாம வியற்றுதவத் தான்மூன்று முலையி னேனோர், மின்மகவை யருளவரு ளால மைச்சன் விளங்கியபேர் தடாதகைநன் கணவற் கண்டான், மன்னுமுலை மறைந்தரசா மெனப்பொன் மோலி வைத்தரசன் வானடைந்தான் மதுரை யாண்டாள். (௩)

௪-வது திருமணஞ்செய்ததிருவிளையாடல்.

மும்முலையாள் கணவனைவேட் டெழுந்தெண் டிக்கு முடிவிசயஞ்செய்து கயிலைமேவ,வம்மினென விமையவர்போர்புரிந்தாற்றுது வந்துரைப்ப வஞ்சலென்றீ சன்முன் கண்டாள், செம்மையிற்காண் பளவின்மற்றைத் தனமு றைந்த செயலறிந்தே யருளெனலுந் திருக்கண் சாத்தித்,தம்முறையான் மணந்துமுடி சூடி வையந் தனையாண்ட சிவலிங்கார்ச் சனையுஞ் செய்தான். (௪)

௫-வது பதஞ்சலிக்குநடனஞ்செய்ததிருவிளையாடல்.

திருமணத்தின் வந்தோர்க டமைநீ ராடிச் சென்மினிலு ணென மூழ்கி முனிவர் தேவர், வருமவரிற் பதஞ்சலிமா முனிவன் றில்லை மன்றினடங் கண்டல்லாற் புசியே னென்னத், தருமகவான் சாத்தியபொன் மான மீது தளிர்ப்பொலிகண் டறிதியெனக் காட்டி முன்னை, யருமறைசூழ் கனகசபைத் தென்பால் வெள்ளி யம்பலத்தி னடம்புரிந்தான் புசித்தான் கண்டு. (௫)

௬-வது பூதமுண்டதிருவிளையாடல்.

தடாதகைசொல் வாளிறைவ னின்றோ டிங்குத் தாவில்பலர் வருவரென வமைத்த வன்னம்,விடாதசுரர் சுரர்நாகர் நரர்க ளுண்டு மிக வளருந் தொலைந்ததிலை யென்னும் வேலை,யடாதபசி யால்வருந்தி மெலிந்த குண்டோ தரனுற்றே னெனவலறீசன் காட்ட, வடாதுகயிலைக்கிரிநேரன்னக் குன்றை வாரியயின்றுமொடியின் மங்கைநாண.

எ-வது வைகையாறழைத்ததிருவிளையாடல்.

௭ பொருவருமா தபத்திரந்தாங் கியநான் சிற்றாண் புசித்திளைத்தே னென்றன்னங் குழிக ளுண்கின், வருதலுநாற் றிரளையாய் விழுங்கித் தெண்ணீர்த் தாகத்தான் மடுப்பொய்கை வாவி கூபப், பொருபுனலு ள் ளனகுடித்தும் புனிதா நீரென் றேவிட்ட பூதநதி யழைத்துக் காட் ட, வொருவுகிழக் கசன்றபுனன் மீண்டுஞ் செல்ல வுறிஞ்சியது மண ல்பிறங்க வாயங் கரந்து. (எ)

அ-வது கடலழைத்ததிருவிளையாடல்.

அன்புடைய வன்னைகட லாடற் கெண்ணி யவண்மொழிகேட் டீசனைத்தன் வசத்த தாக்கு, நன்புடையா டொழுதுரைத்தம் மாற்றங் கூற நயந்தறியா ரெனவிருந்து முகம்வா டக்கண், டின்புடைசின் முக வாட்டந் துணிந்து காண்பா னெண்ணியிருந் தேனெனவேழ் கடலு ங் கூவத், தென்புடவி கடவாதவ் வடைவின் வந்து சிவதீர்த்தத் தடத் துறவேழ் கடலென் றூர்கள். (அ)

கூ-வது மலயத்துவசபாண்டியனையழைத்ததிருவிளையாடல்.

வாரிதியொன் றுவந்தனையேழ் கடலு மிங்கு வந்ததுநம் மிறைய ருளா லாமெ கென்னப், பேருநதி மாமடவா ராடிற் கொண்கன் பிறங் குசுத னுன்கன்றே டாடி னல்லாற், சாருறவா டாரென்பர் வரரென் றியாய்முன் சாற்றுதல்சிற் றப்பதியை யழைத்துக் காட்டிச், சீருதவு கணவனொடா டிப்போற் றூமுன் சிவலோகங் கொடுக்கவவர் சேர்ந் து வாழ்ந்தார். (கூ)

க0-வது உக்கிரப்பெருவழுதியாரவதரித்ததிருவிளையாடல்.

பொன்மலைய மயிலரசு புரிந்து காக்கும் புவிமுழுதோர் புரமெ னவே புரக்கும் வேந்தன், மன்மதிமா மரபோங்க வருங்கோ மானு மாறறுசுந் தரமாற னுதி மாறன், மென்முளரிக் கண்ணுவந்தோ னரு ளான் வேலோன் விமலதடா தகையயினுக் கீன்று றென்றோர், நன் மகவாச் சடையொடுமுற் பவிக்க மோலி நனிகவித்தான் கோச்சடில வருமனென்றூர். (க0)

கக-வது வளைசெண்டுவேல்கொடுத்ததிருவிளையாடல்.

தாவறுமுக் கிரன்றலையிற் புவிவன் பாரந் தாங்கெனவைத் தரு ள்புரிந்தங் கிமையோர் வேந்த, ணுவமுடி சாடுகென வளையுந் தந்து நூக்குகடல் சுவறவெறி யெனவே லீந்து, மேவருகந் துகம்போல

விமையோர் வாழ்பொன் மேருவினை யடியெனவன் செண்டை நல்கித்,தேவர்புகழ் மணம்புணர்வித் தமலை யோடுஞ் சிறந்தகணத் தொடுமறைந்தான் செழிக்க வையம். (கக)

கஉ-வது நான்மாடக்கூடலான திருவிளையாடல்.

தானுவலி யறிவானங் கெண்ணி யேவுந் தடங்கடலைச் சுரர்சித்தர் மனிதர் நாகர், பூணரவா வெனுமுன்விடக் குடித்த வென்றிப் புட்கலா வருத்தமுதற் புயல்களுன்கை, மானுறுமா மழையையே வுறநான் மாட மாக்கிவலி தொலைவிக்க விகல்விட் டேகி,நானெறுங் தாழ்ந் தருச்சித்தான் வருணன் றூய நகரினையு நான்மாடக் கூட லென்றூர். (கஉ)

கஙு-வது சித்தரானதிருவிளையாடல்:

மாத்திரைபொக் கணம்யோக பட்டத் தோடு மதுரையினெல் லாம்வல்ல சித்த ராகி, யேத்திமட வாரெல்லாம் வீதி தோறு மினவளைசிந் திடவெங்கும் வந்து லாவிச்,சோத்திமெந் நாட்பிடிப்ப வகப்படாது சென்றுமருத் தின்றிசைக்கல் லிபத்தின் பாங்கர்,தோத்திரஞ்சேராலையத்துட் டென்னர் கோமான் றெழுதிவொன் வாழுகியூ திருந்தான் சொக்கன். (கங)

கச-வது கல்லானையைக்கருப்புதின் னுவித்ததிருவிளையாடல்.

வல்லவனீ யர்ச்சனுநீ சித்த னுயின் வாங்குவிகல் லிபத்தால்யாங் காண்ப மென்றே, யெல்லவர்கா ணக்கலுக்கன் னலைக்காட்டடாமுன் வாங்கியயின் றிதுகமல நாள மென்றே,சொல்லருமார் பணிதரள வடமும் பற்றித் துவிளையின்றதிரமுழுங் கிடாமுன் சீறும்,வில்லரசனுஞ் சிறுதி சயிப்ப வானில் விரைவினெடு நகைத்தொளித்தான் விமலச் சித்தன். (கச)

கஙு-வது அங்கப்பலகைகொடுத்ததிருவிளையாடல்.

தவிசுவிரும் பிப்புலவர் வேண்டக் கைம்மாப் பாவறிவ தொருபலகை தந்தே பின்பு,புவிபுகழ்கீ ரன்பரணன் கபிலன் முன்னுப் புகழ்ந்தடைவி னிருந்துதமிழ் வைத்தாங் கெய்தி, விவிதமெனுங் காலநீ ளத்தாற் செய்யுட் டலைமயங்கி மீண்டொருகான்மலைதல் கொண்டாண்டவைபொருந்து டொருள்செய்து கூட்டித் தானு மேறினுற் பத்தொன்ப தின்ம ரென்றூர். (கரு)

கசு-வது கிழியறுத்ததிருவிளையாடல்.

திருந்துசிவ முனிதருமி தளர்ந்தேன் மன்றல் செய்வான்வண் பொருளிலையென் றேத்த விங்குப், பொருந்துமடந் தையரொடுயர் தலைத்து லாவும் புகழ்மாற னணைந்தமணங் கண்டி தென்கொ,லருந்த மிழா விதுபொருவப் பாடுவாரே லளிப்பலென்றோர் பொற்கிழிநற் சபையுட் டேக்க, மருந்தனையான் கொங்கென்றோர் கவிதை பாடிக் கிழியறுப்பான் வழங்கியொப்பித் தனன்கீழ் நின்றே. (கசு)

கஎ-வது நக்கீரனைக்கரையேற்றின திருவிளையாடல்.

நாவலரன் பர்கள்பிழை பொறுக்குஞ் சொக்கே நக்கீரன் பிழை பொறுத்துன் னுதற்கட் டீயால், வேவுறச்சுட் டிடுதுயர்தீர்த் தருளை நல்கி விளங்கியசொல் லெனும்புகழந் தாதி கேட்டுப், பூவைகயற் கண்ணியொடும் பொய்கை மேவிப் பொன்மலர்ச்செங் கைகொடுத்துக் கரையேற் றென்றே, தேவர்புக ழாலயத்துட் சென்று போற்றத் தேவியொடுஞ் சென்றுகரை யேற்றி னனே. (கஎ)

கஅ-வது குறுமுனிக்குத்தமிழுரைத்ததிருவிளையாடல்.

ஒண்கவிகுன் றும்பின்ன முறுகீ ரற்கிங் குரைதமிழ்நூ லருள்ப வர்யா ரெனவெம் மனனை, திண்புவிப்போந் துயர்தருதென் றிசை வை கென்று தென்முனிக்குக் கயிலையின்முன் புகன்ற ஞான்று,விண் புகழ்முத் தமிழுரைத்தா யென்றி றைஞ்ச விளம்பியயான் மறந்தனனி னைத்தி ருந்தா, யெண்வழிநன் றென்றவற்கு முணர்த்து வாயென் றியன்முனிவா வெனவழைத்து ளுபதே சித்தான். (கஅ)

ககூ-வது ஊமைப்பிள்ளை தமிழறிந்ததிருவிளையாடல்.

சங்கத்தா ரிறையவனூர் பொருட்கே ளெருந் தகைமைபெற வுரை யெழுதி மலைந்து முன்சென், றெங்கட்கீ தறிபவனே நல்ல சொல் லென் றியம்பவெல்லா மறிவனிவ்வூர் வணிகன் மைந்தன், றுங்கவு ருத்திரசரும னாமன் றன்னைத் தூயமண்ட பத்திருவைத்துச் சொன்மி னன்மைக், கங்கமுறும் புளகெனப்போந் திருத்திக்கண்டே யக்கீரன் முதன்மூவ ருரைகொண் டார்கள். (ககூ)

உ0-வது இடைக்காடன்பின்போனதிருவிளையாடல்.

கூறுமிடைக் காடனியற் கவிதை பாடிக் கொடுகோண மன்னனிக ழ்ந்து தள்ள நொந்தே, வீறுயரா லயத்தணுகிப் பொருணீ சொல்லுன் மெலியவெண மறைபுகலு மிகந்த துன்னை, மாறகலுன் றேவியைமற்

றிலையென் றேத்தி வரைந்தேக யானுமே குவலென் றேகி,யேறியசு
ங் கத்தொடிருந் தழைப்பப் போந்தானிடத்தைவட திருவால வாயெ
ன் றுரர்கள். (உ0)

உக-வது கடல்சுவறவேலெறிந்ததிருவிளையாடல்.

சீலமது ணையையரழி கொள்வான் மேவச் சிவனருண்ஞானக்க
ண்ணுறி கண்ட போதே, யேலவருங் கனவினிலுக் கிரமா றன்பர்
லெய்தியரும் புதல்வகே ளெதிர்சென் றேகின், ருேலமொடுங் கழிய
வருங் கடலை யாமுன் னுதவுவே லெறிந்துசுவற் றென்றுபோதும்,
வேலைசுவ றிடவேலை யெறிந்தா னும் வேலைவடி வலம்பகின்று
னென்று ரன்றே. (உக)

உஉ-வது வலைவீசிமணஞ்செய்ததிருவிளையாடல்.

அம்பிகைக்கா கமங்களியம் புங்காற் கேட்ட வரியபொருண் மற
ந்திடக்கண் டமலன் சீறி, வெம்பரதர் குலத்துதிபோ கெனவு தித்த
மெல்லியைக்கொள் வானுருக்கொண் டனுகிக் கேட்பக், கம்புதந்த
கொலைமகர வரையொன் றுண்டெங் கவலறநீ வலைவீசிப் பிடித்து
வந்தா, னம்புதரு குவமெனவம் முறையி னேறு [illegible] பிடித்த
டையின் மணஞ்செய் தானால். (உஉ)

உங - வது வளையல்விற்றதிருவிளையாடல்.

மாதவர்க ளாச்சிரமத் தெய்தி மாதர் மயலைமக்வர்ந் தவர்கொழு
நர் சவிப்பப் போந்தே, கோதையரந் நீள்வணிகர் குலத்தி லங்கக்
கோலவளை வணிகளுக் கூறிச் சென்று, வீதியின்மா லாக்கிச்சூ லாக்
கித் தியின் வீழ்ந்திடுவா ளுருப்படுங்கால் விருப்போ டஞ்சி, யாதியு
ளுமறைந்தொருதன் னுருவங் காட்டி யவருவப்ப வுயர்குலமென் ற
ருளிச் செய்தான். (உங)

உச - வது விடையிலச்சினையிட்டதிருவிளையாடல்.

காடுவெட்டி யென்பானோர் பழுதில் சோழன் கனபடையோ
டெய்திவைகை வடதீ ரத்தி, னுடிவணங் குதற்கிரங்க வல்ல சொக்க
னயந்திரவு பகலாக்கிச் சென்று மாற,னீடுகயல் பொறித்தடைத்த வ
டபால் வாயி னெடுமதிலி னேடுமுரித்துக் கொணர்ந்து தான்றன்,
சேடுருவங் காட்டிவிடுத் தடைத்தா னேற்றின் றிகழுமிலச் சினைவா
யி லெனப்பொறித்தே. (உச)

உரு-வது மாணிக்கம்விற்ற திருவிளையாடல்.

செழியர்குலத் தருளினு லுதித்தோர் மைந்தன் செலும்பருவ மைந்தினடல் வேட்டைக் காட்டிற், றழியபுலி தாதையைக்கொண் டேகி வங்குச் சார்பில்லாப் புதல்வர்நிதி கவர்ந்தே கக்கண், டெழிலின் முடி சூடுவான் மறைத்துக் காத்த வமைச்சர்முடிக் காமணியின் றென்றே யுங்காற், கொழிதமிழ்தேர் பட்டினத்துச் செட்டி யென்று கொணர்ந்துவிற்றான் மாணிக்க மவுலி சூட்ட. (உரு)

உசா-வது யானையெய்த திருவிளையாடல்.

தவறறுமீ னவனையொரு சோழன் சென்று தன்படையால் வெலமாட்டான் சமணர் தம்மாற், புவனிவளர் மதுரையையோர் கவளமாகப் போந்துவிழுங் கெனவிட்ட களிற்றை வீழ, வெவர்புகழ்பேரட்டாலை மீது நின்றே ரேவிடக்கண் டியானைமலை யென்றா ரொன்று, குவைகொள்சொரி யிலத்தியிலத் திமலை யென்றார் கோறொட்டா னட்டாலை வீர னென்றார். (உசா)

உஎ-வது வாதவூரருக்குபதேசித்த திருவிளையாடல்.

கானைத் தழிலொருவன் விடையிற் போந்து கமழ்மதுக மகிழ்வாத புரத்து வாழுந், தணராமாத் தியர்குலத்துட் டோன்றி மாறன் றனக்குரிய மந்திரியா யிவுளி கொள்வான், வணமார்பொன் னோடுபெருந் துறைசேர்ந் தாரான் வழங்குபதே சமும்பெற்றுத் தமிழ்பாடித்தன்னிணையாந் தொண் டருக்கிரும்பொ னீந்தே சென்ன வேகினான் றென்மதுரை வேந்தன் றன்பால். (உஎ)

உஅ-வது நரியைக்குதிரையாக்கிய திருவிளையாடல்.

வருமிவுளி யிடம்போதா மதுரை யென்றோர் மண்டபத்து மாறனுயர் சிறப்பின் வைகி, யொருமையொடு வினவவரும் வருமென்றோதிப் பரதவிப்ப வுரைத்துவிட்ட முறைசெய் வோர்க, ளிருநிலெனக் கொடுந்தண்ட மாற்றா ராகி யின்புறுவர் சகமோத விரங்கிச்சொக்க,னருநரிமா வாய்க்கொணர்ந்திட் டுகைத்துக் காட்டி யாடையும்வாங் கிப்பரிமாற் றறுதி யென்றான். (உஅ)

உகூ-வது குதிரையைநரியாக்கிய திருவிளையாடல்.

அருளாற்பக் தியிற்கட்டும் பரிக ளெல்லா மருக்கனெழு முன்னிமையோர் நகைப்ப வாழ்ந்த, பொருளாரம் புவிமாறன் பொருமியேங்கக் குறுநரியாய் நெடியகுரல் காட்டப் போந்து, மருளாருக்

துறையாள ருரைப்பச் சால மகிழ்ந்திருந்த மன்னவன்போல் வாத வூ ரர், வெருளாதுண் மகிழ்ந்தறியார் போன்று செல்ல வெகுண்டுக ண்டு சிறைவைத்தான் மிகவுஞ் சீறி. (உ௯)

௩௰-வது மண்சுமந்த திருவிளையாடல்.

மீதுயர்ந்து பௌவமெனப் பெருகும் வைகை மேன்மைநதி யு டைப்படைப்பா னடைந்த வம்மை, யாதரிக்கும் பிட்டுதிர்க்கு மண் சு மீந்தர்ண் டடிபட்டம் மாறெங்கும் படவி தேதென், ருேதுங்கா ன் முனியைவிடு விடென்ருேர் வாக்காங் குயர்வான்ருேன் றச்சிறை விட் டழைத்துள் ளஞ்சிப், பாதமல ரிறைஞ்சிநும்மிச் சையிற்போ மென்று பகர்ந்துவிட்டான் பெயர்மாற்ருன் மாற்ரு னென்ருர். ()

௩க-வது விருத்தர்குமாரர்பாலரான திருவிளையாடல்.

வரமுனிவன் ஞெருவன்றன் மகவைப் பாக வதன்வரவே தங்க ண்மடங் கிடச்சீ றுற்ரு, ருரைசெயமுண் டென்ருறி விடுப்பச் செ ன்ருே ஞறுசைவன் மகளென்று தொடரனம் மீச, னைவிருத்த் ஞய்ப்புகுந்துள் குமார ஞகி நனிமாமி வரவமும்பா லனுமாய்க் காட் டிப், பெரிதுமழ கிதென்றுதள்ள வுருவங் காட் [illegible] பேதையையுங் கொண்டகன்ருன் வியக்க யாரும். (௩க)

௩உ-வது மாறியாடின திருவிளையாடல்.

தென்னனுவந் தறுபத்து மூன்ருய்ந் தெண்ணெண் டிண்கலை வல் லானெனவாங் கணைந்தோர் பட்டன், மன்னியநாட் டிமறியா ய் வளவ ஞமம் வருசகல கலாவல்ல னென்னக் கற்ருங், குன்னுமு ன்ஞேர் தாள்வருத்தம் பொருஞெந் தீச ஞெருதாளி னின்ருனென் றழுங்கு வான்கண், டன்னவட கீழ்ப்பாலிந் திரற்கு முன்ன மாடினுன் கான்மாறி வெள்ளி மன்றில். (௩உ)

௩௩-வது பழிக்கஞ்சின திருவிளையாடல்.

மனைவியொடும் போந்திருந்து வழிக்க ஞன்மேல் வனசரன்முன் னிளியெய்த வம்பு வீழ்ந்து, தனிமரணம் வரவருவே டனைத்த டுத்துத் தலைக்கடைசார்ந் தபயமிடும் பனவ ஞேடு, 'நனியிருளின் மணமனை போ யருளா ஸிற்ப நமன்பட்மா தினைக்கொன்ற விசேடஞ் சொ ல்லி, யினியிவனைப் பசுவாற்கொல் வமெனக் கொல்ல வெழில்வழு தி யினுந்தெளிந்தான் மறையோ னுள்ளம். (௩௩)

௩௪-வது மகாபாதகந்தீர்த்த திருவிளையாடல்.

அனையைமன மருட்டியொரு மறையோன் புல்லி யுளவறியா வத்தனைமண் கொட்டால் வெட்டாக், கனையிருளிற் கொடுபோங்கால் வேடர் மாதைக் கைக்கொடுசெல் வாரடித்த புண்ணீமொய்ப்பத், துணைவினின்மண் ணுலகினில்வா வென்பா ரின்றிச் சுழன்றுதீவத் தாற்கடம்ப வனத்தின் மேவத், தனையடைந்தோர்க் கருள்சொக்கன் வெறுத்து வேளைத் தவிராமா பாதகத்தைத் தவிர்த்தா னன்றே.' (௩௪)

௩௫-வது அங்கம்வெட்டின திருவிளையாடல்.

அன்பர்தமக் கிடர்வருமோ கருணைச் சொக்குண் டாகவெனும் பணிக்கனிடத் தடைந்து கற்குந், தென்பரவா யுதக்கலைகள் பயில்வோர் தம்முட் சித்தனெனுமொருதீம்பன் முற்றுங் கற்று,மின்பரவா சான் மனைகை தொடக்கண் டீசன் விருத்தனென்றே வதுநினைந்தாய் வெட்ட வாவென்,றென்பகர்வ தவனுருக்கொண் டறைகூ றிச்சென் றில்லினுட்போய் மறுகேறி வெட்டி வீழ்த்தான். (௩௫)

௩௬-வது மதுரையான திருவிளையாடல்.

[illegible] வைதிகன் னெறிபொ றுது விடுமரவை நாகமலை யென்ன முன்னம்,பஞ்சவனோர் கணையினு லெய்து வாயாற் படக்கக்கும் விடம்பரந்து நகராற் றுது, நஞ்சணிகண் டாவெனச்சென் றேத்தத் திங்க ணறும்விரான் மதுரையென மதுர மாக்கி, வஞ்சகர்பின் பசுவைவிட விடையை யேவி வலிதொலைத்தா னிடபகிரி பசுவெற் பென்றார். (௩௬)

௩௭-வது வெப்புத்தீர்த்த திருவிளையாடல.

புகலியினில் வைதிகவா ரணமென்றியாரும் போற்றியசம்பந்தரென்றோர் புதல்வர் தோன்றித்,தகவுமையா டிருமுலைப்பா லமுதுண்டு தந்தருண்ஞா னம்பெற்று மதுரை மேவிப், பகவனரு ளால்விட்ட மடத்தி விட்ட படுதழன்மாறனுக்கேவித் தணியாவெப்புந்,திகையமணர் காணவொழித் தொழியாக் கூனுந் தீரமிர்த் தார்புனிதத் திருவெண் ணீற்றால். (௩௭)

௩௮-வது கழுவேற்றின திருவிளையாடல்.

திரண்டமண ரெரியினிடை யெழுதி யிட்டாற் றிறல்வேகா வேடுடையார் வென்றா ரென்று, முரண்டருவா தனைத்தேறி யழலவன்னி முடிமிசை யேடெனையும் வேவ வேவா, தாண்டருகல் லே

டெடுத்தார் தம்மோ டின்னு மாற்றினிட வாவென்றுற் றிட்டுத் தங்கள், காண்டருமே டாழிசெலக் காழி யாரோ டெதிரேற வேறினுங் கழுவாய் மீது. (கூஅ)

கூகூ-வது மெய்க்காட்டிட்டதிருவிளையாடல்.

அடற்படையா ளினைவேண்டு மம்பொ னல்கி யரனடியார்க் கழுதாக்கி யளித்த வென்றிச், சுடர்ப்படைவேற் படைத்தலைவன் கொணர்ந்த வீரன் சுந்தரசா மந்தனென்போன் றன்னைக் கூவி, மிடற்படைமீ னவனுண்ட படையா வென்ன விமலனுண்டே லவையுண் டென் றுரைத்தோ னுக்காய்த், திடப்பபுள் ளியுங்காட்டி நாட்டிச் சொக்கன் சேனைகொணர்ந் தரியுகைத்து மெய்க்காட் டிட்டான். ()

சo-வது உலவாக்கிழிகொடுத்ததிருவிளையாடல்.

ஈசனையுண் டென்றேத்தி மறையோர் தம்மை யிகழ்ந்திமையோ ரவிவேள்வி குன்றி வானும், பேசுலகம் பொழியாமல் வாடக் கண்ட பெருவழுதி தளர்ந்திரவு துயிலும் போது, நேசமுனி வரைமறந்த தானின் றுடு கிலேதளர்ந்த தவனைநம்பேர்ற பழிச்சி தென்றுங், தேசொடு கா ணப்பொழியும் பெயும்வா னென்றே செப்பி[illegible]ற்கிழிக னவில் வைத்தான் சென்றே. (சo)

சக-வது மாமனுய்வந்துவழக்குரைத்ததிருவிளையாடல்.

மகவிலா வொருவணிகன் றங்கை மைந்தன் மைந்தனெனத் தன் செல்வ நல்கி யிங்குத், தகைமைபெற விருமெனவைத் தேகத் தள்ளித் தாயத்தா ரில்லமொடு தனங்கைக் கொள்ள, விகழப்போம் வனிதை மக வொருமிங்கோ யிற்போந் திறைவவெனச் செய்திசொல்ல விரங்கிச் சொக்கன், மிகையறுமா துலனுருக்கொண் டவையி லேறி வேண் டாரை விடவென்றான் வியப்பியாரும். (சக)

சஉ-வது அட்டமாசித்திபகர்ந்ததிருவிளையாடல்.

அரன்கயிலை யின்கணிறைஞ் சியக்கி மாரோ ரறுவருயர் சித்தி யெட்டுங் கேட்குங் காலைத், திரமுறக்கே ளாதுமறந் திறைஞ்ச நீர் போய்த் தென்னாட்டிற் பட்டமங்க லத்தாற் கீழ்வீழ்ந், தூரறுறுகல் லாக்கிடத்திர் நீபக் கானத் துறைகுவம்யா மவனுற்றெண் சித்தி யாவும், விரவவுறை குவறுங்கல் லுருநீத் தென்ன மேவினர்க்கு மேவிய றி வித்தா னுய்ய. (சஉ)

௪௩-வது தண்ணீர்ப்பந்தல்வைத்ததிருவிளையாடல்.

பரிவேத்தா வெனும்வழுதி தமையன் கொள்வான் பகர்ந்திடுபெ
ண் கொண்டபய னொடுங்க டிப்போய், வரவேற்று வடநாட்டுப் ப
கையும் வென்று வந்துதமிழ் மதுரைகொள்வா னெதிரக் கண்டு, தெ
ரிவேகத் துடன்முன்னோன் சொக்குண் டென்று சிந்தித்தேற் றிடச்
சென்று பாலை யாக்கி, யரிபோற்றுங் கடவுளனை யினத்தற் சேர்ந்த
வரவுவெல வுதவிவைத்தான் றண்ணீர்ப் பந்தர். (௪௩)

௪௪-வது இந்திரன்முடிமேல்வளையெறிந்ததிருவிளையாடல்.

மன்னவர்மூ வரும்வரவிந் திரனங் கென்னீர் வந்ததென விருவர்
மழை யென்று போற்ற, வுன்னுமுன முதவியுமா கொடாத மாறற்
குறுவலிகாண் பானூர மூதவப் பூண, வின்னருளா லிருந்துளங்கண்
டேகு மென்ன வேகினருள் வழுதிபுய லரசர் தம்மை,மின்னிசு மிட
வவனொந் தோலை போக்க வேளாளர் பிணையில்விட்டான் மழைமல்
கிற்றால். (௪௪)

௪௫-வது பொன்னனையாளுக்கருள்புரிந்ததிருவிளையாடல்.

பூவணத்திற் பொன்னனையாள் பதியி லாண்முன் புனிதனுருக்
கும்பிடுவாண் மெழுகு சாத்தி, மேவணநற் பொருள்பெறாள் சொக்
குண் டென்று மிகவருந்துங் காற்சித்த ராச்சென் றுண்டு, மாவண
வல் லிரும்புதரச் சொல்லித் தீயின் மாட்டென்று பரிசனஞ்செய்
தொளித்தான் றந்து, பூவணத்தாள் சொலிச்செய்திறை யுருக்கண்
டாண்மெய்ப் பத்தியெழில் கன்னடள்ளி முத்தங் கொண்டாள்.(௪௫)

௪௬-வது சோழனைக்கொடுவர்தாழியிலாழ்த்தியதிருவிளையாடல்.

செம்பியன்றென் மதுரைகொள்வான் றிறங்கள் பேசிச் சென்ற
டர வெந்தையுண்டென் றிசைக்கு மாறன்,றம்பமென வவனெதிரே
தோன்றச் சொக்கன் றூண்டுபரி மேல்வேடக் குதிரை யாளாய்,நம்பு
விசை போந்துபரி காட்டிக் காட்டி நனிபாய்ந்துமேறடத்துத் தீரத்
தேற,வம்பினுடன் பாய்ந்துகுசை தாங்காச் சோழ மனைக்கொண்டா
ழத்தடங்கொண் டாழியென்றார். (௪௬)

௪௭-வது திருவாலவாயானதிருவிளையாடல்.

ஓங்குபிர ளயத்தச்சுக் குலையா வாறிங் குயர்ந்திடசிற் றலினடு
வூ றென்றார் மாறி,சிங்கியபின் னொருசெழியன் றோன்றிச் சொக்கே
சனைகருக் கெல்லைகாட் டென்று போற்றப், பாங்குபெறக் காட்டெ

ன்று விட்ட பாந்தள் படியினில்வாய் வைத்துத்தன் கதியாற் சூழத், தேங்குபுகழ்ப் பதிமுடங்கல் வாய்வைத் தத்தாற் றிருவால வாயாலு வாயென் றுரர்கள். (சஎ)

சஅ-வது வரகுணபாண்டியனுக்குப்பிரமகத்திதீர்த்துச் சிவலோகங்காட்டியதிருவிளையாடல்.

சினமாவேட் டம்போய்மீள் வரிசைத் தாளிற் றிகழ்நிசியில் வழியுறங்கு மறையோன் றஞ்சக், கனசரயை பலதருமஞ் செய்து நீங்கக் காணுன்மெய் வருந்துங்கால் வெல்வான் போந்த, வினமார்செம் பியற்செயித்துத் தேயங் கைக்கொண் டிடைமருதிற் பிரமகத்தி யொழித்துப் போகி,மனமார்வண் புவிக்காணக் காட்டென் றேத்தும் வரகுணற்குச் சிவலோகங் காட்டி னுனால். (சஅ)

சகூ-வது விடைக்குறியம்பெய்ததிருவிளையாடல்.

அன்புடையோ னொருசோழன் மதுரை கொள்வா னணுகலுங் கண் டௌந்தளர்ந்தா லயத்துட் சென்றே, மன்பரம னருள்பெற்றுச் சிறிய தானை மருங்குவரப் போரின்கண் ணொருவான் போந்த, பொன்பரவு முளங்தெளிந்த செழியற் காயோர் பொருகணையா லருகணையுஞ் சேனை மாளக்,கொன்பரவ வணைந்தறிவானை பொறித்து விட்ட கோவின்விடை கண்டுவிடை கொண்டு போனன். (சகூ)

ருo-வது உலவாக்கோட்டைவைத்த திருவிளையாடல்.

அஞ்சியவுன் புடைவேளாண் டிலவ னொரு மரனடியார்க் ககமகிழ மாதுந் தானும், விஞ்சுமனத் தமுதுபடைத் தொழுக மாய மிடிபுகுந்தாங் கமுதளித்தன் முட்டக் கண்டே, யெஞ்சினமண் ணிற்றனிசுங் தருவா ரில்லை யீபவரைக் காட்டாயேன் மடிவே லென்ன,வுஞ்சிடகன். கனவினன்கா ணப்போய்க் காட்டி யுலவாமன் மிகவரிசிக் கோட்டை வைத்தான். (ருo)

ருக-வது மூர்த்திக்காசளித்ததிருவிளையாடல்.

வைதிகத்தை யொழித்தமணர் கையின் வீழ்ந்து மதுரைகொண்டு வழுதியைவென் றுலகை யாளுங், கைதவக்கன் னடனையுமண் மழையான் மாற்றிக் காதலினுற் சாத்தொருநாண் முட்டக் கண்டு, பைதலொடு சந்தரைத்தான் முழங்கை வட்டப் பாறையிற்றேய்த் திடுமெய்வணிக மூர்த்தி தன்னை, மொய்சடைமா மவுலியக்க மணிப்பூணிற முழுப்பூச்சா முமையா லுலகாள் வித்தான். (ருக)

௫௨-வது காரியார்பாரியார்பாப்பகுந்துகொண்டதிருவிளையாடல்.

இலகுபுகழ்க் காரியார் பாரியாரா மிருவர்கவிப் புலவர்வட நாட்டி னின்று, நிலவுபுகழ்த் தென்னனைநன் கவிதை பாடி நேருங்கா ணெறிமயக்க முறக்கண் டீசன், றிலகவடி விடையனாய் நிரையான் மேய்த்துச் செலும்வனத்திற் றோன்றியிது முன்னங் தென்னூர்க், குலகுபுக ழரியதென நவின்று காட்டி யுடன்பகுந்து சாத்துதமிழ் மாலை கொண்டான். (௫௨)

௫௩-வது புலிமுலைபுல்வாய்க்கருளினதிருவிளையாடல்.

சித்திரைச்சித் திரைக்குவந்து மகவான் பூசை செயுங்காலை மணப்புரத்தை நோக்கிச் செல்லு, மெத்துபுகழ் வணிகன்கண் டவண்டரித்து வியன்வனத்தை மற்றைநாட் சென்று சொல்லப், பத்தியொடு வருஞ்செழியன் புலிமுலைப்பால் பயந்தபுல்வா யுணக்கண்டு ளிசைட முள்ளா, நித்தியவிப் பதிக்கெல்லை காட்டென் றேத்த நிகழ்சித்த னெனவெல்லை காட்டி னானல். (௫௩)

௫௪-வது விறகுசுமந்துசாதாரிபாடினதிருவிளையாடல்.

இசைவல்லா னெனும்பாணன் வடதேயத்தா னெய்திடமா றன்பத்தி ரனைவா வென்றே, வசையில்லா யவனொடுபா டுகவா தென்ன வந்துசொக்குண் டென்றிருப்பப் பாணன் வேந்த, னசைவில்லா வடிமையென விறகூன்றி யனையிருளிற் சாதாரி யிறைவன் பாடத், திசைநில்லா தொளித்துவிடி வதன்முன் போனான் றிறற்பாணன் கிளையரொடும் வெருக்கொண் டாங்கு. (௫௪)

௫௫-வது திருமுகங்கொடுத்ததிருவிளையாடல.

இன்னிசைபா டும்புகழ்ப்பத் திரன்கொ டுப்பா னிறைவனிதி யில்லையென வருந்துங் காற்போய், மன்னுமதி மலிபுரிசை மாட மென்று வளைந்தொர்திரு முகங்கனவி னனவிற் காண, முன்னுதவி நம்மன்பன் சேர மான்பான் முடிகென்று விடைகொடுப்பப் போனான் சால, மின்னுபொருள் வேண்டுவன நல்க வாங்கி மேவியிருந் தனன்வழங்கிச் சொக்கை வாழ்த்தி. (௫௫)

௫௬-வது பாணபத்திரனுக்குப்பலகையிட்டதிருவிளையாடல்.

பெருகுபொருள் கண்டுமனம் பொருது மற்றப் பெரும்பாணனிருப்பப்பத் திரனு மன்பா, லுருகுமிசை முச்சந்தி யன்றிக் கங்கு லுறு நள்ளும் பாடுதுமென் றெய்திப் பாட, வெருவுறமெய் நோவக்கன்

மாரியேவ மெய்யன்பு கண்டியாரும் வழுத்தச் சங்கத், திருவுமையியற் பலகைதந்தோ னிருந்துபாடென் றிசைப்பலகை கொணர்ந்திட்டா னினிமை கூர்ந்து. (ருசு)

ருஎ-வது இசைவாதுவென்ற திருவிளையாடல்.

நவையறுபத் திரன்மனைவி முல்லை மாலை நனிவழுதி நினைவுதனைத் தள்ள நாணிப், புவனியிற்றீ பாந்தமித்து நின்றுந் தேடிப் பொருவி லொருபாடவொட் கொணர்ந்து தன்பே, ரவையினிற்றோற் றுள்சுமப்ப னென்று பேசி யறுதியிசைத் திட்டவையிற் பாடிச் சார்ந்த, சிவ னருளால் வரும்விறலி மாலை முல்லைத் தேமாலை கழுத்தினிடப் பெற்றா ளன்றே. (ருஎ)

ருஅ-வது பன்றிக்குமுலைகொடுத்த திருவிளையாடல்.

உயர்தந்தை யிறந்திடப்பன் னிருவர் மைந்த ரூழ்வினையாற் காட்டுறைவன் னியர்கள் போந்தோ, ரயர்வறநோற் றிருப்பமுனி வன்சூழ்ந் தேதம் மங்கைகொட்டி யிகழ்தருவோர் தம்மைப் பன்றி, வயினுதிமி னெனமுனிவன் சபிப்பத் தாயும் வந்துதியா முனம்வேட்டைக் காட்டிற் றுஞ்ச, வியலுறுதா யிழந்தகுரு ளைகளீ ராறு மினிதுயத்தாய் வடிவின்முலை யூட்டி னானே. (ருஅ)

ருகூ-வது பன்றிக்குட்டிக்கருள்புரிந்த திருவிளையாடல்.

அருளுமையாள் பெரியவனீ சிறிய பன்றி யாகமெடுத் தணிமுலைப்பா லளித்தா யுண்ட, குருளைகளீ ராறுமுய்யும் வண்ணங் கண்பார்த் தருளெனநம் மிறைகருணை கூர்ந்து பார்ப்பத், தெருளுறுவே ளாண்டலைவன் மைந்த ராகித் தென்னனுக்கு மந்திரியாய் விசயஞ் செய்த, மருளறுவன் னியர்பன்றிக் குறும்ப ரென்றார் வளர்ந்தமலையைப்பன்றி மலையென் றாரால். (ருகூ)

கூ0-வது கருங்குருவிக்கருள்புரிந்த திருவிளையாடல்.

கொடிக்கஞ்சிக் கருங்குருவி போந்து கூடற் கோயில்வல் நாளுஞ்சூழ் தரவே சொக்கன், படிக்கஞ்சா மிருத்தியுஞ் சயம தென்னும் பகர்வென்றி மந்திரத்தை யுபதே சித்து, மிடிக்கஞ்சாய் கிளைகளொடு முச்ச ரித்து வெம்பகைவென் றிருக்கெனவந் தினங்க ளோடு, வடிக்குங்கூர் மூக்கலகாற் காக்கை யாதி வலிதொலைக்கக் கண்டுலகோர் வலியா னென்றார். (கூ0)

சுக-வது மகாமேருவிற்சென்டுங்கயலும்பொறித்ததிருவிளையாடல்

அந்தணரை யிகழ்ந்திடுமோர் வழுதி தாங்கு மவனியுளோர் மழையின்றி வருந்தல் கண்டிங், கெந்துசெய்வே னெனக்கனவி லீசனெய்தி யிருஞ்செண்டான் மேருவைச்சென் றுணர்த்தி வேண்டு, மைந்துதனந் தறித்தெடுத்துன் கயலு மிட்டு வந்தவரை வாழ்வித்தி யாக மோங்கக், கந்தரவான் பொழியுமெனச் சொன்ன செய்து காலமழை பொழிதரப்பல் லூழி வாழ்ந்தான். (சுக)

சுஉ-வது சாட்சியழைத்த திருவிளையாடல்.

மல்குபொரு ளுடைவணிகன் கன்னி தன்னை மதுரைவளம் பதியிருக்கு மருக னர்க்கே, நல்குமெனச் சொலித்துஞ்சக் கேட்குஞ் சுற்ற நகரத்தா ரோலைவிட வந்தோன் பாம்பா, லொல்குமிடை யொருபோங்காற் புறம்ப யத்தி லொழிந்தெழுப்புங் கவுணியரான் மீண்டு போத,வல்குமனம் பொருதமுன்கொண் மனைவி காண வழைத்தான்முச் சான்றீசன் கிணறு வன்னி. (சுஉ)

சுரு-வது நாரைக்கருள்புரிந்த திருவிளையாடல்.

வதிவாவி வற்றமீ னற்றுப் போந்தோர் மாதவராச் சிரமத்தாவியுட்பு காமுன், புதுநீரா டுறுதவமா முனிவர்ச் சூழ்ந்து புணராமீனலியாது நிற்பக் கண்டு,துதிஞானம் பிறந்துகொலை தவிர்ந்து போந்து சொக்கனரு ளுடையனெனக் கோயில் சூழும், விதிநாரை வந்தனைய விரும்பி வாவி மீனெழித்துச் சிவலோகங் கொடுத்தா னன்றே. (சுரு)

சுச-வது வேதங்களைகண்ட திருவிளையாடல்.

பொற்புறுகண் ணுவன்முதல முனிவ ரெல்லாம் போந்துகிரேதாயுகத்தா திக்கண் கூடி, முற்புகலுங் கலியுகத்தி லிறந்த பான்மை மொழிபவர்யா ரென்றுவருந் துங்கால் விண்மேற், றற்பரமா மதுரைதனி லிருப்பல் வந்தாற் சாற்றுவலென் றருளக்கேட் டணைந்து போற்ற, நற்பரம குருவடிவாய்ச் சொக்கன் வந்து நான்மறையும் வியாகரணத் தொடுநவின்றான். (சுச)

ஈதுதிரு விளையாடற் சரிதை முற்று மியம்பினமுக் கிரனெனுமோர் தென்னன் சொக்க, நாதனையே நியமமாச் சேவை செய்வானண்ணுங்காற் கதம்பவனத் திலுதின் றேகித், தாதவிழ்பூம் புன்னைவனத் திலிங்க மாகிச் சங்கரனு வுடையெனும்பேர் தரித்துப் பாதி,

'மாதொருபால் விளங்கவெதிர் காட்சி நல்கி மன்னியதி சயலீலை புரி
யு மென்றும். (௬௫)

மதுரைத்தலவிசேடம்.

வேறு.

பொங்குபுகழ் மதுரேச னநாதிசதா சிவமென்னும் பொருட்கு
மேலாய்த், தங்குதுவா தசவந்தப் பொருளாகி யப்பாலாய்ச் சுயந்தா
னாகி, யெங்குநிறை சர்வத்ர பரிபூர ணப்பொருண்மா விராச வீச
னங்கவன்மா றடிசான்றென் றெசுர்வேதம் வியாதநூ லடைவிற்
கூறும். (௬௬)

வந்தடைந்தோ ரியாரேனு மிருதமின்றி யமிருதமா வசித்துமுன்னைப்
பந்தமறு சீவன்முத்த ராயெடுத்த சனனத்திற் பரனே யாக
முந்துதவிப் பரநாத பரவிந்து சொக்கலிங்க மூர்த்தி வாழு
மிந்[illegible]விதி யான்மதுரை யமிர்தபுரி யெனவியம்பு மெசுரு வேதம். ()

வேறு.

ஆழி யாழி கடைந்திடுநா ளமிர்த மதுரை நகர்பரவ
வாழி யமிர்த புரியாய தென்னும் வேத மாலயங்கள்
சூழுங் குலசே கரன்செய்நகர் சுத்தி பெறச்சொக் கன்றரித்த
வூழி னிந்து வழுதைவிட வுரைக்கு மப்பே ருயர்சுருதி. (௬௮)

இடபா சலத்திற் றுணைவரொடு மிருந்தார்ச் சுனன்கல் வியாணபுரத்
தடல்வேல் வழுதி மகளாய சித்திராங் கனையை மணந்தடைவின்[றே
மிடல்சேர் வரம்பெற் றனன்கூடல் விமலன் றிருத்தா டொழுதென்
வடநூல் புராணம் பாகவத மாபா ரதமு மியம்பியதால். (௬௯)

விண்ணா ரிமையோ ரந்தியத்தின் மிருத்து வரமே தினிப்பிறந்து
தண்ணார் கிருது மாலிகைநன் னதிநீர் படிந்து தமிழ்மதுரைக்
கண்ணார்சொக்கைத்தொழுதிறைஞ்சிக்கருதும்வரம்பெற்றிருந்தேகி
யுண்ணா ரமுதுண் டிறவாமை யுற்றா ரெனுநூற் பாகவதம். (௭௦)

கேத மகற்றுந் தமிழ்மதுரைக் கிருது மாலை நதிதோய்ந்து
மோதி வருங்காற் றுறுதிசையின்மொய்த்துவாழ்பல்லுயிரனைத்தும்
பாதி மதிவே ணியனருளாற் பரமா முத்தி யெய்துமென
வாதி யைந்தாம் வேதமெனு மரும்பா ரதநூ லியம்பியதால். (௭௧)

வேறு.

புரிவளையந்தளிர்மலர்க்கையங்கயற்கட்பூவையைப்போற் றுலகிலுள்ள
பரிபுரத்தா ளாறுசத்தி முதற்சத்திக் கிறைவிபரா சத்திக் காதி
விரிபுகழ்சே ரிராசரா சேசுரிசிங் கரசனமே லிறைவி யென்றே
திரிபுரசுந் தரிவித்தை யெனும்பொதுமந் திரநூலிற் செப்பு மன்றே.()

நிலவுந்தொளிரும் கதம்பவனம் பரமசிவன் மூலபரை நிலையாய் வைகு, மூவந்துறைக்கிற் றலமதுரை பரமசிவ னும்பர்தொழுஞ் சொக்க நாதன், பவந்தறுதற் பராபரையங் கயற்கண்ணாள் வேறிலையென் றெடுத்துப் பன்னுஞ், சவுந்தரிய லகரியினி லானந்த லகரியெனச் சாற்றுந் தொன்னூல். (எரு)

வேறு.

பத்த கோடிமா மந்திரந் தனக்குநான் மறைக்கும்
வைத்த வாதியாங் காயத்ரி மந்திர வடிவா
முத்தி மாநகர் முதல்வியங் கயற்கணா ளெனவே
மித்தை தீர்விசு வாமித்ர கற்பநூல் விளம்பும். (எச)

ஆதி யாகிய வாலவாய்ப் பதிதொழ வணுகி
லோது மாமயிர் களைந்துநீர் படிந்துப வசித்துச்
சோதி யைத்தொழின் முத்தியெய் திடுமெனச் சொல்லும்
வேத மூலமே யாகிய சேதுமான் மியநூல். (எரு)

வேறு.

பாங்குறுபொற் றாமரைநீர்த் தீர்த்தத்தி லுத்தமந்தற் பரமாந் தீர்த்த
நீங்கரிய பல்கோடி யண்டங்கட் காதார நிலையே யாகித்
தேங்குபுகழ் மாமாயர் வாரிநீ ராதலினாற் சேர்ந்து தோன்றுந்
தாங்குநிறம் பேதிக்கில் விபரீத மெனசைவ புராணஞ் சாற்றும்.()

உலகுயிர்கண் மருள்விளையாட் டுழலாதின் னருளடைதற் கெண்ணிச் சொக்க, னலகிலேண் ணெண் விளையாடல் புரிமதுரை யதன்பெருமை யரனே வல்ல, னிலகுசிவ தலங்களுக்கு மேலாகுங் கேட்கமுத்தி யெய்து மீது, பலகலைநூற் றுணிவென்றே யுருத்திரசங் கிதையெடுத்துப் பகரா நிற்கும். (எஎ)

வேறு.

சுரர்குரு மனைவி வயின்மதிக் குதித்த தோன்றலாம் புதன்மகிழ்ந் தெய்தி,விரைகமழ் கதம்ப வனத்துறை சொக்கலிங்கத்தை விதிமுறை யருச்சித், துரகபூ டணன்ற னருளினாற் கிரகத் தொருவனா யோங்கிய கல்விக், காசனும் பதம்பெற் றிருந்தன னென்றே சங்கர சங்கிதை யறையும். (எஅ)

வேறு.

சூதசங்கி தையிலுயரெக் கியவைப வகாண்டத்தொ குத்துச் சொல்லு, மாதிசயி லையிலமலன் றன்வணங்கி யரிகேட்ப னமர ரேறே,

யேதவுடல் வருந்தாம லெத்தனத்தால் விசேடமுத்தி யெய்துந் தான, மோதுகென வவனுரைகேட் டிறையுரைப்பான் கதம்பவனத் துண்மை யுன்னி. (எகூ)

மாலவகேட் குதிலீலா விபூதிநகர் மதுரையதன் மகிமை சொல்வா, மூலமதாம் விபூதியென்ப தழிவில்லா முத்தியெத் தனத்தான் முற்ற, மேலவரும் தவஞ்சனனுந் தாங்களின்முன் செய்தவர்க்கே யெய்து மானின், போலியமெய் யன்பருக்கே புகல்வததி குய்யமெனப் புகல்வ தானன். (அ0)

பூவுலகி லுயர்ந்தசிவ புண்ணியஞ்செய் தருந்தவங்கள் புரிந்து போத, மேவவரு சரியைகிரி யாயோக ஞானமுணர் விதியி னூற்றிப், பாவனையான் முப்பொருளு முணர்ந்தத்து விதமாகும் பரத்தைக் கண்டாற், றுவின்முத்தி தருந்தலங்கள் பலவவற்றி னெளிதினல்குந் தானங் கூறில். (அக)

அம்பலமா ரூர்காசி காளத்தி விருத்தகிரி யதிக்கி ராம *
மும்பர்புகழ் திருவெண்கா டையாறு வேதவன முயர்கோ கன்ன
நம்பர்திரு வானைக்காக் கேதாரங் கோவைநற் கும்ப கோணந்
தம்பமுறு மிடைமருது வீமேசஞ் சோமனு ந்மிரா மீசம். (அஉ)

இத்தலங்க டனிற்பஞ்சாக் கரம்பிரண வத்தோடு மியையக் கூட்டிப், பத்தியினுற் பன்னீரா யிரஞ்செபித்துத் தரிசிக்குங் காலம் பார்த்து, நித்தியமுஞ் சேவைசெய்து நீங்காமல் வசிக்கிலெய்தும் விசேடமுத்தி, சத்தியமித் தொகுத்ததலங் களின்மேலாஞ் சீவன்முத்தித் தலமொன் றுண்டால். (அங)

தன்னுடலம் வருந்தாது குளியாது செபியாது தவஞ்செய் யாது, முன்னுதற்குக் காலம்பார்த் தந்தந்தக் காலத்தின் முறைதப் பாது, பன்னுமதிச் சடைச்சொக்கைப் பணியாதங் கயத்தனத்தாற் படர்ந்து சென்று, மின்னியவத் தலத்தெல்லை யறியாது மிதித்தாலும் விசேடமுத்தி. (அச)

முன்னொருமா பாதகனந் தணன்றன்னைப் பயந்தமதி முல்லை மாதர், தன்னைமன மருட்டியுணர் தொருவாது தாதையையும் வதைத்தோ ராண்டு, மன்னுலகி லவளோடுந் திரிந்தனனிப் படிதிரிந்து ம

* அதிக்கிராமம்-வைத்தீசுரன்கோயில்.

ருவு நாளிற், பின்னுறுமப் பிரமகத்தி யிருப்புலக்கை யெடுத்தடர்ந்து பிரமை செய்தே. (அரு)

அதிபயமுற் றதுகண்டே யுழலுங்கா லாற்றுமுற்புண் ணியத்தி னாலே, மதுரைநக ரெல்லையடைந் தனனடரும் பிரமகத்தி வருதல் காணு, வதுபுதுமை யதிசயமித் தலத்தில்வசித் துடல்விடுவோ ரெ ன்னப் போந்து, முதிரறிவு பெற்றிருந்தான் முப்போதுந் தொழுது சொக்க மூர்த்தி தன்னை. (அசு)

கோலமார் பதியிதெனக் குறித்தறியான் முன்னொருவர் கூறக்கேளா னலவா யெல்லையத் தனத்தினனு கலுமாபா தகம்போ யாதி மூலமா கியதலத்தில் வந்தவுடன் முன்செய்வினைப் பவமு நீங்கிச் சீலமா தவர்பரவு சிவன்முத்த னானனுட் டெளிவு பெற்றான். (அஎ)

இதப்படநா மாடுநின் மாலியதீர்த் தம்படிந்தஞ் செழுநீதை யோதிப், பிதக்கணத்தி னுயர்ந்ததங்கப் பிதக்கணமென் றறிந்துபிதக் கணமுஞ் செய்து, முதற்பொருடேர் மெய்யன்பர் பாததீர்த்த மும்ப ருகி முன்னி வைகித், திதப்படுமுத் தியையடைந்தா னமதருளா லமு தலிங்கஞ் சேவை செய்து. (அஅ)

இன்னுமுள வயத்தினத்தான் முத்திதரும் தலமெனவே றெணலீ தன்றிப், பின்னுமொரு தலமுளவோ நிச்சயமித் தலமென்றே பின்னு ங கூறுந், தன்னிகரித் தலத்தினின்மா தானமருந் தவம்யாகந் தரும மோமம், பன்னுசெபம் பூசையற்பஞ் செய்திடிலொன் றனந்தமிவை பகர்ந்தே தமுண்மை. (அகூ)

உவ்வேளை யவ்வேளை யுவந்துதொழுங் காலமென வூன்றி யெ ண்ணு, தெவ்வேளை யிற்றொழினு முத்திதருஞ் சத்தியமீ தென்று ன ந்நா, ளவ்வேளைக் காய்ந்தபிரான் புகல்வதுகேட் டகமகிழ்வா லவன் றன் போற்றிச், செவ்வேளைத் தன்மருக னெனவுடையான் சிந்தித் தான் செழுந்தென் கூடல். (கூ0)

ஈதன்றி நித்தியவி பூதிநக ரென்றியம்பு மியம்புங் கூடல் யாதென்று வினவுதிரேற் றேன்றுவவெல்லாமொடுங்குமக்காலத்துந் தீதின்றி யழிவில்லா திருத்தலினற் சிவனுமைக்குப் புகன்றதாக காதனருணங்தியரிக் குணர்த்துவன்கா ரணமதற்கு நயந்து பின்னும்.

அண்டபுரு டற்குமற்றைத் தலங்களவ யவம்பிரம ரந்தி ரத்தி ற், றண்டமதி வேணியுறை பெருங்கயிலை யதற்குமேற் றுவாத சா

ந்தத், தெண்டகவே யழிவில்லா நித்யவீடு தித்தலமெப் போது மோ ங்குந்,தண்டமிழ்த்தென் மதுரையென்று னெனச்சூத சங்கிதைசத்திய மாய்ச் சாற்றும். (௯௨)

எத்தலத்தி னும்விசிட்ட மதுரையென்றுன் மாதவத்தோ ரியம்ப ல் கேளிர்,வித்தகனு ராப்புறத் தொட்டிநின்மா லியதீர்த்தம் வியன்பெ ற் றேங்கு, மத்திவுறை மிருத்திகைவெம் பிணியெல்லா மகற்றுமெ ன்று யிற்றைத் தேர்ந்து, முத்தமிழ்மா தவவிரித்து மொழிகென்று ரவன்றெருத்து மொழிவ தானுன். (௯௩)

புறத்தொட்டிநின்மாலியதீர்த்தமகற்றுநாக

சேடானுபவவியாதிகள்.

வேறு.

அங்கிநீர் விட்ட வித்தோர் சொலித்திடா வழற்குண் டத்திற்
பொங்கிய வோமஞ் செய்தோர் நடுவிடை விட்ட புல்லர்
தங்கிய வங்கி மாந்த நோயினர் தனியன் பில்லாப்
பங்கம்வந் துறவே பந்தி வரைந்துணும் பதகப் பாவர். (௯௪)

வாயுவோ டங்கி மாந்த மரோசிகந் தலைநோய் வாட்டு
நோயினர் நறிய வன்ன நிறைகனி காய்மற் றுள்ள
வேயுற வுடனுண் போருக் குதவாதுள் ளிருந்து துய்த்தோ
ரோயுறு சந்து வாத மனப்பிழை யுறுநோ யாளர். (௯௫)

அருந்தித்தா முன்பு பின்பு பெரியோரை யருத்து வித்தோர்
பரிந்தநெஞ் சுளைவி னேடு படுமெழு நாயி றென்னும்
வருந்துறுநோய் வந்த விருந்திற்கு வழங்கா துண்டோ
ருருந்தெழுங் கபோல ரோகங் கன்னீளை யுறுநோ யாளர். (௯௬)

கிளைஞர்வந் திடிலோ ளித்தோர் கிளர்தரித் திரரோ கத்தோ
டுளைவுறு நயன ரோகங் குண்டல்கண் டசுதை யுற்றோ
ரளைசுர சாத நோயோ டரோசிகர் களவா லன்னம்
வளமுறத் துய்த்தோ ரத்தி மயமாக்கும் வற்ற னோயர். (௯௭)

ஒருவனைத் தள்ளி யன்னு னுண்பதற் குரித்தா மன்ன
மருவரும் பின்றித் தாமே வலியினு லயின்றோ ரோதம்
பருவரு முடலில் வீக்கம் படுத்துகா மாலை நோயர்
மருவுமன் னியர்ப தார்த்த மடமையால் வலிதிற் றுய்த்தோர். (௯௮)

தெளிவிசு வாச பாதர் தீவிர சத்தி நோய
ரளிதக வுறும்பி ரேத சிராத்தத்தி லயின்றோ ரன்ன
மெளிவரும் வஞ்ச நெஞ்சோ டநாசார மியைந்து செய்தோ
ருளேயும்வெப் புறுத்துங் கன்னக் கிருமியென் றுரைக்கு நோயர். ()

அரனடி யார்க்கென் றுக்கு மன்னத்தைக் களவாற் றுய்த்தோர்
பூசையிவை யென்றெ றுைது புசியாது புசித்தோர் வெம்மைப்
பரமுறு கண்ட நோயர் படுமலங் கழித்தவ் வெச்சி
றிரமுறக் கழுவா முன்னூண் செலுத்தினோர் கிராணி நோயர். (கOO)

இனியபால் கரவிற் றுய்த்தோ ரிடையுநீ ரிழிவு நோயர்
பனிமதுப் புசித்தோர் சொத்தைப் பற்குத்து நோயர் வேசை
வனிதையர்ப் புணர்ந்தோ ராக்கை வருந்துறு கிரந்தி நோயர்
புனிதமாப் புசிக்குங் கல்லேக் கிலேகரந் தெடுத்த புல்லர். (கOக)

எங்கவே யறுப்புண் டாரு விலிங்கபின் னமதா நோயர்
நீங்கலுற் றிடுஞூ னுண்டோ ரொருவர்நிந் தனேயைச் சொற்றோர்
தாங்கருங் கலக்கங் கொள்ள யாரையுந் தனிபீ டித்தோர்
வாங்குதற் கரிதாம் பீநந்த மலிதரு கயரோ கத்தர். (கOஉ)

அலவன்கா லொடித்தூன் சால வருந்தினோ ரழுகிக் கைகா
னிலேகுறைந் திடவே வாட்டு நீங்கருந் தொழுநோ யோடு
புலவுநீ ரொழுகி மாறும்பொங்குவெண் குட்ட நோயர்
பலவுமென் பகர்வ தன்னோர் பிடுந்துய ரவரே சொல்வார். (கOங)

வேறு.

உவவினிற் பிதிர்நா ளினின்மனச் செருக்கா லொண்டொடி மாதரைத் தோய்ந்தோர்,வமுறு விழிகண் குருடொடு மாவி யயர்வுறு மண்டவா தத்தர், கவலொடு கிரணத் தன்னிய மடவார்ப் புணர்ந்தவர் கபக்கய ரோகர், தவறறு மயலார் வாழ்ந்திடப் பொருதோர் சன்னிபா தக்கய ரோகர். (கOச)

பூத்தவா குச மாதரைப் புணர்ந்தோர் புரைபடு பவுத்திர நோயர், கார்த்தொரு வரையா யத்தடித் தவர்கைக் கிரந்திகை வாதரோ கத்தர்,தீர்த்தனு லயத்திற் காமத்தை விளேத்தோர் செறிமுட ரோமவெம் பிணியர், பார்த்திடார் நீதி நிலாவினிற் புணர்ந்தோர் பற்பல வாதநோ யாளர். (கOரு)

இழுகிய வெண்ணெய்த் தலையொடு காம மின்புறின் மலசலங் கழிக்கின், விழுகுறு முடைசேர் நரகினிற் புகுத்தும் வெள்ளொளி யிலங்குபல் விளக்கி, னெழுகுபூப் பெனவா குசநா ளொருஞான் றுண் டென தன்னவை புரிவோ,ரழுகுமூ லத்தோ டழிவுறும் வெகுநீரிழி வெனும் கன்மரோ யாளர். (க0௬)

மனைவியைத் தொடாது வமைந்துளோர் கழுத்தி லெழுந்தவல் கழலைரோ யாள, ரனைவரும் தொழுமெய்ஞ் ஞானியை நிந்தை யறைந்துளோர் பெரும்பித்த ரோகர், வினைவழி வரும்பா ரியர்க்குளாங் கொருத்தி யாசையான் மற்றையர் வெறுத்தோர், நனைமலர்க் குழலார்க் கரகொணு வலிநோ யொடுமுடை நாற்றநோ யுடலர். (க0எ)

தன்மனை யாளை மூகரதஞ் செய்வித் தவர்தாமு மத்தொழில் செய்தோர், கன்மமார் வழுக்கற் கொடித்தலை யாக்கிக் காட்டும்புண் சிரோகுட்ட ரோகர்,புன்மைசேர் முடையிந் தியம்புசிப் பித்தோர் புகல்குறி சோர்தரு மலிநோய், பன்மலர்க் குழலார் வெறுத்திடுந் தாதுநட்டநோய் பாண்டுரோ கத்தர். (க0அ)

கற்புடை யயலார் மனைவியைப் பார்த்தோர் கண்ணிற்றொண் ணூற்றறு நோயர்,முற்படு நல்ல பாம்பினை வதைத்தோர் மெய்விடப் பாகவெம் பிணிய, ரற்பொடுந் தன்றே டுதித்தவட் புணர்ந்தோ ரடர்வெகு நீரிழி வாளர், வற்பொடு பயந்த வன்னையைத் தோய்ந்தோர் மதுப்பிர மேகரோ கத்தர். (க0௯)

மருகியைச் சிறிய தாயரைத் தாமுண வணங்குதற் குரியநா ரியரைச், சருவியே யணைந்தோ ரோய்ந்திட விசிக்குஞ் சந்துவா தக்கொடும் பிணியர், குருவெனார் புணர்ந்தோர் தொழுகுல மாதைக் கோரமா கிரந்திநோ யாளர், வெருவிடா தீவையி லபரனவா யுவிட்டோர் மிகுசூலைக் குச்சவெங் நோயர். (கக0)

கன்னியை யயற்பின் னியைவித வையைநாற் கால்விலங் கினைத்தனி புணர்ந்தோர், துன்னியே சுறுக்கொண் டுற்றுநீர்ச் செறுப்பு நோயர்சொற் கன்னியர்க் கலந்தோ, ரன்னியர் மனையை நாடினரு யிர்கொன் றருந்தினர் செய்ந்நன் றிகொன்றோர், மன்னுநண் பினர்க்குக் கபடமே செய்தோர் வருத்துறுங் கருங்குட்ட ரோகர். (கக்க

பரிவொடுந் தனைச்சே வித்தவன் மனையைப் பரிசித்தோ ரங்கைவா தத்தர், குருமனை தொட்டோர் கருவிடை யழித்தோர் கொடிய

தா மகோதர ரோயர், மருவியே தம்மைச் சேவகஞ் கொண்டோன் மனைவியைத் தேவென்றா் மணந்தோர், கருகியே யாவி பரதபித் தோ யக் காட்டும்வா தாதிக்க ரோகர். (ககஉ)

விரதமா மாதர் விரதத்தை யழித்தோர் வேசைபாற் றாறுசெ ன் றெவர்க்குஞ், சரதமாஞ் சந்து பொருத்திநாள் கழித்தோர் தளர் ந்தநீ ரிழிபிர மேகர், சுரதவே சையரோ டளாவியே சதுரங் காதி ய சூதவை பொருதோர், புரைதவா வற்ப கேசத்த ரவலம் புரிந்தி டும் புழுவெட்டு ரோயர். (ககங)

கலந்துவே றிருவர் புணர்ந்திடு மின்பக் கலவியைப் பார்த்துட னிருந்தோர், நலிந்துட னுழுகு நீர்ப்பற்ப ரோக முதலிய நயன வெந் ரோயர், வலிந்துவே சையரைப் பொருள்கொடா தணைந்தோர் நாவித ரொலித்திடும் வண்ணார், பலந்தருங் கூலி யளித்திடா ரனை யாப் பெரிகுட்டங் கிரந்திபன் னோயர். (ககச)

ஆசையாற் கோயிற் கணிகையர்ப் புல்லி யன்னரை வரைந்துதம் பில்லைத், தீசர்சந் நிதிமு னியஞ்செய்தோ ரதனுக் கிடைப்படு மட க்கொடி மடவார், காசுசேர் கயரோ கம்பெரு வியாதி யொடுகடி கு ட்டரோய் பிரமை, சீசியென் றெவரும் பழித்திட வலக்கண் செயு முட ரோமரோ கத்தர். (ககரு)

பொருடுகில் கவர்ந்து கலவிவஞ் சித்தோர் புழுச்செறி யல்குற் புற் றுறுநோய், சுருளவே வலிக்கும் வயிற்றுறு சூலை தொடருமென் புருக்கிவெந் நோய, நீருடருங் கைம்மை யாகியும் பலரோ டிச்சை யாய்ப் புணர்ந்திடு மாதர், வெருளுறச் செய்யு மழுகுபுண் குட்ட முத லிய மேம்படு நோயர். (ககசா)

தூய்மையொன் றின்றி யெச்சிலங் கையினாற் றொடாதவைத் தொட்டெ னெடுத்தோ, ரேமுற வாவி மயங்கிடச் செறுக்கு மெக் கிய வயிற்றெட்ட னோயர், காமுற வொண்ணாப் புலைச்சியைச் சேர் ந்தோர் கருதினோ ரன்னரோ டயின்றோர், மர்மைதி ருடலம் வாட் டியே வருத்து மெரிகுன்ம வாயுநோ யாளர். (ககஎ)

உப்புவெண் ணீறு வெண்கலந் துகில்காற் பாசமூஞ் கிலைகரந் தெடுத்தோர், மெய்ப்புறப் படித்தோர்த் தூடித்தோர் கடினம் விளம் பினோர் வெண்குட்ட ரோகர், தப்பறப் பட்டுத் துகில்வெள்ளி கரந் தோர் சதித்திடும் பலகுட்ட நோயர், செப்பருங் கொடுங்கோ லுனை த்தவர் நாறுஞ் சிலேடி நாசிவெம் பிணியர். (ககஅ)

அயலவர் மகவைப் பொருமையிற் காய்ந்தோ ரன்னியர் பொருணவ மணிகண், மயலொடு கரந்து வவ்வினோர் தூய மகப்பெறு மலட்டுவெந் நோய, ருயர்திரு முறைக ளெழுதவே வாங்கி யுதவிலர் களவினு லெடுத்தோர், செயலறு பிறவிக் குருடுகை வாதந் திமிங்குவாய் வாதரோ கத்தர். (௧௧௯)

ஆவினெய் கவர்ந்தோ ரெண்ணெய்விற் றுண்டோ ரரும்பொருட் கூலியேற் றில்லின், மேவிடங் கொடுத்தோ ரூர்ப்பொருள் கவர்ந்தோர் மெலிகண்ட மாலைரோ கத்த, ரேவமில் வங்கங் கரந்தபகரித்தோ ரீளைமேற் சுவாசவெம் பிணியர், நோவுறுங் கொடுங்கோளுரைத்தவர் குன்ம வாயுநோய் நுவறந்த ரோகர். (௧௨0)

எண்ணெய்தேய்த் திருநீ ராடினர்த் தடுத்தோ ரிரசவர்க் கங்கரந் துண்டோர், நண்ணிய குற்ற மின்மையை யறிந்தும் யானையுநலிந்துபீ டித்தோ, ருண்ணிறை யகற்று மையிரு சிரநோ யொழிவிலா வொருதலை நோயர், தண்ணறுங் கனிகாய் களவினிற் கவர்ந்தோர் சலங்கொள்விப் புருதிவெம் பிணியர். (௧௨௧)

சோரர்பொய்ச் சோரர்க் குபாயங்கள் பகர்ந்தோர் சொன்னவன் னவர்க்கிடங் கொடுத்தோர், கோரமே விளைக்கும் பாதரோ கத்தர் கூறரு நேத்திர ரோக, ராருமக் கள்வர் நட்பினர்க் கோறல் விலக்குன ரழிவழக் குரைத்தோர், சேருறுங் குற்ற மிலருயிர் செகுத்தோர் தீர்வில்கால் கரங்குறை நோயர். (௧௨௨)

ஈதலை விலக்கும் பாவிய ரொருகண் ணிழந்தவர் தரித்திர ரோக, ராதரா யடைந்தோர்க் காசைபே சிக்கை விட்டவ ரடைக்கலப் பொருளைப், பேதுறக் கவர்ந்தோ ரிராசவெங் கயநோய் பீடிக்கும் வீக்கவெம் பிணிய, ரோதுமுச் சிட்டவரைவிலார் விரண வாதருண் முடக்குவா தத்தர். (௧௨௩)

அமைச்சரா யரசைக் கொன்றவர் செருக்கி னநீதியாற் புவிக்கிடர் விளைத்தோ, ரிமைப்பொழு தேனுந் தணிந்திடல் செய்யா திடர்செய்யுஞ் செங்குட்ட ரோகர், தமைப்பொரு ளென்றே சேவகங் கொள்ளுந் தலைவனை நிந்தனை பகர்ந்தோர், குமைத்திடும் வலிய முயலகன் வலிமுன் கூறும்வாய்க் கிரந்திவெந் நோயர். (௧௨௪)

அன்னிய ரொருவ னியல்பல செய்யி னரசலா தவனிலிங் கத்தைத், தன்னதிச் சையிலீர்ந் தவரறுப் புண்பர் தணிவிறு யிலிங்க

வுட் டினத்தர், மன்னுபோர்க் களத்தி லாண்டவன் றுஞ்ச மடிந்தி
யோர் புறகிட்ட வீரர், தன்னிய தாகங் குறைப்பிணி திமிக்கம் பிள
வைதுற் றிளைப்புவெங் நோயர். (௧௨௫)

பண்பொடு சேவிப் பவர்பொரு டமைநேர் பகைகடி வீரர்பொ
ன் கவர்ந்தோர், கண்படு தொண்டை யடைப்புநோய் கடியு மிராச
வெங் கயக்கடும் பிணியர், புண்படக் கவிநா வலவரை யவையிற்பொ
ருமையின் வாதித்து மூதித்தோர், ரெண்படு நடுக்கு வாதநோ யுங்க சே
ட்டைநோ யிடர்ப்படு நோயர். (௧௨௬)

ஒருவரைப் பாடி யவர்செவிப் புகுத்துங் கவிதைமற் றொருவர்
மேல் விரும்பித், திருவிலார் சாத்துக் கவியெனப் பிணைத்தோர் தெ
ரிவிலா மூங்கைரோ கத்தர், வருபெரும் புலவர் கவிதைகேட் டவர்க்
கு வரிசைநல் காதமோட் டேழுத்தர், வெருவுயிர் நீக்கு மவயிருத் [illegible]
று சன்னியோ டின்னல்வெம் பிணியர். (௧௨௭)

நயிட்டிக விரத மழிந்துளோர் சுகசன் னிப்பிணி நலிவிய நோ
யே, ரயிர்ப்பில்சந் நியாசக் கோபியர் மூல வெகுளியோ டருங்கய
ரோகர், செயிர்ப்பறு விரத்த மழிந்தயற் பன்னி விதவைதீக் கணிகை
யர்ப் புணர்ந்தோர், வியப்பொடு புசிப்பை விரும்பினோ ரரத்த மூல
நீர்ச் செறுப்புவெங் கயத்தர். (௧௨௮)

துறவியாய் மண்பெண் பொருண்மனம் வைத்தோர் சூதுகொ
ள் குத்திரம் விளைத்தோர், றறவுறு லயங்கள் பரித்தொரு ரிருப்போ
ரரசர்ச்சேர்ந் தோர்குறை நோயர், மறமகல் குருவாக இகழ்ந்தவர்
முகநோ கத்தர்மா நெறியுடை யோரை, முறைவழு வவமா னம்பல
செய்தோர் முடிவில்கால் வாதரோ கத்தர். (௧௨௯)

ஆருட் குருவைக் கடிந்துநீ யென்றே ரந்தண ரோடுதர்க் கி
த்தோர், நீரறு வனத்திற் பிரமராக் கதையாய் நிற்பது மன்றிவாய்ப்
பிணியர், சீர்பெறு பண்டைத் தேசிகர்ப் பகைத்து மற்றொரு தேசி
கர்ச் சேர்ந்தோர், பூரிய ராவ தன்றியும் வெம்மை பொங்குதா பற்
சுர நோயர். (௧௩௦)

எங்கட்டே சிகனே பெரியனுங் குரவ னிழிஞனென் றொருவர்த்த
ர்க் கித்தோர், பங்கமா முடக்கு வாதத்தர் பார்த்தோர் கேட்டவர்
குருடொடு செவிட, ரங்குரு நிலைதிரந் தாசனத் திருந்தோர் துகில்
போர்த்தா லயம்வலஞ் செய்தோர், முங்குதீர்த் தத்தின் மண்ணொடு
குளித்தோர் மூங்கைநோய் தரித்திர ரோகர். (௧௩௧)

தாளைதா யாசா னிவரொடும் பகைத்தோர் சர்வாங்க வாயு ரோ கத்தர், வேதியர் பொருண்மேல் வேசைமே லுள்ளம் வைத்தவ ர் சலப்பிர மேக, ரேதிலார் மனம்பீ டிக்கவே செய்தோ ரின்னற்சி தச்சுர ரோக, ராதியான் மடத்திற் றம்பல மூமிழ்ந்தோ ரருந்தொ ண்டைடி யடைப்புரோ யாளர். (கசு௨)

அந்தணர்க் கொன்றோர் பிறருயிர் செகுத்தே தன்னுடல் பேணி னோ ரசான், மைந்தறு கற்பின் பன்னிபா லுள்ளம் வைத்தவர் வா தவெங் கயத்தர், முந்திய வுபதே சமுங்குரு வாக்கு மறுத்தவர் முய ல்பணி விடையிற், சிந்தியார் தவசிப் பிள்ளையாய் வஞ்சஞ் செய்தவ ர் திமிர்வாத ரோகர். (கசுகூ)

புராணநூ லோதும் புனிதனைச் சிவதே சிகனென்றோர் நரனெ ன்புகன்றோர், விராவிய புழுவான் மிகைசெயும் வாய்ப்புண் மிகு ந்தவாய்க் கிரந்திவெம் பிணியர், தராதலம் பரவு முண்மைநூ லுண ர்த்தன் பின்றியோர் துரோமதத் தசைகள், பராவியே துய்த்தோர் நர கசே டத்தாம் பண்பறு முங்கைரோ யாளர். (கசுச)

ஈசனே முதலாந் தேவகா ரியவிக் கினஞ்செய்தோ ரிவர்பொ ருள் கவர்ந்தோ, ராசினுன் மறையோர்க் கீனர்செய்தோ ருழலை யா க்குரோ யுட்சுர நோயர், பூசுநீ றணியு மீசனு பரணங் கவர்ந்துபொ ய்க் குரம்பையிற் பூண்டோர், சீசியன் வைரோ யாரெடுத் துரைப் பார் செறிபுழுக் குட்டரோ கத்தர். (கசுரு)

துலங்குமா லவட்டம் விசிறிகள் கவர்ந்தோ ருட்டணத் தக்கவெ ம் பிணியர்,பலங்கெழு மீசன் றிருப்பணி பூசைபடித்தரங் குறைத் ததி நரகர்,கலங்கவே செய்யு மலிப்பிணி வருத்தங் காட்டுறு மருங்கய ரோகர்,நிலங்கெழு மீசன் சமயத்தை நிந்தை நிகழ்த்தினோர் சலவாத நோயர். (கசுசு)

இணையிலாச் சிவனுக் கிணைசொலி யிறக்குந் தேவரைப் பரம்பொ ருளென்றோர்,புணையிலாத் துன்பக் கடலிடை யழுத்தும் புழுச்செறி வாய்ப்புற்று நோயர்,மணமுறக் கொடுப்போர் தங்களை யிகழ்ந்தோ ர் புழுக்குடை பல்லுநோய் மலிநர்,பணவிடைத் துயின்றோர்ப் பழி த்துநிந் தித்தோ ருதரவங் கிப்புடும் பிணியர். (கசுஎ)

சிவனிடத் துதிக்கு மூவரை நிந்தை செப்பினோர் வியாதிசேர் வ யிற்றர்,சிவமுறு கோயிற் சுற்றினிற் கணிகை காரிய ரொடுகளிப் புற்

ரோர், தவமுற மலச லூாதிகள் கழித்தோர் தலைமயிர் கோதியே முடித்தோர், பவமெனு தெச்சி லுமிழ்ந்துளோர் பிறற்றும் பழிபடும் பெரும்பித்த ரோகர். (கஙஅ)

கோயிலுட் டெயின்றோர் தலையிடி மண்டை நோயினர் குளிர்தீர்த்தத் துறையின், வாயினீர் மூக்குச் சிந்தினோ ரிரத்த பீனசர், நந்தனவுனத்தி,லேயுற வெச்சி லுமிழ்ந்தவர் தாலு வாதத்த ரிருந்தவ,ரறத்த, ராயுநற் றேவ ரிவருக்கன் பில்லோ ரற்புத வாயுவாய்க் கோணர். ()

பிதிர்தினஞ் சிராத்தஞ் செய்திடார் மிகவும் பீடிக்கு மக்கினி மாந்த முதிர்தரு மிரண வாதநோய் வந்தி நோயினர் முனிந்துபாற் பசுவை யதிர்தரு துக்கஞ் செய்தவர் நாசி கோணும்வா தத்தரார்த் துழூதோர் கதிபெரும் பாரஞ்சுமத்தினோர்சுறுநீர்ச்செறுப்பொடுகெடியும்வாதத்தர்.

களவினு லன்னம் வேதியர் செம்பொன் கவர்ந்தவர் கிரணகாலத்தி,லொளிவளை மாதர்ப் புணர்ந்தவ ரநாசா ரஞ்செய்தோ ருயர்பசுவதைத்தோர், விளிவுறப் பொசியு மூலரோ கத்தர் விழுப்பசு வழிதப்பி முறித்தோர், தெளிவின்மா பாதப் பேச்சினைக் கேட்டோர் செவிப்புற்றுச் செவிடென் றோயர். (கசக)

அந்தண ராசா னருந்தவர் பெரியோ ரறிஞர்தற் சூழ்ந்துடனடந்து,வந்திட வேறி வரினை மிவர்ந்தோர் வருத்துமா வாதரோ கத்தர், நிந்தியா வொருவன் றலையிதித் துதைத்தோர் தாகத்தினீருத வாதோர், சிந்தியார் சிகர லத்தினீர் முடிந்தோர் சிரத்துநோய் கபாலநோயாளர். (கசஉ)

புண்ணிலை யறியார் சத்திர மிட்டோர் பூதநோய்த் தூலகா யத்த, ரெண்ணெய்தேய்ப் பவரைப் பிரித்தவர் கபால ரோகத்தோ டிடிதலை நோயர், கண்ணுகுஞ் சாங்கொரு றவர்திமிர்ப் புழுவா னவிந்திடு முதாவெம் பிணிய, ருண்ணுதி யெனத்தீ விடத்தைமற் றொருவர்க் கூட்டினோ ரக்கினி மாந்தர். (கசங)

கண்ணியால் வலையா லுயிர்பல செகுத்தோர் கனிமரச் சோலையை யழித்தோ, ருண்ணுநீர்க் குளங்கா லணையினை முறித்தோர் குறைப்பெரு வியாதிநோ யுடலர்,வண்ணநீர்க் கிணறு விகட்டம்ழித்தோர் வருத்துநீர்ப் பாடுநோ யாள, ரெண்ணடி யற்றார் சொம்பரிந் தெரித்தோ ரெழின்முகம் வீக்குவெங் கோயர். (கசச)

புண்ணினிற் கோலிட் டலைததவா கைக்குத் தாகால் லோர்க ளைப் புடைத்தோர், கண்ணுபோ ரின்றிக் கபடமாய்க் காயப் படுத் தினோர் பிளவைநோ யாளர், வண்ணவான் மாடு மாந்தரோ முதல வு றுப்பொடிந் திடவலிந் தடித்தோ, ரெண்ணரும் வருத்தஞ் செய்துட ன் முறித்தே யெழுமுறி வாதரோ கத்தர். (கசரு)

கலைவிலா வடியா ளைக்கள வுறுத்துங் கடியர்கோ யழுகுபுண் ணு ட்டு, ருளைபெல மிலனைச் சுமக்கொணுப் பாரஞ் சுமத்தினோ ருற்று நீர்ச் செறுப்பர், வளமில்பொய்ச் சான்று பொய்வழக் குரைத்தோர் வருத்தும்வாய்க் கிரந்திபுண் ணோய,ரளியர்பொன் மறையோர் சிகை பிடித் தீர்த்தோ ரடைப்புநீர்க் கடுப்புக்கல் லெரிப்பர். (கசசு)

செட்டுநீ தியைநீத் தறக்கொடுஞ் செட்டுச் செய்தவர் நிறைதுலை குலைத்தோர், வட்டியை யறவாங் குநர்மட மையிற்றும் வாங்கிய தனிசுநல் காதோ, ருட்டெறு மிரண வாதநோய் குறைநோ யினர் தனி ரகசிய மொற்றித், தட்டறக் கேட்டோர் வெளிசெய்தோர் வரு த்தந் தணிவிலா நெஞ்சுளை நோயர். (கசஎ)

பிணியராய் வந்த பெரியனை நீத்தோர் பிறங்குகண் கால்கர நோ யர், தணிவறு நயன பாடையர் விறையாற் சன்னைசெய் தொருவருக் கொருவர், துணிவுறு சண்டை மூட்டினோர் வாயிற் றூர்க்கந்தநோ யரு ருணிக, ளணிகெழு மன்ன சாலைநீர்ப் பந்த ரழித்தவர் நீர்க்கோ வை நோயர். (கசஅ)

எருதுவர் தேறி வழிநடத் தின்வ,ரிடர்செயு மனைப்புண்ணி னோயர், மருவரு மனத்து வஞ்சகர் வாக்கு மாறினோர் பெரியர்சொ ன் மறுத்தோ,ரநிஞரை கேட்கிற் பாராமுகஞ் செய்தோ ரழுகுபுண் குட்டரோ கத்த, ருரைசெயி லநேக நரகசே டத்தா முறுபிணி சுருக் கினா மூரைத்தேம். (கசகூ)

தோற்றிய சுபத்தால் வாதபித் தத்தாற் றெட்டுநா லாயிரத் தொடுநா, னூற்றுநாற் பானு லிரண்டுநோய் பவநோய் நுவலுதற், கருமினை நோயர், மாற்றரும் பில்லி சூனிய நாள்கோண் மற்றெவற் றினும்பய முற்றோ, ருற்றிருந் தொழுகு நறைமலர்க் கடம்ப வனத் தில்வந் துண்மையா யெண்ணி. (கருo)

தடமலர்ப் பொற்று மனைப்புனன் மூழ்கித் தாவினீ றுருத்திர வக்க, மடைவினி லணிந்தஞ் செழுத்தையுச் சரித்தே யருட்டிரு

வணங்கலிற் றொழுது, மடவா ளுமையங் கயற்கணு மிகையச் சொக்க லிங் கத்தைமுன் வழுத்தித், திடமுற விவர்கின் மாலிய தீர்த்த மிருத் திகை தினமுமுட் கொண்டு. (௧௫௧)

மண்டல மொன்றே னும்மதிற் பாக மேனுநன் னியமமா வழி பட், டுண்டென மனத்தி லெண்ணிலம் மருந்தா லுறுபிணி பாதக மொழியு, மண்டர்நா யகன்ற னருளினு லெடுத்த சனனத்தின் முத்தி யு மடைவர், தண்டலி றவத்திர் கேண்மின்முக் காலுஞ் சத்தியம் புக ன்றன முண்மை. (௧௫௨)

வேறு.

என்ன மாதவத் தமிழ்முனி யியம்புதல் கேளா
முன்னை மாதவப் பேற்றினுன் மொழிதரக் கேட்ட
கின்ன லாவெமக் குரியதே சிகரெவர் நிகழ்த்திற்
பன்னு மாறெமக் கின்னமுண் டெனவவை பகர்வார். (௧௫௩)

அணிவெண் பூதிமற் றுருத்திர வக்கமஞ் செழுத்துந்
திணிவ ருஞ்சிவ காமநூல் சாற்றுறு விரதம்
பணிவு றுஞ்சிவ புண்ணியம் பகர்சிவ புராணந்
துணிவு றுஞ்சிவத் துரோகஞ்சொ லருஞ்சிவ பூசை. (௧௫௪)

குரும கத்துவங் கூறுமெய்ஞ் ஞானத்தின் றன்மை
யருளு மீசனுக் கற்பித மாகுமீ ரைந்தும்
பொருள்வி ளங்கிடப் புகலுதி யெனத்தவர் புகலத்
தெருள கத்திய னன்னவ ருளங்கொளத் தெரிப்பான். (௧௫௫)

விபூதி.

அரங்கை தீர்தவ முனிவிர்கா ளறைகுவங் கேண்மின்
கரங்கை வார்சடைக் கண்ணுதற் கற்புதப் பத்திற்
பரந்த பூதிமுன் பகருதும் பல்லுயிர்க் கெல்லாந்
புரந்து காப்பதும் பாகதி யளிப்பதும் பூதி. (௧௫௬)

வேறு.

எந்தை யநாதி கிட்டளமே சகளீ கரித்தின் றிறைவியையு
முந்தை முதல்வி யைந்தொழிலு முறைநீயீ னீயே யளித்தியெனத்
தந்தம் முதல்வன் சுவேச்சையா யிருந்தா ணந்தத் தனிமுதல்வி
யைந்து தொழிற்குங் காப்பாய்நின் னடையா ளந்தந் தருளென்றாள்.()

என்று முன்னங் தனைத்தானே யின்று தருமப் பெயர்சாத்தி
நின்றார் கலையி னுயர்தருகல் லறமே நிகழ்த்துஞ் சிலகலைமுன்
பன்று டவஞ்செய் பாற்கடலிற் பசுவா யுதித்தி யெனப்பணித்தா
னங்ந ளதுசென் றடைந்திப்ப வமிர்தங் கடைந்தா ரரிமுதலோர்.

நந்தை சுரபி சுமனையெழி னலஞ்சேர் சுசீலை பத்திரையென்
றைந்து பசுவாய்ப் பாற்கடலு ளரனூ ரருளா லவதரித்து
மூந்து சிவலோ கத்தடைந்து முயங்கு மிடபத் தொடுமிருந்த
தந்த வுலகங் கோலோக மதுவும் படிகத் தால்விளங்கும். (௧௫௯)

கோமா தாக்க ளாமவற்றைக் கூறுந் திருமா லயன்முதலோர்
தாமா தரவாற் பூசித்துத் தாழ்ந்து பணிந்து போற்றிடுவார்
மாமா தவத்தி ரவற்றினது பெருமை யெவரே வகுத்துரைப்பார்
மூவா துறையு முலகிலவை யிருக்குந் தான மிகப்புனிதம். (௧௬0)

துதிசா லந்தக் கோமயத்தை யெடுத்துச் சிவன்சொல் லாகமநூல்
விதியால் விளைத்தந் நீறள்ளி யினிர்தன் றிருநெற் றியிற்றரித்துக்
கதியார் பூதி யிதுவேகாப் பென்று விமலை கைக்கொடுத்தான் [ளாக்
மதியார் நுதலா டானணிந்தைந் தொழிலோ ரெவர்க்கும் வழங்கின

அருமா மறையின் றுணிவிதுவென் றெருக்கா லுரைத்த தன்ற ருள்சேர், பெருமா னுருவே வெண்ணீறு பேசிற் பிறிதொன் றிலை ப்புவனி, புரிமா தவத்தா லிமையவர்க்கும் புகழ்பூ சுரர்க்கும் பூசக ர்க்குந், தருமா தரவாற் பசுக்கணெறி தழைக்கநிலத்தின்வந்தனவால்.

ஆவின் பெருமை யெவருரைப்பா ரவற்றின் சிருங்க மத்தியினின்
மேவுஞ் சிவனங் கிருபாலும் வேத னெடுமா லுறைந்திடுவர்
தாவி னுனிதங் குஞ்சர்வ தீர்த்த முயர்தா பரசங்கந்
தூவன் னெற்றி தனிலமருஞ் சுடர்வேன் முருகன் கணபதியும். ()

மூசு நாசி யிருபுடையின் முயங்குஞ் சேட்டைமொய்செவியிற், றேசு பெறுநன் மருத்துவர்கண் ணிணையிற் றிகழ்செங் கதிர்மதிய, மாசில் பல்லின் மாருதநா வருணன் வசிக்கு மூங்காரத், தோசை பெ றுவெண் டாமரையா ளுறையுங் கபோலத் தியக்கர்நமன். (௧௬௪)

அதர மிரண்டிற் கந்தரத்தின் மகவா னமருங் குரநடுவிற்
றிதமா ரிசைக்கந் திருவர்நுனி சிறக்கும் பாந்தட் டொகைகுரமேன்
மதர்வா ளரிக்கண் ணரமகளிர் வருமா கணங்க ளினிதுறையும்
பதமார் தசநா டியினுமுருத் திரர்தா முறைவர் பாங்குறவே.(௧௬௫)

யசையார் தருமென் சந்துகளின் பலவா யுக்க ளினிதமரு
நசையார் தருநான் முலையடியிற் பிதிர்தே வர்களுன் முலைநுனியில்
விசையார் தரங்கக் கட்லுளத்தின் மேவு முமையின் னுதரத்தி
லிசையார் தருநன் னிலமகண்மரல் வரைக ளிருங்கா னகமியையும்.

தனிநீள் வாலின் யோனியினிற் றங்குங் கமலை யுரோமமெலா
நனிசேர் தேவர் முனிவர்கண ளுங்கோ மயமே முதலைந்தின்
பனிசேர் மலரோ ளுதிசதா சிவமீ றுறையும் பகர்பசுவின்
புனித மெவரே புகன்றிடுவார் பொருள்சேர் வேத வடிவாகும். ()

தாவில் கபில நிறநந்தை தவளஞ் சுரபி மறையோர்க்கா
மேவு சுமனை நிறஞ்சிவப்பு விறல்சே ரரசர் தமக்குரித்தா
மேவ மகலுஞ் சுசீலைநிற மிசைதூம் பிரஞ்சொல் வசியருக்காம்
பூவி லுயர்பத் திரைகருமை பொங்கு நிறஞ்சூத் திரர்க்காகும்.(க[illegible])

வேறு.

சாந்தி கம்பவுட் டிகந்தனிக் காமத மெனவு
மேய்ந்த மூவித மியம்புங்கோ மயமெடுத் திவற்றி
னாய்ந்த சாந்திகம் பிரமமோ ரைந்தினு லாவின்
பேர்ந்த யோனியிற் படாதுபூ மியின்விழா தேற்றே. (௧௬௯)

எற்ற கோமய மியம்புமந் திரத்தினுல் விளைத்தல்
சாற்றும் யோனியிற் [illegible]க்கிநன் னிலத்தின்வீழ் மயத்தை
மாற்றி மேலொடு கீழ்நடு மயஞ்சடங் கத்தா
லூற்ற மேபெற விளைத்திடல் பூவுட்டிக முறைக்கும். (௧௭௦)

புவியின் வீழ்மயம் பிராசாத மந்திரம் புகன்று
விவித மாமுழு வதுமெடுத் துரைத்தமுன் மனுவா
னவையு ருதவை விளைத்திடல் காமத நாதன்
[illegible]புரி கேட்பமுன் னுரைத்தது கழறுவழ் விரித்து. (௧௭௧)

ஒன்று கற்பமோ டநுகற்ப முபகற்ப மகற்ப -
மென்று சிற்பர நீறுநால் வகைப்படு மிவற்றுட
னொன்று கற்பத்தி னீற்றினுக் குரியதாய்ப் பசுக்கண்
ணின்ற வத்திறம் புகலுவங் கேண்மின்மா தவத்தீர். (௧௭௨)

ஈன்பெ ருக்கன்னி கொடுவைமூப் பிலக்கண மின்மை
வான்சி னைப்பசு வால்செவி கொம்பறை வந்தி
யான்ம லங்களைப் புசிக்குமா நோய்ப்பசு வீன்று
பான்மை சேர்பதி னைந்துநா ளுட்படும் பசுக்கள். (௧௭௩)

இறந்த கன்றுடைத் தாய்முடங் குருடிருஞ் செவிடு
மறைந்த தீங்கெனத் தகையலீ ரெண்குறை யகற்றி
நிறைந்த நற்குண மழகுமுன் னிகழ்த்திய நிறத்தா
சிறந்த பங்குனிச் சாலித்தாண் மேய்ந்தவை சிறப்பாம். (௧௭௪)

விடியு மூன்னெழுந் தனுட்டானம் விதிப்படி முடித்துப்
படியு சுழ்ந்திடும் பசுவுறை கோட்டத்திற் சென்று
வடிவ மைந்தகோ சாவித்ரி யென்னுமந் திரத்தாற்
கடிகொள் சந்தமுங் கமழ்நறு மலர்களுஞ் சாத்தி. (௧௭௫)

இலங்கு தூபதீ பங்கொடுத் தினியதூ யன்ன
நலங்கொள் பாகிலே நிவேதன நல்கிநற் பசுவைப்
பலங்கொ ளன்பினுற் பணிந்தருச் சனைபுரிந் ததற்பின்
வலிப்கொண் மந்திரஞ் சதஞ்செபித் தேற்பர்கோ மயத்தை. (௧௭௬)

சாலு மீருவா வட்டமி சதுர்த்தசி கிரண
கால மின்னதில் விட்டகோ மயத்தையக் கணத்தி
ஞாலும் பூமியில் விழாதுமுன் னம்புய விலையா
லேலும் வரைமைமெல் விலைநறும் பலாசிலை யிவற்றால். (௧௭௭)

ஓதும் யோனியிற் படாதுமே லாகவொண் சித்யோ
சாத மந்திரத் தேற்றுமேல் வழும்பினைத் தள்ளி
யாதி வாமத்திற் கவ்வியம் பெய்தகோ ரத்தாற்
போத நன்குறப் பிசைந்துதற் புருடத்தி னுருட்டி. (௧௭௮)

பன்னும் வெய்யவோ மத்தினிற் பதடியோ டமைத்து
மூன்னு ரைத்திடு மகோரத்தால் விளைவித்து மொழிந்த
விந்தி லங்கொழு பாகங்க ணீசானத் தெடுத்து
மன்ன லந்தரும் புதியதூ யாடையின் வடித்து. (௧௭௯)

சங்கு பொன்வெள்ளி தாமிர பாத்திர மடைவிற்
றுங்க வுத்தம மத்திம மதமமுஞ் சொல்லு
மிங்கி தன்றியு மண்சுரை பித்தளை யிவையும்
பங்க மில்லதாம் விளங்குமப் பாத்திரத் தமைத்து. (௧௮0)

வண்ண வெண்பொடி யிறையுரு வெனமனத் தெண்ணி
கண்ண ரும்பஞ்சப் பிரமநற் சடங்கமு நயந்தே
யெண்ணு தற்கரும் வியோமவி யாபியென் றிசைக்கு
மண்ணன் மந்திர மிவற்றினு கமவிதி செபித்து. (௧௮௧)

நறிய சண்பகங் கேதகை பலாசம்புன் னைகஞ்
சிறிய சண்பகந் தாமரை துளவுபா திரிப்பூ
வெறிக ருப்புரம் வெட்டிவேர் மருவிலா மிச்சுக்
குறிகொண் மல்லிகை தக்கோலங் கொழுந்துநா யுருவி. (௧௮௨)

தருப்பை யின்னுனி யாகமஞ் சாற்றுமற் றெவையுந்
தெரிப்ப ருஞ்சத்யோ சாதமீ சானமுஞ் செபித்து
மருப்ப யின்றவெண் பூதியுண் மணங்கொளச் செறித்து
விருப்ப முற்றுவெண் ணீற்றின்கா யத்திரி விளம்பி. (௧௮௩)

சுத்த மாகிய நிலத்தில்வைத் தணிமலர் சூட்டிப்
புத்தி யீதென வண்டுகில் வாயினிற் பொதிந்து
பத்தி சேர்கவ சத்தவ குண்டனம் பண்ணி
யத்தி ரந்தெறித் துத்தேனு முத்திரை யடைவாய். (௧௮௪)

மூலத் தாற்கொடுத் திடுவரம் முழுவெண்ணீ றெடுக்கி
னேலத் தாஞ்சிவ மந்திர முச்சரித் தெடுப்பர்
ஞாலத் தார்தொழும் பெரியார்முற் கற்பநா நவின்றோருஞ்
சீலத் தார்பஞ்ச வில்வத்தால் விளைத்தலுஞ் செப்பும். (௧௮௫)

கற்ப மித்திற முத்தம மிருத்தலுங் கருதி
யுற்ப னத்தொடன் றெடுத்தகோ மயத்தையன் றுருட்டி
யற்பி னுக்கினுஞ் செலீறுவே றுணக்கியே யடினு
நிற்ப தப்பெய ரநுகற்ப நிகழ்த்துதுங் கேண்மின். (௧௮௬)

இணங்கு சித்திரைத் திங்களிற் சேறிவனத் தெய்தி
யுணங்கு நன்மயங் கொணர்ந்திடித் தூரியகவ் வியம்பெய்
தணங்கொர் பாகனன் றறைந்தமுன் மனுப்படி விளைப்பார்
கணங்கொண் மாதவத் தீருப கற்பத்தைக் கழறில். (௧௮௭)

இலங்கு நீள்வனத் துணங்கிய மயங்கொணர்ந் திடித்து
நலங்கொள் கோசல மொன்றுமே பெய்துமுன் சொலின்ற
வலங்கொ ளாகம விதிப்படி மனுமொழிந் தடைவின்
பலங்கொ ளப்பிசைந் துருட்டிவைத் தெடுப்பர்பாங் கறிந்தோர். ()

அகற்ப மாவன வனத்திற்று பாக்கினி யதனால்
விகற்ப மின்றியே யியற்கையின் வெந்தவெண் பொடியை
யுகப்ப வேகொணர்ந் தானைந்தும் பெய்துமுன் னுரைத்த
வகைப்ப டுத்திறன் மந்திரத் துருட்டிவைத் தெடுப்பார். (௧௮௯)

சான்ற நூல்புகல் சர்வசங் காரகா லத்திற்
றோன்றும் யாவுந்தன் னுதல்விழி யங்கியாற் றொலைத்து
நான்ற வார்குழை பாகனம் மயானத்து நடித்தா
னன்ற நீறெலாந் தோய்ந்திட மேனியி லவற்றை. (௧௯௦)

திருக்கரத்தினால் வழித்தெறிந் தனன்றிகழ் விடைமுன்
விருப்பி னாலவை யயின்றந்த விடைதன்வீ ரியத்தை
யருப்பமீக்கொளப் பசுக்கள்பால் விட்டதப் பசுக்கள்
பெருக்கு கோமயம் விபூதிக்கு விசேடம்பே சினவால். (௧௯௧)

நீற்றின் மிக்கது கோமயத் தாக்குவெண் ணீறே
யேற்ற மாயின தாதலிற் காரண மிசைத்தே
மாற்றல் சான்றிடு முனிவிர்கா ளாதியோ டந்தந்
தோற்ற மீறிரண் டிற்குங்கா ரணந்தொகு பூதி. (௧௯௨)

வேத ராதிய மூவர்க்கும் விமலனா லயத்து
மோது சூத்திரர்க் குயர்மடப் பள்ளியி னகத்து
மேதந் தீர்குறை யேனையர்க் கடவித்தீ யிடத்தும்
போத வாக்கிய நீறுரித் தாமெனப் புகலும். (௧௯௩)

பரவு நீலந்தீப் பிணிசிவப் பிசையின்மை பகர்தூம்
பிரநி றத்தவா யுகந்தெறும் பீதநல் குரவா
நிரவு மித்திற நிறம்படா தெடுத்திடு நீற்றி
னுரவு வெண்ணிற மெண்ணிலாப் புண்ணிய முதவும். (௧௯௪)

அங்கு லம்மொரு பானிரண் டியரத்தி னகலந்
தங்கு மெட்டள வாடையாற் றணிப்புலித் தோலாற்
பொங்கு கான்மிணை யுரிவையாற் பொருந்தவாய் வட்டந்
துங்க நீறடைத் திடுமொரா லயஞ்செய்வர் தூயோர். (௧௯௫)

பூதி யாலயஞ் சத்தியன் னதிற்பூனை தருநூ
லாதி நான்முகன் பதிக்குங் கயிறுமா லதனுட்
டீது தீர்தர வுறைவெண்ணீ றருட்சதா சிவமாம்
வேத வாகம மித்திறம் புகன்றிடு மெய்ம்மை. (௧௯௬)

ஒருகை யிற்கவர்ந் தனதுகிற் றலையின வொருவர்
தருவி லைக்குவாங் கினவதிக்கையரளித் தனமுன்
கருது பூதிகங் கவிழ்ந்துமங் காந்துங்கம் பித்துந்
தெருவெ றிப்பட நடந்தும்பூ சினதருந் தீங்கு. (௧௯௭)

அந்த ணாளர்தம் பதாந்தமே யளவுமுத் தூனம்
வூந்த காவலர் நாபிமேல் வணிகரா யவரு
மூந்து பட்டம்போன் மூவிரற் கொண்டெழுந் தாகச்
சிந்தை செய்துருத் திராணி குவர்விதித் திறத்தால். (௧௯௮)

நுதலு ரம்புய நுவன்றிடு நெடுமைநீற் றளவை
மதிகொண் மூவிரு விரற்களா முற்றவற் றென்றுந்
துதிகொள் சென்னிக்குங் காதிற்குந் தொடுதலே போதும்
பதிகொண் மூவிரற் படவணி குவர்பக ருறுப்பின். (௧௯௯)

வளைத லுந்நடு விழத்தலும் வன்மையு மாசு
மளவி யொன்றொடொன் றுறுதலு மறப்பிரிந் திடலும்
விளையு மூவிரு தீக்குணம் விளங்கநீ றணிந்தா
ருளைவு றுங்குறை யிலாதவர்க் கலக்கண்வந் துறுமால். (௨00)

பூசை மந்திரந் தியானநூல் புரிதவம் வணக்கம்
பேசு நீறின்றிப் பிறங்குமெக் கிரியையுஞ் செய்யார்
பூசி லந்தணர் மகத்தினுக் கனைத்தும்வந் துறினுந்
தேசு றும்விதித் தீயின்றி முடியுமோ முடியா. (௨0௧)

அரன் முன்னுநூ லுறைதரும் யாகத்தின் முன்னுங்
குரவன் முன்னுநீ றணிவது தீதவை குறியார்
பரவு பூதியோ ரணுத்துணை பாரிடை வீழ்ப்பின்
விரவு மெண்ணிலாக் கற்பங்கள் வெந்நர குழப்பார். (௨0௨)

தொகுத்த வாழ்க்கையாற் பூதியுஞ் சோதிமேற் றலாற்
பகுத்த நூல்புகல் பசிதமும் படுமலம் பிணிமா
சுகுத்த லாலுயர் கார * முங் காத்தலாற் காப்பு
மிகுத்த தீதுநீற் றிடுதலா னீறும்பேர் விளம்பும். (௨0௩)

[illegible]த ணிந்திடிற் கழுத்தள வுறுபவந் தீரு
மூரத்திற் பூசிடி னுள்ளத்தால் வரும்பவ மொழியுந்
தரிக்கி னுபயி னிலிங்கத்தால் வருபவந் தணியும்
பொருத்து பாரிசத் திடின்மடந் தையர்ப்புணர் பவம்போம். (௨0௪)

ருதத்தி னுக்குமேற் பூசிடிற் குதத்துறு பவம்போம்
விதித்த திண்புயத் திடிற்கையாற் செயும்பவம் வீடுங்
கதித்தி டும்முழந் தாளினி லணிந்திடிற் காலான்
மதிக்க வேவரும் பவங்கதிர்ப் பனியென மாறும். (௨0௫)

---

* க்ஷாரம் என்னும் வடமொழி காரமென்றாயிற்று.

பாகத் தாலுறு நீற்றினை யின்னமும் பகர்வாம்
யாகத் தானவெண் ணீறுநால் வருணர்க்கு மிடலா
மோகத் தார்வினை களைதரு மீதன்றி முதன்மை
மாகத் தார்தொழு மியற்கைநீ றதிகுய்யம் வழுத்த. (உ0கூ)

நீறு பூத்தன னழல்வடி வியற்கைவெண் ணீற்றைப்
பேறு கல்குவோன் மூலகா ரணம்வெரி தகெனு
வீறு பல்லுயிர் நரகுறு வாறுமென் மருந்தாய்க்
கூறி னன்காத் தால்வழித் தம்மைகைக் கொடுத்தான். (உ0எ)

விரித ரும்புகழ் நீற்றினை யறிந்துமே லணியா
ரரிதி னுற்றறீர் பதிதராய் விடுவரந் தணர்க்குஞ்
சுருதி யோதுநீ றிடாமுகஞ் சுடலையம் முகத்தைக்
கருதி நோக்கினு றஞ்செழுத் தோதுவர் கற்றோர். (உ0அ)

வேறு.

ஆலவா யெல்லையினு ளகப்பட்ட சாம்பரிவற் றதிகங் காழிப்
பாலனார் பூழியன்வெப் பமணழித்து வாதுவென்ற பான்மை யாலு
ஞாலமேழ் பரவுசிவ சைவசம யம்பொருளா நாட்ட லாலு
மேலவார் குழல்பாகன் றென்மதுரைக் காகுச மின்மை யானும். ()

எங்கீறு பூசினுந்தென் னுலவா யான்றிருநீ றென்றே பூசிற், ப ன்னூறு கோடிசன னத்தறிந்து செய்தகொடும் பாவந் தீரு, முன் னூறு படுத்தவரு கமனையுங்கா ணார்முடிவின் முத்தி சேர்வார், நன் னீறு தனையணிந்தோர் பெற்றவா சிலவுமக்கு நவில்வாங் கேண்மின்.

முன்னமொரு பிரளயத்து நான்முகனு தியரொடுங்க முராரி யான்மேற், றன்னகந்தை மிகுந்திருப்ப வவனுதலிற் சங்கரன்வெ ண்ணீறு சாத்த,மன்னகந்தை நீங்கியவண் மோகினியாய் மருவியுந்தி வனசத் தின்று, பின்னொருநாள் முக்கண்யும்பேறு றிவும்பெற்றான் பி றிதில்சிவன் பொருளென் றெண்ணி. (உகக)

தீமையுறு பிரமரக் கதவொருவன் பாதகமே செய்வான் முன்னர்
வாமதேவப்பெயர்மா தவனனுக்கண்டறிவு வாலுந் தாழ்ந்து
தாமநீ றொளிருமவன் மேனியைத்தன் மேனியினுற் றழுவி வேளுங்
காமுறுநல் லுருப்பெற்றுப் பூதியுமெய் யணிந்துசிவகதியும்பெற்றான்.

தென்னவனுட் டொருமறையோ னயன்மாதைச் சேரவவன் கொழுநன் சீறி, யன்னவனு ருயிர்செகுத்தீர்த் தாவணத்திட் டான் கிடக்கு மவனீ ணெற்றி,தன்னிலட் டலயிற்கிடந்த சுணங்கன்கா னி

றுபடத் தரித்த லாலே,கொன்றுறுவே னமன்படைத் தூரந்துகணம் விடுக்கயிலே குறுகி றுனல். (உ௧௬)

தன்னையறி யாதுடலி னீறுபரி சித்தோரித் தன்மை பெற்றார், றன்னிலறிந் தணிந்தோர்கள் பெறும்பயனிவ் வளவையென விசைக்கற் பாற்றோ, பின்னுமதிச் சடைமௌலிப் பெம்மானே யிவர்வேறு பிறிதொன் றன்றா, லன்னவரை நரனென்போர் நரகாழ்வ ரமல னென்போ ரரனே யாவர். (உ௧௭)

வேறு.

இயம்பிய நால்வகை நீறு மிங்கிவை
வயம்பெற வணிந்திடு மாறு மாறிலா
வியம்பெறு புண்ணிய விளைவுஞ் சொற்றன
நயம்பெறு கண்டிகை நவில்வங் கேட்டிரால். (உ௧௮)

உருத்திராக்கம்.

வேறு.

திரிபுர ரெனும்பே ரவுணராற் சிதைந்து சிந்திய மான்முதற் றேவர், புரிதரு தவமோ ராயிரம் வருடம் புரிந்திட வியந்துபோய்ப் புராரி, யரிதிதென் றிரங்கிக் கண்ணிமை யாது பார்ப்பமுக் கண்ணினு மமைந்த, விரிதுளி தாழ்ந்து கண்டிகை மரமா யெழுந்தது விழுந்ததொண் புவியில். (உ௧௯)

அன்றுதொட் டுருத்தி ராக்கமென் பெயர்முப் பானுடெண் பேதமாம் வெண்மை, யொன்றிய சிவப்பவ் விருநிறங் கலந்த வுரைத்திடுங் கருமையிந் நான்கின்,றொன்றுநான் மறையோன் வெண்மை மன் சிவப்புச் சொன்னிறங் கலந்தது வணிகன், வன்றிறற் கருமை சூத்திரன் சாதி வருணநால் வர்க்குமிவ் வகைத்தாம். (உஉ0)

ஒருமுகஞ் சிவன்றன் வடிவுநான் மறையோர்ச் செகுத்ததீங் கொழித்திடு மிரண்டா,மருமுகஞ் சத்தி சிவம்பசு வதைத்த வன்பழி மாற்றுமும் முகந்தீப்,பெருகுபெண் கொலைநீத் தருளுநான் முகனுன் முக னிழை நரகத்தி போக்கு, மருவைமையைம் முகங்கா லாங்கிருத் திரனுனுரித்தலர்ப் புணர்ச்சிபொய் யகற்றும். (உஉ௧)

அறுமுகன் வேலன் வலக்கையி லணிவ தகன்றிடும் பிரமகத்தியுமே, யுறுமுக மனந்தன் கோக்கொலை யொடுபொற் களவினும்

வருபவ மொழியு,மறுவிலெண் முகம்வா ரணமுகன் குருபன் னியை த்தொடல் வருதுலை முதலாப், பெறுபல தானம் பிறன்மனையி லன்ன மேற்றிடும் பிழைநீங் கிடுமால். (உக௯)

இயம்பிய வொன்பான் முகத்துவயி ரவனு மிடக்கையிற் றரிப்ப து வல்பார், வயம்பெறு தக்க கன்முத லரவம் வதைத்தல்போ முத் தியு மெய்து, நயம்பெறு மொருபான் முகந்திரு நெடுமா றனொடு கோள்பெறும் பூத, முயங்குபேய் பிரம ராக்கதன் மற்று முடற்றிடும் பெரும்பய மொழியும். (உஉ0)

பதினொரு முகம்பன் னோருருத் திராம் பகர்பரி மேதமா யிரம் பன், னிதியொடு கோதா னம்மொரு நூறு யிரந்தரு பயன்களை நிறை க்குங், கதிகொள்பன் னிருமா முகங்கதி ரொருபா னிரண்டதாங் கா ஞ்சன மேரு, விதிதரு தானம் புரவியச் சுரபி மேதநல் கியபயன் றரு மால். (உஉக)

செறிதரு பதின்மூன் றுமுகங் கந்தன் சிந்தையில் வேட்கைபொன் னிரத, நெறிதரு சயமு மளிக்குநற் றுணைநாய் தந்தையர்த் தெறுங் கொலை நீக்குங், குறிதரு பதினான் முகஞ்சிவஞ் சத்தி கூறும்விண் ணவர்தவ ரிறைஞ்ச, வறிதரு வசிய நல்கியூ ழியினு மழிதரா வுலகி லுய்த் திடுமால். (உஉஉ)

கிளத்திய பதினான் முகம்பெற லரிது கிட்டுமேற் கண்டத்திற் றரி ப்ப, துளத்தினி னீங்காச் சிவன்சத்தி மந்தி ராதியு மேய்ப்பதொண முத்தி, விளைத்திடும் பதினைம் முகம்பர நாதம் விளம்புமெய்ப் பாவமும் வீட்டுங், கிளைத்தெழுங் கருணைச் சோதியோ டொன்றித் தீர்வினா முத்தியிற் சேர்க்கும். (உஉ௩)

நீசராங் குணுங்கர் குணுங்கர்கன் னியரு ளூறியிலா மதுமுதல் புசித்தோர், ரீசனு ரருட்கண் மணிசிரந் தரித்தா லிருவினை தொலைத் தா னுவர், மாசிலாங் குலத்த ராயினு மீசன் கண்மணி வணைந்திடார் நீசர், சீசியன் னவரைத்தீண் டினுமதி பாவ மணிகிலா ரலக்கணுர் தெ ரிப்பார். (உஉ௪)

வேறு.

உச்சியி லொன் றணிசிரத்தி னொருமுப்பத் தாறெண்ணான் கொளிர்கண் டத்தி, லிச்சையுறு செவிக்கவ்வா றுரத்திலைம்பான் கை த்தலத்தென் னிரண்டீரா றும், லிச்சைதரு மணிக்கட்டிற் றுழ்வட

ங்க ளூற்றெட்டும் விளங்கச் சாத்தி, நச்சிநடங் திடுமேடிக்கோ ரய்
மேத நவிற்றிலுருந் திரனே யாவர். (உஉரு)

காணினுமக் கண்டிகையின் பயனிலக்கம் பரிசிக்கிற் கோடி க
ண்டு, பூணினுமா யிரங்கோடி, செபத்தனந்தம் பயனிமையோர்
பூசைக்கேற்ற, தானுவைப்போ லுவர்பகைக்குந் தாழ்ந்தடங்கார்
தணந்தரிக்கிற் சுணங்கற் கேனுமானுறுநற் கதிகொடுக்கும், புகழ்ந்த
ணிந்த மானிடர்க்கென் புகல்வ தம்மா. (உஉசா)

சிகையினிற்கண் டிகைதரிக்கிற் பயன்கோடி திண்செவியி லொரு
பான் கோடி, மிகையறுகந் தரத்தினிலா யிரங்கோடி மிளிர்கரத்தி
லனந்த மாகும், பகைதருவெந் தீவினைக ளத்தனைசெய் தோருமிது
பரமென் றெண்ணித், தொகைபெறுநாட் கழித்திறுங்கா லருந்துவ
ரேற் பிறப்பவரைத் தொடரா தம்மா. (உஉஎ)

நீங்கரிய முப்புரிநூ லின்றிமறை நிகழ்த்துவதெவ் வாறவ் வாறே
தாங்கரிய கண்டிகையும் புண்டரமுந் தரித்திடுமந் தணருக் கேனு
மோங்கியிடத் தவ்வாறு தரித்திலரே னீராட லோத லீதல் [தால்.
பாங்குபெறத் தென்புலத்தோர்க்குதவுதலர்ச்சனைமற்றும் பயன்படா

*கண்மணியா யிரந்தரித்தோர் சிவனெனமான் முதற்றேவர் கரு
திப் பூசை, பண்ணுவார்மா முடிதரித்து மூழ்கியிடிற் கங்கைபடி பல
னுங் காதி, லெண்மணியை முழுதுமணிந் தவர்மூவேழ் சுற்றமிடர்
நரகு நீங்கு, மொண்ணவ்மா டிணிபடிகம் பொன்னிடைகோத் தணி
யிலவ ருறுவர் முத்தி. (உஉகூ)

ஏகமுக மைந்துமுகம் பதினொன்றே ழிரண்டுமுக மிவற்றை
யெண்ணி, வாகுறுமந் சனம்புரியா தன்பினொடு முளமிரங்கி வழுத்
தி யீச, னாகமநூல் விதியினருச்சனைசெய்வோர் செல்வமுத்தி யடை
வர் நாரி, பாகனுருச் சின்மயமா மணியணிந்தோர் பெற்றகதை பக
ர்வாங் கேண்மின். (உருO)

நந்தியெனு மொருநகர்வா ழீசனு லயத்தடிச்சி நங்கைப் போராள்,
விந்தைசெறி சேவலொன்று வானரமொன் றிற்கும்மணி மிலைந்து
தானும், புந்தியுறத் தரித்தவற்றோ டாள்கயிலை யடைந்தனள்போய்க்
கழுதை யொன்று, நந்துமணிப் பொதிசுமந்து விந்தையினி லிறந்துக
ற்பங் கயிலை நண்ணும். (உருக)

புட்கரதே யத்துமன்னன் சவுமியன்றன் மனையொருவிப் பொய்
ம்மை மாதர், நட்புறுவா னவன்மனைவி வசுமதியும் வேள்கணையூ
னலிந்து வாடிக், கட்புலனீ ரொழுகவருந் துறுவாள்கண் மணிதரி
த்தக் கணவற் சேர்ந்தாள், கொட்புறுமம் மனன்றரித்தொன் ஞர்புவி
யுங் கொண்டனன்போய்க் கயிலை புக்கான். (௨௩௨)

கனைகழன்மே ஞட்டரசன் ருணைக்கண் ணன்கால ஞானி
யென்னு, மனைவியொடு மிகவிநீ பதியெனக்கு நிற்குநான் மனைவி யர்
வேன், புனைசுவர்ச்சித் திரமாயன் புகலிலென வவன்கண்மணி பொ
ருளென் றோத,வனையன்மட வரலாரு னவள்புருட ஞுளுள்சேர்ந் தா
ன்ருள் சேர்ந்தார். (௨௩௩)

உருத்திரவக் கம்புனைவோர்க் கனமிடும்வே தியன்சுப்ர தீபனே
ங்கு, மருத்தியினு லவனருளால் விண்ணகர்போய்த் தருக்கொணர்
ந்தே யளிக்கும் பூனை, வருத்துபசி யால்வந்த மறையவனே டிகலு
மறு சமயி யான,விருத்தமறை யோகரங்கள் கண்மணிபூண் டரன்க
யிலை மேவி னால். (௨௩௪)

மிளிர்கலிங்க நாட்டுவியாக் கிரபுரத்தோர் வேதியன்சா மித்ர
னென்போன், களவினின்மேம் பட்டோன்பல் லுயிர்செகுத்தோன்
வளர்த்தமறைக் கள்ளத் தாதை, தளர்வுறவே செகுத்தயன்மா தைப்
புணர வன்னள்கிளை தடிய வீந்தான்,றினைதரநா ளாளிற் காகமணி
யுடல்வீழ்ப்பக் கயிலை சேர்ந்தான். (௨௩௫)

மாகரநாட் டுறையுமொர்வே தியன்மதலை சாந்திகனோர் மணி
மேற் பூண்பான், சாகரநாட் டரசுகொளத் தான்காளி நரபலிக்கு
விலைப்பட் டேகிமாகரநாட் டதுவிலக்கி யவ்வரசன் மகளைமணந் தர
சா யிந்து, சேகரன்கண் மணியணிவித் தவன்கிளைதன் கிளையொடு
ம்போய்க் கயிலை சேர்ந்தான். (௨௩௬)

அக்கமா மணியணிந்தோர் பெற்றகதை யிற்சிலநா மறந்தோ
மம்பொன், மிக்கதா மிரம்வெள்ளி யியன்றவற்றாற் பொதிந்தவற்று
ல் விளங்கும் பின்னற், றெக்குறுகம் பியிற்கோத்துப் பெரிதணிந்
தோர் முப்பொருளுந் தெளிந்த தூயர், தக்கமணி யணிந்தோரைச் சி
வமெனவே பணிப்போர் தக்கோர் தாமே. (௨௩௭)

உரைத்தனமா மணிப்பெருமை படிப்பவரீ துண்மையென வுவ
ந்து கேட்போ, ரிரைத்தநதிச் சடையோனை நிகர்ப்பர்மணி வெ

ண்ணீரே டியைந்து பூண்டு, நிரைத்ததிரு வஞ்செழுத்தை யுச்சரித் துந் நிலையுணர்ந்தோர் நேர்மை யாரே, வரைத்துரைப்பா ரறிந்தவா றொருத்திசைப்பே மென்னமுனி வரர்க்குச் சொல்வான். (உ௩௮)

பஞ்சாக்கரம்.

வேறு.

அருளை யஞ்செழுத் தாக்கியே யம்பிகைக் கமலன்
பொருள்வி ளங்கிடப் புகன்றநிம் மந்திரம் புகல்சற்
குருவ றிந்துளந் தேறுறத் தெளிப்பதாங் குணித்து
வருப யன்பெற வுணர்ந்துளோர் பேற்றையார் வகுப்பார். (உ௩௯)

அஞ்செ ழுத்தினு ளோரெழுத் தின்பய னளவை
கஞ்ச நாண்மலர்க் கண்ணனுங் கண்ணனுங் காணார்
செஞ்ச வேபிர ணவத்தொடுஞ் சேர்த்தியுச் சரிக்கிற்
பஞ்ச பாதக ராயினும் பரனெனப் படுவார். (உ௪0)

இன்ன வஞ்செழுத் துணர்வி னுமுயிர் சென்று
பன்ன காபர ணன்பதஞ் செறிந்திடும் பரிசா
லன்ன மந்திர மேபரப் பிரமமா துணர்ந்து
மன்னு வோர்கிழற் படினுங்காண் னினும்பவ மாறும், (உ௪க)

மூன்று காலமு மாலயத் தணுகிமுக் கணன்று
ளூன்றி யேதொழு துள்ளத்தவ் வஞ்செழுத் தெண்ணிற்
றோன்று புண்ணிய மியாவுமங் கடங்குந்தொல் வினைபோ
மேன்ற பார்புரந் திருங்கதி மூவரிற் பொலிவார். (உ௪௨)

வேறு.

மந்திரித்த விறையெழுப் புத்திரசீ வத்தொருபான் மணியாஞ் சங்கி னந்தமொரு நூறுபளிங் காயிரமுத் திலக்கநறு மரையின் கோடி சந்திரத்திற் பதின்கோடி குசைமுடிப்பா யிரங்கோடி தானு வான மூந்துசிவன் கண்மணியின் பயனனந்த மெனவேத முடிபுசொல்லும்.

வளமனையி லொன்றுபசுத் தொழுவிலொரு பதுநதியின் மருங்கு நூறு, ளொர்தருமா லயத்திலுளா யிரம்வனத்து விலக்கமுயர் கிரியிற் கோடி, மூளைமதிச்செஞ் சடைமவுலி திருமுன்ன ரளப்பில்பயன் முற் றும் பெற்ற, வுளமுறவஞ் செழுத்தாதி கண்மணித்தா ரெடுத்துணர் ந்துச் சரிப்போர்க் கம்மா. (உ௪௪)

திரைத்தகடற் புவிபோற்று மஞ்செழுத்தைச் சிந்தைசெய்து தெளியப் பெற்றோ, ரிரைத்தமறை யாகமநூல் விதியறிந்து செபிப்பர்முறை யியல்பு கூறி, னிரைத்தசெப வடங்களைநூற் றெட்டென்று மதிற்பாதி நிகழ்ந்த தென்று, முரைத்திடுவ ரதிற்பாதி யளவினென்று மின்னுமுரைத் திடுவாங் கேண்மின். (உ௪௫)

முத்திநெறிக் கையைந்து சோபனத்திற் கியம்பியமூ வொன்பரன் கூறு, மெத்துநிதிக் கொருமுப்பா னைசா ரத்தொழிற்கு மேவைம்மூன்று, வித்தன்மணி வடந்தொடுப்பின் மேற்குமேல் கீழ்க்குங்கீழ் மேரு மேலாய்ப், பத்திபெற வொன்றுபடுத் திடைமுடிந்து தொடுப்பர்பரம் பரனூல் கற்றோர். (உ௪௬)

உடல்வெறுத்தான் மேல்போக்குங் கீழ்போக்கு முறுபோகஞ் சார்வான் மேரு, வடைவுபெற விலங்கியா தனுமிகையே மத்திமைதர்ச் சனியங் குட்டம், நிடமுறவே வடகடத்திற் பிணியறலுந் தனம்புகலுந் தெவ்வர் மாய்ப்பு, மிடரறுகன் முத்தியடை தலுமடையு மென்பர்கதிக் கிலக்கஞ் சொல்வார். (உ௪௭)

வேறு.

இனைய தாகிய வஞ்செழுத் தெண்ணியே
வினையி னீங்கின ரெண்ணிலர் மேதக
வனையர் பெற்ற வருங்கதை யிற்சில,
முனைவிர் கேட்குதி ரென்று மொழிகுவான். (உ௪௮)

வேறு.

மதுரையம் பதிவா ழெதுகுல மன்னன் றசாருகன் காசிமன் மகளாம், புதுமதி வதனக் கலாவதி யின்னை வேட்டனன் புணர்ந்திடப் புகுங்கால், விதுநதி வேணி யஞ்செழுத் தோதி மேவெனக் கர்க்கர்பால் வினவிக், கதுமெனக் கொடியாய்ப் பவங்கழிந் திடப்போ யுவட்புணர்ந் தடைந்தனன் கயிலை. (உ௪௯)

இல்லறத் தினிலஞ் செழுத்துணர்ந் திருக்கு மியன்மறைத் தருமனோ டிகலிப், புல்லறத் தியோகி சந்திர னில்லிற் றுறவதே பெரிதெனப் புகன்று, மல்லல்கூர் மகவான் மலரய னிவரை வருவிக்குந் தருமற்குத் தோற்றே, யொல்லையன் னவற்றூழ்ந் தஞ்செழுத் துணர்த்த வுணர்ந்தில்வாழ்ந் துறைந்தனர் சிவன்றாள். (உ௫0)

சூரிய சன்ம னென்றொரு மறையோ னணந்தன் புணர்ப்பினாற் சுதனைச், சீரிய பசுவை மருகியை யறியான் வதைப்பவச் செழுங்கவு

சிகொட், டேர்பெறு மறையோர் சிறமுன் கோயி லிடம்புற் றினை வரித் திறந்தோ, ராருயிர் பெறக்காட் டினன்கதி யடைந்தா னஞ் செழுத் துண்மையா லறிவான். (உ௫க)

வேறு.

அஞ்செழுத் தியலு மோதி னவர்பெறு பயனுஞ் சொற்றும்
விஞ்சுநீ றுருத்தி ராக்கம் விளம்புமந் திரமேற் கொள்வோர்
நஞ்சணி கண்ட னும நாளுமுச சரிக்க வேண்டு
தஞ்சென வினிது கேண்மின் சாற்றுது மென்று சாற்றும். (உ௫உ)

சிவநாமம.

வேறு.

அரகர கங்கா தரமணி கண்டா வலர்பூமன்
சிரகர தந்தா வளமுகர் தந்தாய் சிவனேமுப்
புரகர மைந்தா ரரவம ணிந்தாய் பொருளேயென்
றுரகர ணந்தா னுறவுரை தந்தார் சிவனுவார். (உ௫௩)

பகன்மதி யம்பக வுயர்திரி யம்பக பரநாதந்
திகழ்பர விந்துவி னுருவமை சுந்தர தெளிகூடற்
சுகநிற வந்தரி யொருபுடை தங்கிய சொக்கேயென்
றகமகிழ் தந்தொரு பொழுதுமொ ழிந்தவ ரரனுவர். (உ௫௪)

முழுத்தவர் சூழ்கரு ணகர வாகர முதலேயைந்
தெழுத்துரு வாகுந டேசச தாசிவ விறையென்றே
வழுத்தினர் நாமவெ ழுத்தொன் றிற்கிறை வடிவாவ
ரழுத்திய மற்றையெ ழுத்தரன் மேற்றனி சௌவாகும். ()

வேறு.

ஈனக் கொடுமதி தகரேனு மொருகா லீசன் பெயரிசைக்கின், ஞானக் கடன்மூழ் கியதவத்தோர் நாடுஞ் சிவனே யெனப்படுவார், வானத் தவர்போற் றருநாமம் புகன்றோர் பெறுமவன்சரிதை, மோ னத் தவமா முனிவீர்காண் மொழிவாங் கேண்மி னெனமொழிவான்.

கலிங்க நாட்டில் வீரியனென் றொருநான் மறையோன் கமழ்ம துவூ, னிலங்க வயின்றும் விலைபகர்ந்து மீனப் புலைச்சி தோடோய்ந் தும், வலங்கொ ணெறிநீத் திறக்குங்கான் மதுவின் விலையோர் சிவ மென்றான், புலங்கொ ளீசன் கயிலையிற்போய்ப் புனித னுருப்பெற் றிருந்தனனால். (உ௫௭)

வேட னொருவ னறலைத்து மிகவு முயிர்கொன் றூன்மதுவு
நாடிப் புசித்தும் பாதகமே புரிவா னிறுங்கா னற்பயனுற்
கூடித் திரிவோர் நாமமரா கான்சேர் குலவு பிரகான்முன்
றேடற் கரிய சங்கரனென் றிசைத்தான் கயிலை சேர்ந்திருந்தான். ()

சவராட் டகத்து மறைக்குலக்கோ சிகனென் னொருவன் றன்
பெயனார், யவமென் றீகற்றிச் சம்புவென்போன் றிரியம் பகனென்
றழைத்திடப்பெற், றுவரா ழிப்பூ மியிற்களவா னுயிர்கொன் றுண்
டேன் புலைச்சிநலன், கவர்மா மதுவப் புலையர்கொலக் கொலையுண்
டடைந்தான் கயிலைமலை. (உ௫௯)

கதலிப் பதிநந் தகவேந்த னிக்க மனைவி காமதையா
னிதமுற் றிடுதன் கற்பொருவி யியற்சூத் திரன்றூர்ப் புத்தியைத்தோய்ந்
ததன்மி யாய்மற் றொருமறையோற் கீன்ற மகன்சங் கரனென்றூர்
மதியில் லவரம் மகத்துறந்தா ரிறந்தார் கயிலை வாழ்வுகந்தார். (உ௬0)

வாசு தேவன் காராங்கவரு மாசான் மகவை வரவழைத்துப்
பேசும் வரநீ கேட்டியெனப் பேசா தவனைப் பணிந்திடல்விட்
டீச னும முச்சரித்தவ் விறையே பொருளென் றெணிச்சீலன்
காசில் செல்வந் துய்த்துடனுங் கிளையோ டடைந்தான் கயிலாயம். ()

சரையு நதிதீ ரத்துநந்திக் கிராமத் துறையந் தணரிருவர், பொரு
வில் பெயர்புட் கரரொருவன் மாலெட் டெழுத்தும் புகழ்தருவான்,
வரைவி லொருவன் பாவிநமன் கொணாந்தி ரெனமற் றவற்கொணர்
ந்தார், விரவு படர்மீ ளவும்விடுப்பச் சிவமுட் கொடுமேற் பதம்பெற்
றுன். (உ௬உ)

மகத நாட்டந் தணனொருவன் மாபா தகன்றன் னிலைநீங்கி
யகிதந் தருகா மத்தழுங்கி யடர்ந்தா றலைப்பக் காவலவ
ரிகலித் தொடர வோடுமவன் பதத்தா லெதிர்ந்த புலியுதைத்தான்
புகரி லாத வியாக்கிரபா தப்பேர் புனைந்தான் கதிபுகுந்தான். (உ௬௩)

இன்னும் புகல்வா மொருகதைமற் றியமன் பதியி லிருந்தவத்து
நன்னர் மறைநூற் சதானந்த னண்ணி நரகர் துயர்நோக்கி
யன்னர் கேட்ப வரகரவென் றிசைத்தா னனையர் செவிபுகலுந்
துன்னு நரகம் பாழ்படுத்தித் தொல்லோன் கயிலை பெற்றிருந்தார்.

ஆத லான்மெய்ச் சிவநாம முரைப்போர் பெருமை யளப்பரிதாற்
பூதி யோடு மக்கமணி புனைந்தஞ் செழுத்துந் திருநாம

மோதி யுணர்ந்தோர் சிவவிரத முளமோர்ந் தனுட்டித் திடவேண்டு
நீதி விரதப் பெருமையினை யுரைப்பாங் கேட்டி ரெனகிழ்த்தும். ()

சிவவிரதம்.

வேறு.

சோமவா ரந்திருவா திரையுமா மகேசுரந்தொல் விரத மான,கா
மர்சிவ நிசியுயர்கே தாரமணங் கதியுதவுஞ் சூல நோன்பு, காமமுறு
விடைப்பரனோன் பென்னுமெட்டுஞ் சிவவிரத நலஞ்சேர் வெள்ளி,
மாமைதரு முத்திரமா நவமியிம்மூன் றும்மிமைய மாது நோன்பால்.

வெள்ளிவா ரஞ்சதுர்த்தி சட்டிவிநா யகன்விரதம் விளம்பு மூன்று,
மொள்ளியசுக் கிரவாரங் கார்த்திகைநாள் சட்டியுமைத் திடுமிம் மூன்
று, மள்ளிலைவேற் குகன்விரதஞ் செய்வார மிருபரணி யணவுகண் மூ
ன்றுங், தள்ளருஞ்சீர் வயிரவற்காஞ் செவ்வாய்நாள் வீரபத்தி ரற்காஞ்
சாற்றில். (உகூஎ)

தொகவுறுமவ் விருபந்தோர் விரதமதிற் சோமவா ரத்தைக் கூ
றின், மிகவுறுகார்த் திகைத்திங்கட் சோமவா ரந்தொடங்கி விரதங்
கொள்வார், வகைபெருசீ மந்தனிநோற் றுரியசுமங் கலியானாள் வசி
ட்ட னன்பின், றகைமைபெற வனுட்டித்துக் கற்பினரும் ததிமனையா
ய்ச் சரிக்கப் பெற்றான். (உகூஅ)

அம்பிகையிவ் விரதமனுட் டித்துவேண் டியதடைந்தா ளதுவு ம
ன்றி, யும்பர்மறை யொழுக்கெந்த. விராடனென்போ னுபவசித்துத்
துயிலு நீங்கி, நம்பனுறை கயிலைபெற்றான் பட்டார கன்செல்வ நல
கப் பெற்றான், செம்பொனதிச் சடையிருப்புந் தனவாரச் சிறப்புமி
கச் சிறந்தான் சோமன். (உகூகூ)

வந்திடுமிவ் வாரபல னெவருரைப்பா ரறிந்தவா வகுத்துச் சொ
ன்னோம்,பந்தமறு மெய்யடியா ரனுட்டித்துப் பரமபதம் பெற்ற தொ
ன்று, முந்துறமார் கழித்திங்க ளாதிரைநா ளினிற்சொல்லு முறைவ
ழாது, நந்துறவே யனுட்டிப்பர் நோற்றடைந்தோ ரின்னரென நவில்
வாங் கேண்மின். (உஎ0)

முருகவே ளிவ்விரத மனுட்டித்துக்கயிலைபுக்கு முதல்வ னானான்,
பொருவேத விபுலனிந்நோன் பியற்றியான் றாளடைந்தான் புலிப்
பொற் பாதன், குருவாகி வசுதேவற் குணர்த்துமுப மன்னியப்பொற்

குழவி யீன்று, மொருகாலும் பிரியாது திருநடங்கும் பிடப்பெற்ற
னுமைப்பா மின்னும். (உளஅ)

கார்த்திகைப்பூ ரணைமுதலா வுமாமகே சுரவிரதங் கருதி நோற்
பார், பார்த்திபநோக் கிலன்றிரண விந்துவனுட் டித்திருகண் பதமும்
பெற்றான், சீர்த்திருமா லனுட்டித்துக் கோபால மடந்தையர்ச்சேர்
சிறப்பும் பெற்றுப், பார்த்திபனு யரசுபுரந் தொன்பதுகோ டியர்மக
வைப் பயந்தா னன்றே. (உளஉ)

விதியனுட்டித் தலர்வாணி காயத்ரி சாவித்ரி மேவப் பெற்றான்,
மதிமலியிந் திரன்சயந்த மகப்பெற்றான் வசிட்டன்வான் சுரபி பெற்
றான், மிதிலைநகர்ச் சனகன்சீ தையைப்பெற்று னின்னுமுளர் விளம்
பிற் பெற்றோர், கதிதெரிந்தே யனுட்டித்துப் பெற்றசிவ நிசிப்பெரு
மை கழறக் கேண்மின். (உளங)

மாசித்திங் களினபர பக்கசதுர்த் தசிவருநாட் கங்குற் போதி
லாசகல வனுட்டிப்பர் கன்மாட பாதனெனு மயோத்தி வேந்த
னேசமிலான் வில்வமரத் திலைபறித்திட் டிருந்துதுயி னீத்த வேடன்
பேசருங்கண் ணிழந்திடுபுன் புலைச்சியிவர் சிவநிசியிற் பேறுபெற்றார்.

சுகுமார னென்னுமொரரந் தணப்புலையன் றனக்குதித்த புலைப்
பெண் சேர்ந்தோன், பகிரதிவே ணியைத்தொழுது பேறுற்றான் சிவ
நிசியைப்பகர்வார் யாரே,முகின்மேனி பரவுதிருக் கேதார விரதமொ
ன்று மொழிவா மன்பு,தகவோது புரட்டாதிப் பூருவத்தட் டமிமுதல்
சாற் றிருபத்தோர்நாள். (உளரு)

அவ்விரத நோற்றுமையா ளரன்பாகம் பெற்றனளந் நந்தி தேவன்
செவ்விபெறு சித்திராங்க தன்வச்சிர தேயனுயர் செட்டி மாதர்
கவ்விழிப் புண்யவதி பாக்யவதி நாரணனுன் முகன்விண்ணோசன்
கவ்வைதவிர் மறைவிசுத்தன னுட்டித்து வேண்டுவரங்கருதிப்பெற்றார்.

மணவிரத மென்னுமொரு மாவிரதம் பங்குனியுத் திரநாண் மன்
னுங், கணைமலர்க்கண் ணிணைக்கமலை யனுட்டித்துக் கண்ணன்மார்
புறையப் பெற்று, ளிணையின்மக வானிந்நோன் பியற்றியயி ராணி
தரு மின்ப முற்றான்,பணைகரும்பு மதனனுட்டித் திரதியைச்சேர்ந் தரி
ணையெங்கும் பரப்பி னுனல். (உளள)

பங்கயனீ தனுட்டித்துப் பாமகளை வுறைதரத்தன் பதமும் பெ
ற்றான், றிங்களனுட் டித்திருபத் தேழுமா தரைமணக்குஞ் செல்வம்

ரபெற்று, னிங்கிதன்றி யுயர்சூல விரதமொன்றிங் கியம்பிவோ மெழி
ற்றை மாதந், தங்குமமா வாசியினி லனுட்டிப்ப ரன்னவரைச் சா
ற்றக் கேண்மின். (உஎ௮)

வேதன்மா லனுட்டித்தே யதிகாரப் பவரீக்கி வீடு பெற்று, மா
திமால் பின்னுமனுட் டித்துவென்றான் காலனே மியையு மங்கா,ளோ
தியவே தனுமவ்வா றனுட்டித்தே யுளையுதரப பிணியுந் தீர்ந்தான்,
பாதியுமை யாளுடையான் விடைவிரத மின்னுமொன்று பகர்வுங்
கேண்மின். (உஎகூ)

இடபதிங்கட் பூருவத்தட் டமிநாளி லிவ்விரத மெவரு நோற்
பா, ரடைவுறமான் முதற்றேவ ரனுட்டித்து வாகனு தியமுன் பெற்
றார், படர்புகழ்விச் சுவசேனன் விதுருதவேந் தனுட்டித்துப் பரன்
றான் சேர்ந்தார்,தொடருறுமிவ் விரதமெட்டுஞ் சிவநோன்பம் பிகை
விரதஞ் சொல்லக் கேண்மின். (உ௮0)

சித்திரைத்திங் களின்முந்து வெள்ளிவா ரத்திமையச் செல்வி யன்பு,
வைத்தருள வனுட்டிப்பர் சுக்கிரன்வந் தனுட்டித்து வரமும் பெற்றா
ன்,மொய்த்தசெழுங் கமலையனுட் டித்தரிமார் பினிலுறைந்து முயங்
கப்பெற்று, டத்தைமொழி வாணியய னுவிலுறைந் திருங்கலைநூற்
றலைவி யானாள். (உ௮க)

இன்னுமுமை மகிழ்விரத மைப்பசியுத் திரஞ்சசிநோற் றிறை
மை பூண்ட,பொன்னுலகத திறைமுயங்கப் பெற்றிருந்தாண் மற்று
மொன்று புகல்வாங் கேண்மின், மன்னுபுரட் டாதியின்முற் றிதிமு
தன்மா நவமிவரை வரைந்து நோற்பார், கன்னல்விலி தாதையனுட்
டித்தசுரர்க் கடிந்துபுவிக் கனியைச் சேர்ந்தான். (உ௮உ)

தந்திமுகன் விரதமுன்றியம்புவாந் தயங்கியசித் திரைமுற் பக்கம்
வந்திடுஞ்சுக் கிரவார மனுட்டித்தே யத்திரிநன் மைந்தர்ப் பெற்று
னுந்திமல ரோன்வேத மோதுறப்பெற் றான்றலைதவிதியம்பெற்றான்
பந்தமறு நார்தேவர் முனிவரனுட் டித்துரிய பதம்பெற் றாரால். ()

ஆவணித்திங் களின்விநா யகசதுர்த்தி யவ்விரத மனுட்டித் தன்
பாற், பூவணவெண் ணகையுமையோ டான்குது பொருநாட்பொ
ய்ச் சான்று கூறிக், காவணஞ்சேர் வடவனத்திற் கண்ணிழந்த பாங்
தனாய்க் கலங்குங் கண்ண, னுவணத்தால் வந்தபழி யுருநீங்கிப் பண்
டையுரு நல்கப் பெற்றான், (உ௮௪)

மார்கழித்திங் களிற்சட்டி விரதமொன்று கணபதியை வணங்கி யன்பாற்,பேர்கெழுவச் சிரமாலி யெனுமன்ன னேன்பியற்றிப் பிணி யுந் தீர்ந்தே, சீர்கெழுநன் புதல்வனைப்பெற் றெழிறிகழுந் திலோத் தமைதன் மனைவி யாகப்,பார்கெழுசெங் கோல்செலுத்திப் பதம்பெ ற்றான் குகன்விரதம் பகர்வாங் கேண்மின். (உ அரு)

ஐப்பசியிற் றலைமைபெறு சுக்கிரவா ரம்புகலம் மதியின் மேவிப், பொற்புறுபூ ருவபக்க முதற்றிதியே முதற்சட்டி பொருந்துங் காறு, மற்புறநோற் றிகந்த சட்டிகார்த் திகைத்திருக்கார்த் திகைகளாகுஞ், சொற்பெறுமிம் மூவிரத மனுட்டித்துப் பெற்றவரைத் தொகுத்துச் சொல்லில். (உ அசு)

கொழுமலரோன் மாலசுரர் போர்வென்றா னோற்றுமுசு குந்த மன்னன், வழுவறவே யரன்கயிலை பெற்றுயர்ந்தா னாரதமா முனிவனுதி, தொழுதகைய தவத்தினரிந் நோன்பியற்றி விளிவில்பதந் துன்னப் பெற்றா, ரெழுதருநான் மறைபுகலிவ் விரதமனுட் டித்தடைந் தோ ரெண்ணற் பாற்றே. (உ அஎ)

கூரியசூற் படைத்தடக்கை வயிரவற்கு மூவிரதங் குணிக்கு மந்தச்,சீரியகோன் புரைத்திடிற்றைத் திங்களின்மூற் செவ்வாய்சித் திரையிற் சேரும்,பேரியறந் தருள்பரணி யைப்பசிசேர் பரணியிவை பிறங்க நோற்றே, யாரிருள்சீத் தெழும்பரிதி யசுரனைவென் றிருங்கதிபெற் றமைந்தா னன்றே. (உ அஅ)

தக்கனியற் றியவேள்வி தடிவீர பத்திரற்குச் சாற்று நோன்பு, மிக்குதவு மேடமதி முற்செவ்வா யந்நோன்பு விரும்பி நோற்றுத், தொக்கபுகழ்ப் புரந்தரன்பொற் றருப்பெற்றா னிதுதொடங்கிச் சுருதி யோனு, மிக்குயர்தேர்ப் பாகானு னிவ்விரதப் பயனெவரே விளம்பற் பாலார். (உ அக)

சிவவிரத முதல்வீர பத்திரனேன் பீறாகச் செப்பா நின்ற, வவவிரத மகற்றுமிரு பத்தொன்று மியம்பினம்வா னமரர் போற்றுந், தவவிரதப் பயன்றருமிக் கதைகேட்போர் பெருங்கயிலை தங்கி வாழ்வர், பவவிரதந் தீர்ந்தசிவ புண்ணியத்தின் பயனுமக்குப் பகர்வாங் கேண்மின். (உ கo)

சிவபுண்ணியம்.

வேறு.

ஆயிரஞ் சனன மெடுத்துமுன் றரும மருந்தவ மாற்றுநர்க் கன்
றோ, பாயுமால் விடையோற் கற்புத மாகப் பகர்சிவ புண்ணியம் ப
லிக்கு, மாயிரும் புவியி லறிந்துமுன் செய்த பவங்கதிர்ப் பனியென
மாற்று, மேயுமித் தருமப் பயன்கதி யளிக்கும் புரிந்துளோர் பேற்றி
னை யிசைப்பாம். (உ௧௧)

கீசக மன்சா தாரனு மனையுங் கிளப்பரும் வசிட்டர்சா பத்தா
னேசமில் வேட ராயுழன் றிடுங்கா னெடுந்தவத் திரணவிந் தருள
வீசனு லயப்புற் சீத்துமற் றுள்ள பணிசெய்துந் திருமெழுக் கிட்டு
மாசறத் தொழுதுஞ் சாபநீந் தரசு செலுத்தின ரரன்பத மடைந்தார்.

கவுசிக மன்னன் கவுசிகன் பயந்த கன்னியர் நால்வரை மணந்த,
தவலிலு லரசர் கோசிகன் சபிப்பத் தணந்தகண் வெதிரராய்க் கான்
போந், தவருழை வாரப் பணியணி மாலை யரும்புன னறுங்கனி யளி
த்தே, நவையறு சாப நீங்கிநா டாண்டு நாதன்வாழ் சிவபத மடைந்
தார். (உ௧௩)

காசிப முனிமே லோதமுற் கலன்வாய் நீர்படக் கரும்பக டா
கிப், பேசுசா பத்தாற் றிரிபவன் கோயிற் பெரும்புறத் துள்ளிற்புன்
மேய்ந்து, மாசறச் சூழ்ந்து மக்கொடுஞ் சாப நீங்கிமுன் னணியுருத்
தாங்கிப், பூசைசெய் தரன்றாள் பெற்றனன் சிவபுண் ணியத்தினை வி
டுவரோ புரிவோர். (உ௧௪)

வேறு.

சுந்தரிப்பேர்ச் சோபன்மா நகரத் துள்ளா டொழுகுலமா தொ
ருத்திதன்கேள் வனையுங் கொன்றாள், வந்தயல்வே யெர்ப்புணர்ந்தாள்
விதவை யாயும் வழங்குமவன் பொருண்முழுதுங் கவர்வா னெண்ணி
த்,தந்தொருகல் லவன்றலையி லிட்டுக் கொன்று டன்கருப்ப மும்பயந்த
மகவுஞ் செற்றுண், முந்தியவப் பதகிகைதொட் டெடுத்த திண்கன்
முதல்வர்திருப் பணிக்குறலாற் கயிலை சேர்ந்தாள். (உ௧௫)

போகாங்க னென்னுமொரு கொடுங்கோல் வேந்தன் புண்ணிய
பா வந்தெளியான் பொறையொன் றில்லான், மோகாந்த னுய்த்தெய்
வம் போற்றல் செய்யான் முற்றுமநீ தியைநடத்தி முடிவின் வீந்து,
தீகாந்து வெங்கிரையங் கிளைத்தா னன்னோன் சிறுவனுயர் கனகனென்
போன் விளையாட் டாக,வேகாந்த னுய்மணலாற் சிவனைப் பூசித் திட
லாலக் நரககன்று கயிலை சேர்ந்தான். (உ௧௬)

சந்திரமா நகர்மதிமா னென்னும் வேந்தன் றந்திடுதூர்க் குணன்றாரா சார னென்போர், நிந்தையுறு பாதகரா யுழல்காற் றந்தை நீங்கலுங்கா னகம்போந்தா றலைப்ப வாங்கண், வந்திடுவே தியன்சுமையைக் கவர்ந்தா ரத்தில் வைத்தகண்ணை மெறிந்தகன்றார் மற்றோர் பார்ப்பானை, சிந்தினவை யெடுத்திலைதேய்த் தயின்ற சேடந் திருமதிலி னிழுகவன்றோர் சிவமே யானார். (உகஎ)

தழைதருசா மந்தநக ருறைவோன் வேதசதாவிந்து வெனுமறையோன் வறுமை யாள, னுழுதுண்போன் கரும்பகடொன் றுள்ளோன் கொண்டே யுறுபசியால் விலைகூறி யயலூர் போந்தான், கெழுசியின் விலைப்போகா ததனைக் கோயிற் கிளர்பகடு தங்கியதோ ருள்ளிற் சேர்த்தான், பொழுதுறமுன் னதுபூட்டிச் சிலையீர்த் திட்டார் போதனும்வந் தடிதொழுவான் கயிலை புக்கான். (உகஅ)

நீர்கெழுசீ மந்தநகர் விராட நாட்டி னிலைபெறுமந் நகர்மறையோன் மிருக னென்போன், சீர்கெழுதன் னொழுக்கிகந்து படிற னாகித் தீமைதரு பொதுமகளிர்ச் சேர்ந்து நீங்கி, யேர்கெழுமன் னவனோடும்வேற் றூர்போந் தாங்க ணிருங்கதலிக் கனிகீர்ந்து போங்காற் காப்போ, ரார்கெழுகை காலறுக்கத் தொடர்ந்தா ரப்போ ததுசிவனுக் கென்றெறிந்தான் கயிலை சேர்ந்தான். (உகக)

கலியாண புரமெனுமா ளவதே யத்தோர் கடிநகரந் நகர்வணிகர் கார்க்க வன்போர், வலிசேரும் வயிணவனென் றிருவர் கங்குல் வாணிபத்தின் வருமவரைத் துயிற்றீக் கொல்வோர், கொலைசேர்தீ யவரொளிர்தீ பங்கைக் கொண்டு கொன்றவர்கைப் பொருள்கவர்ந்து வனத்திற்சேர்ங்கா, லலர்வேணிச் சிவாலயமுன் பிரகா சித்த தப்பயனாற் பவநீங்கிக் கயிலை புக்கார். (௩00)

குண்டலதே யத்தோர்நகர் கபித்த மாங்கண் கூறுமுயர் குலத்துதித்தோன் கொலையே செய்யுங், கண்டகன்மற் றோர்நகரிற் சென்று புக்குக் களவினிரு நிதிகவர்ந்தே குங்காற் கங்குல், விண்டகன்ற தப்பொருண்மெய்ப் பொருள்சேர் கோயின் மேவுதிருக் குளத்தொளித்தக் கங்குற் காணான், றண்டலிலக் குளத்துறுமண் கரையிற் சேர்த்தத் தனங்கண்டு கொண்டகன்றான் கயிலை சேர்ந்தான். (௩0க)

குந்தநகர் காபால தேயத் தோங்குங் கொடிநகர்வாழ் சோபணன்வே தியனல் கூர்ந்தோன், வந்தொருமா நகர்புகுங்காற் சைவ தே

சன் வழியெதிர்ப்ப வணங்கினன்றன் வறுமை கூற, வந்தணநந் தன வீரஞ்செய் தானுக் காக்கென் றருள்செயவப் பணிசெய்திரு நிதியும் பெற்று, னிந்திரனுய் விண்ணகரம் புரந்தெம் மீச னிரங்கிவிடைக் காட்சிதர மலர்த்தாள் சேர்ந்தான். (௩௦௨)

சோதிடநாட் டோரரசன் சருவ சித்துத் தோன்றியதன் புதல் வூர்நூற் றுவரன் றேர்செய், பாதகமும் பழியுமனம் பொருள்கோ பித்தோர் பழிகொலைவா ளரக்கன்முனங் காட்ட வன்றே, னீதமிலப் புதல்வர்களைக் காலை வாரி நிலத்தடித்தா காயத்தி னெறிந்தா னவி, போதருமவ் வுடல்கள்சிவன் பதிக்கண் வீழ்ந்த புண்ணியத்தா லரன்க யிலை புகுந்து வாழ்ந்தார். (௩௦௩)

குயபுரத்து வாணிகன்விட் கம்பன் மைந்தன் கூறரும்பா தகன் சித்ர குத்த னென்போன், வயமுறுமெக் கள்வரினு மிக்கா னுடு வரம் பழிப்பா னுயுதமற் றெவற்று மாயான், வியனுறுபாற் பசுநிரைகள் களவிற் கொண்டே மேவினனோர் சினைப்பசுவவ் வழியின் வீழப், பயின்றபசு விட்டகன்றான் பசுவீ சற்குப் பயன்படலாற் கயிலைபுக்க ப் பரன்றாள் சேர்ந்தான். (௩௦௪)

சறுவதிப்பேர்ச் சுபாரிசநாட் டோரூ ராங்கண் டங்குமறைக் க பிலனல்லும் பகலுங் கள்வான், மறுவறுமற் றையமறையோன் சுரபி வவ்வி வரிந்துதன திற்கொடுபோய்ப் பிணித்துக் கொண்டா, னுறுவ தறிந் தவர்தொடரச் சிவனூக் கன்பா மொருமறையோன் றனதில்ல த் தொளித்தற் றைய்பால், பெறுவதனைக் கெனவளித்தான் றொடர் ந்தார் மீட்டார் பெரும்பயநல் லியபயத்தாற் கயிலை சேர்ந்தான். ()

வேதகுலத் துதித்திடுமோர் மறையோன் வேத விதியகன்று புலை ச்சிநலன் மதுவூ னுண்டும்,பேதமுறு மவைவிற்றுந் திரியு நாளிற் பிஞ் ஞகற்கு நிவேதிக்க வடைக்காய் கொள்வான், பாதகனுன் மதுவிற்ற காசு நல்கிப் பார்த்திபர்தங் குலத்துதித்துச் சுமதிப் பேர்பெற், றேத மறு புலைச்சியுமக் குலத்திற் றோன்ற வியன்மணஞ்செய் தரசளித்துக் கயிலை சேர்ந்தான். (௩௦௫)

கன்னகுச்ச ரதேயவி ராட்ட மூதூர்க் காவலன்மைந் தன்மந்தி மகனோ டேகித், துன்னியகு தேபொருதுந் தீதே செய்துஞ் சுழல்பவ ரந் நாடகன்றோ ரூரிற் போந்தா, ரின்னறரு பிறர்மனையிற் களவு கொண்டா ரெதேத்தசுமைச் சிந்தினதண் டெத்தைச் சைவ, நன்னெறி

வே தியர்க்குதவிப் போறு ரன்னோர் நல்வினைவை சிவன்கொண்டான் கயிலை சேர்ந்தார். (ருoரு)

குடநாட்டி னிற்சவுபாக் கியமென் றோதுங் கோநகர்வாழ் மறைஞனதி கண்ட னென்போன், மடமேவு குழப்பருவப் பிள்ளை யாகி மறுகயர்நா ளக்கமணி யொன்று கண்டான், றிடனுக வெடுத்தொருநான் மறையோன் றந்த சிறுவனுக்கீந் தனனந்தப் பலத்தாற் றெய்வ, நடமாதர் நிருத்தமிட விமானத் தேறி நற்றவர்விண் ணோர்துதிப்பக் கயிலை சேர்ந்தான். (ருoஅ)

வேறு.

அரவ னுக்கறி யாதுசெய் புண்ணியம்
விரவு மிப்பயன் மேவுமென் றுலினிப்
புரவ ளிப்ப தறிந்து புரிந்துளோ
ருரவு மெய்க்கதி யாரெடுத் தோதுவார். (ருoக)

தீது தீர்சிவ புண்ணியத் தின்பய
ேனுதி னுமி துவந்து படித்துளோர்
மாதொர் பாக னெனப்பெறு வார்மலி
காதை கேட்பவர் பேறு கழறுவாம். (ருகo)

சிவபுராணம்.

வேறு.

ஆதியாம் விளங்குசிவ புராணமமலன்போனித் தியமாமன்றோன், சோதிமா மயமாகித் தோன்றியதந் நூற்பெருமை சொக்கே வல்ல, னீதியுரைக்குமோரத்திடமக் கதையிலொரு மொழியேனு நிகழ்த்திற் கேட்கிற், பேதியா தான்பாதம் பெற்றிடுவர் நிகழ்ந்தகதை பேசக் கேண்மின். (ருகக)

சீமுகவே தியன்மந்தசாங் தனனுசாந்த னிராமனவி ராமன் சித்தன்,மாமைதரு பிரசித்தன் காரணன காரணனெண் மைந்த ரின்னோர், தீமைதரு நல்குரவான் மெலிவார்நற் குரவன்பாற் சிவனூல் கேட்டுக், காமுறுமா லயன்முதலோர் செல்வமுந்துய்த் தான்கயிலைக் கதியும் பெற்றார். (ருகஉ)

அவத்துரோ கம்புரியும் பாதகருஞ் சிவன்கதைகேட் டேகர் பெற்றார், தவத்துரோ கியற்குமுட னடுநடுங்கி நாவினுற் சாற்றொரு

னாதாய்ப், பவத்துரோ கத்திலதி துரோகர்பா தகத்தபா தகரே யா
னா, சிவத்துரோ கத்தர்செயும் பவமுமவர் விழுநரகுஞ் செப்பக்கே
ண்மின். (௩௧௩)

சிவத்துரோகம்.

விழுங்கலாஞ் செந்நெருப்பைக் கடிக்கலாந் திண்சிலையை விடத்
தை யாவி, யழுங்குறு வகையிழைத்துக் குடிக்கலா மவுடதத்தா'லர
னார் செம்பொன், பழுங்கனாற் கவர்ந்துபுசித் திடினிமிடற்றி லேபிடிக்
கும் பயனில் யாக்கை, புழுங்கவே கனலுமுயி ரொறுக்குமந்த விடந்
தீர்வு புகலொ ணாதால்.' (௩௧௪)

கங்கைவே ணியன்பொருளைக் கவர்தீம்ப ரிருக்கவது கவர்தற்
குள்ளந், தங்கிமுயன் றவர்வினைத்தோ ரக்கணத்தி லழிவரவர் தாமு
நிற்க, வங்கவர்தீ நட்புறுவோ ரவரொடெட் பிணர்குலம்வே ரறவே
மாய்வர், வெங்கொடுந்தீ நரகடைவர் சத்தியஞ்சத் தியமாணை விளம்பி
னேமால். (௩௧௫)

'ஈசனா லயங்குலவு திருக்குளஞ்செய் தொழினிபந்த மியற்பூஞ்
சோலை, வாசநாண் மலர்த்திருநந் தனவனம்வண் கழனிகுளிர் மணி
நீர்க் கூவ, லாசெனா தழித்திடுதே றுரோகமிவற் றடுத்தபா தகநால்
வேத,மேசிவா கமபுரா ணங்கண்மணி வெண்ணீற்றை யிகழ்த லின்
னும். (௩௧௬)

திருக்கோயி றிருமடநீர்த் திருக்குளநந் தனவனமிங் கிவற்றிற்
றீமைச், செருக்கோடு முமிழ்ந்திடுதே லிவற்றினுக்குத் தீங்கிழைத்தல்
சிவத்து ரோகந், தருக்கோடத் தீமைசெய்தோர்க் கண்ணுறநீண் டுதெ
லறுதீக சார்த லோதல், வெருக்கோடா தவர்நாமம் விளம்பலுமை கே
ட்டலத்தீ வினையிவ் வாறும் *. (௩௧௭)

எத்தனையோ ரென்றுரைக்கேன் சிவத்துரோ கம்புரிந்தே யிடரி
ற் றேய்ந்து, மெத்துகத மெரிநிரைய முற்றவாத் தொகையெமக்கு

* ஈசனாலயமுதலியவற்றை யழித்தலும், நால்வேதமுதலியவற்றை யிகழ்தலும், திருக்கோயின்முதலியவற்றி லுமிழ்தலும், இவற்றிற்குத் தீங்குசெய்தலுமாகிய அந் நால்வகைத் தீமையும் சிவத்துரோகமாமாறுபோல, அந் நால்வகைத்தீமைசெய்தோரைக் காண்டன முதலிய ஆறு தீமையும் சிவத்துரோகமாமெனக் கொள்க.

விளம்பக் கூடா, துய்த்துரைப்பே மதுபுரிந்த பதகர்சரிதையிற்சில நா முற்றுக் கேண்மின், வித்துருமச் செஞ்சடையோர்ப் பழித்திடுதீங் ககலு † மெனவிளம்பு வானால். (௩௧௮)

வேறு.

திரிபுரத்துக் கிலகனா மன்னன் மைந்தர் கிளர்பாவ சித்துமுத னால்வர்தம்முட், டிரிபுரஞ்செற் றவன்கோயிற் செங்கண் மாயன் ஓ னகரஞ்செய் தாரொருவன் மரத்தைக் கொன்றே, பரவுறுமோ மச் சாலை யுய்த்தான் பின்னோன் பனிமலர்பன் னியுந்தானா முடித்தான் கேட்டப், புரவலனைத் துரோகனைக்கொன் றான்றான் சேர்ந்தான் புக லுமன்னோ ருடன்பட்டோர் நிரையுஞ் சார்ந்தார். (௩௧௯)

அங்கநாட் டொருநகர்வாழ் விதாதா வென்னு மடல்வேந்தும் புரோகிதனா மசிதன் றானும், பொங்கர்செறி விந்தியத்தின் மறைவல் லோர்க்குப் போசனநல் குநரீசன் கோயில் வாழைப், பைங்கனியை விலைகொடுத்து வலிதின் வவ்விப் படைத்தனராங் கதுபுசித்த பார்ப் பார் தந்தோ, ரிங்கிவர்மன் னசிதன்முன்னைப் பிதிர்க ளோடு மேழி னர்தீக் கழுநுனைவெந் நிரையத் தாழ்ந்தார். (௩௨௦)

சிங்களதே யத்தினிற்பூ சக்ர மென்னுந் திருநகர்வே தியன்சவி தா மைந்தர் மூவ, ரங்கவரிற் றருமியெனு முன்னோன் றன்பே ரரும் பொருளா முழுநிலனு மமலற் காகப், பொங்கியநீ ரொடுமளிப்பத் துணைவர் தாதை புரவலனால் வலிதினிற்கைக் கொண்டு மாண்டா, ரங்குநிலன் பொருளளித்தோன் கயிலை சேர்ந்தா னபகரித்தோ ரர சொடுந்தீ நிரையத் தாழ்ந்தார். (௩௨௧)

குஞ்சரநாட் டினில்வசுதை யென்னு மூதூர்க் குலமறையோன் விப்பிரமணி மறையோர்க் கீவான், வஞ்சமறக் கொணர்தருமா னிரையி லீசன் வண்சுரபி யொன்றுறவன் னதையு மீந்தான், றஞ்செ னவா லயங்காப்போர் தடுத்த போதுந் தந்திலரேற் றேனையளித் தோனை யாவி, துஞ்சுறக்கேட் டரசன்வதைத் தான்றான் சேர்ந்தான் றுரோகர்கள் லாச்சியமா நிரையத் தாழ்ந்தார். (௩௨௨)

கவுரிபதந் தொழும்வணிகன் சவுரம் வாழ்வோன் கழறுபெயர் சுத்தனெடுஞ் செல்வம் பெற்றோ, னவன்மனையின் மணவினையுண் டாக வவ்வூ ராலயத்தா தியரடைந்தா ரன்னா ருள்ளூ, முவமையின்மா

† அகலல்-விரிதல்.

தொருத்திமையச்சேர்ந் தகத்துள் வைத்தே யுறுகாவல் செய்தனனுங் கவளை மீட்டுத், தவறறுவேந் தவனையுயிர் மாய்த்தான் மாய்ந்து தழுவுவன்றீ வச்சிரத்தூண் டணைவா னின்னும். (௬உ௫)

விதர்ப்பநாட் டோரரசன் விசுவ சேனன் வேட்டத்தி னெழுந் துவெதிர் வரைக்கான் புக்குக், கதித்தமிரு கம்வதைத்து மீளும் போ தக் கடுஞ்சுரத்தால் வேடைகொண்டோர் கோயில் வீழ்ந்தான், பத த்திலரன் கோயிலெண்ணெய் விகுசப் பைங்காய் பரிந்தெடுத்துத் தி மிர்ந்துவரு டினதற் சேர்ந்தோர், கொதித்தழன் று புகைந்தசெப்புக் கடார நெய்யிற் குளித்துமறு கினர்தனையுங் கூறற்பாற்றே. (௬உ௪)

தருக்குகலிங் கத்தரசன் சந்த்ர சேனன் றருவீர கிராதனென் பேரணமலன் சாத்து,மருக்கமழ்மா லிகையொடுபொற் பூணு நூலோ ர் மறைஞன றி யாதுதவத் தரித்தான் வாங்கி, வெருக்கொடர னால யத்தோர் கேட்ப நல்கான் மெல்லுடலம் புழுச்சொரிகுட் டத்தால் வீந்தா,னுருக்கியசெம் பொன்னைநவத் துவாரம் வாக்கி யுடல்கருக்கி நமன்படீர்ந் திடத்துன் புற்றான். (௬உ௫)

காமரூ பத்திருநாட் டரச னீன்ற காதலனு மொருமதலை வசு வர் மீசன், பரமநிறை யாலயத்துள் விளையா டுங்காற் பணமொன்று கண்டெடுத்துத் தாதைக் கீந்தான்,றமநிறை கோயிலுள்ளோர் கேட் கும் போதுந் தந்திலனப் பணங்கருவூ லத்தி லுய்த்தான், சேமுறுமற் றையபொருளுங் கள்வர் கொண்டார் தேசமிழந் திருவருந்தீ நரகி லா ழ்ந்தார். (௬உ௬)

கவுடநகர் வணிகனிதி வாக னென்போன் கதிரவனைத் தொழு ம்பீடஞ் செங்கற் செய்வான்,சிவகுருவான் றற்புருடன் மடத்திற் கா க்குஞ் செங்கலைக்கேட் டலுமுதவா தறிந்தத் தீயோ, னவமுறுவெங் கரிப்பிணிக்கென் றறிடித்துத் தூள்செய் தழித்தனனுங் கறிந்தரசன் செகுப்ப மாய்ந்து,தவறில்குருத் துரோகத்தான் மருத்தன் பாகன் றங் கிடித்தோர் தம்மொடுந்தீ நரகி லாழ்ந்தார். (௬உ௭)

விசையனெனு மொருவனவன் மைந்தன் சூரன் விளங்கியசை வ த்தருமன் மனையைத் தீண்டி, யசைவறுகற் பழித்தக்க மணியுந் தூசு மபகரித்தத் தூசுடுத்தான் கண்டு கேட்ப, வசையுறுத்தித் தள்ளினன்ம ன் னறிந்தச் சூரை வதைத்தனனவ் விசயனையு நார கிங்கம், பசைய றக்கொன் றிடவவர்வெந் நரகி லாழ்ந்தார் பரனடியார்க் கிடரிழை த்தார் படும்பா டொன்றோ. (௬உ௮

சோணநகர்க் கலாதரனும் வேந்தன் முன்னஞ் சொற்கலைதேர் பசுபதிநற் சிவனூல் கூற,மானமிலாக் கேசரிபத் திரனென் பேரோன் வசுதேவன் வயிணவன்சங் கரற்றா டித்து, ஞானமுறு சைவரை வெண் ணீற்றை யக்க நன்மணியை யிகழ்ந்துமிடி வீழ்ந்துமாண்டா, ருனுறக்கேட் டரசனுங்கர்த் தபமாய் வீந்தா ரொருநால்வர் தலைகீ ழா நிரயத் தாழ்ந்தார். (௩௨௯)

கலிங்கவள நாட்டரசன் கலிங்கன் றந்த காதலன்மங் கிரிசுதன்பு ரோகிதன்றன் பால, னிலங்கரசன் வாயில்காப் போன்றன் மைந்த னிவர்நால்வர் தீர்த்தயாத் திரைபோ யீசன், றுலங்குசின கரங்குரவ ன் மடம்பூந் தோட்டந் துளைறுதீர்த் தத்துறையீங் கிவற்றிற் றுஞ்சி, நலங்குமயிர் தம்பலெச்சின் மூகசூ சிந்தி நலிதருநோய் படர்படுத்த நரகி லாழ்ந்தார். (௩௩0)

சிவசன்மன் சோமசன்ம னெனுநூல் வேதர் திருக்கோயி னியமமாச் சேவை செய்வா,ரவரிலொரு வன்னுடற்காற் றசைவாற் றீப மவிந்ததுமற் றவன்கண்டா னையாதன் போந்தார்,பவமதனு லவி த்தோன்கை மூவெண் காதம் பார்த்தவன்கண் ணுக்குமவ்வெண் ணீ ண்ட தாங்கண், கவர்நரிநாய் பருந்துகொடி கழுகு வீழ்ந்து கடிந்து கொத்திப் பிடுங்கியுண நரகி லாழ்ந்தார். (௩௩௧)

சங்கரனுக் கன்புசெயு மொருவன் கோயில் சார்ந்திறைஞ்சப் போங்கானெய் விளக்கு மங்க, வங்கதனைத் தன்கையாற் றீண்டித் தூண்டி யக்கின்றனனன் றென்கையுகி ரகத்துத் தேய்ந்த,பொங்குந று நெய்துஞ்சி யுறைந்த தீசற் போற்றினனிற் புகுந்தடிசி றுய்க்கும் போதி,னி[illegible]வப் புசித்தனன்பா தலமென் றோது மிடர்நிரயம் பு குந்துகடை ஞானி யானன். (௩௩௨)

மதிமானென் றொருசைவ யோகி யன்பால் வைகலுமீ சற்காம ஞ் சனநெய் மஞ்சளாதிபலன்சே ரிலையடைக்கா யிளநீ ரின்ன வவரவ ர்பாற் சென்றிரப்பி னீட்டி நல்கித்,துதிதருநா ளபிடேகம் புரிந்தப் பி ன்றித் தொட்டெடுத்த விளநீரைப் பன்னுட் டின்பான்,கதுமெனவே முடிவிலவன் றன்னைக் கட்டிக் காலபட ரிடவெரிவாய் நிரயத்தாழ்ந் தான். (௩௩௩)

கொற்றவடி வேன்முருகன் றன்னைப் போற்றுங் குலவணிக னியமமாத் தொழுவான் கோயிற், சுற் [illegible]

கொண்டு பேர்ந்து சுவைதருபா லடிசிலொடுந் துய்த்தான் பன்னா
ளற்றுயிர்போ யெரிநிரையத் தாழ்ந்தா னிங்ங னறைந்தசிவத் துரோ
கர்நர காழ்ந்த காலம், பெற்றிடுமித் தனையெனமா லயனுந் தேரார்
பேசுவதெ னின்றுமுழன் றிடுவ ரென்றும். (௩௩௪)

வே று.

மன்னு மாதவத் தலைவிர்காள் விளவினிர் மனத்தினுங் கருதேர்ண்ணா
வுன்ன ருஞ்சிவத் துரோகர்தம் மரபெடுத் துரைத்தன முமக்கிங்ஙன்
பன்ன காபர னன்சிவ பூசையைப் பகருது மினிக்கேண்மி
னின்ன லம்பெறக் கேட்பவ ரிகபர நண்ணுவ ரிதுதிண்ணம். (௩௩௫)

சிவ பூ சை.

பூதி யக்கமா மணிபுனைந் தஞ்செழுத் தோதிய புரையில்லோ
ராதி நாயகன் படிவமா யிலிங்கத்தி னருச்சனை செயவேண்டு
மோது பூசைமுப் போதிரு போதது வன்றியோர் போதேனுந்
தீதகன் றிடச் செய்கசுத் தத்தினும் பத்தியேசிறப்பாமால். (௩௩௬)

யாக மெத்தனை யிருந்தவு மெத்தனை யியற்றிலெ னறஞ்செய்தென்
பாக முற்றநூ லெத்தனை படித்துமென் பரனையர்ச் சனைசெய்யான்
போக முற்றிய செல்வமுஞ் செயலுங்கான் புகுநிலாப் பொழிவான
மாக முற்றுயி ரிறந்தவர்க்கிருலே கடுக்குநற் பயன்வாரா. (௩௩௭)

பூசை யில்லவ னுண்டியும் புழுப்பிணம் புலானுகர் புலைக்கட்டம்
வீசு வாள்விழுந் தெரிவிழுந் திறப்பினு முய்யுமே தினிபோற்று
மாசி லாக்குல னென்னினு மவனையார் தொடினுமேனு ம்வந்து
கூச லின்றி யேபேசினுங் கருதினுங் கொடிதுபா தகம்தமா. (௩௩௮)

அன்பி னிற்சிவார்ச் சனைசெயா னருநர கழுந்துவ னதுவன்றி
வன்பி னிங்கினு மறம்படர் குறும்புநா டடைந்துபேய் வனாகாகந்
துன்பு றுஞ்சுன கன்கழு கோரியாய்ச் சுழன்றிடு மதுவன்றிப்
பின்ப வன்படு மலக்கணூர் தெரிப்பர்நற் பெருந்தவ முனிவீர்காள். ( )

சிவனை யன்றியே மற்றொரு தேவிலைச்சிவார்ச்சனையன் றியேவேறு
பவம கற்றுமோர் நோன்பிலைச் சிவபதமன்றியோர் பதமில்லைப்
புவனி போற்றுமுற் பவங்களிற் றவஞ்சிவபுண்ணியம்புரிந்தோர்க்கே
கவிலு மச்சிவ பூசனை பலித்திடு நலன்றரு மினிக்கேண்மின். (௩௪௦)

சிவலிங்கஇலக்கணம்

வேறு.

நயம்பெறு செல்வங் கல்விமெய்ஞ் ஞான நவில்பர முத்தியு நல்குஞ்
சுயம்புவன் பளிங்கு சிலைமண லுலோகந் துலங்கிய காந்தமண்சுதை
வயம்பெறு மிரத மரத்தமே தீர்த்த மணிபன்னிருருவினுமிலிங்க [ண
மியம்புயீதன்றிப்பூசனைக்கெளிதாமின்னமுண்டன்னவைதொகுப்பின்.

முச்சுட ரிதயஞ் சென்னிவா லுகமண் மொழியுமா நீறுவண் கு
டம்பார், மெசசுசீர்க் கொன்றை கூவிளங் குசைபால் வேதிகை பித்
திகை யெழுத்து, மிச்சகம் புகழுந் திலம்புன லிருங்கோ மயமுமற்
றின்னமு மியம்பு, நச்சரா வணிவோ னுதியிற் றெருத்து நவின்றிடு
ஞ் சிவாகம புராணம். (௩௪௨)

பகிரதி யுயர்கா ளிந்திசா ரதியா திக்கலு ழியின்பரிந் திமையோர்
கர்தவர் பூசித் திட்டன வனந்த நிகழ்ந்திடுந் தேவமா ரிடமாம்
வகிர்பிறை யெயிற்ற வவுணர்கோன் வாணன்வழுத்தினவாணலிங்கம
நிகரறு படிவ மெவரருச் சித்தாரவர்சின்னநிறைந்துறுமவற்றின்.[தி

நிறுத்திடின் முக்கா லங்நிறை யொவ்வா தெனினது நிகழ்த்துவா
ணமதாம், பிறித்திடும் வெண்மை செம்மையே பொன்மை பிறங்கிய
கருமையிந் நான்கும், குறித்திடி னன்கு வருணத்திற் குரிய கூறுமிம்
முறைகிடைப் பரிதேற்,கறுத்தமை யார்க்கு மாகும்வா ணத்தெங் கட
வுள்விட் டகன்றுவே றுறையான். (௩௪௪)

சரசரத் திருக்கும் வாணலிங் கஞ்சேய் தாரந்தன் வழிவினைமா
ய்க்கு,முறைசெறியுச்சி குழிந்திடிற் கொல்லு முரியல்கீற் றுதல்வெட்
டுவிக்கும், [illegible] விலிங்கங் கோடிலில் விழக்கும் விந்துநட் பகற்
றிடுங் களங்கங், கரிசுறு கயநோய் வருத்திடுங் காக்கைக் கால்கழுத்
தறுத்திடுங் கருதில். (௩௪௫)

சிறிதுமே மிகவும் பெரிதுமா காவாஞ் செப்பிய பீடமெட் டறு
நான், குறுதரு கோண மூவர்க்கு முரித்தா முரைத்திடு வட்டஞ்சூத்
திரற்கா,மறுவிலங் நான்குங் கிட்டுவ தரிதேல் வட்டமங் நால்வர்க்கு
மாகு, நிறைவிர லுயர்பா றிரண்டுதொட் டொருமும் மூன்றதா நிக
ழ்த்துநால் வருக்கும். (௩௪௬)

ஏனைய விலிங்க மீரைந்து கோடி யொக்குமோ ரிரதமா விலி
ங்க, ஞானமும் புத்தி முத்தியு முதவு நயந்தருச் சித்துநீர் மாந்தி.

லானதன் றுயிருக் காரணமா மதனைப் பழித்திடி லருநர குழக்கும்,
தானுயிர் விடுங்கால் விழுங்குமேற் பாவந் தணந்துதற் பரத்தொடும்
வைகும். (௩௪௭)

இலிங்கவுற் பவமு மிலக்கண விதியு மியம்புது மின்னமுங் கே
ண்மின், றுலங்குறத் தோன்று மவைலயிக் கையினு லிலிங்கமாந்
தொகுபர விந்து, நலங்கெழு பரநா தம்விந்து நாத நான்குமே புகல்
பீடி லிலிங்கம், பலங்கெழு மிதிலான் மார்த்தலிங் கத்தி னிலக்கணப்
பரிசுரைத் திடுங்கால். (௩௪௮)

வேறு.

சூத்திர முதலாச் சொல்லு மிலக்கண விதியுந் தொன்மை
கூர்த்தநூ லறிவாற் பூசிப் பவர்பெறும் பயனுங் கூறு
மாத்திரை வழுவி லிங்கப் பிராச்சித்தஞ் செய்யு மாறும்
பார்த்ததிற் பூசை செய்வார் பரமனு கமநூல் கற்றோர். (௩௪௯)

நனிநுனி யிலிங்கச் சுற்று நாளெற் றிடைநீர்ச் சுற்று
மினிதரு ளகோர மான முகத்திலிங் கத்திற் கண்டோர்
வினைதவி ரடிதொ டங்கி மேற்பாணி வட்ட மீருய்த்
துனிபற வளர்ந்து கண்ட தொகையொடுந் தொகுத்துக் கூட்டி. ()

ஐயிரு பாக மாக்கி யவற்றினொன் றரையுந் தள்ளித்
துய்யவெட் டரைப்பா கத்தி னளவையைத் தொகுத்துத் தூய
செய்யமென் மலரா லன்பர் சிறப்பினோ டருச்சித் தேத்திக்
கையினற் றொழுமி லிங்கக் கண்டச்சுற் றளந்து காண்க. (௩௫௧)

கண்டச்சுற் றேழு பாக மாக்கிக்கண் டதிலோர் பாகங்
கொண்டதைப் புகல்கீழ்ப் பாணி வட்டத்தி னுயரங் கொள்க
வெண்டகு மிரேகைக் குக்கீழ் மேலிரே கைக்கு மேலாய்
மண்டுமத் தொகைமேற் பாணி வட்டத்தி னுயரங் கொள்க. (௩௫௨)

ஓங்கிய கண்டச் சுற்றிற் பதினொன்றி லொருபங் கேனும்
பாங்குசே ரளவை யேழி லொன்றொரு பாக மேனு
மாங்குமேற் பாணி வட்ட நனிக்குமத் தளத்தி னுற்ற
வாங்கரு மிரேகைக் கும்முண் ணடுமதித் தளந்து கொள்க. (௩௫௩)

இருமைசேர் கண்டச் சுற்றை யிருபதோ டிருகூ றாக்கித்
தெரியுமக் கூற்றி னோர்கூற் றளவையைத் தேர்ந்து பார்த்து
வரமுறு மிலிங்கத் திற்கு முள்ளிரே கைக்கும் வாய்ப்ப
வொருமைநூல் விதியா லுண்மை யுறநடு வளர்ந்து கொள்க. (௩௫௪)

இலிங்கத்தைத் தொடங்கி நாள நுனியள வளவெ டுத்து
நலங்கெழு மிருகூ றுக்கி நவிலுமோர் கூறு தள்ளிப்
பலங்கெழு மாக மங்கள் பகருமோர் கூற்றி னீளந்
துலங்கிய நாள நீளத் தளவெனத் தொகுத்துக் காண்க. (௱௫௫)

மூர்த்திசேர் தருமி லிங்க வுயரத்தை முப்பா லாக்கிப்
பார்த்ததி லொருபாற் கில்ல பத்திரக் குழிக்குங் காண்க
வேத்துனால் விதிவ ழாதவ் விலிங்கச்சுற் றளவெ டுத்து
வாய்த்திடு மதுகீழ்ப் பாணி வட்டத்தி னகலங் காண்க' (௱௫௬)

பீடத்தி னகலந் தன்னைப் பிறித்தைந்தி ளொன்றி னீள
மேடுற்ற மலரிட் டேத்து மிலிங்கத்தி னுயரங் காண்க
நாடிக்கீழ்ப் பாணி வட்டத் தகற்சிநாற் பாகஞ் செய்தே
ரேடிப்பார்த் தரைக்காற் றள்ளி நின்றவவ் வளவை கொண்டே. ()

மாறில்கீழ்ப் பாணி வட்ட முதலமேற் பாணி வட்ட
மீறுய ரத்தைக் காண்க விலிங்கச்சுற் றளவை யோடுற
கூறுமுப் பாலி லோர்பா லதிகமுங் கூட்டிக் கொன்றை
நாறுவே ணியரி லிங்க நாளச்சுற் றளவை காண்க. (௱௫௮)

பஞ்சசூத் திரத்தைக் கூறிற் பரவுறு மிலிங்கச் சுற்றை
வஞ்சகீத் திடுகீழ்ப் பாணி வட்டத்தி னளந்து காண்க
வஞ்சிலொன் றேனு நான்கி லொன்றேனு மவற்றிற் றள்ளி
விஞ்சுமா வுடையா ணீரு முயரத்தை விதித்துக் காண்க. (௱௫௯)

அந்தமா வுடையா ளோங்கு முயரத்தி னளவை தன்னை
நந்திரு பாகமாக்கி யொருபாக நாள நீள
மூந்தறு கண்டுச் சுற்றை மொழிநாள மாதி யாக
வந்தமேற் பாணி வட்டத் தளவுநீ ளத்தைக் காண்க. (௱௬0)

வேறு.

எல்பெறு சூத்திரம் பதினொன் றைந்திவை
நூல்புக லிரேகைபை நுவலு வாமினி
மேல்வரு கீழுமேழ் மேலு மேழெனிற்
சால்பெருஞ் செல்வம்வந் தெய்துஞ் சத்தியம். (௱௬௧)

ஐவரை யிருந்திடி லடையும் புந்தியு
மெய்வரு வரைகண்மும் மூன்று மேவிடி
னுய்வகை யிலாதநல் குரவு ளுற்றிடு
மொய்வரை யொன்றுறின் மோக்க காமிக்காம். (௱௬௨)

மேலிரே கையிற்றொகை குறைந்து மிக்கதீ
ழாலிரே கையிற்றொகை யதிக மாயுறின்
மாலிரே சித்தறு மதிக்குள் ளாயவன்
பாலிரே சித்திடும் பலிக்குந் துக்கமே. (௯௬௩)

கீழிரே கையிற்றொகை குறைந்து கேடறச்
சூழுமே லிரேகையிற் றொகைம லிந்திடிற்
றூழுறு தொருமக விறந்தி டுஞ்சமம்
வாழும்புத் திரிகள்புத் திரரும் வர்த்திக்கும். (௯௬௪)

கூறிய வரையொன்றொ டொன்று கூடினா
றேறிய பெரியரவ் விலிங்கஞ் சிந்தியார்
மாறறு மாகம வரம்பிற் பூசிக்கி
னூறிய தங்குலங் கெடுத லுண்மையால். (௯௬௫)

தற்புரு டத்திரே கையொடி ரேகைதா
னற்புறக் கூடினு மகோர மாமுகத்
திற்படு மிரேகையோ டிரேகை சேரினு
முற்படு மிலிங்கமம் மோக்க காமிக்காம். (௯௬௬)

வாமமுஞ் சத்தியோ சாத மும்வரை
யேமுற வொன்றொடொன் றிணைந்து கூடினுங்
காமுற வருபுந்தி மடிக்குங் கற்றுளோர்
நாமவாத் தானத்துப் பிரமை நண்ணுமால். (௯௬௭)

எவ்விடத் தினுமொரோ ரிடத்தி ரேகைதா
னவ்வுற வீழ்ந்தவை தான்ம றைந்திடி
லவ்விலிங் கத்தினிற் பூசை யாற்றொணா
வவ்விய வுழவிலர் பங்கண் மத்திமம். (௯௬௮)

அளவையிற் கண்டச்சுற் றதிக மாயிடி
னளிவளர் மனைவியு நாச மெய்துவ
ளொளிவளர் கண்டத்தி னுயர்ச்சி மிஞ்சிடிற்
றெளிதரு புந்தியிற் கிலேசஞ் சேருமால். (௯௬௯)

விளங்கிய விலிங்கத்தி னுயர்ச்சி மிஞ்சிடி
னுளங்கெழு செல்வம்போய் வறுமை யுற்றிடும்
வளங்கெழப் பருத்திடின் மலட ராகுவர்
துளங்குநா லாதிக்கஞ் சொல்லக் கேட்டிரால். (௯௭௦)

வேறு.

ஏக மாகிய விலிங்கச்சுற் றளவையை யாறு
பாக மாக்கியே யைந்தையுந் தள்ளியோர் பாக
மோகை யேதருங் கண்டத்தன் ஞயரமே யிருக்கி
லாக மப்பொருள் கூறுங்கண் டாதிக்க மாமால். (௩௭௧)

அவ்வி லிங்கத்தி னளவையை மூன்றுபங் காக்கித்
தவ்வு றொரு பங்குநீத் திருபங்கு தன்னுற்
கவ்வை தீர்தர நாளநீ ளத்தினைக் காணி
லெவ்வந் தீர்ந்தநா ளாதிக்க மென்னநூ லியம்பும். (௩௭௨)

நாள நீளத்தி னளவையிற் பாதியை நயந்து
கோளி லாதவவ் விலிங்கத்தி னுயரத்தைக் கொண்டா
னீளு நூல்விதி யளவையே நிகழ்ந்திடி னதுதா
ஞளு நாயக னுறையிலிங் காதிக்க மாமால். (௩௭௩)

என்ற வாதிக்க மூன்றுமோ ரிலிங்கத்தி லிருந்தா
லூன்றி யன்னதை யுவந்துபூ சித்திட வொண்ணு
வான்ற செல்வமுங் குன்றிடு முரோகம்வந் தடையு
நான்ற வார்குழை மனைவியு நாசத்தை யடைவள். (௩௭௪)

நாள வாதிக்க மிலிங்கவா திக்கமு நண்ணுங்
கால கந்தர னுருவமா மிலிங்கத்தைக் கருதா
மூளு மன்பினோ டருச்சனை புரிவரேன் முயங்கி
வாளை வென்றகண் மாதர்பால் வாஞ்சையுந் துழல்வார். (௩௭௫)

அன்றி யும்மது பூசித்த நாண்முத லாக
வொன்று வற்சா மொன்றல்ல தொன்றரை வருட
நன்றி கூர்செல்வ முற்றிடு நவின்றிடி லப்பாற்
குன்றி யேயவை நாடொறு நாடொறுங் குன்றும். (௩௭௬)

பொருவி லாவிலிங் காதிக்கம் பொருந்திய விலிங்கம்
பரிவிற் பூசனை புரிவரேற் புரிந்தவப் பலத்தாற்
றரும சிந்தைய ராகுவர் தழைத்தெழுந் தோங்கிப்
பெருகு செல்வம்பேரம் பேசரும் வறுமையெய் துவரால். (௩௭௭)

பூண்ட வன்பினு ளாதிக்க விலிங்கம்பூ சிக்கி
லாண்டு மூன்றினின் மனைவியு நசித்திடு மப்பா
லீண்டு மோர்மனை வியுமவ ளாலெய்துங் கேடாம்
வேண்டு நன்பயிர் செய்யுந்தாற் பரியமே மிகுமால். (௩௭௮)

இயற்கண் டாதிக்க மாகிற்று னிருந்தா டகன்று
பெயர்த்து மற்றொரு நாட்டினிற் போகுவர் பெரித
நயத்த செல்வமுண் டாய்க்கெடு நயந்துபூ சிக்கின்
மயக்க மார்சித்தப் பிரமையால் வருத்தமு முறுவர். (ஙஎக)

வேறு.

குற்றமறு மிலிங்கமுள்ளங் கையினில்வைத் தாலுடனே குளிர்ந்
நதாயி, னற்றமறப் பூசிப்போர்க் காயுவுமெண் பத்தாறே யாமா
திக்கம், பெற்றிடுமவ் விலிங்கமெனி லவ்வாதிக் கத்தொகையும் பிற
ங்கக் கூட்டி, யுற்றவிரு வகைத்தொகையி னுலிலொரு பாகமருச் சி
ப்போ ராயுள். (ஙஅ0)

அங்கையில்வைத் திடினிலிங்கஞ் சுட்டிடுமேற் பதினொருவற்
சரமே யாயுத், தங்கியவா வுடையாளுஞ் சாசரத்து வெறித்திடுமேல்
வருட மொன்று, மிங்கிவைமூன் றும்பொருந்தி லவ்விலிங்கத் திற்
பூசை யியற்று வாரேற், பங்கமுறு மவ்வளவோ வற்சரமொன் றே
யாயுப் பகருங் காலே. (ஙஅக)

ஞீடுதரு மிலிங்கத்தி லாதிக்க முறிலதனைத் தொகுத்துக் கண்டே
நாடுமிரு வகைத்தொகையு மையிருபங் காக்கியெட்டு நயந்துதள்ளிப்
பீடுபெற நின்றவிரு பங்குடனே பிறங்குபதி னொன்றுங் கூட்டி
யீடுறவே கண்டதொகை பூசிப்போ ராயுவென வியம்ப லாகும். ()

இன்னுமருச் சனைசெய்யு மிலிங்கத்து ளாதிக்க மியம்பக் கேண்
மின், சொன்னவிலிங் கத்தையுள்ளங் கையில்வைத்தால் வைத்தவி
டம் போகிச் சுற்று,நன்னரிரண் டங்குலத்து வெளியிருக்கிற் போ
கமுமோக் கமுமே நல்கும், துன்னுமொரு விரலிருக்கிற் பூசிக்கிற்
றயிரியத்தைக் கொடுக்குஞ் சொல்லில். (ஙஅங)

அதிலரையங் குலமிருக்கிற் செல்வமெய்து நெற்கிடையெட்
கிடையே யாயின், மதிமயங்கு தரித்திரம்வந் தடையுமிது தளாதிக்க
மெனப்பேர் வாய்க்கு, மிதிலதிக மென்னின்மாக் கிராந்தனு கப்போ
வ னிதுபூ சிக்கிற், புதுமைதரு மாதவத்தி னிலிங்கவிலக் கணமின்னும்
புகலக் கேண்மின். (ஙஅச)

வேறு.

அருவுரு விலிங்கத்தை யங்கை வைக்கும்போ
தொருபல முற்றிடி னோங்கு மாயுவு
மிருபலம் பகைவராற் பீழை யெய்துறுந்
தெரிபல மூன்றெனிற் செல்வ மோங்குமால். (ஙஅரு)

நாற்பல முடலொளி நளிகெ டுத்திடு
மேற்புறு மைம்பல மிசையுஞ் செல்வமுஞ்
சூற்படை யுறுவறு பலத்திற் றூங்குமே
னூற்பயன் மரணத்தை நுவலு நிச்சயம். (௩அ௬)

எழுபல மிருந்திடி லிசையுஞ் செல்வமு
மழிவறு மனைவிபுத் திரருண் டாகியே
யிழிவறு வாழ்வுமே யெய்துந் திண்ணமீ
தொழியவப் பாற்பல மதிக முற்றிடில். (௩அ௭)

பூசியார் கருதியான் மார்த்தம் பூசிக்கி
னாசமு மடைந்துறை நாடு நீங்கியே
தேசமெங் கணுந்திரிந் துழன்றவ் வூர்தொறு
மேசுறப் பிச்சையேற் றிரந்துண் பாரரோ. (௩அஅ)

வேறு.

இயந்த லிங்கமு மெழில்பெறு மாவுடை யானு
முயர்ந்த வங்குல வுயர்ச்சியோ ரங்குல மிருக்கிற்
பயந்தம் மூர்த்தத்திற் பூசியா ராகமம் பயில்வார்
நயந்து பூசிக்கி னட்டதா ரித்திர ராவார். (௩அ௯)

அறையு மூர்த்தமுன் னதமிரண் டங்குல மாயின்
முறைநி றம்பிய மதமொடு மோகத்த ராவர்
நிறையு மவ்வுரு விரண்டரை யங்குல நீளித்
குறையுஞ் செல்வநன் குறைவறு சீர்த்திய ராவர். (௩௯0)

அங்கு லத்தின்மூன் றுயர்ந்திடி னியமத்த ராகிப்
பொங்கு செ[illegible]மும் போகமு மனுபவித் திடுவர்
தங்கி லிங்கநா லங்குல முயர்ந்திடிற் றூழா
திங்கு பூசித்த பயனுறுர் பிரமைவந் தெய்தும். (௩௯௧)

ஐந்து நீள்விர லளவையுா யுயரிலவ் விலிங்கஞ்
சிந்தை செய்துநற் றேமல ராலருச் சிக்கின்
முந்த வேண்டிய யாவையுங் கொடுக்குமுற் றறிவுந்
தந்தி டும்மவர் சாற்றிடின் மோக்கமா மியாராம். (௩௯௨)

அறுவி ரற்கிடை யுயர்ந்திடி னவ்விலிங் கத்தின்
மறுவி லாகம விதிப்படி பூசனை வகுக்கி
னறிய பூசையின் பயனிரா சாங்கத்தை நல்கப்
பெறுவ ரன்னவர் பெறும்பயன் யாரெடுத் துரைப்பார். (௩௯௩)

ஏழெ னத்தொகும் விரற்கிடை யுயரிலவ் விலிங்க
மூழி மாதவ விருடிகட் கேவகுத் துரைக்கு
மாழி யான்புக ழிலிங்கமெட் டங்குல மூயரின்
வாழி மாதவோ பலங்கெடு மகற்பய முறுமால். (ருகூச)

அதற்கு மேலுயர்ந் தங்குலத் ததிகமா மிலிங்கம்
விதித்துக் கூறிடிற் பரார்த்தமாம் விடயங்கட் காகு
மதித்துப் பூசனை புரிதலான் மார்த்தத்துக் காகா
துதிக்கு மவ்விலிங் கத்திற மின்னமுஞ் சொல்லின். (ருகூரு)

பூசி யார்சர சரத்திடு மிலிங்கம்பூ சிக்கின்
மாசி லாவடி வுங்கெடு மனையும்புத் திரரு
நாச மாம்பொரு டானமு நாடொறுங் குறையும்
பேசி லின்னமுண் டன்னவை விளம்புவம் பேணி. (ருகூசா)

வேறு.

குட்ட நீரிழி வோடு கொதித்தெழு
மட்டி லாத வயிற்று வலியுளோ
ரிட்ட மர்மிலிங் காதிக்கம் பூசிக்கின்
விட்டு நீங்கி யொழியுமவ் வெய்யநோய். (ருகூஎ)

காந்தி யேசுரத் தாலெந்தக் காலமும்
போந்தி ட்டாதுடல் பீடிக்கப் பட்டுளோ
ராய்ந்து தூயகண் டாதிக்கம் பூசிக்கிற்
சாந்த மாகிக் குளிர்ந்திடுஞ் சத்தியம். (ருகூஅ)

பெருவி யாதிமா ரோகம் பிணிசெயு
மரும கோதர நோயர்நா ளாதிக்கம்
பொருவி லிவ்விலிங் காதிக்கம் பூசிக்கில்
வெருவி யேயவ் வியாதி யொழியுமால். (ருகூகூ)

எந்த நாளும் பலபிணி யீர்ந்திட
நொந்து வாடி வருந்திய நோயினர்
புந்தி கூர்ந்துநா ளாதிக்கம் பூசிக்கின்
வந்த லைக்குமந் நோய்மறந் தோடுமால். (சா00)

உரைத்த மூவகை யாதிக்கத் தோங்கிய
வருத்த லிங்க மரச ரருச்சிக்கிற்
பிரித்த நீள்புவி யேழும் பரிப்பரின்
னிரைத்த மற்றையர்க் காகா கெழ்த்திடின். (சா0க)

ஐந்து சூத்திரத் தொன்றில்லை யாயிடி
னைந்து செல்வ ணிக்கு மிரண்டின்றேன்
மூந்து தானுறை தான முடிந்திடுஞ்
சிந்தி யாரவ் விலிங்கத்தைச் செவ்வியோர். (௪௦௨)

மற்ற துங்குறை தால்வழு வாம்வழுச்
செற்ற லிங்கத்திற் பூசை தொக்கொணு
வொற்ற சூத்திர மைந்தும் பொருந்துறி
னுற்ற செல்வ நிலைமையு முற்றிடும். (௪௦௩)

நிவந்த வெண்மையி லிங்கத்திற் பூசைநேர்ந்
துவந்து செய்யிற் கலகமுண் டாக்குமாற்
சிவந்த லிங்கத்தைப் பூசிக்கிற் றேசம்விட்
டவந்த ணுகி யலைந்து திரிவனால். (௪௦௪)

பசிய லிங்கத்தைப் பூசிக்கிற் பண்பிலா
வசைபொ ருந்து வறுமைவந் தெய்துமா
லிசையும் பீத மருச்சிக்கி லேய்ந்திடு
மசைவி லாச்செல்வ முற்றுமுண் டாக்குமால். (௪௦௫)

கார்த்தி லங்கு கறுத்தொளி சேர்ந்திடு
மூர்த்தி சாந்நித் தியமுற்று முற்றிடுஞ்
சீர்த்தி லிங்கத் தருச்சனை செய்திடிற்
கூர்த்து வேண்டிய யாவுங் கொடுக்குமால். (௪௦௬)

வேறு.

அத்தகை யிலிங்கம்புற் புதத்த வாவன
புத்திநூல் புகன்றிடு மண்டம் போல்வன
வித்தக விடபத்தின் கந்த மேயின
வுத்தம மத்திம மதம மோதுமால். ([illegible])

ஏதமில் புற்புத விலிங்க மூர்த்தியைப்
போதமுற் றுணர்ந்துமெய்ப் பூசை யாற்றிடிற்
பாதகந் தவிர்சீ ராதி பாக்கிய
மாதிய குணங்களை யடைவி னல்குமால். (௪௦௮)

புற்புதா காரமாப் பொருந்தி லிங்கத்திற்
குற்பனக் கண்டவா திக்க முற்றிடி
னற்குண முற்றிடு நாடிப் பூசிப்பர்
வற்பற வறுபத்து நான்கு வற்சரம். (௪௦௯)

போற்றியே யண்டலிங் கத்தைப் பூசிக்கிற்
றேற்றருந் தானியத் தொகுதி யெய்ந்திடு
மேற்றநா ளாதிக்க மிருக்கிற் பூசிப்பர்
மாற்றொரு நாற்பத்து நான்கு வற்சரம். (சகO)

உயங்குகண் டாதிக்க முறிலம் மூர்த்தத்தில்
வயங்குமுப் பானிரு வருடம் பூசிப்பர்
முயங்குலிங் காதிக்க முற்றிற் பூசிப்ப
ரியங்கிய விருபதோ டிரண்டு வற்சரம். (சகக)

கதிதரு மிடபகந் தவிலிங் கத்தினிற்
பொதுவற வருச்சிக்கிற் புந்தி மந்தமா
மதிகவா கனபல னடையு நீடியா
பதியும்வற் சரம்பதி னேழு பூசிப்பர். (சகஉ)

இருமைசே ரிடபகந் தமிலிங் காதிக்க
மருவிற்பூ சிப்பரீ ரைந்து வற்சரம்
பொருவிறு ளாதிக்கம் பொருந்திற் பூசிப்பர்
பெருமையோ டிருபது வருடம் பெட்புற. (சகங)

தீங்கக லிடபகந் தங்கண் டாதிக்க
மீங்கருச் சிப்பரெண் ணொன்கு வற்சர
மோங்குநா ளாதிக்கத் தொடுங்கண் டாதிக்க
மாங்குறிற் பூசிப்ப ரைந்து வற்சரம். (சகச)

அறைந்தபுற் புதமிலிங் காதிக் கம்மெனிற்
றிறந்தரு மருச்சனை செய்யு நாண்முத
லுறைந்தவற் சரமிரண் டொரைக்கு மூன்றுதா
னிறைந்திடு செல்வம்பின் னிலைமை குன்றுமால். (சகரு)

துன்னலர் மிகுமுட லுள்ள நாளெலாந்
துன்னிடு மனுபவந் துக்க மாதிய
வென்னியம் புவதவ ரிடுக்க ணெய்தலே
மன்னுநாற் பானிரு வருடம் பூசிப்பர். (சகசு)

வதியுநா ளாதிக்க மாகில் வந்திடுந்
திதமுறு செல்வம்பின் சீர னித்திடு
மதுதளா திக்கமே யாகிற் பூசிக்கி
லிதமுறு மூலகலா திக்க மெய்துவார். (சகஎ)

வேறு.

சுதரிசன நிதரிசன மாதிக்கத் தினில்வகுத்துச் சொல்லு மத்தி
னிதரிசன மாவதிலிங் காதிக்க நிறைந்திடும்புற் புதவி லிங்க
மதனிலுயர் நாளாதிக் கம்பொருந்தின் மோக்ககா மிக்காம் பூசை
நிதமூறுகண் டாதிக்க முறிற்போக வானுக்காஞ் செப்பும் பூசை. ()

அத்தகுபுற் புதத்தினு ளாதிக்க முறிற்சுதரி சனமா மத்திற்
புத்தியுறப் பூசிக்கிற் பொருட்டேடத் தானேவல் லவனு மாவன்
வித்தமெலா மற்றொருவ னழித்திடுவ னதிற்கண்டா திக்க மேவிற்
றத்துவருங் காலத்தி லன்னியதே யத்தினிற்போய் மரிக்குந் தானே.()

அண்டலிங்கந் தனிற்கண்டா திக்கமுறி னிதரிசன மதுபூ சிக்கி
னெண்டுகிலா பரணந்தா னியங்களுறும் பதினேழுவற்சரம்பூசிப்பர்
மண்டுறுநா ளாதிக்க மெனிற்பெலகீ னருமாவர் வருட நான்கி
லெண்டருசெல் வங்குறைந்துமடிவரிதுவெகுரூபமென்றும்பேராம்.

அதுவிலிங்கா திக்கமுறிற் சுதரிசன மவ்விலிங்கத் திற்பூ சித்தான்
மதிமயங்க வேவருத்தும் பசாசுகளா லருந்துயரம் வருத றிண்ணந்
துதிதருமவ் விலிங்கத்தி லேயிருவற் சரம்பூசை தொகுப்ப ரிப்பாற்
கதியுதவு மெழிலிடப கந்தலிங்கத் துக்குமினிக் கழறக் கேண்மின். ()

நிகழ்த்தியநா ளாதிக்க முறிற்சுதரி சனமெனப்பேர் நிகழு மன்பின்
பகுத்தறிவாற் பூசிக்கிற் செல்வமிரு பத்திருவற் சரமா மப்பா
லகத்துறைபு மனைவியுமை யாண்டின்மடிந் திடுவளதன் மேலாறுண்டு
மிகத்தளர்ந்தன் னியதேச சஞ்சார மாய்த்திரிந்து மீண்டும் வந்து. ()

ஐயாண்டு சென்றபின்னர் மரித்திடுவ ரிதுகண்டா திக்க மாகிற்
பொய்யாறு சுதரிசன மென்றுபெய ரவ்விலிங்கம் பூசை யாற்றி
னெய்யாமந் திரவாதி யாவர்மதத் தாலழிவ ரிறக்குங் கால [முற்றி.
மெய்யார்சம் பத்துடனே யிருந்திறப்பா ராண்டுமுப்பத் தொன்பான்

சாற்றுமிலிங் காதிக்க மாகிலது நிதரிசன மெனப்பேர் தாழ்ந்து
போற்றியதிற் பூசிக்கிற் பாதார வாஞ்சிதராய்ப் போவர் பின்ன [வர்
ராற்றவுமன்னியர்பொருளேயார்ச்சிப்பராரையுந்தா டணமேசெல்
மேற்றிகழன் னியபூமி தனிலிருந்தை வருடம்பூ சிப்பர் மீண்டும். ()

அன்னியதே யத்திருந்தே யிருபதா மாண்டளவின் மரிப்ப ரத்திற்,
பன்னியநா ளாதிக்க முறிலிசையுண் டாயுலகம் பரித்தி ராச, சின்னம
டைந் திடுவர்மிகு தானியஞ்சே ரும்பெருகுஞ் செல்வ ராவ, ரென்னி
சைக்கேன்பரதாரவாஞ்சிதராயுமுன்றுமுப்பா னிரண்டா மாண்டில்.

ஆயுதத்தி னுன்மரண மடைந்திடுவ ரன்னியரா லதன்பேர் கூறி, னேயுமகா குணவிட்ய மென்னவும்பே ரிசைத்திடுமா கமங்க ளெல்லாந், தூயபர லிலிங்கவிலக் கணமுற்றுந் தொகுத்துரைத்தேந் தொன்னூல் வல்லோர், சேயலிங்க மாராய்ந்து பரீக்ஷித்துப் பூசித்த ல் சிறப்பா மன்றே. (சஉசு)

ஆறுவும் பூருவகன் மங்கள்வரு மீடத்தனுசந் தானம் பண்ணு காறுநா லுரைத்திடுபே தாபேதங் கண்டிலிங்க நனிவர்ச் சித்துத் தேனூர்மென் மலர்கொடருச் சிப்பதற்குப் பிராச்சித்தஞ் செய்யுமாறு மாறுனு பூதிவிகா ரங்குறை குணனும்விதி விலக்கு மற்றும். (சஉஎ)

அரிதாமன்னியலிலிங்கப்பிராத்திசம்பந்தமும்பிராச்சித்தியமுஞ் சாற்றின், விரிவாமந் நூலுணர்ந்து செய்கலிங்க பூசைசெய்தல்விதியாமன்றி யொருவாது மற்றொருவ னுன்மார்த்தம் பூசித்த தொருவற் காகா பரிபாகர் நூதனமா வாணித்துப் பூசிப்பர் பணிந்தி லிங்கம். (சஉஅ)

குன்மமொடு சுரந்தொழுநோய் பிறவும்வருத் திடினுமனங் குன்று தேன்றுந், தன்னுடையான்மார்த்தலிங்கந் தான்பூசித் திடுவரன்றி யயலார் தீண்டி,முன்னியருச் சனைசெயுமென் றுரையார்தம் மனைவிக லமுகந்தே யுண்ணென், றன்னியரைப் பொருந்தவிட்டுப் பார்ப்ப ரோ பெரியரிது வதுவா மன்றே. (சஉகூ)

தம்முடையான் மார்த்தலிங்க பூசைநிவே தனநின்மா லியத்தைத் தாமே, செம்மைபெறப் புசித்திடுக மற்றையர்கா காதயின்றோர் சிறப்பென் றீந்தோர், வெம்மையுறு பசாசமா யுழல்வரிமை யவராண்டின் விளம்பு மோர்பா, னம்மைதரு குருவதிகா ரப்பொருணின் மாலியமே யார்க்கு மாகும். (சநO)

வேறு.

பூஜைநிற்பய னதிகமாம் பிரதோட பூசை
யீச னைப்பணிந் தருச்சனை செய்வரே லெவர்க்கும்
பேச ருஞ்சிவத் துரோகமும் போங்கதி பெறுவர்
பாச நீக்குமப் பிரதோடம் பகருதுங் கேண்மின். (சநக)

பிரதோடம்.

பண்டு மான்முதல் விண்ணவர் பாற்கடல் குறுகி
விண்டு மந்தர நாட்டினர் விசித்துவா சுகிஜைக்
கொண்டு வானமிர் தங்கடைந் தனரதிற் கொதித்து
மண்டு வெவ்விட முதித்ததவ் வானவர் மருள. (சநஉ)

நாலி யோசனை யுயர்ந்தகன் றதினவில் பாக
நீல மாமுகில் போற்கரு நெருப்பென வெழுந்து
சாலும் வேகத்தி னடந்தன வான்புவி சலிக்க
வோல மோலமென் றரிமுத லோடின ரோதுங்க. (சஙங)

பயங்கொண் டோடலும் பரந்துப சவ்விய மபசவ்
வியங்க ளாகவே மறித்துடன் றொடரவுண் மெலிவா
லியங்கு மெம்முயிர் காத்தியென் றிருங்கயி லையிற்போ
யுயக்கு வெள்விடை யண்டத்தி னனைவரு மொளித்தார். (சஙச)

ஒளித்த வானவர் பின்றொடர்ந் தாலம்வந் துறுங்காற்
களித்த மால்விடைச் சிருங்கமத் தியிலிறை கரந்தான்
விளித்தெல் லோரையும் விழுங்குமீ தெனவரும் விடத்தைத்
தளிர்த்த கையிலேற் றருந்தின னவருயிர் தரித்தார். (சஙரு)

ஆளு நாயக னுண்டமை கண்டன னமலை
மூளும் வெம்பயத் தோடியம் முதல்வனா மிடற்றைத்
தாள தாமரைக் கரத்தினாற் பிடித்தலுந் தங்கிக்
கான நின்றன காளகந் தரப்பெயர் விளங்க. (சஙசு)

கண்ட வானவர் முனிவர ரொழிந்தனர் கலக்க
மண்டர் நாதனு மமலையை யாசனத் திருத்தி
மண்டு பேரன்பி னடித்தனன் சிருங்கமத் தியினிற்
றொண்டர் போற்றுமக் காலமே பிரதோடமாச் சொல்லும். (சஙஎ)

மந்த வாரத்திற் பதின்மூன்றாந் திதியின்வா ளொளிசே
ரந்தி வான்கதி ரத்தமண் டலமுகுர்த் தத்திற்
சிந்தி யாதமிர் தங்கடைந் திடவிடஞ் செனித்த
தெந்தை யக்கணத் தயின்றிமை யோருயி ரீந்தான். (சஙஅ)

ஆத லாற்சனிப் பிரதோடம் விசேடமா மதுமுன்
னோது மற்றுள தேவர்மா முனிவர ருவப்பின்
மாது பாகனைப் பூசித்துத் தெரிசித்து வழுத்தித்
தீது தீர்ந்தன ரமிர்தமுண் டிருந்தனர் சிறப்பால். (சஙகூ)

மழைக்கொ தூங்கினும் வருபயத் தோடினும் வரிசை
தழைக்கு மாடல்பா டற்கலா வொடுதனி வரினும்
புழைக்கை மாவுரி போர்த்தவர்க் காண்கினுந் தொடினு
மிழைக்க ரும்பெரு வினைபிர தோடத்தி லேகும். (சச0)

போச னஞ்சய னம்புதுப் புனல்படிந் திடுதல்
ஷேச வன்றெறி சனமெண்ணெய் தேய்த்திடல் ளொந்த
தேசு பெற்றிடு வாகன மந்திரஞ் செபநூல்
பேசு மிந்தவெண் கிரியையும் பிரதோடத்தி லாகா. (சசக)

இரண நல்குர வரும்பய மிரும்பசி யுரோக
பூரணு றும்பயங் கிலேசங்கோ தம்மவ மிருத்து
மரண வேதனை யிவையெலா மகற்றென வணங்கிப்
புரண நாதனைப் பிரதோடத்திற் போற்றிடத் தகுமால். (சசஉ)

சங்கரித்தலால் விடத்தைச்சங் காரகா லமதா
மங்கண் மாகிலந் தொழும்பிர தோடமு மாகும்
வெங்க திர்ப்பரன் வீழுமுன் பின்விளம் பியதோர்
பங்க மில்லிரு பங்குமோர் யாமமும் பன்னூல். (சசங)

சவ்வி யம்மப சவ்விய முபவப சவிய
மிவ்வி தம்விடந் தொடரவிண் ணவருமவ் விதியாற்
கவ்வை கூர்ந்தனர் விடைசண்டன் முன்சென்று கலங்கு
மெவ்வந் தீர்ந்தன சோமசூத் திரவல மென்பார். (சசச)

வேறு.

விடைசண்டன் விடைசோம சூத்திரம்வெள் விடைதொழுது விளங்குஞ் சண்ட,னடைகொண்ட சோமசூத் திரமீண்டுஞ் சண்டன் மழ விடையைப் போற்றி, நடைகொண்ட பேரன்பின் வணங்கி லொரு வழியிவ்விதி நன்காச் செய்யி, னடைகொண்ட பிரதோடத் தடிக்கொரய மேதம்வினை யனைத்தும் போமால். (சசரு)

சோமசூத் திரத்தோது விதியுமன்றி நாள்கடொறுந் தொழுது போற்றி, மாமைசேர் வலம்புரித விடம்புரித வுடம்புருளல் வணங்கிச் சூழ்தல், சேமமார் தருபலன்க ளொன்றுக்கொன் றுயிரமாந் தெளிந்த மேலோர், நாமமாங் கோமுகைமுன் கடவாமை கவில்பயன்மூன் றுபுத மாகும். (சசசு)

புனல்பத்தா வின்பாலோர் நூறுதயிர்க் காயிரநெய் பொருந்த வாட்டிற், கனமுற்ற பயன்பதினு யிரங்கருப்பஞ் சாறுநூறு யிரந்தே னூட்டில், வனமுற்ற பத்திலக்கந் தெங்கினீர் கோடிமணச் சந்தச் சேற்றிற், இனமுற்ற தொகையனந்த மவரவர்செய் குறைபொறுக் கு மெம்மா னம்மா. (சசஎ)

இன்னுமொரு விதிபுகல்வார் தெசமியிலங் குரித்தேகா தெசியி
ற் பான்மை, மன்னுதிருப் பாற்கடலின் மந்தரநாட் டினர்கடையு
மாலைக் காலங், துன்னுவிடஞ் செனித்தெழுந்தங் கமலனுண்டான்
றுவாதசிநா ளமிர்தந் தோன்றப், பன்னுமிமை யவராயின்று த்ரயோ
தெசிமா லையிற்பரனைப் பணிந்தர்ச் சித்தார். (சசஅ)

விடைமேனின் றமலனருள் கொடுத்துமக்கு வேண்டும்வரம் வி
ளம்பு மென்னக், கடலால முண்டிருண்ட கண்டாவென் றடிபோற்
றிக் கமலன் கூறுங், திடமாக வருந்தெசமி யெனக்கென்று னரியே
கா தெசியெற் கென்று, னடைசேருந் துவாதசிப்பா ரணமுமென்று
னவர்க்கவர நல்கி னுனல். (சசகூ)

ஆதலினு லரிவிரத மென்றுயிற் றானரிக்கும் பொதுவு மாகு
மோதியவவ் விரதத்துக் கிணையாக வொருவிரத முரைத்துக் கூடா
வேதுவினுற் பிரதோட மென்றுயிற் றிரணியனை நாரசிங்கம்
வாதைபுரிந் தடுங்கால நித்தியப்பிர தோடமென வழங்குங் காலம். ()

அத்தமன முன்பின்மூன் றேமுக்காற் கடிகையதூஉம் விசேட
மாகும், பத்தியினு லக்காலம் பரம்பரனைத் தெரிசிப்போர் பவங்க
ணீங்கி, முத்தியடைந் திடுவர்முன மொழிந்தபதின் மூன்றுநாட் பிர
தோ டத்திற், சித்தமுற வான்மார்த்தம் பூசிக்குந் திறம்புகல்வாந் தெ
ளிந்து கேண்மின். (சநக)

பிரதோடவிரதம்.

ஐப்பசிகார்த் திகைசித்திரை வைகாசித் திங்களென வறைந்த
நான்கி, லொப்பில்சனிப் பிரதோட முதற்றொடங்கி நாற்பானே டொ
ன்றைம் பத்தைந், தெப்புவன முந்தொழவெண் பத்தொன்று தொ
ண்ணூற்றேழேனு மெண்ணித், தப்பறுபூ ருவமபர பக்கந்தோ
றனுட்டிப்பர் தணவா ராகி. (சநஉ)

இந்தமுறை யனுட்டித்தே யான்மார்த்தம் பூசிப்ப ரியம்புஞ் சங்
கை, முந்துரைத்த தொகைதீர்ந்த வந்தியத்தின் மொழிந்தசனிப் பிர
தோ டந்தான், வந்திடுநாள் வரையனுட்டித் தந்நாளுந் தியாபனமும்
வரம்பிற் செய்வார், புந்திதெளி யான்மார்த்த பூசையுமுத் தியாபனமு
ம் புகல்வாங் கேண்மின். (சநஙு)

பிரதோடபூசாகாலநிண்ணயம்.

இரசனிமா முகந்தொடங்கி யேழரைநா ழிகைமூன்றி யாம
மென்றே யுரைதருமப் பிரதோடத் துரியவகோ ராத்திரமுந் தமம்

யா தென்னில், வரையுமிரண் டாம்யாமத் திரண்டுதெள்ளி மற்றைய் யோரக் கடிகை சொல்லுங், தெரிதருபூ ருவவித்தை யபரவித்தைமூன் றும்யா மத்தைச் செப்பும். (சருச)

சொற்றனவும் பூசைக்கு விசிட்டமாந் துலங்குதுவா தெசிமுப் பா னென், றுற்றிடினுங் கடிகைமுப்பா னுறுறினு மாம்பிற்றை யுறுநா டன்னிற், பெற்றதிர யோதெசிமுப் பான்முப்பத் தொன்றிருபத் தொன்பான் பேசின்,முற்றியபூ சனைக்காகா முப்பானுன் முப்பத்தஞ் சுறினு மாகும். (சருரு)

பிரதோடபூசை.

திதிநிலைய மியம்பினமத் தமனநாற் கடிகையெனத் தெண்ணீர் மூழ்கிப்,புதியவத்தி ரத்தீரந் துவட்டியுத்தூ ளனநீறு பூசிப் பின்னர்ப், பதிமிருத்தி யுஞ்சயத்தாற் றனைக்காக்குங் கவசமதாய்ப் பாவித் தன்பின், புதியகலை யிரண்டுடுத்துத் தரிகமணிக் தாரமுதல் பூண்டு பொற்பூண். (சருசு)

ஆன்மதத் துவமுதலாஞ் சமனமுடித் திடக்கையினி லமைத்துப் பூதி,பான்மைபெறு கலாமனுவாற் சுத்திபண்ணி யஞ்செழுத்தாற் பனிநீர் விட்டு, மேன்மைபெறக் குழைத்தந்த மந்திரத்தாற் சிரமுதல்விளங்கப் பூசி, நூன்மரபிற் கைகழுவி நுவல்கும்ப முத்திரையான் முடியின் மீது. (சருஎ)

சிவமனுவாற் புரோக்கித்துப் பிராணயா மமுஞ்செய்து சிவாசனுதி, யவுமறவே நியாசித்தவ் வஞ்செழுத்தா லங்கநியாசஞ் செய்து, தவறறுமம் மந்திரத்தாற் பதினொன்றே னும்பதினொன்றேனுந் தர்ப்பித், திவர்தரவா சமித்தணிர்தஞ் செழுத்தரினனுட்டான மியல்பிற் செய்து. (சருஅ)

எழுதர னைன்பதபி மந்திரித்தவ் வஞ்செழுத்தா லிருந்தண் போதாற், ருழுரு தருச்சிக்குந் தனையும்பூ சாத்தானத் தையும்பு ரோக்கித், தூழுறபச் சிமத்தினிலைங் கரனவற்குத் தாத்தத்ர துவாரபாலர், வாழுறவாத் துலதிபதி பிரமன்றெற் கவரவர்மந் திரத்தர்ச் சித்து. (சருக)

இருபான்மேல் கீழ்பாசு பதாத்திரத்தால் விக்கினங்க ளனைவையும் போக்கி, யொருவாது நித்தியம்பேரற் பூதசுத்தி யோடுமந்த ரியாகஞ் செய்து, பரிவாரக வத்திரத்தாற் கழுவிவிசே டார்க்கியபாத் திரத்

தைப் பண்பு, தருமாறு சதாசிவபஞ் சாக்கரத்தாற் செறிதருதண்
ணீர்பூ ரித்து.   (சகo)

அறுகாலு மைங்காலும் பத்திரத்தாற் சுத்தபஞ்சாக் கரத்தர்ச் சி
த்து, நறுமலர்மூ லத்தணிந்து திக்குபந் தனமவகுண் டனமேன் காற்
றிச், செறியவபி மந்திரிதநுப் புரோக்கித்துத் தனைத்திருமஞ் சனத்
துந் தெண்ணீர், கெறிமலரா விட்டுவிந்து வெனநுதலிற் சந்தனப்
பொட் டணிந்து நீரால்.   (சகக)

மூலத்தா லஞ்செழுத்தாற் செய்துசுத்தி சிவன்றனுய் முழுதும்
பாவித், தேலத்தான் பரலிங்க மிறைவிவிடை நானவே திகையில்
வைத்தே, யாலத்தார் களத்தனேச்சா மானியவர்க் கியஞ்சிவகா யத்ரி
யாலே,சீலத்தாற்புரோக்கித்துத்தூபமளித்தபிடேகஞ்செய்து பின்னர்.

குச்சுப்புற் சாத்தியபின் னஞ்செழுத்தாற் றிரியம்பகத்தாற் குளிர்
நீ ராட்டி, விச்சைதரு மம்பிகைக்குப் பாசுபதாத் திரம்விடைக்கா யத்
ரி யாலே, யிச்சைமழ விடைக்காட்டி மாமஞ்ச ணெல்லிபா றயிர்நெய்
யிக்குப், பச்சிளநீர் பஞ்சவமிர் தந்தேன்சந் தம்பஞ்சாக்கரத்தாலாட்டி.

சுத்தநீ ராட்டிமிருத் தியுஞ்சயத்தால் விசேடவருக் கியத்தைத்
தொன்மை, நித்தியமூ லத்தாட்டித் திருவெற்று டையுஞ்சாத்தி நிம
லன் றன்னை, வைத்தரியா சனத்திலிங்கத் தெதிர்முகமாய் மழவிடை
யை வைத்தர்ச் சித்து, முத்திதரு மிடபஸ்ரீ சாக்கரத்தோ டாசனமேன்
மூர்த்தி மூலம்.   (சகச)

நால்வேதம் பாதமுட றருமமுகம் பணைசிருங்க நாதஞ் செங்க
ணாலேதும் விந்துகன்னங் குடிலேபவ மண்டநுவல் வாறி ரோதை
மேலோது மவ்விடையின் சிருங்கமத்தி விளங்குமுமாமகேசனென்ன
மாலோதுஞ் சிவலிங்கப் பெருமானை யன்பினொடு மனம்பாவித்து.()

தருமமொடு ஞானமுத லுறுப்பாகும் பதுமவா சனம்பூ சித்து
நிருமலனுங் கிருப்பதாய்ப் பாவித்தா சனமூர்த்தி நினைந்தர்ச் சித்து
வுருதிரியம் பகமூல வுமாமகே சுரத்தாலா வாகித் தான்ற
பொருவறுதா பனசன்னி தானசன்னி ரோதனமும்பொற்பாலாற்றி.

துலங்குசுவா கதவருக்கி யங்கொடுத்துத் திருவடியும் விளக்கிச்
சோதி, யிலங்குதிரு வொற்றுடை சாத்திப்பாத் தியாசமனர்க் கியமு
மீந்தே, நலங்கெழுசந் தனமுழுக்காப் பணிந்துபஞ்சாக் கரத்தா

னன் மலரோ டிண்டை, பொலங்கெழுவே சாத்திப்பா யதங்குளான் னிந்தியோ தனந்தாம் பூலம். (சுகஎ)

அஞ்செழுத்தா னிவேதித்துக் குளான்னந்தாம் பூலமஞேன் மனிக்கு மாக்கித், தஞ்சவிடைக் குழுந்தெள்பசுந் தண்டுலந்தேங் காய்த்துருவ றண்ணெண் வாழை,விஞ்சுகனி யிவைவிரவிப் பாகிலையும் விடைவிசாக் கரத்தா வீந்து, தஞ்சென்வே யிடபகா யத்திரியாற் றிருப்பள்ளித் தாமஞ் சாத்தி. (சுகஅ)

நற்றூப தீபமுப சாரம்பாத் தியாதிபஞ்சாக் கரத்தா னல்கி,யுற்றவுமா மகேசுரசம் வாதமிருத் தியுஞ்சயத்தா லுருநூற் றெட்டுப், பற்றறவே செபித்துமலர் சாத்தியபி னெழுந்துநின்று பதக னேன்யான், நற்றியரோ கத்தினனஞ் ஞானனெனப் புகன்றிறைஞ்சித் தொழுது போற்றி: (சுகக)

பராமுகவர்க் கியங்கொடுத்து விடைச்சிருங்க மத்தியினிற் பாவித் தன்பா, லராவணிவே ணியனேயுமா மகேசனென வுறைகுவதா யவுடவிற் போற்றித், தராதலத்து வீழ்ந்திறைஞ்சி யென்பூசை கொண்டருடற் பரனே யென்று,விராவுறப்பூ சித்திடுவர் பூசிப்போர் பெறும்பயனை விளம்பற் பாற்றே. (சஎo)

இந்தமுறை யாலுலகில் யாதொருவன் பூசித்தா னெண்ணிற் றெல்லாஞ், சிந்தைமகிழ் வுறத்தருமெம் பரன்விரதத் தொகைச்சங்கை தீர்ந்தா லப்பா,லந்தியத்தி லுயர்ந்தசனிப் பிரதோடம் வருமளவு மருச்சித் தன்பாற், புந்திமகிழ் தத்தினைத்தி னுத்தியா பனஞ்செய்வர் புகல்வாங் கேண்மின். (சஎக)

பிரதோடவிரதோத்தியாபனம்.

முன்னுரைத்த படிபூசாத் தானத்தை யலங்கரித்தம் முறைவழாது
பன்னிரு பிரதோட பூசையடை வுடன்முடித்துப் பண்பி னேங்கு
மன்னியவா கமவிதியின் மண்டபமுண் டாக்கிநூப் பதத்தின்மன்னூ
லுன்னியவே திகையமைத்தே யதற்கடுத்த கிழக்கிலுறு பதத்தி லோங்க.

விருத்தகுண்ட மாவதுநாற் கோணமா வதுகுண்டம் விரைவிற் செய்தே, யுருத்தகுசீர் நிருதியிலீ சானதிக்கி லொவ்வொருவே திகையுண் டாக்கித், திருத்தியமண் டபமுமலங் கரித்ததனுட் சென்றதனை நீக்க ஞதி, பொருத்தமுறு சுத்திபண்ணி யைங்கரனை விதிமுறையிற் பூசை யாற்றி. (சஎ௩)

நிலைபெறுசா மாணியவர்க் கியந்தாபித் ததன்பின்பு நிருதி திக்கிற்
பலமுதவு மியற்பஞ்ச கவ்வியத்தா பனஞ்செய்து பரிவா லெங்கு
நலமிலகு புனிதமுறப் புரோக்கித்தீ சானதிக்கிலிருந்துநன்கா[ங்நெல்.
யிலகியவொன்பதின்குறுணியெழுகுறுணியைங்குறுணியேனுஞ் செ

எண்டகவே பரத்தியந்த நெற்பாதி தண்டுலமேல் விரித்தே யங்
த,வெண்கடுகெட் சிறுபயறு கடலையே யரிசிபடி யொவ்வொன்றாக,
நண்புறவே கொணர்ந்தவற்றின் மறுநீக்கி யொன்றுமே லொன்று ந
ன்காய்ப், பண்புறவவ்வடைவின்விரித்ததன்மீதிலட்டதளபதுமங்கீறி.

தட்பமுறு மெண்ணிரண்டை யிரண்டுபடி குறுணிநறுந் தண்
ணீர் கொள்ளக், கட்புலனுக் கழகுபெறு மிலக்கணம்பெற் றுடைய
கும்பங் கொணர்ந்து காம, ரெட்கிடைநெற் கிடைகெசநேத் திரக்கி
டைமாத் திரைவெளிவிட் டிழைநூல் சுற்றி,நுட்பமுறு பிரமசூத் திர
ஞ்சேர்த்தி விதிமுறைமுந் நூலுஞ் சாத்தி. (சஎசு)

அந்தமணிக் கும்பத்தை யத்திரத்தி னாற்சோதித் ததனைக் கட்க
மந்திரத்தி னாற்கழுவி யுபசாரத் தோடுமணி தூபங் காட்டிக்
கந்தகற்பூ ராதிமுதன் மணங்கமழு நறும்புனலைக் கனியு மன்பான்
முந்துமுமா மகேசுரத்தாற் பூரித்து நவமணியுமுறையா லிட்டு.(சஎஎ)

சுத்தமுறு தருப்பையின்முப் பானிரண்டா லமைகூர்ச்ச நிறுவிச்
சூத, பத்திரம்வைத் ததன்மீது நாளிகே ரமுமமைத்தைம் பத்தைம்
புல்லால், கைத்திலகு வாகுவள வாமிலிம்பு கூர்ச்சமுமேல் வாய்ப்பச்
சேர்த்தி, யொத்தகரும் பரிவட்ட முழும்பதினொ ரொருபானே றிவற்
றி லொன்றை. (சஎஅ)

சாத்திநிறை கும்பத்தின் கீழ்வடக்கே நுனியாய்க்கூர்ச் சத்தைச் சே
ர்த்திப், பூத்தவன்பி னங்ககரி நியாசமுடன் பூதசுத்தி யந்தர் யாகஞ்,சீர்
த்திபெறச் செய்துவிசே டார்க்கியந்தா பித்ததனாற் சிறப்பி னெங்குங்,
கூர்த்தறிவாற் புனிதமுறத் தன்னையுங்கும் பத்தையும்பு ரோக்கித்துக்
கொண்டு. (சஎகூ)

நெற்றியினிற் றிலதமணிந்தஞ்செழுத்தாற்சுத்திசெய்துநிறைகும்பத்தி
லர்ச்சனைசெய் திடல்கேண்மி னதன்கீழா மாதார சத்தி தன்னைப்
பற்றுறவுச் சத்திமுதற் குடிலாந்த மருச்சித்துப் பரிவாற் போற்றி
யுற்றதனி மந்திரசிங் காசனமா கப்பாவித் துவகை கூர்ந்து. (சஅ0)

சிறந்தவை சத்தியையுஞ் சிவாதனமுஞ் சிவமூர்த்தி யையுமர்ச் சித்தே
யுறைந்ததிரோ தானசத்தி நீக்கியுமா மகேசுரமந் திரத்தா லுண்மை
நிறைந்திடுமீ சனைக்கும்பத் தாவாகித் திடப்புறத்தி னேயங் கூர
வறைந்தமனோன்மனியென்னுஞ்சத்தியையும்விதிமுறையி னாவாகித்து.

நிலவுமுமா மகேசுரற்கீ சானுதி தெண்டபங்கி நெசித்து நீங்கா
திலகுமனோன் மனிக்குமெழிற் சித்தியா திக்கிரம நெசித்தே யேய்ந்து
குலவுதிரு வடிவிளக்கி வாமத்தாற் சந்தனமுங் குளிரச் சாத்தி
மலைவருமீ சானத்தான் மலர்மாலை முதலியன மகிழ்ந்து சாத்தி. ()

வேறு.

தேவ சேனு மகாசேனு வுக்ர சேனு திறல்வீமா
தாவி லாத மகேசுவரா சருவா பராய சருவாய
காவா யிடபே சுவராய காள கண்டா பினுகீசா
வேவில் கலியா னேவுசித வீச்வ ரகங்கா தாராயவென்றும், (சஅங)

சிறீகண் டாய வுயர்வாம தேவா நடேச திகழொளிசேர்
சறுவ சம்பு சங்கரனே சாம்சா தாய சசிமவுலீ
செறியும் புட்க லாயவர்த்த காய பஞ்சாக் கரதேக
விறைவ நமவென் றருச்சித்தே யியம்புஞ் சிவனு கமவிதியால். (சஅச)

வேறு.

பாத்தியம்பா தத்திலுய்ா சமனமுகத் திலுங்கொடுத்தர்க் கியநீர்
பண்பா,லேத்துசிரத் திலுங்கந்த மேனியினு மலர்மூர்த்தா வினுந்தா
பந்தரன், சேர்த்தியநா சியினுநேத் திரத்திற்றீ பமுங்கொடுத்துச் சிற
ந்தகையில்,வாய்த்திடுஞ்சத்திரசாமராதிகளாலுபசாரம்வரம்பிற்செய்து.

ஆன்றமுதல் ,யாமத்திற் குளான்னமும் வடையுமிரண் டாம்யா
மத்திற், கேன்றமுற்கான் னஞ்சுகியன் மூன்றும்யா மத்தினிற்பா ய
தத்தோ டப்பங், தோன்றியநா லாம்யாமந் தனிற்றகியோ தனத்தொ
டதி ரசமுங் தொன்மை, சான்றவுமா மகேசுரத்தா னிவேதனஞ்செய்
திடவேண்டுஞ் சாமங் தோறும். (சஅரு)

சண்பகந்தா மரைப்போது முதல்யாமத் தருச்சிக்க விரண்டா
ஞ் சாமம், பண்புறுநீ லோற்பலந்தண் ணிருவாட்சி மூன்றதனிற் பாரி
சாத, நண்புபெறு கருநெய்த லினந்தி யாவர்த்த மடுக்கு வெள்
ளை, விண்பரவ வருச்சிப்பர் விளம்பியயா மந்தோறும் விதிவ ழாமல்

இப்படிசெப் பியமுறையா லருச்சனைமுற் றித்தூப தீப மீந்தே
யொப்பரிய மந்திரத்தா னிவேதித்துத் தூபதீ பாதி யோங்க
வைப்புறுமம் மந்திரத்தா லுபசாரஞ் செய்துமலர் செபித்துச் சாத்தி
மெய்ப்புறநன்னிரோதவருக்கியங்கொடுத்துவழிபாடுநேர்ந்தபின்னர்.

நடுவுமை திசையினில்வந் திருந்தரிசி யைங்குறுணி பரத்தி நன்கா[ய்
விடுசுடர்ப்பொன்கழஞ்சிலெண்பத்தோரரிசியதன்மீதுவிரித்துமீதாய்
வடிவுறவே யட்டதள பதுமத்தைக் கீறியத னடுவின் வாய்ப்பக் [டும்.
கொடுவருபொன்னைங்கழஞ்சின்முக்கழஞ்சிலேனுமுருக்குறிக்கவேண்

அங்குலநான் கினிலேனு மூன்றிலே னுஞ்சதுரத் தகடுண் டா
க்கிப், பொங்குமுமா மகேசுரவிம் பத்தையந்தப் பொற்றகட்டிற்
செய்து பொற்புத், தங்கியகவ் வியத்தினு லபிடேகஞ் செய்துமுறை
தணவா வண்ணந், துங்கமுறு கருடணமா திப்பிரதிட் டாந்தமன்பு
தோன்றச் செய்து. (௪௧௦)

பிரதிவிம்பந் தனையந்தப் பதுமதளத் தினிலமைத்துப் பிறழா வ
ண்ணம், பரவியபாத் தியாசமனார்க் கியங்கூட்டி யருச்சிக்கும் படிகே
ண் மின்கீழ்ப், பொருவறுகூர் மாசனந்தன் மந்திரத்தாற் பூசித்துப்
பொலிவின் மீதா, யரியவட்ட நாகந்தன் மந்திரத்தி னலருச்சித் ததன்
மே லாக. (௪௧௧)

பூருவதிக் காதியதன் மாதிகளைப் பூசித்து விதிக்கி* னீதி
கூரவதன் மாதிகளர்ச் சித்துமந் திரசிங்கா சனமாய்க் கொண்டு
தேருமுமா மகேசபர தேவத்ரியம் பகசோம சுந்த ரேச
வோர்சருவ வீமமகோற் பலாயகிறீ நீலகண்ட வென்றர்ச் சித்து. ()

நேசித்துச் சத்தியா திகளாலே தெண்டபங்கி நெசித்துப் புந்தி
யோசித்து வித்தியா தேகமுழா வாகித்தே யுமாம கேசம்
பேசுற்ற சருவபாவ விமுத்திதாய பிறங்குமி ரீம்ரி காய
வாசிப்பொற் புறுசருவ வயிச்சுரிய சமர்த்திதா யவென மன்னும். ()

பகர்தருமம் மந்திரத்தோ டுமாமகே சுரபஞ்சாக் கரமுங் கூட்டி
த், தகவுறவா வாகித்துத் திருவடியும் விளக்கிமிருத் தியுஞ்ச யத்தாற், றி
கழ்தருபாத் தியாசமனார்க் கியங்கொடுத்துக் கருப்பூரா திகள்வேதித்
தே, யகமகிழ்சந் தனமலரம் மந்திரத்தாற் சாத்தியலங் காரஞ் செய்தே

* விதிக்கு-மூலை.

பத்தர்புகழ் சருவவயிச் சுரியமக தேவசர்வ பாவ நாச
சத்தியோ வாமவகோ ரேசதற் புருடவீ சான வென்றே
யித்தகைமந் திரங்களிலர்ச் சனையியற்றி யெழிற்றூப தீப மீந்து
நித்தமிருத் தியுஞ்சயத்தா லமுதொரடுதாம் பூலாதி நிவேதித் தேத்தி. ()

மணங்கமழ்தூ பதீபஞ்சத் திரசாம ராதிபணி மாறப் பண்ணி,
யிணங்குமிருத் தியுஞ்சயத்தாற் செபித்துமலர் சாத்தியுளத் தெண்ணிற்
றெல்லாங், குணங்கொளுநீ கொடுத்தருள வேண்டுமெனப் பிரார்த்த
னையுட் கொண்டே பின்னர், நுணங்கறிவி னிடபவான் மார்த்தம்பூ
சிப்பரது நுவலக் கேண்மின். (சகசு)

யிவ்வுபுக ழாண்மார்த்த விடபத்தைப் பஞ்சகவ் வியமே யாதி
திரமுறுமர்க் கியாதியபி டேகஞ்செய் தேதிருவொற் றுடை சாத்தித்
தரைபுகழ்தென் னடுவிதழி லெழுந்தருளப் பண்ணியிரீம்ரிகாயசர்வா
பரணபூ டிததரும விடபவெனு மந்திரத்தாற் பரிந்தர்ச் சித்து.(சகஎ)

வதனத்தி லருட்சத்தி யிச்சாஞா னக்கிரியை மருவு கோட்டி
லிதமுற்ற நேத்திரத்தி லங்கியா தித்தனிருஞ் செவியி லாதி
விதமுற்ற பராசத்தி நாலுபிர தத்தினுநால் வேத மேனி [த்து.
நிதமுற்ற தருமம்வா றிரோதையண்டங் தனிற்பவமுந் தெளிந்தர்ச் சி

பாவித்தே யிடபகா யத்திரியா லேயாவா கனமும் பண்ணிப்
பூவொத்த செய்யதிரு வடிவிளக்கி யெள்ளினறும் பூவுஞ் சாத்தி
மேவுற்ற கருப்பூரம் விரவுசந்தஞ் சாத்தியலங் கரித்து நல்கி
நீவுற்ற மணங்கமழ்தூ பந்தீபமுற்கான்ன நிவேதித் தேத்தி. (சகஅ)

திடமுறுதாம் பூலநிவே தித்துரிய தூபதீ பாதி நல்கி
யிடபகா யத்திரியான் மலர்சாத்தி நிரோதவருக் கியத்தை யீந்தே
யடைவுடனுன் மார்த்தலிங்க முன்புகலும் பிரதோட விதியா லன்பி
னிடமுறுபத் தியிற்பூசித் திடவேண்டு மவ்வா றிங்கியம்பக்கேண்மின்.

விதிமார்க்கத் தாலபிடே கம்பண்ணி யீசான தளத்தின் மீதே
பதிவாகப் புகழ்ந்தமைத்துப்பூசாதிசெபாந்தமுற்றும்பண்பிற்செய்தே
துதிமார்க்கத் தாலுளத்தில் வேண்டுவனபிரார்த்தனையுட்கொண்டுதூய
கதிமார்க்க முதவுநிரோ தார்க்கியமுங் கொடுத்தன்பு கனிந்து பின்னர்.

குண்டத்தி னிடத்தடைந்து குண்டசங்கக் காராதி பூர ணாந்தம்
பண்டுற்ற விதிப்படிசெய் தங்கியித யப்புனிதப் பதும மீது
மண்டுற்ற புகழுமா மகேசனையா வாகித்து நிவேத னப்பேர
தொண்டுற்ற மகேசுரத்தாலுருவையா யிரமெள்ளாலோமஞ்செய்து.

உருப்பதினொ யிரமிருத்தி யுஞ்சயத்தா னெய்யில்வள ரோமம் பண்
ணி, யருத்தியொடு பிரதிவிம்பந் தனில்வியோ மவியாபி யாதி யாகப்,
பொருத்தியவெண் பத்தொர்பத மந்திரத்தாற் புகல்வரொவ்வொன்
றிற்கை வைந்தாய்த்,திருத்தகுமா குதியெள்ளா னெய்திகழ்வெண் கடு
கவனீர துவரை யோடு. (௫0௬)

நற்கடலை காயுருவி யரிசியே யரிசிவினை நறிய தூய்ச்செந்
நெற்பொரியிந் நவதானி யங்களினொ னிறைதருமா குதிவ ழாதஞ் [ச்
குற்பனமாமொவ்வொன் றிற்கொன்பதுமந்திரமாகவோமம்பண்ணி
சிற்பரமா கியவிலிங்க விம்பத்திற்செயுமோமஞ் செப்பக் கேண்மின்.

பானெய்தேன் கலந்துதிரி யம்பகமா யிரத்தோமம் பண்ணிப்
பின்னர், மேன்மைபெறு சருவபூ பம்புதிய மலர்மிருத்யுஞ் சயத்தா
னல்கிக், கானமர்தாம் பூலாதி யியம்புதிரி யம்பகத்தாற் கமழோ ம
ஞ்செய்,தேனையபூ ராதிமந்திரங்களினாலும்மோமமியல்பிற்செய்தே,

ஓமசமாப்த் தியும்பண்ணி யாமந்தோ றும்பூசை யோம மெல்லாங்
காமுறவே முடித்ததற்பி னொலாம்யா மாந்தத்திற் கிரிசு தீர்க்குஞ்
சேமநிறை யங்கியுளக் கமலத்தி லகோராத்தி ரத்தைச் செவ்வே
தாமுறவா வாகனஞ்செய் தன்பினொடு புகன்றதன்மந் திரத்தி னாலே.

பசுவினெய்யால் வெண்கடுகாற் பகர்தருபங் கயப்போதா லொ
வ்வொன் றிற்கே,யிசையுமுரு வாயிரமா யிரமாக விதிமுறையி னிய
ற்றி யோம, மசைவறுசி ரகோரவீ சாக்கரத்தா லுருப்பதினொ யிரத்து
மாற்றி, நசைவுறுகுண் டத்தினுக்குக் கிழக்காக நயந்திருமண் டலமு
மிட்டு. (௫0௭)

உத்தரமண் டலத்திலந்தர்ப் பெலிதென்றி யுயர்ந்தபெகப்பெ
லியு முண்மைப்,பத்திபெறச் சருக்கரையும் பழமுமமு துங்கூட்டிப் ப
ரிவா லிட்டு, நித்தியமாம் பூராதி மந்திரங்க ளாற்பழஞ்சர்க் கரைதே
னெய்பா, லித்தனையொன் ருய்மத்தித் தொவ்வொருமந் திரத்திற்
கோர் பப்பத் தெண்ணி. (௫0௮)

ஊன்றியவா குதிசெய்தங் கோமசமாப்த்தியுமுடித்தேயுயர்குண்டத்தி
லான்றசிவ னைப்பிரதி விம்பத்து மதினின்று மருங்கும் பத்துந்
தோன்றியவக் கும்பத்தி னின்றுமிலிங்கத்துமுறைநிறைந்திடவேதொன்னூ
லேன்றவிதி வழுவாம லுத்தியா பனம்பண்ணி யிறைஞ்சி யேத்தி. ()

பழையவிலிங் கத்தினுக்குப் பராமுகவர்க் கியங்கொடுத்துப் பண்பரலன்பு, தழைதரவாத் தியமுழங்க வவ்விலிங்க மடத்திலெழுந் தருளப் பண்ணி,யிழைதருகும் பம்பிரதி விம்பமிரண் டுங்கிராம வலஞ் செய் தேத்தி, விழைதருபுண் ணியதீர்த்தத் துத்தியா பனஞ்செய்து மீண்ட பின்னர். (௫௧0)

ஆசானை மண்டபத்திற் பீடத்தி னினிதினெழுந் தருளப் பண்ணித் தேசாரங் கேயூரங் குண்டலா திகளிலலங் காரஞ் செய்தே காசார்வெவ் வினைதவிர்க்கும் பதத்திலபி டேகநிவே தாதி காமர் நேசநே சத்தோடு தூபதீ பங்களுப சார நேர்ந்து. (௫௧௧)

அருளுமிருத் தியுஞ்சயத்தான் மலர்செபித்துச் சாத்தியஞ்சட் டாங்கத் தோடு,தருவெனவீழ்ந் தடிவணங்கிச் சருவாப ராதமனம் பொறுத்தா னென்றுந்,திருவருளால் யான்விரும்பி வேண்டியவெல்லாமருளிச் செய்வா யென்றுங், குருபரன்பூ சனையாற்றி யவனருளைப் பெற்றுள்ளங் குளிர்ந்து வாழ்ந்து. (௫௧௨)

அருணவுத யத்துமற்றை நாளநுட்டா னம்பூசை யடைவி னாற்றி, வருணமிகு மறையவர்போ சனமகே சுரபூசை மரபிற் செய்தே, கருணைதரு குருப்பிரசா தம்பின்பு தான்கொண்டு கைவாய்ப் பூசிப், பொருணினைந்திவ் விதிமுடிப்ப ரிகபரமு மவர்க்கேயாம் புகன்றே முண்மை. (௫௧௩)

இப்படியா கமமியம்பும் விதியாலிவ் விரதவுத்யா பனஞ்செய்விப்போன், செப்புமவற் றேயட்ட வயிச்சுரியஞ் சம்பத்துச் சிவமெய்ஞ் ஞான, மொப்பறுமுத் தியுமுண்டா முரைத்தனமிப் பிரதோடத் துண்மைப்பேறு,முப்புவனந் தொழப்பெற்ற வளப்பிலரச் சரிதை சில மொழிவாங் கேண்மின். (௫௧௪)

வேறு.

கருப்பை யொன்றவி தீபத்து நெய்யுணக் கருதி
விருப்பி னூற்றிரி யசைப்பவிட் டொளிர்கொழுந் தீழல
வுருப்பு றும்புவி தாளவத் தோற்றமு மழகுந்
திருப்பொன் மோலியும் பெற்றுமா வலியெனச் சிறந்தான். (௫௧௫)

தானை மன்னனுச் சினிவாழ் சந்திர சேனன்
ஞான பூசைகண் டிடைமக னயந்துநன் மணலால்
வான மேதரு பூசைசெய் தவனும்ம் வாழ்ந்தா
னூனந் தீர்கதி பெற்றன ரிருவரு மோவார். (௫௧௬)

புரமெ ரித்தநா ளட்டமி புகலுமத் தினத்திற்
பரனை யாவின்பா லாட்டியே வலஞ்செய்து பரவில்
விரவு வெம்பவ நீக்கியே வீடுபெற் றுய்வார்
திரம தாகிய சிவார்ச்சனைப் பேறுசெப் புதுமால். (௫௧௭)

விண்டு வேமுதல் வானவர் வேதிய ராதி
தண்ட லில்லதோர் மனிடர் தந்தியே முதலா
மண்டு பன்மிரு கங்கள்வான் கலுழன்முற் பறவை
யண்டர் நாதனைப் பூசித்துப் பெற்றமற் றியாவும். (௫௧௮)

வே று.

மகதநாட் டொருமறையோன் சக்கி ராங்கன் மைந்தனுந் திரிதிராட் டிரனென் பேரோன், புகலருந்தங் குலவொருவி மதுவூ னுண்பான் பேரந்துபொது மகட்புணர்ந்தன் னவளோ டேகி, நகைமலர்நந் தனவனத்திற் செழுமண் கொண்டே நந்திலிங்கம் வாணித்து விளையாட் டுற்றான், றகைபெறுவா ணசுரனைப் பூசித் தீசன் றனிநடத்திற் குடமுழவ மிசைக்கப் பெற்றான். (௫௧௯)

பப்பரநாட் டினில்விளங்கும் வளஞ்சே ரோரூர் பகவதிவாழ் சுபனன்மக னசித்த னென்போன், விப்பிரர்தங் குலவொருவிக் கள்ளுண் காம விருப்பினனாய்க் களவொழுக்க மேன்மேற் செய்வான், செப்பருமோர் பார்ப்பனியைக் களவிற் சேர்வான் றிரண்முலையைத் தனேச்சுரனென் றருச்சித் தேத்தி, மைப்புடியுங் கண்டனெதிர்ந் தருளை நல்க வன்மதனா யுலகாளை வழங்கப் பெற்றான். (௫௨௦)

மாளவதே யத்துவயி ணவப்பே ரூரில் வாழ்கணித நூன்மறையோன் கிருது வென்போன், மூனாறுபொய்க் களவொழுகிப் பொருள்கைக்கொண் டே மொய்குழல்வே சையாக்குதவி முயங்குதிம்பன், கோளூறுபுன் புலைச்சியைச்சேர்ந் துழனாள் வாசக் குளிர்மலர்ப்பூங் கூடைகொண் டோரன்பன் செல்ல, வேளையிதென் றேபறித்தா னணிந்தான் றப்பி வீழொருபூத்தேவனுக்கென் றரன்றாள்சேர்ந்தான்

வே று.

அறிவிலார் வினோத பூசை யளித்திடும் பயனீ தென்றாற்
பிறிவிலா துயிரு ணிற்கும் பிரான்றனை யுணர்ந்து பெட்பின்
மறுவிலா கமத்தாற் பூசை மரபினிற் செய்தோர் பேற்றைக்
குறிபடுத் தெவரே சொல்வார் குழகனே யவர்வே றன்றால். (௫௨௨)

எழுசுயம் பிலிங்கந் தன்னிற் சயனந்திவ் வியத்தி ருப்பு
மழுவலா னரி டத்தி னிற்றன்மா னிடம்வி னைதஞ்
செழுநில வேந்தன் கோயில் சேர்ந்துறை செய்கை போலாம்
பழுதில்சற் குருவ ரம்பின் பகுதியைப் பகர்வாங் கேண்மின். (ருஉக)

குருமகத்துவம்.

முக்கணன் கயிலைப் பாங்கர் முராரியே முதலோ ருய்யத்
தெக்கணா மூர்த்த மாகிச் சிற்பர முபதே சிப்பான்
றக்கவெற் பிமையங் கோளந் தடங்கொளா மர்த்த னத்து
மிக்கபிச் சாட னத்திண் பொருப்பினும் விருப்பின் மேவி. (ருஉச)

நற்பொரு ளுபதே சிப்ப நால்வரைக் குரவ ராகிச்
சிற்பரந் தெளிந்து ஞான தேசிகர் சிறப்பின் வைகிப்
பொற்புறு தமது நாமம் புனைந்தபி டேகஞ் செய்ய
விற்பொலி மண்ணில் வந்தார் விழுத்தவ விரத மேலோர். (ருஉரு)

குருபரம் பரைபு கன்றே மன்னவர் நிலைமை கூறி
லொருவனே யுலகில் யார்க்கு முள்ளிருந் துணர்த்துந் தேச
னருள்வழி சீடர் யாரு மமலனைப் பூசை செய்வார்
மருவுமச் சீடர் தன்மை யுரைக்குது மரபிற் கேண்மின். (ருஉசு)

சீடரிலக்கணம்.

வேறு.

நீர்படிந் திடுங்கான் முன்னர்நின் றுட னின்றிடி லிருந்திடல்கி டத்தலோர்வற வுறங்கு முன்னர்த்தா னுறங்க லுண்ணுமுன் னுணவு ரை யெனாது, நேர்பட வுரைத்த லறம்பழி கூற னிகழ்த்திய பணியினை யறத்தல், சீரருட் குருவை யன்றியோர் தெய்வந் தேறிடல் சீடருக் காகா. (ருஉஎ)

தம்முளத் திமையா செய்யினு மிடரே தரினுமன் பினினெறியென்றே, செம்மையார் குருவின் செய்கையி னெழுகா தொழிதறங் குலத்தினுக் கியையா, வெம்மைமா சுறினு மாச்சிர மத்தை வழுவினும் புகழறம் வீட்டி, மெய்ம்மையான் மற்று மிழப்பினு மேய்ந்த நிலைவிடல் சீடருக் காகா. (ருஉஅ)

அறைந்திட லருள்பே ரறமற மல்லா துரைத்திட லிழுக்கிலொன் றறைத, னிறைந்திடு பொருள்பே ரறிவுதா னுரைத்த லகங்கரிப்

பாகவே நிகழ்த்தல், குறைந்திட வுள்ளம் பொடிவன கூறல் கோட்டி,
கொண் டியம்புத விருள்சேர்ந், துறைந்திடு செவிச்சொல் லேவுத லி
றையுள் ளுணர்தரு சீடருக் காகா. (௫௨௯)

இடமறி யாதொன் றுரைத்தல்சந் நிதியிற் றேசிகன் சீர்த்தியை ய
ன்றி, மடமையாற் பாடல் பொருளலா துரைத்தல் வழுத்துத றவிர்
தல்சொன் மறுத்த, றிடமுறக் கொடுத்தன் மாற்றுத லாசான் றிரவி
யம் புசித்தலீந் திடுத, றடைபடு பொய்ம்மை யுரைத்திட றேருடஞ்
சாற்றுதல் சீடருக் காகா. (௫௩௦)

முன்னசனியமா வருதரு ணணிந்தவேடத்தோ டணைதலம்முதல்வன்
றன்னிழ றம்மேற் படுதலா சான்மேற்றமதுறுசாயைபோய்ப்படுதன்
மன்னியே யிருக்குந் தலத்தின்மேலிருத்தல்வதனத்தோடுளமுகிழ்த்தல்
பன்னருங் குரவன் முன்செலன் மறுமைப் பற்றுள சீடருக் காகா. ()

சயனமா தனம்வா கனமிதி யடிவத் திரங்குடை தயிலமா பரணம்
பயனுறு குளிர்பூச் சந்தனந் தரித்தல் பாதமுன் விளக்கல்பல்விளக்கல்
வியனுறு மணங்கொள் பாகிலை யருந்தல் விமலதே சிகன்முன மாசா
நயனுறச் செய்யுஞ் சீடர்தம் மியல்பு நவிலுவ நன்குறக் கேண்மின். ()

நெறிகளிற் பயமா மிடத்துநீ ரிடத்து நிசியினுங் குரவன்முன்
சேறல், செறியுமற் றிடத்திற் பின்செலல் பிறிதோர் சிந்தையற் றரு
ட்டிரு வடியே, பொறியெனச் சாயை போல்விடா தமர்தல் பொ
ருந்துதன் றீங்குமுன் புகன்று,குறிபட வாரா வகையொரு ரிருத்தல்
கூறிய சீடருக் கியல்பாம். (௫௩௩)

தண்ணிய ரெனினுங் குருவுளம் வைத்தோர் தமைப்பரம் பொ
ருளென வுணர்த, னண்ணுமான் முதல மூவரே யெனினு நற்குரு
வருளடைந் திலரே, லெண்ணனீத் தவரைக் கைவிடன் முத்திக் கி
யைந்திடுஞ் சீடருக் கியல்பாம், புண்ணியப் பொருளாங் குருநிலை வ
ழாது போற்றுவோ ரீசன்வே றன்றால். (௫௩௪)

சிவனடியாரிலக்கணம்.

பரம்பரை யாசா னுணர்த்திடத் தெளிந்து பதிபசு பாசமூன்
றுணர்ந்து,வரம்பெறு மெய்ம்மைச் சிவனடி யாருக் கிலக்கண மு
ளவை வகுக்கி, னிரம்பிய விருபான் மூன்றுமூ விதமா நிகழ்த்திடிற்
புறத்தினி லொருபா, னுரம்பெறு முடலி னத்தொகை யோங்கு மு
ள்ளத்தின் மூன்றமைந் திடுமால். (௫௩௫)

சொல்லுமூ விதமா மிலக்கணத் தொகையிற் றொகலுறும் புறப் பஃது ரைக்கே,மல்லல்சேர் பூதி யுருத்திர வக்கம் வனைதறே சிகரை யர்ச் சித்த, லல்லணி கண்டற் போற்றல்பேர் விளம்ப லறஞ்செயன் மாக்கதை கேட்ட, லொல்லையா லயங்கள் போற்றன்மெய் யன்பர்க் குதவுத லவரொடுங் கூய்த்தல். (ருகரு)

மெய்யிலக் கணம்பத் திலிறைய வுரைக்கின் விம்மிதங் கண்டத் துட் காட்டன், மையணி கண்ட னியற்கையை யுணர்ந்து மகிழ்தொ று நாத்தழுத் தெழாதன், மொய்ம்நகை துடித்தல் பூதியார்த் தனித ன் முழுதமங் கங்குலுங் கிடுதல்,செய்யதம் மேனி மயிர்ப்புறம் புள கஞ் செறிந்திடல் குறுவிய ரரும்பல். (ருகள)

தன்வச மன்றி விளம்புநாப் பெயர்த்தி டாதலா னந்தநீர் தழை த்து, நன்விழி சொரிதல் பரவச மாத லுதனை யுளப்படுத் தயர்து, லன்புற வுரைத்தே முளத்திலக் கணமூன் றஞ்செழுத் துன்னன்மா னதத்தா, மின்புறு பூசை யீசனைத் தன்னை யிரண்டற வொன்றெனக் காண்டல். (ருகஅ)

எம்மையாண் டருளுந் தொண்டர்பா னிகழு மிலக்கண மிருப த்து மூன்றுஞ், செம்மையா வுரைத்தேம் புகலிலக் கணத்துட் சிறந் தபின் மூவிலக் கணமுர், தம்முளே யுன்னு முத்தமத் தவரைத் தனி முதற் சிவனெனத் தகுமான், மும்மைசே ருலகம் போற்றுமத் தொ ண்டர் பூசையே முதன்மையாம் பூசை. (ருகக)

இல்லறந் துறவென் றிரண்டினுஞ் சரித்தே யியம்பிய சிவனடி யாருட்,புல்லறத் தொழுக்கா வில்லறத் தினர்க்குப் புகலருங் கிரியை யின் வழுவி, னல்லறு சாந்தி யால்வழு வகலு மாற்றிய துறவறம் வழுவிற், றொல்லற மாகும் விரத்தம தழியி னரகலாற் சாந்தியிற் றொலையா. (ருசo)

துறவியரிலக்கணம்.

வெண்டுகின் முதலாம் பஃறுகி றரித்தல் விரும்பித்தாம் பூலத் தை யருந்தன், மண்டொளிர் பொற்பூண் மணங்கொள்சந் தாதி வ னிதையர் புணர்ச்சிவாஞ் சித்தல்,கண்டமே லன்றி மயிர்சரு வாங்க ங் களைந்திடல் கோபமுற் றிடுதல்,பண்டையோ ராசா பாசத்தை ய டைதல் பற்றறு விரத்தியர்க் காகா. (ருசக)

காவியுந் தரித்தே யரசர்தங் கோயிற் கடைத்தலைச் சேறலா ல யங்கண், மேவுறப் பரித்தல் பொதுமடங் கழனி தருமத்தின பொ

துப்பொருள் விழைத, றேவர்வா ளரசர் தேசிகர் வேசை சினகாற் தடிச்சியர் பரத்தை, யேவமார் விதவை வேதிய ரிவர்பொன் னேற்றி டல் விரத்தியர்க் காகா. (ருசஉ)

நீசர்கைப் பொருளா யத்தறை பரிப்போர் றிப்பொரு ணிரை ப்பசு விலைப்பொன், னீசஞ லயங்க டபரிப்பவர் கோயிற் றொழும்பி ன ரியறுபரி சார, ராசில்கற் றச்சர் கொற்றநாற் சிற்ப ராட்டிவா ணிகர்திலர் சாரர், பேசுமீன் வலைஞர் நுரைமது வுண்போர் பெரும் பொருள் விரத்தியர்க் காகா. (ருசங)

நசையுறு காம விருப்பினால் விதவை முதலிய நாரியர்த் தோய் த, னிசியிடைத் துயிலிற் சொப்பனே னிரியம் வீழ்ந்திடிற் சாந்தி சேர் செயாதல், வசையறு மன்னங் குக்குடாண் டத்தின் மாத்தி ரை நாலிரு பிண்ட, மிசைவதை யன்றி யவாவினு லதிக மிசைந்திட ல் விரத்தியர்க் காகா. (ருசச)

ஒரிடத் துண்ட விருத்தலோ ருரி லுறுபொருள் விரும்பியா சித் தல், சார்தருங் காமங் குரோதமே முதன்மே விட்டல்பொய்கொள் சத் தியஞ் சாற்ற, லாருறு சிவவே டத்தினர்ப் பணியா தகந்தையா யிகழ்றி று மாத்த, லுருறு பரதெத் தந்தம தாக்க னநிறவ விரத்தியர்க் காகா.

தெளிகுரு விலிங்க சங்கமத் துரோகஞ் செய்திடல் காவியஞ் சீ ரை, வளர்முழந் தாண்மே லுடுப்பதை யன்றிக் கீழ்தழைந் திடவரிந் துடுத்த, லளியிலா துண்டிப் பொருட்டினுற் பந்தி வரைந்துதாம் பல வுமே யயிறல்,விளையுமந் திரவா தஞ்செயல் பொன்றே டெனுர்கொ ளல் விரத்தியர்க் காகா. (ருசரு)

தேசிக னருளிற் பாத்திர மேந்தித் தீக்கையிற் சுத்தரா யன்பா, னேசரா யுறைவோ ரில்லினை யிடத்தி னியமமாய் பிச்சையேற் று ரைத்த,வாசிலெண் பிண்ட மருந்துத லன்றி யோரிடத் தேற்றினி த ருந்தல்,வாசிவா கனங்க ளேறியே யிவர்தன் மாதவ விரத்தியர்க்காகா,

ஆதலாற் புகலும் வழுவனு குருவா றதீதரா யருணிலை நிற்கு, மாதவ விரத்தர் பரம்பொரு ளன்னோர் பெருமையை யெவர்வகுத் துரைப்பார், தீதறு சரியை கிரியையர் யோகர் தெளிசிவ ஞானிய ருணர்ந்தே, யோதுறு பொருளாய்ப் பிரமமா மூர்த்தி விசேடமு மு ரைக்குதுங் கேண்மின். (ருசகூ)

மகேசுரவடிவம்.

ஆதியம் பரம னருளினப் பொருடான் மகேச்சுரப் பிரிவினிற்
றோன் றி, யோதுமா வுடையா ளிலிங்கமு மாகி யுயிருத வன்னையத் த
னுமாங், நிதில்சுந் தரநா யகரெனும் வடிவாய்ச் செப்புயிர் விகாரந்
தீர்த் தருளு,மாதொரு பாகத் துருவமா யாண்பெண் மன்னுயிர் பு
ணர்ந்திடப் புணர்க்கும். (௫௪௯)

அம்பிகை கரந்தொட் டணிமணஞ் செய்தே யாருயிர் மணவி
னை முடிக்கு,மும்பர்சூழ் மணக்கோ லத்தொடு மவளோ டுறைந்துயி
ராண் பெண்ணோ டிருத்து,மெம்பிராட் டியைத்தன் னுருவொடுங் கல
ந்தே பெண்ணொடாண் புணர்ந்திட வியற்றுந், தம்பமா யிருந்தம்
பிகைகுக னொடுந் தனையரோ டுறவுயிர்க் குதவும். (௫௫௦)

அரியுல களிக்கத் திகிரிதந் தருள்வா னுருவெடுத் தவனிமன் னு
யிர்க, ளுரியபோ கந்துய்த் திடச்செயு முதன்மை வுருவெடுத் துயிர்த்
தொகை யனைத்து, முரிதரு மாய தூலசூக் குமமா முச்சட மெடுத்தி
டச் செய்யும், பிரிவிறைக் கணமா மூர்த்தியா யுயிர்கள் குருவருள்
பெற்றிடச் செய்யும். (௫௫௧)

எம்பிரான் பிச்சா டனவுரு வாகி யிருந்துயிர்க் குதவுமெய்ஞ்ஞானம்
பம்புகங் காள வேடமா யிருந்து பல்லுயிர்க் கோகினை யளிக்கும்
வம்பலர்க் காமற் காய்ந்திடு வடிவாய் மன்னுயிர் காமநீத் திடவே
யிம்பரினளிக்குங்காலனையுதைக்குமுருவெடுத்துயிர்ப்பயமொழிக்கும்.

சலந்தரற் கோறு முருவெடுத் துலகஞ் சாற்றுமா தவர்தவம் வ
ளர்க்கும்,, வலந்தரு புரஞ்செற் றிடும்வடி வாகி மாற்றுமா ருயிர்க்கு
ணத் திரைய, நிலந்தொழ நார சிங்கவெவ் வலியை நீத்திடு சரபத்தி
னுருவாய்க், கலந்திடு பாசங் கழிந்துபல் லுயிர்க ணிலைபெறக் கரு
ணைசெய் தருளும். (௫௫௩)

[illegible]நுவிட நட முருவெடுத் துயிர்க்குக் கலங்குமா ணவமல மக
ற்று, மிருதலை தாண்மூன் றிரிரு மருப்போ டெழுகைசேர் பிரம
மே மாகி; மருவுயர் கிரியை ஞானமு தறிவு மன்னுயிர் தெளிந்திட
வளிக்குந், தருமதே வுருவா யுயிர்க்கெலாங் கருத்துட் டருமமே பொ
ருளென நல்கும். (௫௫௪)

வயிரவக் கடவு ளுருவமா யுயிர்க்கு மன்னிய துறவினை யளிக்குஞ்
செயிரறுவிடைமேலிருந்தருள்வடிவாய்ச்செகத்துயிர்க்கினிதுபேறுதவு
மயர்வில்சந் திரசே கரவடி வாகிப் பிறப்பொழித் தருங்கதி நல்கு
முயருமா னந்த நடேசனு யுலக முவகையிற் சிறந்திட வளிக்கும். ()

கங்கைவே ணியனும் வடிவெடுத் துயிர்க ளானந்தக் கடல்புகக் காட்டுந், துங்கமா மிருபத் தைந்துதோற் றத்தின் றொகுவழி யுலகுளீ ர் நடக்கு,மெங்குமாய் நின்ற பரப்பிர மத்திற் றோன்றியே யிப்பரி சியற்றும், பொங்குமப் பிரமஞ் சிவன்முத் தீசன் றுவாதசாந் தப்பொ ருட் சொக்கன்.   (௫௫௬)

வேறு.

உறைவதுதென் மதுரைநகர் சாத்தன் கீழ்பா லோங்குதென்றி சத்தமா தாக்கண் மேல்பா, னிறைதருமல் லாண்டதிண்டோண் முகுந்தன் றார்க்கை நெறிவீர பத்திரனுங் குவப்பின் மேவிற், குறை வில்வட பாற்காளி நாமச் செல்வி கூறியவிந் நகர்காக்குங் கொற்ற மூதூ, ரிறையுருவா மதன்பெருமை யளந்து கூடா வெந்நூலும் பன் னூலு மின்னுஞ் சொல்லும்.   (௫௫௭)

இன்னுமுள வனேகமிவ ணறிந்த வாறிங் கியம்பினமிக் கதை படிப்போ ருரைப்போர் கேட்போ, ருன்னுசிவ கதியடைவ ருண் மை யென்றே யுரைத்தனன்மா மலையமுனி யுரைப்பக் கேளா, மன் னுமுனி வரர்துதித்துப் பின்னுஞ் சொல்வார் மதுரைவசிப் பவர்புய னும் வசித்து ளோர்கட், கன்னியதே யத்தருப கீரஞ் செய்தே யப் பயனுற் பெறுபயனுஞ் செப்பு கென்றார்.   (௫௫௮)

பத்தாவது இலீலாசங்கிரகவத்தியாயம்

முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௪௦௫௫.

பதினோராவது

துன்மதன்முதலானவேடர்முத்திபெற்றவத்தியாயம்.

என்னவுமா தவமுனிவீர்க் கிருந்தமிழ்மா முனிபுகல்வா னினிது கேண்மி, னன்னலஞ்சேர் தருகாதை பூதியுருத் திரவக்க நயந்து பூ ணுந், தொன்னலஞ்சேர் சிவனடியார்க் குக்கிருகங் கேத்திரந்தொன் மடமுண் டாக்கிப், பன்னலஞ்சேர் மதுரையினில் வசித்திடநல் கின ர்பலத்தைப் பகுத்தார் சொல்வார்.   (க)

உரைத்ததிலொவ் வோர்துகளுக் கிமையவராண் டொவ்வொ ன்று யுறுநாட் கெல்லாம், வரைத்ததொகை யெவ்வளவுண் டவ்வ ளவு காலும்பவான் கயிலை மேவி, நிரைத்தசிவ கணமாவ ரெப்பாவ

ஞ் செய்யினுமப் பாவ நீங்குமவ்வரைத்தமல ராதழியந்தா ரரனருளான் முத்தியும்பின் மேவு வாரே. (௨)

வேறு.

எண்ணின்மா னிடரிக் கதம்பமா வனத்தி னிருந்திடுஞ் சிவனடியார்க்கு, நண்ணிய தான தருமமு நல்கி நாடொறு மவர்க்குப காரம், பண்ணியே யந்தத் தலத்தினை யறியார் பவமுநன் றுயர்சிவ லோகத், தண்ணலா ரருள்பெற் றுறைந்தனர் தலத்தை யறிந்துசெய் பூவர்பய னெளிதோ. (௩)

ஆதிகா லத்தி னிகழ்கதை யொன்றுண் டதன்றிறங் கேண்மெனப் புகல்வான், காதுவெவ் விலைவேற் கிராதர்தங் கோமான் கடியதுன் மதனெனு மொருவன், றீதினை யிழைக்குங் கரவடர்க் கெல்லாஞ் சிகாமணி யெனத்திரிந் துழல்வான், சோதிசேர் பிறைவே ணியைத்தொழு தறியான் றெழுஞ்சிவ தலமிதென் றறியான். (௪)

அளவிலா வனங்கள் செகுத்துளான் றேரு மளவிலுன் மறையவர்க் கொன்று, ளவிலா நரரா ருயிர்க்கொலை செய்தா னளவிலாப் புட்குலம் வதைத்தா,னளவிலா விலங்கு வீட்டினான் புவியி லதிதியர்க் கன்புசெய் தறியா, னளவிலாக் களவு செய்வது மன்றி யவன்செயாப் பாதக முளதோ. (௫)

அன்னதோர் வேடன் சையமால் வரையி லளவிலாக் கிராதரோ டிருந்து, முன்னியே தீர்த்த யாத்திரை செய்வோ ரியாரையு முடுகியே கொலைசெய், துன்னுமன் னவர்கைப் பொருடுகில் கவர்ந்தே யொறுத்திடு நாடொறு மோயான், றுன்னியா றலைத்துப் பாவமே தொழிலாய்ச் சுழறரு நாளிலங் கொருநாள். (௬)

வேதிய ரனேக ரவ்வழி யணுக வேண்டிய தெதிர்ந்தெனக் கிராதன், போதிரவ் விடத்தென் றன்னரை மறித்துப் பொருளொடு துகில்பல பறித்துக், காதிவே தனைசெய் திடுதலு மவரிற் கருதுநான் மறைவலா னொருவ, னீதிசேர் பாவ புண்ணியப் பயனை நிகழ்த்துவான் றுணிந்திவை நிகழ்த்தும். (௭)

துன்மத வினிக்கேள் பாவியென் செய்தாய் துகிலொடு பொருளெலாங் கவர்ந்தாய், நன்மதி யில்லா வுயிர்க்கொலை தவிர்தி யளவிலுன் மறையவர்ச் செகுத்தா, யென்மதித் துரைக்கே னீசெயும் பவங்க ளெண்ணிலு மடங்குறா திதற்கு, வன்மதிக் கால வேதையு நாக வாதையு மலாற்கதி யுளதோ. (௮)

போயது காலஞ் செல்லுநாட் சிறிது பொய்யுட னிலையென வேண்டா, பாயுநீ ரெழுத்தாம் போனது போக படுகொலை களவினை யினிமேல், லாயினுஞ் செய்யா தொழிதிமுன் செய்த வருவினைப் பாவநீத் திடுவா, யேயுமப் பவந்தீர் தருமமாங் கடைவிற் செய்துகொண் டிருங்கதி பெறுதி. (௰)

நாடொறு முன்னி யீட்டிய மாழை நலமலி யாடையா பரண
தேடிய மற்றுஞ் சிவனடி யார்க்குஞ் செழுந்திருநான்மறையவர்க்குங்
கோதி லின்றி யுதவுதி மற்றுங் கூறிய தருமதா னங்கள்
பீடுறச் செய்தி யுய்திறம் புகன்றேன் பினாகபா ணியைத்தொழுதிடுதி.

என்னநான் மறையோன் புகன்றனன் கேட்ட துன்மதன் பெரிதுள மிரங்கி, முன்னைநல் வினையாற் றருமத்திற் புந்தி முற்றியவ் வேதியர்க் குரைப்பா, னின்னுரை கேளா வுளமிரங் கியது நீங்கிய கொடுமையுஞ் ஞானம், பன்னுமா தவத்தி னுயர்ந்தமா தவநீ யுறைதலம் பகருதி யென்றான். (கக)

யானுறை தலம்பே ராலவாய் கதம்ப வனமதன் மகிமையா ரிசைப்பார், தானமுந் தவமுந் தருமமுஞ் செயினி லொன்றொரு கோடியாய்த் தழைக்குங், கானவ வெனலு மவனுமுன் றேடுங் காஞ்சன மாடையா பரணம், பூநிலத் துயர்ந்த புண்ணியஞ் செய்கென் றளித்தனன் பின்னரும் புகல்வான். (கஉ)

தேசிக னெனக்கு நீயலா லுண்டோ சிறப்பொடு மென்பெயர் செப்பி, நேசமார் நீப வனத்தினி லிருக்குஞ் சின்மல னடியவர் தமக்கும், பூசுரர் தமக்கும் வேண்டுவ நல்கிப் புரிசிவ புண்ணியம் மென்றே, வாசமா மலர்ப்பொற் றாளிணை தொழுது வணங்கினான் வாங்கினான் மறையோன். (கங)

சேறலு மற்றைக் கிராதரு மறையோன் சேவடி பன்முறை வணங்கி, யாறலைத் துனுமெம் பவமெலா மகல வாலவாய்ப் பதியினிற் கொடுபோய்க், கூறலை கங்கைச் சடிலியன் பினார்க்குங் கோதில்வே தியர்க்குமே நல்கி, மாறலை தரும மெவற்றையும் புரிகென் றுதவினார் தங்கள்வான் பொருளை. (கச)

அப்பொருடனையும் வாங்கிய மறையோ னந்தணர் குழாத்தொடுஞ் சென்றே, யொப்பறு கதம்ப வனத்தில்வந் துற்றா னுறுபெருந் தனமெலா மெடுத்தான், மெய்ப்பொருட் சொக்க னருளினா லந்த

வேடர்க்கிப் புண்ணிய மென்றே, செப்பரு மாசி கூறினன் வணங்கிச் சிவனடி யார்க்குமுன் கொடுத்தான். (கரு)

பூசனைக் குரிய மடங்களுஞ் செய்தான் கேத்திரம் பொலிவுறக் கொடுத்தான், மாசறு வேத வேதியர்க் கெல்லா மகம்பொரு ணனி வழங் குற்றான், பேசரு மன்ன தானமு மற்றைத் தருமமும் பிறங்கிடப் புரிந்தான், பாசவெவ் வினைதீர் புண்ணிய பலத்தாற் றுன்மதன் முதல்பல வேடர். (கசு)

அந்தியந் தன்னிற் கிளையொடு கயிலை தனிற்சிவ கணங்களாயடைந்து முந்திய போக மளவில துய்த்து முடிவிலா முத்தியு மடைந்தா ரெந்தையார் மதுரை யறிந்திடார் செய்த வேடரீ டேறினரென்றாற் புந்தியால்வசித்தத்தலத்தினிற்றருமம்புரிபவர்பேற்றையாருரைப்பார். (கஎ)

அன்னியர் பொருளை வாங்கிறற் றரும மியற்றிய வருமறையோனு, முன்னரு முயர்வான் கயிலையி லடைந்தே யிரண்டற முத்தி பெற் றுய்ந்தான், றன்னதாய்த் தானே தேடிய பொருளாற் றருமத் தைச் செய்பவர் பெறும்பே, றின்னதென் றெம்மாற் புகலவும் வசமோ வீசனே யியம்புவ தல்லால். (கஅ)

கேத்திரங் கிருகம் வத்திர மன்னங் கிளர்மணங் கமழ்ந்ததாம் பூலம், பூத்திரண் மாலை சந்தனம் பான காதிய பொலங்குடை விசிறி, காத்திரம் வருந்தாத் தோறகழல் கதம்ப கானம்வாழ் சிவனடி யார்க்குப், பாத்திர மிவரென் றெண்ணியே கொடுப்போ ரடைகுவர் பரன்சிவ லோகம். (கக)

சங்கர னிடத்தி லன்புசெய் மறையோர்க்குதவிய திருமதா னங்கள், வெங்கர வடர்த்தோ னயனளந் தறியா மேன்மையுந் தம்பல னாயும், பேரிங்கர வளைந்த வாலவாய்ப் பதியிற் பொருந்துப கரணங்க ளோடுங், கங்கரந் தரித்த சிவனெனக் கிருக தானஞ்செய் பவர்பயன் கருதில். (உ0)

சேடனுன் முகன்மான் முதலியோ ராலுஞ் செப்பொணு நந்தி வேண் முருகன், கூடனு யகன்ற னருளினு லறிவ ரெனிலவர் பேற்றையார் குணிப்பார், நாடருந் தேசாந் தரியராய்த் தலத்தை நாடிய சிவனடி யார்க்கு, வீடிடங் கொடுப்போர் தூகளுக்கா யிரமாங் கற்பமே வுவர்சிவ லோகம். (உக)

அன்னதா னத்தை நிகரென வியம்ப வரும்பெருந் தானமு மில்லை, யன்னதா னத்துக் கிணையதாய்ப் புகல வரியமா தவங்களுமில்லை, யன்னதா னத்தை யொப்புற வுரைக்க வரியதாந் தருமமு மில்லை, யன்னதா னம்போ லறம்பொரு ளின்பம் வீடிவை யுதவுவ தியாதே. (௨௨)

அன்னதா னந்தீர்த் தந்தல மூர்த்தி யருமறை வேள்வியா கமங்க ளன்னதானம்பூ சனைசெபந் தியானமிட்டையட் டாங்கமா யோக மன்னுதா னந்தின் சரியைநற் கிரியை யோகமெய்ஞ் ஞானமு மாகு மன்னதா னத்தி னன்றியீங் குரைத்த யாவையும் பயன்படா தன்றே.

அதிதியர் கோடி துய்ப்பதி லதிக மரனடிக் கன்புளோன் றுய்த்த, றுதியுறு மவனிற் கோடிமெய்ஞ் ஞானச் செயலுளோ னொருவன் றுய்த் திடுதல், பதியுறு ஞான வானிலுங் கோடி பரத்தொடு மயிக்க வான் றுய்த்தல், கதியுறு மன்னங் கொடுப்பவர்க் குமையுங் கடவுளுந் தொண்டுசெய் திடுவார். (௨௪)

கதம்பமா வனத்தின் மேன்மையான் மலத்திற் கிருமியுங் கடவுளா மென்று, விதம்பெற வடைந்தோர் யாரையும் வரையா ரறிஞரெம் மீசனென் றெண்ணி, விதம்பெற வாறு சுவையுட னன்னம் விரும்பிய வதிதியர்க் களிப்பார், திதம்பெறு கயிலைப் போகமுந் துய்த்துச் சிவமதா முத்தியுஞ் சேர்வார். (௨௫)

அரிவையர் மறையோ ரனேகமாங் கோடி யிலக்கமாக் கொன்றவெம் பாவம், விரிபுவி யுளதீர்த் தங்கண்மூழ் கினுமே வேள்விசெய் யினுமுற்றுந் தீரா, வரிசடை யமல னடியவரை யிறைஞ்சி வாழ்த்தி நன் மலரடி விளக்கி, யுரியநீ ருட்கொண் டருத்தியூண் சேடமுண்டிடி லொழியுமீ துண்மை. (௨௬)

நவையிலா வொருமண் டலமதிற் பாதி நாளேனு நியமமா நவிலுஞ், சிவனடி யாரை யமுதுசெய் வித்துச் சேடமுண் டிடின்பாயல் வலிபோ, மவமுறு கயரோ யுதரநோய் வெகுநீ ரிழிவுவெஞ் சுரம் பெரு வியாதி, தவலறு வாதங் கபம்பித்த மிவற்றாற் றங்குநோய் மற்றும்போ முண்மை. (௨௭)

குடும்பியாய் வந்த வதிதியர்க் கன்னங் கொடுத்தொரு வற்சரம் புரக்கி, லிடும்பைதீ ரவிழுக் கொவ்வொரா ண்டாகக் கயிலைவாழ்ந் தெய்துவர் முத்தி; நெடும்பெருஞ் செல்வ மெய்தினர்க் கீத னிலைகடன் கொடுத்துவாங் குதலா, மடும்பனல் குரவா லேற்பவர்க் கீத லாயிர மடங்குநற் பயனும். (௨௮)

திதியினி லன்னஞ் சிவனடி யார்க்கு நல்கினோர் செலுத்துமோ
ரீழுக், கதிகமோர் வருட மாகவான் கயிலை யடைந்து நன் முத்தியு
ம் பெறுவார், விதியினுன் மற்றை யன்னிய தலத்தின் மரிப்பவர்க் கித்
தல மேவிக், கதிதரு சிவதீர்த் தத்தினுற் றிலதர்ப் பணஞ்செயி லருங்
கடன் கழிக்கில். (௨௯)

தலைமுறை கோடி யன்னவர் பிதிர்க்க டாழ்நர கினுங்கரையேறி
நிலைபெறு கயிலை யெய்துவ ரென்பு நீடிரு வாலவாய்ப் பதியின்.
மலைவறத் தாபித் திடிலருங் கொடுமா பாவிய ராயினு மாறு
வலைவறு சிவானு போகமு மருந்தி யமலமா முத்தியை யடைவார்.

பரசிவ புராணப் படிப்பவர்க் கன்னம் பகுத்திட லரும்பொரு
ள் கொடுத்தல், விரதமெய் யன்பர்க் களிப்பதிற் கோடி மிகுபயனடை
யுமீ தன்றிப், பிரசமா ரிதழி வேணியர்க் கீத லாகுமேல் பிறிதிலை
யென்று,வுரைசெயு மவரே தேசிக ரவ்ருக் குதவுத லுயர்குரு பூசை.( )

வேறு.

பந்திவரைந் துண்பவர்க்கும் படைப்பவர்க்கு நிறைகுறையப் ப
டைப்பிப் போர்க்கு,மூர்ந்தையதி பாதகம்வந் தடையுமென வாகமங்க
ள் மொழிதல் கேட்டு,சிந்தைசெயா தவைசெய்யிற் பசாசரக்க ரசு
ரர்கணஞ் செறிந்து துய்க்கு, நிந்தனையா ரும்புகல வூர்ப்பன்றி யாய்
க்கட்ட கிரையஞ் சேர்வார். (௩௨)

முனைவருக்கு மமரருக்கு மாலயர்க்குங் கிட்டாத முதன்மை
வேண்டி,லனைவருக்கு மொருப்படித்தாய் வேடமே பொருளெனவா
க் கவரை யெண்ணி, நினைவருக்கும் வஞ்சமின்றி யடைவுடன்போ
னகமபடைத்து நிறைவு செய்க, வினைவருக்க மகற்றுமகே சுரபூசை
செய்வதரன் விரும்பும் பூசை. (௩௩)

அழிந்திடுபொய் விரத்தர்குருத் துரோகியர்பூ சனையிழந்தோ
ரகிதஞ் செய்வோர், மொழிந்தசிவத் திரவியம்வர்ச் சிதமில்லா ரபகரி
த்து முழுநின் மூட, ரொழிந்திடுபொய்ப் பொருள்விலைக்குச் சிவலி
ங்கம் பூதியுருத் திராக்கம் விற்போர்,வழிந்திடுமோ கமவசனம் பொய்
யென்போர் பதிதரென வரைந்து நீக்கி. (௩௪)

தேசிகர்பூ ருவமுகமு நிருவாண தீக்கையருத் தரமுஞ் செப்பு,
மாசகலும் விசேடதீக் கையர்மேற்கு முகமுமருஞ் சமய தீக்கை,
யேசறப்பெற் றோர்தெற்கி னபிமுகமு மாயெழிலா சனமுஞ் சேர்த்

துன்மதன்முதலானவேடர்முத்திபெற்றவந்தியாயம். கசுரு

தி, நேசமுறு குருசேட்டர் கனிட்டர்முறை யடுத்திருந்தி நிறைவு செய்வோர். (ரு௫)

வேறு.

சாத்திரம் புராண மாகம மெழுதித் தருஞ்சிவ பத்தருக் களிப்போர், நித்திரன் வாதை யணுகுரு வாறு புரக்கூளோர் திருமுறைக் களனி, பூத்திடு மன்பாற் கயிறெழுத் தாணி பொலிதரு சாசுவதி பீட, மேத்திடே படிப்போ ரிருந்திடும் பலகை யிரத்நகம் பளமுத லீவோர். (ரு௬)

சொல்லிய விவைக்கோ ராயிரம் வருடஞ் சோமசுந் தரனுருவடைந்தே, யெல்லொளி விரிக்கும் பெருஞ்சிவ லோகத் தெய்திவாழ் குவர்திரு முறையை, மல்லல்சே ரில்லத் தெழுதிவைத் தன்பால் வாசிப்போர் பூசிப்போர் பவநீத், தொல்லையின் மீளா முத்தியையடைவ ரும்பர்நா யகன்றிரு வருளால். (ரு௭)

வாணமே முதல விலிங்கங்கள் பூசித் திடுமென வரன்முறை யளிப்போர், பேணிய சங்க மருக்கிய மணிநீர் பெருக்குபாத் திரமுருத் திராக்கம், பூணுமா சையினூற் பூசும்வெண் ணீறு போற்றுமெய் யன்பினர்க் கீவோர், வேணிய ன்ருளான் முப்பதங் கடந்து விமலமா முத்தியெய் துவரால். (ரு௮)

நீபவா ரணிய மெனுமுறை கேட்க முத்தியெய் திடுமெனி னிமல, மாபரன் றலத்தில் வசித்தறம் புரிவோர்க் குரைப்பதென் வளம்பெறு ஞான, தீபமா மவர்கள் கொடுத்தபேர்க் குண்டாஞ் சிவனருண் மீள்கிலா முத்தி, தாபர மிஃதென் றிக்கதை கேட்போர் தனிப்பெரு முத்தியை யுடைவார். (ரு௯)

இக்கதை படிப்போர் தங்களுக் கன்பா லிரும்பொரு ளாடையாபரண, மிக்குயர் வாக நிய பசுக்க டானியம் [illegible] சொக்கனென் றவரைப் பூசனை புரியிற் சொக்கனே கொண்டருள் செய்வான், றக்கபே ரருளாற் செய்பவர் முத்தி யெய்துவர் சத்தியம் புகன்றேம். (௬௦)

கருணைசேர் மதுரை நாயக னுமையங் கயற்கணாள் கணபதி கந்தன், வருணமார் நந்தி கேசன்மால் பிரமன் வானவர் முனிவர்சூழ்ந் திருந்து, பொருணனி விளங்கும் புராணதே சிகரைப் போற்றியே கேட்டினி துவப்பார், தருணமார் புராண மண்டபஞ் சிவனு லயஞ்சத்தி சரசோதி பீடம். (௬௧)

தோரணந் திகழ்மேற் கட்டிபட் டரிசை தொடுத்தபூ மலர்விதா னத்தாற், றூரணி புகழ்மண் டபமலங் கரித்துச் சரசோதி பீடம் வைத்தலரா, லாரணம் பரவு முறைமையைத் துமையை யரனையா வாகித்தர்ச் சித்தே, பூரண பத்தி யொடுமணி தூப நிவேதனங் கொ டுத்துடன் போற்றி. (சஉ)

படிப்பவர் முகம்பார்த் தினிதுகேட் டுகெ பராமுகஞ் செய் யொணு செய்தோர், மடிப்புறு நெஞ்சர் விருப்பிலர் புராணசமாக்க தை பொய்யெனப் புகல்வோர், துடிப்புற மூன்று கோடிமா நிரை யந் துளைந்துநாய்ச் சென்னமே யெடுப்பர், கொடிப்பொடு புராண தேசனை மனித ரென்பவர் வாய்ப்புழு நோயர். (சங)

பத்தியாய்க் கேளா ருயர்ந்தவா சனத்தி லிருந்துகேட் பவரழுக் காற்றுற், சித்தம்வே றாகி வேறொரு பொருள்கற் பிப்பவர் வாதிக்கு ஞ் சிதடர், மொய்த்திடும் பன்றிச் சென்னமே யெடுப்பர் மூடரா யன் பிலார் வன்பான், மத்தரா மனமற் றகந்தையாற் கேட்போர் வனத் தினி லெட்டியாய் முளைப்பார். (சச)

நியமமாய்க் கேட்டு முற்றுமுன் னடுவே யெழுந்துதங் கருமத் தா னீங்கி, யயமறப் போகிற் செல்வந்துய்த் திடுநா னீறுறு தழிந்தி டை யிழப்பார், பயமறு மஞ்சத் தேறியே யிருந்தும் பாகிலே யருந்தி யுங் கேட்போ, ருயமதி யிலராய்க் கழுநனை யேறி யுயிர்பா தபித்தி டக் கிடப்பார். (சரு)

கண்டுயில் கொள்வோர் கூகையா யுதிப்பார் கதைபடித் திடுஞ் சிவ சபையிற், பண்பொடு கேளார் சேக்கையிற் கிடந்து கேட்பவர் பனிவரை விடரிற், புண்படு கொடிய பாந்தளாய்ப் பிறப்பர் புகலு மிக் குணமெலா நீக்கி, யெண்படு தாழ்ந்த வாசனத் திருந்தே யினிது ப சா ப மு மிகப்பட. (சசு)

பத்தியாய் நியமம் படைத்துநூல் விதியாற் பெருமிப் புராணநூ ல் கேட்போர், சித்தியுந் தருசம் பத்துநல் லறமுஞ் செல்வமுங் கல்வி யும் பொருளும், புத்தியுஞ் சிறந்த மனையும்புத் திரரும் புகழுநற் போ கமு ஞான, முத்தியும் பெறுவர் சத்துரு நசிக்கு நினைத்தவை முழுது மெய் துவரால். (சஎ)

தொடங்குமா தியினும் புராணமத் தியினுந் தொகுத்தவந் திய த்தினுந் தொன்றூ, லடங்கவுங் கேட்ட பயன்றரு மகேசு ரபூசையங்

தணர்கள்போ சனமு, மிடங்கெழு மன்பா லியற்றிட வேண்டு மிய
ம்புமிக் கதம்பமான் மியநூ, றிடங்கொளப் புகன்றேந் திருவிளை யா
டற் கதைக்குமுந் தின்திருப் புராணம். (௪௮)

காசியி னுமக்கிம் முற்கதை புகன்றே மிலையா னனுக்கையாற் க
ருதி, நேசமோ டிவணீர் வினவலான் முழுதும் புகன்றன நிறைந்
துளம் வாழ்ந்தீர், மாசின்மா தவத்தி ரெனத்தமிழ் முனிவன் கூறின
ன் மாதவர் கேட்டுப், பாசவெவ் வினைதீர்த் துய்ந்தன மென்றார் பர
வினார் பன்முறை பணிந்தார். (௪௯)

எந்தமா தவமுன் செய்தன மூன்று மிக்கதை கேட்குமென் றி
யம்பி, முந்துமா தரவா லிரத்நகுண் டலமு முயங்குபொன் னுடையுந்
தரித்துக்,கந்தநாண் மலரா லருச்சனை செய்தார் கடமுனி கதம்பமா வ
னத்தின், வந்தருள் சொக்கைத் தியானித்தவ் வவர்க்கு மகிழ்சிறந் தா
சிகூ றினனால். (௫௦)

கும்பமா முனியும் வசிட்டனே முதலோர் கூறுமெண் ணாயிரத்
தவரு, மெம்பிரான் றிருமுன் னெழுந்துசென் றிறைஞ்சி யேத்தினு
ரேத்தலு மிமையோர், தம்பிரான் மூல லிலிங்கத்தி னின்றுந் தனிவி
டை மீதினிற் றோன்றி, யும்பர்நா யகியோ டகமகிழ்ந் தவர்க்குக் கா
ட்சிதந் தொருமொழி புகல்வான். (௫௧)

மாகமார் கதம்ப வனத்தின்மான் மியமீர் கேட்டக மகிழ்தலான்
மற்று,மாகம புராண மனைத்தையுங் கேட்ட பயனுறு மகத்திய முனி
யை,மோகமார் வினைதீ ரன்பினீர் பூசித் திடுதிர்நம் பூசையா முனிவீ;
ரேகமா மெம்மைக் கேளுமின் வரமென் றியம்பிட மாதவ ரிசைப்
பார். (௫௨)

சோமசுந் தரநின் றாளிணை தொழலாற் றோன்மைசேர் பாக்கிய
மியாவுங், காமுற வடைந்தே நின்பதத் தன்புங் [illegible]மா வ[illegible]
மான் மியமா,மாமைசேர் கதையை நாடொறுங் கேட்டு மகிழ்வொ
டும் படித்தும்போற் றியுமே,சேமமார் தலத்தில் வசிக்கவும் வேண்டு
ம் வரந்தரு கென்றனர் சிவனும். (௫௩)

தந்தன னுமக்கிவ் வரமெனப் பின்னுஞ் சாற்றுவான் வைகையி
ன் வடபான், முந்தைநாண் மலரோன் கரிசுதீர்த் தருளு மூலலிங் க
த்திற்கு மேல்பா, லுந்துநீர் நதியின் மூழ்கியே யெம்மை யுவந்துசே
வித்துநீ ரிருமென், றிந்துசே கரனு மிலிங்கத்தி னுறை னிருந்தமிழ் மு
னியொடாங் கிருந்தார். (௫௪)

காலகா லத்தி னதியினீர் மூழ்கிக் கருணைசேர் சொக்கநா தனையு, மேலவார் குழலங் கயற்கண்மா தினையு மிறைஞ்சினர் போற்றி வாழ் வுற்றார், ஞாலமேழ் பரவு மகத்தியன் பொதிய வரையிற்றன் னொருகலை யிருத்தி, மூலமா மதுரை வாழவாழ் வுறுவான் முத்தமிழ்ச் சிவனரு டழைக்க. (௫௫)

என்றுமா தவத்து நயிமிசா ரணிய முனிவருக் கியம்பினன் சூதன், றொன்றுமாக் கதைகேட் டனைவரும் தொழுது துதித்தனர் பூசனை செய்தார், வென்றிமா தவவிக் கதையுளந் தேக்கி மெய்த்தவந் தழைத்தன மென்றார், மன்றல்சேர் மதுரை நாயகன் றிருத்தாள் வாழ்த்தினர் திருவுளம் வாழ்ந்தார். (௫௬)

வேறு.

ஓதுமஞ்செ ழுத்துவாழி யோங்குகூடல் வாழியென்
றோதனீதி யங்கயற்க ணங்கைபங்க னன்மலர்ப்
பாதபங்க யங்கள்வாழி பரவுநூற்பு ராணநா
மாதுபூதி வைதிகம் வழங்குஞ்சைவம் வாழியே. (௫௭)

பதினோராவது துன்மதன்முதலானவேடர்முத்திபெற்றவத்தியாயம்

முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்-௧௦௬௦.

கடம்பவனபுராணம்

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

பிழை திருத்தல்.

பக்கம்.	வரி.	பிழை	திருத்தல்.
க.	உஎ.	கெண்ட	கொண்ட
உ.	ச.	வீயூகி	வியூகி
சா.	சா.	வக்கிரிதர்	வக்கிரிதா
எ.	,,	கதையை	கதையை
சாஉ.	கரு.	சேய்யும்	செய்யும்
சாகூ.	கூ0.	சாணை	சாணை
எ0.	௯.	சாணை	சாணை
,,	கூகூ.	மெவ்விலி	பிவ்விலி
கஉஅ.	கூ.	பாகமந்தமா	பாதகமம்மா
கஎகூ.	சா.	கார்[ய]	கார்
கசாக.	கஎ.	கொடி	கோடி